
திருமுறை மலர்கள்

1



கி.வா.ஜ.



1/2

திருமுறை மலர்கள்

(முதலாம் பாகம்)

'வாகீச கலாநிதி'

கி. வா. ஜகந்நாதன்

அல்லயன்ஸ்

(நூற்றாண்டு கண்ட முதல் தமிழ்ப் புத்தக நிறுவனம்)

முதற் பதிப்பு : 2003
இரண்டாம் பதிப்பு : 2008
மூன்றாம் பதிப்பு : 2016

விலை ரூ.260.00

அல்லயன்ஸ்
கம்பெனி
ப.எண். 244, பு.எண். 64,
ராமகிருஷ்ணா மடம் சாலை,
தபால் பெட்டி எண்: 617
மயிலாப்பூர், சென்னை - 600 004.
தொலைபேசி : 044-24641314
இணைய தளம் : www.alliancebook.com
தொலை நகல் : books@alliancebook.com

Typesetting : Amaravathi, Chennai - 33
Printed at : Bala Offset, Chennai-42

1/2

முகவுரை

சிவபெருமானுடைய புகழைச் சொல்லும் சைவத் திருமுறைகள் பன்னிரண்டு. இந்தப் பன்னிரண்டு திருமுறைகளில் முதல் ஏழும் தேவாரம் என்னும் பெயரை உடையவை. ஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் என்னும் மூவரும் பாடியவற்றைத் தேவாரம் என்று வழங்குவர். மாணிக்கவாசகர் பாடிய திருவாசகமும், திருக்கோவையாரும் எட்டாந் திருமுறை. திருவிசைப்பா, திருப்பல்லாண்டு ஒன்பதாம் திருமுறை. திருமூலர் திருமந்திரம் பத்தாம் திருமுறை. ஆலவாய் இறைவன் திருமுகப் பாசுரம் முதல் காரைக்காலம்மையார், சேரமான் பெருமாள் நாயனார் முதலிய பலர் பாடிய நூல்களின் தொகுதி பதினோராந் திருமுறை. பெரிய புராணம் பன்னிரண்டாந் திருமுறையாகும்.

முதல் இராசராச சோழன் காலத்தில் நம்பியாண்டார்நம்பி என்னும் பெரியார் பதினொரு திருமுறைகளை வகுத்தார் என்று திருமுறை கண்ட புராணம் கூறுகிறது. அம் மன்னன் காலத்துக்கு முன் தேவாரப் பதிகங்கள் முதலியன பலவாறாகப் பாடப்பெற்று வந்தன. அவற்றைக் கண்டெடுத்து ஒழுங்கு படுத்தும் தொண்டு புரிந்தவன் இராசராச சோழன்.

இந்தப் பன்னிரண்டு திருமுறைகளில் முதல் மூன்றும் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் இயற்றியவை. நான்கு முதல் ஆறாவது திருமுறைகள் வரையில் உள்ளவை திருநாவுக்கரசு நாயனார் இயற்றியவை. ஏழாவது திருமுறை சுந்தரமூர்த்தி நாயனார் அருளியது. இந்த ஏழுமே தேவாரம் என்றும் அடங்கல்முறை என்றும் வழங்கப்பெறும்.

திருமுறை என்பதற்குத் தெய்வத் தன்மையையுடைய நூல் என்பது பொருள். முறை - நூல்.* திரு, தெய்வத் தன்மையைக்

---

*"இறைநிலம் எழுதுமுன் இளைய பாலகன், முறைவரை வேனென முயல்வ தொக்குமால்" (கந்தபுராணம், அவையடக்கம்) என்பதில் முறை என்பது நூல் என்ற பொருளில் வந்தது காண்க.

குறிக்கும் அடை. தேவாரம் என்பதற்குப் பலவிதமாகப் பொருள் கூறுவர். தெய்வத்தின்பால் உள்ள அன்பினாற் பாடப்பெற்ற பாடல் என்று சிலர் கூறுவர்; வாரம் - அன்பு. தெய்வத்துக்கு ஆரம்போல் அமைந்தது என்பாரும் உளர்.

'தே என்பது தெய்வத்தைக் குறிக்கும் சொல். வாரம் என்பது இசைப்பாட்டு வகை ஒன்று. அது சொல்லொழுக்கமும் இசையொழுக்கமும் உடையதென்றும், இசைக்குரிய உருப்படிகளில் ஒன்றென்றும், தெய்வத்தைப் பாடும் பாடலென்றும், தாள அமைப்போடு கூடியதென்றும் சிலப்பதிகார உரைகளால் தெரியவருகின்றது.* கடவுளை வாழ்த்தும் பாடலுக்குத் தேவபாணி என்ற பெயர் பழங் காலத்தில் வழங்கி வந்தது. அதுபோலக் கடவுளைத் துதிக்கும் இசைப்பாடலுக்குத் தேவாரம் என்ற பெயர் வந்தது.

தேவாரம் என்ற பெயர் பழங்காலத்தில் வழக்கில் இருந்ததாகத் தெரியவில்லை. சிலாசாசனங்களில் திருப்பதியம் என்று தேவாரப் பாடல்களைக் குறித்திருக்கிறார்கள். நச்சினார்க்கினியர் திருப்பாட்டு என்று சொல்வர். ஒளவையார், பாடிய, ''தேவர் குறளும் திருநான் மறைமுடிவும், மூவர் தமிழும்'' என்னும் பாட்டில் **மூவர் தமிழ்** என்று கூறுகிறார். கி.பி. 1060-ஆம் ஆண்டு எழுந்த கல்வெட்டு ஒன்றில் 'தேவாரத்துக்குத் திருப்பதியம் விண்ணப்பம் செய்யும் அம்பலத்தாடி திருநாவுக்கரையன்' என்ற தொடர் வருகிறது. கி.பி. 1245-ஆம் ஆண்டில் எழுந்த மற்றொரு கல்வெட்டில் சீகாழியில் 'திருமுறைத் தேவாரச் செல்வன் திருமடம்' என்ற ஒருமடம் இருந்த செய்தி வருகிறது.♦

---

* *'வாரப் பாடல் சொல்லொழுக்கமும் இசை யொழுக்கமும் உடைத்தாதலால் (சிலப்பதிகாரம், 3:67, அரும்பதவுரை); 'வாரம்...... பாட - தெய்வப் பாடல்பாட, (ஷை. 3; 136, அரும்பத.); 'வாங்கிய வாரத்து - இப்படி நிகழ்ந்த உருக்களில்' (ஷை. 3: 50, அடியார்க்கு நல்லார் உரை); 'வாரம் இரண்டாவன ஒரொற்று வாரம், ஈரொற்று வாரமென்னும் செய்யுள். அவை தாளத்து ஒரு மாத்திரையும் இரண்டு மாத்திரையும் பெற்று வரும்' (சிலப். 3: 135-6; அடியார்க்கு.)*

♦ *இந்தச் சாசனச் செய்திகள் திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியாரவர்களால் ஒரு சொற்பொழிவினிடையே சொல்லப் பெற்றன. (மெய்கண்டான் சித்தாந்த மகாநாடு - திருமுறைத் திருநாள் நிகழ்ச்சிகள் -ப. 228, 229.)*

இக்காலத்தில் அன்பர்கள் தேவாரத்தைத் திருநெறித் தமிழ் என்று வழங்குவர். திருஞான சம்பந்தர் பாடிய முதற் பதிகத்தின் இறுதிப் பாசுரத்தில்,

'திருநெறிய தமிழ் வல்லவர்''

என்று கூறுவதை அடியொற்றி இவ்வழக்கு அமைந்தது.

★

திருஞானசம்பந்த சுவாமிகள் பாடிய பதிகங்கள் பதினாயிரம் என்றும், அவற்றிற் பல சிதலால் அழிந்தன என்றும் கூறுவர். இப்போது உள்ளவை 383 பதிகங்கள். அவற்றையே மூன்று திருமுறைகளாக நம்பியாண்டார் நம்பிகள் வகுத்தார். இக்காலத்தில் திருவிடைவாய் என்னும் தலத்திலே கிடைத்த கல்வெட்டில் அத்தலத்துக்குரிய திருப்பதிகம் ஒன்று இருந்தது. அது திரு முறைகளில் சேராதது. 136 பதிகங்களை முதல் திருமுறையாகவும் 122 பதிகங்களை இரண்டாவது திருமுறையாகவும், 125 பதிகங்களை மூன்றாவது திருமுறையாகவும் வகுத்திருக்கிறார்கள். இவை பண்முறையாக வகுக்கப் பெற்றவை. முதல் திருமுறையில் நட்டபாடை, தக்கராகம், பழந்தக்கராகம், தக்கேசி, குறிஞ்சி, வியாழக் குறிஞ்சி, மேகராகக் குறிஞ்சி, யாழ்மூரி என்ற பண்களில் அமைந்த திருப்பதிகங்கள் இருக்கின்றன. இந்தப் பதிகங்களின் பண்களைத் திருநீலகண்ட யாழ்பாணருடைய மரபிலே வந்த ஒரு பெண்மணியின் வாயிலாக அறிந்து நம்பியாண்டார் நம்பி அமைத்தனர்.

★

இயற்கையின் எழிலைக் கவிதையிலே ஓவியமாகக் காட்டி, மனித உள்ளத்திலே தோன்றும் மிக நுட்பமான உணர்ச்சியாகிய காதலை அணு அணுவாக ஆராய்ந்து, அதனால் விளையும் உள்ளத் துடிப்புகளை நன்றாகத் தெரிந்து பாடி, வீரத்தையும் கொடையையும் பாராட்டிச் சங்ககாலப் புலவர்கள் தமிழை வளர்த்தனர். அக்காலத்தில், உள்ளதை உள்ளபடியே சொல்லும் நெறி இருந்தது. சங்ககாலத்துத் தமிழே தனிச் சுவையை உடையதாக வளர்ந்தது.

காதலையும் வீரத்தையும் பாராட்டிவந்த புலவர்கள் அவ்விரண்டையுமே தலைமையாக வைத்து மற்ற உணர்ச்சிகளைப் புறக்கணிக்கத் தொடங்கினர். மனித வாழ்வுக்கு இன்றி யமையாததாகிய கடவுள் உணர்ச்சி பண்டைத் தமிழரிடத்திலே ஆழ வேரூன்றியிருந்தாலும் அது கப்பும் கிளையுமாய்ப் பரவவில்லை. இந்த நிலையில் வேற்றுச் சமயத்தினர் தம்முடைய நெறிகளைத் தமிழ்நாட்டில் புக விட்டனர். பௌத்தமும் சமணமும் தமிழ்நாட்டிலே புகுந்தன. இயற்கையாக இந்நாட்டில் வேரூன்றாத அச்சமயங்களுக்கு உறுதியான பற்றுக்கோடு கிடைக்கவில்லை. உலகியலில் உயர்ந்து நின்ற அரசரையும் அமைச்சரையும் அறிஞரையும் அந்தச் சமயத்தார் தம் வசப்படுத்தி, அந்தச் செல்வாக்கினால் தம் சமயத்தைத் தமிழ் நாட்டில் நிலைநாட்டத் தொடங்கினர். பல காலமாகத் தமிழ்நாட்டு மண்ணில் ஊறி யிருப்பவை சைவமும் வைணவமுமாகும். எந்தச் சமயத்தினர் நூல் செய்தாலும் தமிழ் நாட்டு மண்ணை ஐந்திணையாகப் பகுத்து முருகனையும், காளியையும், திருமாலையும், இந்திரனையும், வருணனையும் தெய்வமாக வைத்தார்களேயன்றித் தங்கள் சமயக் கடவுளருக்கு நாட்டுத் தலைமை நல்கத் துணியவில்லை. தமிழன் வாழ் வோடு, தமிழ் மண்ணோடு, தமிழ் இலக்கண இலக்கியத் தோடு வேறு பிரிக்க முடியாமல் கலந்து கொண்டவர்கள் முருகன் முதலியோர். அந்த இயற்கை நெறியை மாற்ற வந்த சமயத்தார் பல வகையில் முயற்சிகள் செய்தனர்.

இந்த நிலையில் அதுகாறும் அமைந்துகிடந்த தமிழ்ச் சமயங்களாகிய சைவமும் வைணவமும் வீறி எழுந்தன. ஆழ்வார்களும் நாயன்மார்களும் திரு அவதாரம் செய்தார்கள். திவ்யப் பிரபந்தமும் தேவாரமும் தமிழ்நாட்டுக்குப் புதிய முறையில் கடவுள் உணர்ச்சியை ஊட்டி முறுக்கேற்றின. சங்ககாலத் தமிழில் காதலும் வீரமும் கைகோத்து ஆடின. ஆழ்வார்களும் நாயன்மார்களும் தந்த தமிழிலே சமயமும் பக்தியும் தாண்டவமாடின. தமிழ்ப் பண்பிலே பிறழாமல், இசையையும் தாளத்தையும் மிகுதியாக இணைத்து, அழகையும் அதனைத் தந்த தெய்வத்தையும் ஒன்றுபட வைத்து, மனித வாழ்வில் இறைவனை மறந்த நிலையின் அவலத்தையும்

அவனை நினைந்து அன்பு செய்தாரது உயர்வையும் எடுத்துக் காட்டிச் சிறந்து நின்ற இந்தப் பக்தித் தமிழில் தமிழுலகம் சொக்கிப் போயிற்று. தமிழ்ச் சுவையும், கடவுளுணர்ச்சியும் தேனும் பாலும் போலக் கலந்தன. இயல் அமைதியும் இசை வளமும் மலரும் மணமும் போல ஒன்றின.

கி.பி. ஐந்தாவது நூற்றாண்டு முதல் இந்தப் பக்தித் தமிழ் மழை பொழியத் தொடங்கியது. ஞானசம்பந்தப் பெருமான் கி.பி. ஏழாம் நூற்றாண்டின் முற்பாதியிலே வாழ்ந்தவர். இவருடைய சரித்திரத்தைச் சேக்கிழார் மிக அற்புதமாகப் பெரிய புராணத்தில் பாடியிருக்கிறார்.

இளம் பிள்ளையாகிய சம்பந்தப் பெருமானுடைய பாட்டிலே இயற்கையின் எழிலெல்லாம் கொஞ்சிக் குலவி நடமிடும். இறைவனுடைய குண அழகும் கோல எழிலும் இணைந்து கூத்தாடும். ''இளங்கன்று பயம் அறியாது'' என்பார்கள். ஞானசம்பந்தரும் பயம் அறியாத கன்று. ஆதலின் இறைவனிடம் முறையிடுவதென்பது இவருடைய திருவாக்கில் அரிதாகவே இருக்கும்.

★

பன்னிரண்டு திருமுறை முழுவதையும் படித்துப் பொருளுணர்ந்து இன்புறல் மிக மிக அருமையான காரியம். எல்லாப் பாடல்களுக்கும் பொருள் தெளிவாக விளங்கும் என்று சொல்ல முடியாது. பழங்காலத்தில் திவ்யப் பிரபந்தத்துக்குச் சில பெரியார்கள் உரை வகுத்ததுபோல் திருமுறைகளுக்கும் யாரேனும் வகுத்திருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்! இப்போதுள்ள மூலத்தில் எத்தனையோ பிழைகள் இருக்கின்றன. பல பாடல்களுக்கு எத்தனைதான் மண்டையை உடைத்துக் கொண்டாலும் பொருள் விளங்கவில்லை.

என்றாலும் திருமுறைப் பாடல்கள் தமிழர் பெற்ற அரும்பெருஞ் செல்வம். அவற்றில் நயமான பாடல்களைத் தேர்ந்தெடுத்து எல்லோரும் படித்து இன்புறலாம். சில அன்பர்கள் அந்த வகையில் சில திரட்டுகளை வெளியிட்டிருக்கிறார்கள்.

ஒவ்வொரு திருமுறையிலும் சில பாடல்களைப் பொறுக்கி அவற்றுக்கு விளக்கம் எழுதலாம் என்று எனக்குத் தோன்றியது. அவ்வாறே எழுதத் தொடங்கினேன்.

என்னுடைய ஆசிரியப்பிரானாகிய டாக்டர் ஐயரவர்கள் தேவாரத்திலும் பிற திருமுறைகளிலும் மிக்க ஈடுபாடுடைய வர்கள். தேவார பாராயணத்தை விடாமல் செய்துவந்தார்கள். திரு முறைகளைப் பற்றிய குறிப்புக்கள் பலவற்றைத் தொகுத்து வைத்தார்கள். இலக்கியம், இலக்கணம், தல வரலாறு, சரித்திரம், சாத்திரம், இசை என்ற பல துறைகளில் தேவாரத்தை ஆராய்ந்து நல்ல முறையில் பதிப்பிக்கவேண்டும் என்ற விருப்பமும் அவர்களுக்கு இருந்தது. தமிழ்நாட்டின் தவக் குறைவால் அது நிறைவேறவில்லை. அவர்கள் கட்டளைப் படியே தேவாரத்தைச் சில சமயங்களில் படித்து வந்தபோது அவர்கள் பக்தி பரவசப்பட்டுக் கண்ணீர் துளும்ப மொழி தடுமாற இருந்த காட்சியை இன்று நினைத்தாலும் உள்ளம் உருகும். அப்போது பல நுட்பங்களை அவர்கள் சொன்ன துண்டு. திருவாவடுதுறையில் ஆதீன கர்த்தராக இருந்த மேலகரம் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரவர்களும், மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களும் அவ்வப்போது கூறிய நயங்களையும் எடுத்துச் சொல்வார்கள்.

இந்தச் சூழ்நிலையில் தமிழ் கற்றமையால் திருமுறைப் பாடல்களுக்கு விளக்கம் செய்யலாம் என்ற நினைவு ஒருபால் எழுந்தாலும், பலவகையறிவும் ஒருங்கு உடையவர்களே செய்ய அஞ்சும் இதனை நாம் செய்வதாவது என்ற அச்சமும் உடனே எழும்; 'ஏதோ சில பாடல்களுக்குத்தானே விளக்கம் வரையப் போகிறோம்? எழுதிய அளவிலே பயன்படட்டுமே. எழுத வேண்டியவற்றையெல்லாம் குறைவின்றி எழுதி நிறைவேற்றி விட்டேன் என்று யாரால்தான் சொல்லமுடியும்? நல்ல அறிவாளிகள் பின்னும் முயன்று சிறப்பாகச் செய்யட்டும். இப்போது நமக்குத் தெரிந்த அளவில் விளக்கம் கூறலாம்' என்ற எண்ணமே வென்றது. முருகன் திருவருளின் துணைகொண்டு எழுதத் தொடங்கினேன்.

இதில் முதல் திருமுறையில் உள்ள ஒன்பது பாடல் களுக்குரிய விளக்கத்தைக் காணலாம். 'சங்கநூற் காட்சிகள்' என்ற நூல் வரிசையில் பாட்டுக்கு விளக்கம் எழுதிய முறையையே பெரும்பாலும் பின்பற்றி இந்த விளக்கத்தை எழுதியிருக்கிறேன். இந்தப் புத்தகத்தில் முதற் பாட்டுக்கு விளக்கம் நீண்டுவிட்டது. ஆனாலும் அந்தப் பாட்டு மிகமிக முக்கியமானது, தலைமையானது அல்லவா?

தமிழுலகம் இந்த முயற்சியை உரமிட்டு வளர்த்து நிறைவேறச் செய்யும் என்றே நம்புகிறேன்.

கி.வா.ஜகந்நாதன்

பொருளடக்கம்

உள்ளம் கவர் கள்வன்

பொருளடக்கம்

உள்ளம் கவர் கள்வன்

சோழவள நாட்டிலே உள்ள பழம்பெருஞ் சிவஸ்தலம் சீகாழி. அங்கே வேத வேள்வித்துறை நிரம்பிய பெரியார் சிவபாத இருதயர். அவருடைய மனைவியார் பகவதியார். இருவருக்கும் இறைவன் திருவருளே உருவாக ஓர் ஆண் குழந்தை பிறந்தது. குழந்தைக்கு இறைவன் அருளால் இரண்டு ஆண்டுகள் நிறைந்து மூன்றாம் ஆண்டு நடந்து கொண்டிருந்தது.

ஒரு நாள் சிவபாத இருதயர் காலையில் நீராடும் பொருட்டுக் கோயிலைச் சார்ந்த பிரம தீர்த்தத்தை நோக்கிப் புறப்பட்டார். அவருடைய குழந்தை தானும் வருவேனென்று பிடிவாதம் செய்து அழுதான். வேறுவழி இல்லாமல் குழந்தையையும் அழைத்துக்கொண்டு நீராடச் சென்றார் சிவபாத இருதயர். திருக்குளத்தின் கரையிலே குழந்தையை உட்கார வைத்துவிட்டுக் குளத்திற்குள் இறங்கி அவர் நீராடத் தொடங்கினார். மந்திர விதிப்படியே நீராடினார். அகமருஷண ஸ்நானம் என்பது ஒருவகை. நீருக்குள்ளே மூழ்கியபடியே சில மந்திரங்களைச் சொல்லவேண்டும். அவர் அப்படி மூழ்கி யிருக்கையில் கரையில் இருந்த குழந்தை தம் தந்தையாரைக் காணாமல் கோயிலின் சிகரத்தைப் பார்த்து, ''அம்மா! அப்பா!'' என்று அழுதான். அப்போது சீகாழியில் கட்டு மலையின்மேல் கோயில் கொண்டிருக்கும் தோணியப்பர் உமாதேவியாருடன் இடப வாகனத்தில் எழுந்தருளி வந்தார். உமாதேவியார் பாலை ஒரு கிண்ணத்திற் கறந்து அதில் ஞானத்தைக் குழைத்து அழுத பிள்ளைக்கு ஊட்டினார். பின்பு இருவரும் மறைந்தனர்.

அம்மையின் திரு முலைப்பால் உண்டமையால் அந்தப் பிள்ளைக்குச் சிவஞான உணர்ச்சி உண்டாயிற்று. அவர் திருஞான சம்பந்தர் என்ற திருநாமம் பெற்றார்.

குளத்தில் நீராடிவிட்டுக் கரைக்கு வந்த சிவபாத இருதயர் தம்முடைய குழந்தையைப் பார்த்தார். வாயில் பால் வழிய நிற்பதைக் கண்டு, ''யார் உனக்குப் பால் தந்தார்?'' என்று அதட்டிக் கேட்டார். ஞானசம்பந்தர் ஒரு விரலால் தோணியப் பரைச் சுட்டிக் காட்டி, ''தோடுடைய செவியன்'' என்ற பாடலைப் பாடி, ''இவரே!'' என்று காட்டினார். அந்தப் பாடலே திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் பாடிய முதற் பாடல். பிறகு பத்துப் பாடல்களாகப் பாடி அந்தப் பதிகத்தை நிறைவேற்றினார். தேவாரத்தின் முதல் பதிகம் அதுவே.

★

மூன்று ஆண்டுக் குழந்தை ஞானசம்பந்தர். அந்தக் குழந்தை மாசு மறுவற்ற தூய உள்ளம் படைத்தவர். இறைவனுடைய திருக்கோலத்தைப் பாடுகிறார். அந்தத் திருக் கோலத்தில் வேறு நிறமுள்ள பொருள்கள் பல இருந்தும் அவற்றில் இந்தக் குழந்தையின் உள்ளம் செல்லவில்லை. இறைவன் திருக் கழுத்தில் நீல நஞ்சம் இருக்கிறது; அவன் திருமுடியில் சிவந்த சடை இருக்கிறது; அங்கே பொன்னிறக் கொன்றையும் உண்டு. இப்படிப் பல நிறமுள்ள பொருள்கள் இறைவனிடம் இருந்தாலும் தூய வெண் பொருள்களிலேதான் அந்தக் குழந்தையின் கண் ஓடியது.

உலகில் உள்ள குழந்தைகளுக்கு வண்ண வண்ணமான விளையாட்டுப் பண்டங்களை வாங்கித் தருவார்கள். கண்ணைப் பறிக்கும் வண்ணப் படங்கள் உள்ள புத்தகங்களை அளிப்பார்கள். உலகியலில் பல நிறங்களோடு ஊடாடிப் பல குணங்களைப் பெற்றுப் பல செயல்களைச் செய்ய இருக்கும் குழந்தைகளாதலின் பலவகை வண்ணங்களைக் கண்டு அவை மகிழ்ச்சி அடைகின்றன. ஆனால் இந்தக் குழந்தையோ ஞானசம்பந்தக் குழந்தை. ஞானம் தூயது; அதற்கு வெண்மை நிறந்தான் அடையாளம். குணங்கள் பலவானாலும் அவற்றை மூன்றுக்குள்ளே அடக்குவார்கள். சத்துவம், ராஜசம், தாமசம் என்பவை அவை. இவற்றிற்கு முறையே வெண்மை, செம்மை, கருமை என்பவற்றை நிறமாகக் கூறுவார்கள். எம்பெருமாட்டி ஊட்டிய ஞானப்பால் வெண்மை நிறம்பெற்றது. அதனை உண்ட பிரான் தூய சத்துவ குணமே பெற்றார். அவர் கண்கள்

இறைவன் திருக்கோலத்தில் சத்துவ குணத்தைக் காட்டும் வெண்மையையுடைய பொருள்களையே கண்டு மகிழ்ந்தன.

★

தந்தையார், ''யார் பால் கொடுத்தார்?'' என்று கேட்டார். அதற்குக் குழந்தை நேர்முகமாகப் பதில் சொல்லவில்லை. யாரோ அயலார், எந்த உறவின் முறையும் இல்லாதார், தம் குழந்தைக்குப் பால் கொடுத்துச் சென்றாரோ என்ற ஐயத்தால் சிவபாத இருதயர் கேட்டார். சம்பந்தப் பெருமான், ''இறைவன் கட்டளையிட இறைவி பால் கொடுத்தாள்'' என்று சொல்லியிருக்கலாம். அவர் அப்படிச் சொல்லவில்லை. ''இத்தகைய திருக்கோலத்தில் வந்து என் உள்ளத்தைக் கவர்ந்த கள்வன், இதோ இந்தப் பிரமபுரமாகிய சீகாழியில் உள்ள பெருமான்'' என்று சொல்கிறார். பாலைப்பற்றிய பேச்சே பாட்டில் வரவில்லை.

சம்பந்தப் பெருமான் வெறும் பாலை உண்ணவில்லை. மற்றவர்கள் தரும் பால் நாவுக்கு இனிமை தரும்; அப்பால் வயிற்றிற்குள்ளே சென்று பசியைப் போக்கும். அது உடம்புக்குப் பயனைத் தருவது. ஆனால் உமாதேவியார் தந்த பால் சிவஞானத்தை அருளியது. அது உள்ளத்தைக் கவர்ந்து அதன் வழியே உயிருக்கு இன்பந்தருவது. மற்றவர்களெல்லாம் பலபல நெறியிலே சென்று பலபல குணமுடையவராகிப் பலபல நினைவும் பலபல உரையும் பலபல செயலும் பெற்றுப் பாசத்துக்கு உட்படுகிறவர்கள். ஞானசம்பந்தப் பெருமானோ 'ஒரு நெறியில் வரும் ஞானத்தால்'* ஒரு நெறியிலே மனம்† வைத்து உணர்ந்து, இறைவன் திருநெறித் தமிழ் ஒன்றையே உரைத்து, அவனைப் பணியும் தொண்டு ஒன்றையே செய்யப் புகுந்தவர்.

ஆகவே, ''எனக்குப் பால் கொடுத்ததைத்தானே நீங்கள் கேட்கிறீர்கள்? அவன் என் உள்ளத்தையே கவர்ந்துவிட்டான்.

---

* ''*தம்பெருமைக் கழல்பேணும், ஒரு நெறியில் வருஞானம் கொடுப்பதனுக்கு உடன் இருந்த, அருமறையாளருடையவளை அளித்தருள அருள் செய்வார்.'' (பெரிய புராணம், திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் புராணம், 65.)*

† ''*ஒருநெறிய மனம் வைத்துணர் ஞானசம்பந்தன்.'' (தேவாரம்.)*

உலகில் யார் யாரையோ உறவினராக எண்ணியிருந்த பழைய உள்ளம் எனக்கு இப்போது இல்லை. தானே நினைத்துத் தானே இன்ப துன்ப உணர்ச்சி பெறும் உள்ளத்தை அவன் கவர்ந்து கொண்டான். இனி அந்த உள்ளம் என்னிடம் இல்லை; அவனிடம் இருக்கிறது; அவன் வசப்பட்டிருக்கிறது. அவன் அதனை எப்படியெல்லாம் இயக்குகிறானோ அப்படி யெல்லாம் இயங்கும். நினைக்கச் செய்தால் நினைக்கும்; மறக்கச் செய்தால் மறக்கும். இனி ஒரு கணமும் அவனை விட்டுப் பிரியாது'' என்பதையெல்லாம் உள்ளடக்கி, ''என் உள்ளம் கவர் கள்வன், பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன்'' என்கிறார்.

★

பிறரை மயக்குபவர் தம்மிடத்திலுள்ள பொருளைக் காட்டியும், குணத்தைக் காட்டியும், செயலைக் காட்டியும் அவர் உள்ள்த்தைத் தம் வசமாக்குவது வழக்கம். இங்கே, இறைவன் எவற்றைக் காட்டிச் சம்பந்தக் குழந்தையின் உள்ளத்தைக் கவர்ந்தான்?

தோடு உடைய செவியைக் காட்டினான்; தான் ஏறி வந்த விடையைக் காட்டினான்; தூவெண்மதியைக் காட்டினான்; உடம்பெல்லாம் பூசிய சுடலைப் பொடியைக் காட்டினான். எல்லாம் வெண்மை நிறம் உடையவை. குழந்தை இறைவன் காட்டிய கோலத்தில் உள்ள மற்றவற்றைப் பின்னாலே நினைத்து நினைத்துப் புகழப் போகிறது; ஆனால் முதல் முதலாக நினைவுக்கு வருபவை இந்த வெண்மை நிறம் பெற்ற பொருள்களே. தூய சத்துவ குணத்தை நினைப் பிக்கும் வண்ணத்தை உடையவைகளே அப்பெருமானுடைய உள்ளத்தை முதல் முதலாகக் கொள்ளை கொண்டன.

'தோட்டை அணிந்த செவியை உடையவனாகி, இடப வாகனத்தின் மேல் ஏறிக்கொண்டு, ஒரு தூய வெள்ளிய மதியைத் திருமுடியிலே சூடி, மயானத்திலே உள்ள சுட்ட வெண்ணீறாகிய பொடியைப் பூசிக்கொண்டு வந்து என் உள்ளத்தைக் கவர்ந்த கள்வன்-' என்று சொல்கிறார் சம்பந்தமூர்த்தி நாயனார்.

தோடுஉடைய செவியன் விடைஏறிஓர்
தூவெண் மதிசூடிக்
காடுஉடைய சுடலைப் பொடிபூசிஎன்
உள்ளம் கவர்கள்வன்.

★

முதலிலே ''தோடுடைய செவியன்'' என்று தொடங்கினார். இறைவனுடைய திருவருளாலே ஞானம் பெற்றார் சம்பந்தப் பெருமான். அதற்கு உரிய கருவியாக இருந்தது உமாதேவியார் கிண்ணத்திற் கறந்து ஊட்டிய பால். எனவே, உமாதேவியாரே ஞானத்தை வழங்கியவரென்று சொல்லலாம். ''யார் பால் கொடுத்தார்?'' என்று கேட்ட வினாவுக்கு, ''இறைவன்'' என்று சொல்வது முறையாகுமா? உமாதேவியாரல்லவா பால் கொடுத்தார்? ஆதலின் அவரைத்தான் சுட்டிக் காட்ட வேண்டும். ஆனால் அம்பிகை வேறு, இறைவன் வேறு அல்ல. சிவமும் சக்தியும் ஒருவரே. சிவபிரானுடைய அருளே சக்தி. ஆதலின் அவர்களைத் தனித் தனியே பிரித்துச் சொல்வது உயர்வன்று. என்றாலும் அவர்கள் வெவ்வேறு உருவுடையவர்களாகவும் தோற்றுவதனால் வேறு வேறாகப் புகழ்வதும் உண்டு. வேறு வேறாகத் தோற்றினாலும் ஒருவரே என்பதை இறைவனுடைய அர்த்தநாரீசுவரத் திருக்கோலம் நமக்கு உணர்த்துகிறது. இடப்பாகம் முழுவதும் அம்பிகையின் உருவாகவும், வலப்பாகம் முற்றும் இறைவனது உருவாகவும் அமைந்தது மாதிருக்கும் பாதியனுடைய கோலம். அக் கோலத்தில் சிவமும் சக்தியும் வேறு வேறாகத் தோன்றினாலும் இருவராக இருக்கவில்லை. ஒருவராகவே இருந்தாலும் வேறு வேறு பகுதிகளாக இருக்கின்றனர். சம்பந்தருக்குப் பால் கொடுத்த உமாதேவியார் இறைவனுடைய வாம பாகத்திலே ஒன்றுபட்டு உறைகிறார். அவரைத் தனியே பிரித்து நினைக்க மனம் வரவில்லை. ஆனாலும் அவரைத்தான் முதலில் நினைக்க வேண்டுமென்று தோன்றியது.

மாதிருக்கும் பாதியனாகிய திருக்கோலத்தில் இறைவனுடைய இடப்பாகம் அம்பிகையின் பாகம்; அந்தப் பகுதியில் இடது செவியில் தோடு இருக்கிறது. மற்றொரு பகுதியில் குழை இருக்கிறது. ''தோலும் துகிலும் குழையும்

சுருள்தோடும்'' என்று மாணிக்க வாசகர் அந்தத் தொன்மைக் கோலத்தைப் பாடுகிறார். இறைவியைத் தனியே நினைக்காமல், இறைவனோடு ஒன்றுபட்டு நினைக்க வேண்டுமென்றால் அர்த்தநாரீசுவரருடைய வாமபாகத்தை நினைக்க வேண்டும். ஞானசம்பந்தர் அப்படித்தான் செய்கிறார். எடுத்தவுடன் **'தோடுடைய செவியன்'** என்று தொடங்குகிறார். 'தோடுடைய' என்றதனால் அம்பிகையை நினைத்ததாகிறது. செவியள் என்று சொல்லாமல் செவியன் என்று சொன்னதனால் அவ்வம்பிகை இறைவனோடு ஒன்றியவள் என்பதைக் கூறியதாகிறது. எனவே அம்பிகையின் பகுதியை நினைப்பதனால் நன்றியறிவும், இறைவனோடு ஒன்றாக வைத்து நினைப்பதனால் உண்மையுணர்வும் உடையவர் என்பதைச் சம்பந்தப் பெருமான் புல்ப்படுத்திக் கொண்டார்.

★

வாம பாகத்தை நினைப்பவர் தோடுடைய செவியை நினைப்பானேன்? வேறு ஒன்றை நினைக்கலாமே!

ஞானசம்பந்தப் பெருமான் இனித் தேவாரப் பதிகங்களால் இறைவனுடைய புகழைப் பாடுவதையே தம்முடைய வாழ்க்கைப் பணியாக ஏற்றுக் கொள்ளப் போகிறார். அவ்வாறு பாடும்போது அந்தப் பாடல்கள் சென்று சேரும் இடம் செவியே அல்லவா? அதனால் அதை முதலில் பாடினார். இதைச் சேக்கிழார் பெரிய புராணத்தில் எடுத்துக்காட்டுகிறார்.

''பல்லுயிருங் களிகூரத் தம்பாடல் பரமர்பாற்
செல்லுமுறை பெறுவதற்குத் திருச்செவியைச் சிறப்பித்து''

என்று அவர் காரணம் கூறுகிறார்.

தோடு என்பது வெள்ளோலையைச் சுருட்டி அணிவது. அதனால் அதனைச் சுருள்தோடு என்றும் சொல்வார்கள். தமிழ்ப் பாடலை வெள்ளோலையில் எழுதுவது வழக்கம்.

''வெள்ளோலை, கண்பார்க்கக் கையால் எழுதானை''

என்பது ஔவையார் பாட்டு. வெண் தோடாகிய ஓலையில் எழுதிச் சார்த்துவதற்கு உரிய தேவாரத்தை வெண்தோடு அணிந்த செவியிலே சார்த்துவது பொருத்தந்தானே?

அது மாத்திரம் அன்று. இறைவனுடைய திருக்காதில் இரண்டு கந்தருவர்கள் தோடாக இருந்து எப்போதும் இசை பாடிக்கொண்டே இருக்கிறார்களாம்.

''தோடுவார் காதன்றே தோன்றாத் துணைஐயர்
பாடுவார் ஓர்இருவர்க்கு இட்ட படைவீடே''*

என்று ஒருவர் பாடுகிறார். அந்தச் செவி இசைப்பாட்டைக் கேட்பதில் விருப்பமுடையது. ஞானசம்பந்தப் பெருமான் பாடும் தேவாரப் பதிகங்கள் பண்ணோடு கலந்த இசைப் பாடல்கள்.† அவற்றைச் சார்த்துவதற்கு, முன்னமே இசையின் சுவைகண்ட இறைவனுடைய தோடுடைய செவியையல்லாமல் வேறு சிறந்த இடம் எது?

★

எந்த நூலைத் தொடங்கினாலும் மங்கல மொழியில் தொடங்குவது வழக்கம். இன்ன இன்ன சொற்கள் மங்கலமொழிகள் என்று பிற்காலத்தில் இலக்கணப் புலவர்கள் தொகுத்துக் கூறியிருக்கிறார்கள். ஞானசம்பந்தர் அருளிய தேவாரப் பனுவலின் தொடக்கம் ''தோடுடைய செவியன்'' என்று வரும் திருப்பதிகம். இறைவன் திருவருளால் எழுந்த எல்லாமே மங்கல வாக்குத்தான். ஆதலின் ஞானசம்பந்தர் திருவாக்கில் எழுந்தது எதுவானாலும் அது மங்கல மொழியென்றே கொள்ளுவதற்குரியது. ஆயினும் அத்தகைய சமாதானத்திற்கு அவசியம் இல்லாமலே தோடு என்ற சொல் அமைந்திருக்கிறது. அதுவே மங்கலச் சொல்தான். பூ, சீர், எழுத்து, உலகம் என்று பிற்காலத்தில் தொகுத்துச் சொல்லும் மங்கலச் சொல் வரிசையிலே தோடு என்ற சொல்லைக் காண முடியாது. ஆனாலும் தோடு என்பது மங்கலச் சொல்லே.

உமாதேவியின் பாகத்தில் அமைந்தது தோடு என்பதை முன்பே பார்த்தோம். தோடு மங்கலத்தைக் காட்டும் அறிகுறி. மங்கல வாழ்வையுடைய மங்கைமாரின் மங்கல அறிகுறியாக

---

* *திருப்பாதிரிப்புலியூர்க் கலம்பகம்.*

† *''ஞானசம்பந்தன் சொன்ன, பண்ணியல் பாடல்'', ''இசையமர்கழுமல நகரிறை தமிழ்விர கனதுரை இயல்வல, இசைமலி தமிழ் ஒருபதும்'' (திருஞானசம்பந்தர் தேவாரம்.)*

உள்ளவை மங்கல நாண், தோடு, திலகம், மை, மலர் முதலியன. அணிவகைகளில் தோடு திருமங்கலியத்துக்கு ஒப்பாகவே கொள்ளத்தகுவது.

"நம்பா நினக்கோலம் முறையோ எனக்கால
நஞ்சுண்டு பித்துண்டு நாம்தேவர் என்பார்
தம்பாவை யர்க்கன்று காதோலை பாலித்த
தயவாளர்" (மதுரைக் கலம்பகம், 29)

என்ற குமரகுருபர முனிவருடைய வாக்கையும், அதற்கு **டாக்டர் ஐயரவர்கள்,** 'காதோலை மாங்கலியம் போன்ற சிறப்புடையது; அதனைப் பாலித்தலாவது அவர்களுடைய மங்கலம் கெடாமல் நிலவும்படி நிறுத்துதல்' என்று எழுதிய குறிப்புரையையும் இங்கே பொருத்திப் பார்க்கவேண்டும்.

நித்திய சுமங்கலையாகிய அம்பிகையின் மங்கலத்துக்கு அறிகுறியாக அப்பெருமாட்டியின் திருச் செவியில் இருப்பது தோடு. அந்த மங்கல அணியைச் சொல்லும் மொழியும் மங்கல முடையதுதானே? எனவே, உலகத்துக்கு மங்கலம் செய்ய எழுந்த சம்பந்தப் பெருமானது திருவாக்கு, 'தோடு' என்ற மங்கல மொழியை முதலிலே உடையதாக எழுந்தது என்றே கொள்ள வேண்டும்.

தேவாரம் வேதம் போன்றது. அதைத் தமிழ் வேதம் என்றே கூறுவர். வடமொழி வேதம் எழுதாக்கிளவி. தமிழ் வேதமாகிய தேவாரம் எழுதும் மறை. வேதத்தைப் போன்ற சிறப்புடைய தேவாரப் பாடல்களில் வேதத்திலுள்ள சாரமான கருத்துக்கள் அமைந்திருக்கின்றன. வேதம் ஓம் என்று பிரணவத்துடன் தொடங்குகிறது. தமிழ் வேதமாகிய தேவாரம் ஓம் என்று தொடங்கவில்லை. ஆயினும் ஓம் என்ற எழுத்தின் பெரும் பகுதியாகிய ஓ என்ற எழுத்தோடு தொடங்குகிறது. மந்திரத்தை மறைத்துச் சொல்வது வழக்கம். இங்கு இந்த ஓ என்ற மந்திரத்தை வேறு ஓர் எழுத்தோடு சேர்த்து வைத்தார் ஞானசம்பந்தர். மிகவும் நுட்பமான பொருளை ஏதேனும் ஒரு கருவியால் எடுப்பார்கள். நுட்பமான பொருளையுடைய ஓங்காரத்தைத் தகர மெய்யோடு சார்த்தி, தோ என்ற எழுத்தை முதலில் வைத்து, "தோடு" என்று தமிழ் வேதத்தைத் தொடங்கினார் சம்பந்தர். இதையும் சேக்கிழார் சொல்லுகிறார்.

''எல்லையிலா மறைமுதல்மெய் யுடன்எடுத்த எழுதுமறை
மல்லல்நெடுந் தமிழால்இம் மாநிலத்தோர்க் குரைசிறப்ப''

என்பது அவர் சொல்லும் விளக்கம். 'எல்லையில்லாத மறையின் முதல் எழுத்தை ஒரு மெய்யெழுத்தோடு சேர்த்து வைத்து எடுத்துக் கூறிய, எழுதுவதற்குரிய வேதமாகிய வளம் மிக்க நீண்ட தமிழால் இந்த மாநிலத்தில் உள்ளவர்களுக்குப் புகழ் சிறக்கும்படியாக' என்பது இதன்பொருள்.

மந்திரத்தை மறைத்துச் சொல்வார் தகர மெய்யோடு சேர்த்து, தோ என்று தொடங்கினார் என்பதைக் கண்டோம். அப்படி ஓவை ஒட்டுவதற்கு வேறு மெய்யைக் கொள்ளாமல் தகரத்தைக் கொண்டதற்கும் ஏதாவது காரணம் இருக்க வேண்டும் அல்லவா?* தமிழ் வேதமாகிய இதைத் தொடங்குகையில் தமிழ்ப் பண்பையும் வேதப் பண்பையும் ஒன்றுபடுத்திப் பாடத் திருவுள்ளங் கொண்டார் ஞானசம்பந்தர். தமிழ் என்றே பெயரே த என்பதை முதலாக உடையது. இலக்கணத்தின்படி 'த்' என்பதுதான் முதல் எழுத்து. மெய்யை முதலாகக் கொண்டது தமிழ் என்ற சொல். ஆகவே, தமிழின் முதலாகிய த் என்பதன் மேல் வேதத்தின் முதலாகிய ஓ வை ஏற்றிச் சொன்னார். தமிழ் மொழியில் வேதக் கருத்தை அமைத்துச் சொல்ல வந்த பெருமான் அதற்கு அறிகுறியாக எடுத்த எடுப்பில் முதல் எழுத்தில் அந்தத் தன்மை புலப்படும்படி தமிழ் என்பதன் முதல் எழுத்தையும், வேதத்தின் முதலெழுத்தையும் தோ என வைத்தார் என்று சொல்வதும் பொருத்தம் அல்லவா?

'தமிழிலே வேதக் கருத்தைச் சொல்ல வந்த எழுதும் மறையாகிய தேவாரம் இறைவனுடைய திருச் செவிக்கண் சார்த்தத் தகுவது. அதனைப் பாடும் ஆற்றலைத் தந்தவர்

---

* *தகரம் என்பது தகராகாசத்தைக் குறிப்பது. தகராகாசத்தில் இறைவன் நடமிடுகிறான். ஆதலின் தகரத்தோடு சார்த்தினார் என்று சிலர் கூறுவதுண்டு. 'மறையவர்குலத்து மாதவப் பயனாய் அவதரித்த கௌணியர் திலகமாய காழிப் பிரானார் காயத்திரிப் பிரணவப் பிரதமாட்சரத்தைத் தமது திவ்ய சூக்தியின் தொடக்கத்தின் மங்கலமாக அமைத்தருளினார்' என்பர் டாக்டர் **வி.வி.ரமண சாஸ்திரிகள்** (திருமந்திரம், பாயிரஉரை.)*

இறைவனினின்றும் வேறல்லாத அம்பிகை. அவ்வம்பிகையின் வாம பாகத்தின் பகுதியாகிய திருச் செவியில் வெள்ளைத்தோடு உண்டு. அந்தத் தோடு இசைபாடுவார்க்குரிய வீடு. தமிழ் எழுதும் ஓலையாலானது' என்னும் இத்தகைய நினைவுகளை யெல்லாம் தோற்றச் செய்வது 'தோடுடைய செவியன்' என்னும் தொடர்.

★

தோடுடைய செவியனாக உள்ளவன் தோணியப்பனாகிய இறைவன். இறைவன் குணங்குறி கடந்த தன் நிலையில் இருந்தால் அவனுடைய திருவருளை யாரும் பெறமுடியாது. அவன் ஆருயிர்களிடத்தில் திருவருள் பூண்டவனாதலின் உருவமுடையவனாக எழுந்தருள்கிறான். சிவமும் சக்தியும் ஒன்றுபட்டு இருந்தால் உயிர்களுக்குப் பயன் இல்லை. இறைவனிடம் உள்ள அருள் வெளிப்படவேண்டும்; இல்லையானால் இறைவனுக்கே வேலை இல்லை.

''சிவமெ னும்பொருளும் ஆதி சக்தியோடு
சேரின் எத்தொழிலும் வல்லதாம்;
அவன்பி ரிந்திடின் இயங்கு தற்கும் அரிதாம்''

என்பது சௌந்தரிய லகரி. ஆதலின் அருள் வெளிப்பாட்டையே இறைவன் மாதிருக்கும் பாதியனாக நின்ற திருக்கோலம் காட்டுகிறது; தோடுடைய செவியனாகுந் திருக்கோலமும் அதுதான். அருள் வெளிப்பாட்டின் முதல் தோற்றம் அது. அதன்பின் தனித் தனியே இறைவனும் இறைவியுமாக விடையின்மேல் எழுந்தருளுகிறார்கள். அப்படி வருவது அடியார்களுக்கு அருள்புரிவதன் பொருட்டேயாகும். திருஞான சம்பந்தப் பெருமானுக்கு அருள் புரிந்தபோதும்,

''பொன்மலைவல் லியுந்தாமும்
பொருவிடைமேல் எழுந்தருளி''

வந்ததாகச் சேக்கிழார் சொல்கிறார்.

அடியாரைக் காக்கும் பொருட்டு அருளைத் தாங்கி நிற்கும் பெருமானுக்கு அருள் மிகுதியானால் அடியார்கள் அவனிடம் வராவிட்டாலும் அவன் அவர்களிடம் எழுந்தருள்

வான். அதற்கு ஏற்றபடி அவனுக்கு விடை வாகனமாக இருக்கிறது. அறமே விடையாக இறைவனைத் தாங்குகிறது. எல்லோருக்கும் இறைவனை வழிபடுவது அறம். அன்பர் களைப் பாதுகாத்தல் இறைவனுக்கு அறம்.

"தன்கடன் அடியேனையுந் தாங்குதல்"

என்பது அப்பர் அருள் மொழி. அடியாரைத் தாங்கும் அறமே இறைவனுக்கு வாகனமாக நிற்கிறது. அதன்மீது இறைவன் எழுந்தருள்கிறான்.

யாதொரு செயலும் இன்றி இருக்கும் இறைவனால் நமக்குப் பயன் ஒன்றும் இல்லை. அவன் தன் அருளை வெளிப்படுத்தினால்தான் பயன். பயனுள்ள இடத்தையே உள்ளம் நாடும். அருள் வெளிப்படாத பரசிவமாக இருந்தால் உள்ளம் நாடுவதில்லை. இறைவனிடம் அருள் வெளிப்பட்டது என்பதை உணரும்போது உள்ளம் அவன்பால் செல்கிறது. அருள் வெளிப்பாட்டின் முதல் தோற்றமாகிய தோடுடைய செவியன் என்றாலே உள்ளம் அவனிடம் மயங்குகிறது. 'அருள், வெளிப்படுவது மாத்திரமன்று; அடியார்களுக்கு எளிதாய் அவர்களை நாடி வருவது' என்பதை எண்ணும்போது பின்னும் உள்ளம் ஆர்வத்தோடு நாடுகிறது. 'தோடுடைய செவியனாக உள்ளம் கவர்ந்தான்; விடையேறிவந்து பின்னும் மிகுதியாக என் உள்ளம் கவர்ந்தான்' என்று இதனையே ஞானசம்பந்தர் சொல்கிறார்.

★

உயிர்களையெல்லாம் பாதுகாக்கும் அருளையுடையவன் இறைவன்; அதினினும் சிறப்பாக அடியார்களைத் தானே விடையேறி நாடிச் செல்பவன் அவன். அதனையும்விடச் சிறந்த பண்பு ஒன்று அவனிடம் உண்டு. தூவெண் மதிசூடிவரும் தோற்றம் அவனுடைய கருணையின் உச்ச நிலையைக் காட்டுகிறது. அதை அடுத்தபடி நினைக்கிறார் சம்பந்தர்.

இறைவன் தன் திரு முடியிலே பிறையைச் சூடியிருக் கிறான். பிறைக்குக் களங்கம் இல்லை; வெண்மதி அது.

சந்திரன் தன் குருவின் மனைவியை விரும்பியவன். சிவபிரானை விலக்கிவிட்டுத் தக்கன் செய்த யாகத்துக்குப் போய்ச் சிவத்துரோகம் செய்தவன். அவனைப் போலவே இந்திரன், சூரியன் முதலிய தேவர்களும் அங்கே சென்றிருந் தார்கள். இறைவன் அவர்களுக்கெல்லாம் உரிய தண்டனையைக் கொடுத்தான். சந்திரனைக் காலாலே தேய்த் தருளினான். மற்றவர்களுக்குக் கிடைத்தது போலவே சந்திரனுக்கும் தண்டனை கிடைத்தாலும், அந்தத் தண்டனையால் இறைவ னுடைய திருவடித் தொடர்பு அவனுக்கு உண்டாயிற்று. கோபத்தால் இறைவன் தேய்த்தாலும் திருவடிக் கீழ்ப்பட்ட சிறப்பால் சந்திரனுக்குத் தவத்தால் கிடைக்கும் பயன் கிடைத்தது. இறைவனுடைய தலைமேல் ஏறிக்கொண்டான். கோபத்தால் குழந்தை கற்கண்டை வீசி எறிகிறது. அதை ஒருவன் பொறுக்கித் தின்றால் அதில் இனிப்பு இல்லாமல் போய்விடுமோ? இறைவனுடைய திருவடி சம்பந்தம் பெற்றமையால் மதிக்கு இருந்த குறைகள் நீங்கின. என்ன தவறு செய்திருந்தாலும் தன் திருவடியின் தொடர்பு பெற்றால் உயர்ந்த நிலையை அடையலாம் என்ற உண்மையை இதனால் இறைவன் புலப்படுத்தினான். தன்னை அன்பு செய்து வழி பட்டாருக்கு அருள்வதைவிடத் தன்னை அவமதித்தவனுக்கு அருள் செய்வது பெரிய கருணை. இதை நினைக்கும்போது உள்ளம் உருகுகிறது. மதி சூடியாக நின்று, அதனால் தன் சிறந்த கருணையைப் புலப்படுத்தி, அன்பர்களின் உள்ளத்தைக் கவர்கிறான்.

★

இறைவன் உயிர்களுக்கு அருள் செய்யும் பொருட்டுத் தோடுடைய செவியனாகத் தோற்றுகிறான்; அடியார்களுக்கு அருள் செய்ய விடையேறி வருகிறான்; அபராதம் செய்தவரா யினும் அடியடைந்தால் பழம்பிழை பொறுத்து அருள் செய்ய மதிசூடி வருகிறான்.

எல்லா உயிர்களுக்கும் இறைவன் தந்தை. பக்குவ ஆன்மாக்களுக்கு மாத்திரம் தந்தை, மற்றவர்களுக்குத் தந்தை அல்ல என்று சொல்ல முடியாது. எல்லா உயிர்களுக்கும் தனு கரண புவன போகங்களை உதவி வாழச்செய்கிறான்.

ஆனால் சில உயிர்களே நன்னெறியில் நின்று அவனை நாடிச் செல்கின்றன. ஒரு தாய் தன்னுடைய குழந்தைகளைப் பாதுகாக்கும் வகையில் நல்ல பிள்ளைகளுக்குச் சிறப்பான ஆடையணிகளை அணிகிறாள். கெட்ட பிள்ளைகளை ஒறுக்கிறாள். எல்லாப் பிள்ளைகளுக்கும் சோறு ஊட்டுகிறாள். நோயுடைய குழந்தைகளுக்குச் சோறு ஊட்டாமல் மருந்து தருகிறாள். இரவு வந்தால் எல்லாக் குழந்தைகளையும் தாலாட்டித் தூங்கப் பண்ணுகிறாள். உணவு, உடை, அணி ஆகியவற்றில் அந்த அந்தக் குழந்தைகளின் நிலைக்கு ஏற்றபடி வேறுபாடு காட்டி அரவணைக்கிறாள். ஆனால் உறங்கச் செய்யும்போது இந்த வேறுபாடு இருப்பதில்லை. எல்லோரையும் உறங்கச் செய்கிறாள். குழந்தைகளெல்லாம் உறங்கும்போது தான் மாத்திரம் உறங்காமல் இருக்கிறாள். அப்படியே இறைவன் உயிர்களின் நல்வினை தீவினைகளுக்கு ஏற்றபடி அவ்வுயிர்களுக்குப் போகங்களைக் கூட்டுவிக்கிறான். பிரளய காலத்தில் எல்லோரையும் தன் அடிக்கீழ் அடக்கிக் கொள்கிறான். ஒவ்வொரு பிராணியும் மரிக்கிறது. அதற்குச் சுடுகாடு உண்டு. உடலெடுத்த எல்லா உயிர்களும் ஒருங்கே மரிக்கும் காலம் பிரளயம். அப்போது எல்லா இடமும் மகா மயானம் ஆகிவிடும். அந்த மகா மயானத்தில் எல்லா உயிர்களும் அடங்கி நிற்கும்போது எல்லாவற்றையும் சுட்டெரித்து நிற்கும் இறைவன், அந்தச் சுட்ட நீற்றைத் தன் திருமேனியிலே பூசிக்கொண்டு ஆடுகிறான். தன் குழந்தைகளுக்குள் வேறுபாடு இன்றி எல்லோரையும் தூங்கும்போது தனித்து நின்று களிக்கும் தாய்போல, இறைவன் ஆனந்தத் தாண்டவம் ஆடுகிறான். தன் குழந்தைகளுக்கு ஓய்வு கொடுத்ததனால் உண்டான ஆனந்தத்தால் ஆடுகிறான். தன் திருமேனி முழுதும் சுடுகாட்டிலே உள்ள சுட்ட சாம்பலை அணிந்து ஆடுகிறான். எல்லாம் ஒடுங்கின விடத்துத் தான் ஒருவனே சர்வ சக்திமானாக நின்று நடம் செய்கிறான். எல்லா உயிர்களுக்கும் ஓய்வு தருகின்றானே; அவனுக்கு எத்தனை கருணை இருக்க வேண்டும்! அதை நினைக்கையில் உள்ளம் நைகிறது. காடுடைய சுடலைப் பொடி பூசி ஆடும் திருக்கோலத்தைக் காட்டி உள்ளம் கவரும் பெருமான் இறைவன்.

தோடுடைய செவியனாகி, விடை ஏறி, ஓர் தூவெண்மதி சூடி, காடுடைய சுடலைப் பொடி பூசி வரும் பெருமானது

கோலத்தின் உண்மையை நினைக்கும்போது உள்ளம் மயங்கி உருகுகிறது, சம்பந்தப் பெருமானுக்கு. அவனுடைய பேரருட் சிறப்பையே இந்த நிலைகள் யாவும் காட்டுவதனால் அத்தகைய கவர்ச்சி உண்டாகிறது. ஆதலின், 'என் உள்ளம் கவர் கள்வன்' என்றார்.

★

கள்வன் என்று இறைவனைக் கூறுகிறார் சம்பந்தர். யஜுர் வேதத்தில் இறைவனுடைய புகழைக் கூறுவதும் பஞ்சாட் சரத்தைத் தன் நடுவிலே பெற்றதுமாகிய ருத்திரம் இறைவனைக் கள்வர் தலைவனென்று கூறும். கள்வன் பிறர் அறியாவாறு தன் தொழிலைப் புரிபவன்; தன்னை மறைத்துக் கொள்பவன். இறைவனும் சம்பந்தப் பெருமானை ஆட்கொண்டது பிறர் அறியா வகையில்தான். அவன் உருவைப் பிறர் காணல் இயலாது. ஒரு பொருளை உடையாரிடம் முன்னே சொல்லாமலே அப்பொருளைக் கவர்வது கள்வன் தொழில். இங்கும் சம்பந்தப் பெருமானுடைய உள்ளத்தை அவர் எதிர்பாராமலே கவர்ந்து கொண்டவன் இறைவன். இந்தப் பாட்டை முதலாகவுடைய திருப்பதிகத்தில் கடை காப்பு ஒழிந்த பத்துப் பாடல்களிலும் 'என் உள்ளங் கவர் கள்வன்' என்று பாடுகிறார் தமிழ் விரகர்.

★

இவ்வாறு உள்ளத்தைக் கவர்ந்த கள்வன் யார்? அவன் பிரமபுரம் மேவிய பெம்மானாகிய இவன் என்று சொல்ல வருகிறார். பிரமபுரம் என்பது சீகாழிக்கு ஒரு பெயர். பிரமன் இங்கே இறைவனை வழிபட்டுப் பேறு பெற்றான். அதனால் இது பிரமபுரம் ஆயிற்று. இந்தச் செய்தியைக் குறிப்பிடுகிறார் ஆளுடைய பிள்ளையார். 'நல்ல அழகிய இதழ்களையுடைய தாமரை மலரில் இருக்கிற பிரமதேவன் பிரளய காலத்துக்குப் பிறகு உலகத்தைப் படைக்க எண்ணினான். அப்போது இங்கே வந்து பணிந்து துதித்துப் படைப்புக்குரிய ஆணையைப் பெறவேண்டி நிற்க, அது கண்டு திருவுளம் மகிழ்ந்த இறைவன் அவனுக்கு அருள் செய்தான். அவ்வாறு அருள் பாலித்த சிறப்பைப் பெற்ற பிரமபுரத்தில் விரும்பி எழுந்தருளியிருக்கும் பெருமானாகிய இவன்' என்று சொல்கிறார் சம்பந்தர்.

ஏடுடைய மலரான் முனைநாள்பணிந்து
ஏத்த அருள்செய்த
பீடுடைய பிரமாபுரம் மேவிய
பெம்மான் இவன் அன்றே.

வெள்ளைப் பொருளையெல்லாம் நினைத்த குழந்தைப் பிரான் வெள்ளைத் தாமரையை இங்கே நினைத்தார்.

உலகமெல்லாம் பிரளயத்தால் அழிந்தபோது சீகாழி என்னும் தலம் மாத்திரம் அப்பிரளயத்தில் மூழ்காமல் தோணி போல மிதக்க, அதன்கண் இறைவன் எழுந்தருளியிருந்தான். அதனால் இத் தலத்துக்குத் தோணிபுரம் என்ற திருநாமமும், இறைவனுக்குத் தோணியப்பர் என்ற திருநாமமும் உண்டாயின. பிரளயம் நீங்கினபின் இறைவன் பிரமனைத் திருமால் மூலம் உண்டாக்கினான். பிரமன் இத்தலத்துக்கு வந்து இறைவனை வணங்கி அருள் பெற்றுத் தன் படைப்பினைத் தொடங்கினான். இது இத் தலத்து வரலாறு.

திருமாலின் உந்திக் கமலத்தில் தோன்றினவுடனே, ''எப்படி உலகத்தைப் படைப்பது?'' என்ற கவலை பிரமனுக்கு உண்டாயிற்று. உடனே தோணிபுரம் வந்தான். ஆதலின் **'ஏடுடைய மலரான்'** என்று குறிப்பித்தார். மிகப் பழங்காலத்துச் செய்தி இது; ஆதலின் **முனைநாள்** என்றார். முன்னை என்பது முனை என இடைக்குறையாக நின்றது. இறைவன் திருமுன்னர் விழுந்து வணங்கியதைப் **பணிந்து** என்றும், இறைவன் புகழையெல்லாம் கூறித் துதித்ததை **ஏத்த** என்றும் புலப்படுத்தினார். இறைவன், ''இனி நீ நன்றாகப் படைப்புத் தொழிலைச் செய்து வருக'' என்று ஆணை தந்ததையே, **'அருள் செய்த'** என்றார். எல்லா இடங்களும் அழிந்தபோதும் தான் மட்டும் அழியாமல் இருந்த இறுதி இடமே, எல்லா இடங்களும் தோற்றும்போது முதலில் எண்ணுவதற்குரியது. எல்லாப் படைப்புக்கும் மூலமான அருளைப் பெற வைத்த பெருமை சிறந்ததாதலின் அதனை நினைந்து **'பீடுடைய பிரமாபுரம்'** என்றார். பிரமபுரம் என்பதே இசைப் பாவுக்கு ஏற்றபடி பிரமாபுரம் என நீண்டது. சம்பந்தப் பெருமானுடைய பாட்டினால் பிரமபுரம் தன் பெயரிலும் புகழிலும் நீண்டது. மேவுதல் என்பதற்கு விரும்புதல் என்றும் தங்குதல் என்றும்

இரு பொருள் உண்டு. இங்கே அவ்விரண்டையும் சேர்த்து விரும்பித் தங்கிய என்று பொருள் கொள்ளுதல் சிறப்பாகும். பெருமான் என்பது பெம்மான் என நின்றது. இவன் என்பது அணிமைச் சுட்டு. இறைவனை அறியாதவர்கள் யாவரும் அவன் மிகமிக அணிமையில் இருந்தாலும் சேய்மை யிலுள்ளவனாகவே கருதி அவன் என்பார்கள். வேதம் முதலிய நூல்களும் அது என்றே குறிக்கும். ஆனால் இறைவனை உணர்ந்து தம் உள்ளத்தை அவனுக்கே அளித்து அவனைத் தம்முள்ளே உணரும் ஞானப்பிரான் ஆதலின் அவ்வணிமை தோன்ற இவன் என்றார். நெஞ்சுக்கு அணியதாக இருக்கும் பொருளை இகரச் சுட்டாலே சுட்டுதல் மரபு.*

அன்று, ஏ இரண்டும் அசை நிலைகள்.

★

தோடுடைய செவியன்விடை ஏறிஓர்
தூவெண் மதிசூடிக்
காடுடைய சுடலைப்பொடி பூசிஎன்
உள்ளம் கவர்கள்வன்
ஏடுடைய மலரான்முனை நாள்பணிந்து
ஏத்த அருள்செய்த
பீடுடைய பிரமாபுரம் மேவிய
பெம்மான் இவன்அன்றே.

(தோட்டை உடைய செவியை உடையவனாகி, இடப வாகனத்தின்மேல் ஏறி, தூய வெள்ளிய பிறையைத் தலையில் வைத்து, சுடுகாடு பெற்ற சுடுதலையுடைய திருநீற்றைப் பூசி வந்து என் உள்ளத்தைக் கவர்ந்த கள்வன் (யாரெனில்), இதழ்களையுடைய வெண்டாமரை மலரிலே தோற்றிய பிரமதேவன் முன் காலத்தில் வழிபட்டுத் துதி செய்ய, அவனுக்குத் திருவருள் பாலித்த சிறப்புடைய பிரமபுரத்தின்கண் விரும்பி எழுந்தருளிய பெருமானாகிய இவன்.

செவியன் என்பது குறிப்பு வினைமுற்று எச்சம். மதி என்பது பெரும்பாலும் முழு மதிக்கு வருவது. இங்கே தூவெண் மதி என்றதனால் பிறையாயிற்று; சூடுதல் - தலையில் அணிதல். சுடலை -

---

* *இவன் என்றார், கருத்துக்கண் அணிமையான்' (புறநானூறு, 72:2 பழைய உரை.)*

சுடுதல்; காடுடைய சுடலை - காடு என்ற பெயரை உடைய சுடலை, காட்டின் தன்மையை உடைய சுடலை என்றும் பொருள் கூறலாம். பிரமாபுரம்: செய்யுள் விகாரம்.)

உலகின் தோற்றத்துக்கு மூலமான அருளை இறைவன் வ்ழங்கிய இடம் பிரமபுரம். அத் தலமே தமிழ் மறையாகிய தேவாரம் தொடங்குவதற்கும் இடமாயிற்று. இறைவன் திருவருள் துணைக்கொண்டு வேதத்தை எப்போதும் நான்முகன் ஓதிப் பணிபுரியும் இடத்தில் தமிழ் வேதத்தில் பாடிப் பணிபுரியும் சம்பந்தப்பிரான் அருள் பெற்றார்.

தோடுடைய செவியன் என்பதனால் உலகுயிர்த் தோற்றங் களுக்கு மூலமாகிய அருள் வெளிப்பாட்டைக் குறித்தார். இது படைப்பைப் புலப்படுத்தியது. விடையேறுதலும் மதி சூடுதலும் அறம், மறம் உடையாருக்கு முறையே இன்ப துன்ப நுகர்ச்சி தந்து பாதுகாக்கும் காப்புத் தொழிலைப் புலப்படுத்தும். சுடலைப் பொடி பூசியது சங்காரத்தைக் குறிப்பிக்கும். கவர் கள்வன் என்பது மறைப்பாகிய திரோதத்தைக் குறிக்கும். ஏத்த அருள் செய்த என்பது அநுக்கிரகத்தைக் குறிக்கும். இவ்வாறு இறைவனுக்குரியனவாகிய படைப்பு, அளிப்பு, அழிப்பு, மறைப்பு, அருளல் என்பது ஐவகைத் தொழில்களும் குறிப்பாக இப்பாடலில் சொல்லப் பெற்றன.

இது தேவாரத்தில் முதல் திருமுறையில் முதல் பதிகத்தின் முதற்பாட்டு.

★

இந்தப் பாட்டில் தமிழுக்கே உரிய காதல் துறையும் குறிப்பாக அமைந்துள்ளது. பாட்டுடைத் தலைவனுடைய பெயரைக் கூறியமையால் இது புறத்துறையைச் சார்ந்தது. பாடாண் திணையில் கடவுள் மாட்டு மானிடப் பெண்டிர் நயந்த பக்கம் என்னும் துறையின் பாற்படும். தலைவனுடைய பிரிவால் வேறுபட்ட தலைவியை நோக்கி, ''நின் உள்ளம் கவர்ந்தவன் யார்?'' என்று தோழி கேட்க, அவளுக்குத் தலைவி கூறும் கூற்றாக அமைந்தது இந்தப் பாட்டு. இறைவனாகிய காதலனிடம் ஆன்மாவாகிய காதலி கொண்ட காதலைக் குறிப்பது இது.

இந்தக் காதற் செய்தி இந்தப் பாட்டில் வெளிப்படையாக இல்லாவிட்டாலும் இந்தப் பதிகம் முழுவதும் இந்தத் தெய்வக் காதல் பற்றிய பாடல்களால் ஆனது என்பதை இப்பதிகத்தி லுள்ள வேறு இரண்டு பாடல்கள் தெளிவாக உணர்த்தும்.

நீர்ப ரந்தநிமிர் புன்சடை மேலோர்
நிலாவெண் மதிசூடி
ஏர்ப ரந்தஇன வெள்வளை சோரஎன்
உள்ளங் கவர்கள்வன் (3)

மறைக லந்தஒலி பாடலொ டாடலர்
ஆகி மழுஏந்தி
இறைக லந்தஇன வெள்வளை சோரஎன்
உள்ளங் கவர்கள்வன் (6)

என வரும் பகுதிகளால் இது புலப்படும்.

தமிழாற் பாடல் பாடத் தொடங்கும் சம்பந்தப் பிள்ளையார் தமிழுக்கே சிறப்பாகச் சொல்லும் காதல் துறையில் தம் முதற் பதிகத்தை அமைத்தது பொருத்தமேயாகும். அவர் தமிழ் விரகர் அல்லவா?

மூன்று நிலை

உலகத்தைப் படைத்துக் காத்து அழிக்கும் தொழில்களை உடையவன் இறைவன். அந்த மூன்று தொழில்களையும் நடத்துவதற்கு மூன்று மூர்த்தியாகி இருக்கிறான். எல்லாப் பொருள்களும் ஒடுங்கும் காலத்தில் தான் ஒருவனேயாகி நிற்கிறான். தத்துவங்கள் ஒன்றின் ஒன்று தோன்றி விரிந்து கொண்டே வரும். அப்படியே ஒடுங்கும்போது ஒன்றின் ஒன்று அடங்கிக் கொண்டே வரும். தோற்றமும் ஒடுக்கமும் இல்லாதவன் இறைவன் ஒருவனே. அவனே எல்லாப் பொருளும் ஒடுங்கின இடத்திலும் தான் ஒடுங்காமல் எல்லா வற்றின் முடிவையும் காணும் ஒருவனாக விளங்குகிறான். அதனால் எல்லாப் பொருள்களும் ஈறாக, எல்லையாக, அந்தமாக நிற்பவன் இறைவன்தான்.

ஈறும் முதலும்

எவன் எல்லாவற்றிற்கும் இறுதியிலே நிற்கிறானோ, அவனே எல்லாவற்றிற்கும் முதலிலே இருப்பவனும் ஆவான். ஆதி அந்தம் என்ற வேறுபாடு இறைவனளவில் இல்லை. ஆயினும் பிறவற்றை நோக்கும்போது, அவையெல்லாம் ஒடுங்கும்போது அவற்றின் இறுதியைக் கண்டு ஈற்றிலே நிற்பவனாதலின், எல்லாவற்றிற்கும் ஈறான பொருள் அவனே ஆகிறான். மீட்டும் எல்லாத் தத்துவங்களும் தோற்றும்போது அவன் எல்லாவற்றையும் தோற்றுவித்தலின் அவனே முதல்வனாக நிற்கிறான். ஆதலின் ஒடுக்கத்தை நோக்கும்போது அவன் தனக்குப் பின் நிற்கும் பொருள் யாதும் இல்லாத ஈறாக நிற்கிறான்; தோற்றத்தை நோக்கும்போது தனக்கு முன் தோற்றாத பொருள் யாதும் இல்லாத முதலாகவும் நிற்கிறான். அவனை அநாதி என்று சொல்வர் பெரியோர், அவனுக்கு முன்

யாரும் இல்லாமையால். அநந்தன் என்பர், அவனுக்குப் பின் யாரும் இன்மையால். ஆயினும் அவனே யாவற்றையும் தோற்றுவிக்கும் முதல்வனாதலின் ஆதியென்றும், அவனே யாவற்றையும் தன்பால் ஒடுங்கச் செய்யும் ஈறாக நிற்றலின் அந்தம் என்றும் அவனைக் கூறுவர்.

சிவஞான போதத்தின் முதற் சூத்திரம்,

''அந்தம் ஆதி என்மனார் புலவர்''

என்று கூறுகிறது. எல்லாப் பொருளுக்கும் முடிவாகி இருக்கும் சிவபெருமானே எல்லாப் பொருளுக்கும் முதலாக நிற்கிறான் என்ற இதனை ஞானசம்பந்தப் பிள்ளையார் சொல்கிறார்.

திருவீழி மிழலைத் தேவாரத்தில் ஒரு பாசுரத்தை, ''இறைவன் ஈறாகவும் இருக்கிறான்; முதலாகவும் இருக்கிறான்' என்று தொடங்குகிறார். பாசுரம் முழுவதும் வருமாறு:

ஈறாய்முதல் ஒன்றாய்இரு பெண்ஆண்குணம் மூன்றாய்
மாறாமறை நான்காய்வரு பூதம்அவை ஐந்தாய்
ஆறார்சுவை ஏழோசையொ டெட்டுத்திசை தானாய்
வேறாய்உடன் ஆனான்இடம் வீழிம்மிழ லையே.

{எல்லாப் பொருள்களுக்கும் இறுதியாகி, அவற்றைத் தோற்றுவிக்கும் முதல்வனாகி, இவ்வாறு இறுதியும் முதலும் என்று கூறினும் ஒரே பொருளாய், ஆண் பெண் என்ற இரு பிரிவுள்ள பொருள்களாகி, சத்துவம், ராஜசம், தாமசம் என்ற குணங்கள் மூன்றாகி, பொருள் மாறாத வேதங்கள் நான்காகி, ஒன்றினின்றும் ஒன்று தோன்றி வருகின்ற பூதங்களாகிய அவை ஐந்தாகி, நுகர்கின்ற சுவை ஆறாகி, ஏழு ஓசையாகி, எட்டுத் திசையும் தான் ஆகி இவ்வாறு அபேதமாக அவையாகவே நிற்றலின்றிப் பேதமாய்ப் பிரிந்து வேறு ஆகி, அவற்றோடு கலந்து பேதா பேத நிலையில் உடனாகி இருப்பவனாகிய இறைவனுக்கு உரிய (வணங்குவாருக்கு அருள் புரியும் பொருட்டு எழுந்தருளியிருக்கும்) இடம் திருவீழி மிழலை.}

அவன் ஈறாகவும் இருக்கிறான்; முதலாகவும் இருக்கிறான். இரு வேறு வகையாகச் சொன்னாலும் இறைவன் ஒரு பொருள்தான். ஆதலின், ''ஈறாய் முதல் ஒன்றாய்'' என்றார். அவன் ஒருவன்தான் முடிந்த முடிபாகிய ஈறு; அவன் ஒருவன்தான் முதல்களிலெல்லாம் முதல். ஆதலின், ஒன்று

ஈறாய் முதலாய்' என்று பிரித்துக் கூட்டிப் பொருள் செய்ய வேண்டும்.

சம்பந்தப் பெருமான் இறைவனுடைய பெருமையைப் பல வகையிலே பாடுகிறவர். ஒன்று, இரண்டு, மூன்று முதலிய தொகைகளாக உள்ள பொருள்கள் அனைத்தும் அவனே என்று சொல்லத் தொடங்கி அவன் ஆதியும் அந்தமுமாகிய ஒரு பரம்பொருள் என்றார். இதற்குமேல் இரண்டு முதல் எட்டு வரைக்கும் உள்ள எண்ணிக்கைகளை உடைய பொருள்களை நினைக்கிறார்.

மூன்று நிலை

ஆதியும் அந்தமுமாகி நிற்கும் சிவபரம்பொருள் பிரபஞ்சத் தோடு மூன்றுவகைத் தொடர்பு உள்ளவனாக இருக்கிறான். பிரபஞ்ச முழுவதும் தானேயாக இருக்கிறான். பிரபஞ்சத்துக்கும் அவனுக்கும் பேதமில்லாமல் அபேதமாக விளங்குகிறான். பொன்னால் ஆன ஆபரணத்தை வளை என்றும் சங்கிலியென்றும் வேறு பெயராலே குறிக்கிறோம். ஆனால் அவ்வளவும் பொன்தான். அப்படியே பார்க்குமிடம் எங்கும் ஒரு நீக்கமற்ற நிறைகின்ற பரம்பொருளாகிய இறைவனும் பிரபஞ்சத்திலுள்ள பல பொருள்களாகவும் இருக்கிறான்.

எப்பொருளும் தானாகி நிற்கும் இறைவன் அவற்றின் வேறாகவும் நிற்கிறான்; அவற்றினின்றும் பேதமுற்று நிற்கின்றான். பிரபஞ்சம் என்பது இட எல்லையையும் கால எல்லையையும் உடையது. இறைவனோ அந்த இரண்டு எல்லைகளையும் கடந்தவன். தண்ணீரும் அதைத் தன்னுள் அடக்கி நிற்கும் குடமும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையது தான். ஆனால் வெவ்வேறாக இருக்கின்றன. இறைவனும் பிரபஞ்சத்துக்கு அப்பால் வேறாகவும் நிற்கிறான். முன்னே சொன்னது அபேத நிலை; இது பேத நிலை.

பிரபஞ்சத்தோடு உடனாக, ஒட்டியும் ஒட்டாமலும் நிற்கிறான். இதைப் பேதாபேத நிலை என்று சொல்வார்கள். மலரில் மணம் இருக்கிறது. மலர் முழுவதும் இசைந்து நிற்கிறது மணம். அதைத் தனியே பிரித்து அறியவொண்ணாது.

மலரும் மணமும் ஒன்றுபட்டே இருக்கின்றன. ஆனாலும் மலர் வேறு, மணம் வேறு. இதுதான் ஒட்டியும் ஒட்டாத நிலை அல்லது பேதாபேத நிலை. சொல்லும் பொருளும் உள்ள நிலை இது. சொல்லிலே பொருள் விரவி இருக்கிறது. சொல் முழுவதும் பொருள் இருக்கிறது. ஆயினும் சொல் வேறு; பொருள் வேறு. இப்படி இறைவன் பிரபஞ்சத்தோடு ஒன்றி நின்றும் ஒட்டியும் ஒட்டாத நிலையில் இருக்கிறான்.

இந்த மூன்று நிலையையும் சிவஞான போதத்தின் இரண்டாவது சூத்திரம் பேசுகிறது.

"அவையே தானேயாய்"

என்னும் அச்சூத்திரத்தின் பகுதியும், 'அவையே தானேயாய் என்பதனை இரட்டுற மொழிதலான்; அவையேயாய் தானேயாய் அவையே தானேயாய் எனக் கூறிப் பொருளுரைக்க' என்னும் அதன் உரையும் இங்கே அறிவதற்கு உரியன.

அபேத நிலை

ஞானசம்பந்தப் பெருமான் அந்தமும் ஆதியுமாகிய சிவபரம்பொருள் இந்த மூன்றுவகை நிலையிலும் விளங்கி யருளும் திறத்தைச் சொல்லப் புகுந்து அபேத நிலையை முதலில் விரிவாகச் சொல்கிறார்.

உலகில் உள்ள உயிர்க் கூட்டங்கள் உடம்பு பெற்று வாழ்கின்றன. அவ்வுடம்பின் வேற்றுமையால் ஆண் என்றும் பெண் என்றும் இருவகையாக உலவுகின்றன. அப்படி இருவேறு கூறாக உள்ளவை யாவும் இறைவனே. ஒன்றாகிய முதல்வன் இரண்டாக உள்ள ஆண் பெண்ணாக விளங்கு கிறான்.*

மக்களுக்குள்ள குணங்கள் பலவானாலும் அவற்றைச் சாத்துவிகம், ராஜசம், தாமசம் என்று அடக்கிவிடலாம். அந்த

---

* *"பெண் ஆண் என நின்ற பெம்மான்", "ஆணும் பெண்ணுமாய்" (திருஞா. தேவாரம், திருநாகைக் காரோணம், 2,5); "பெண் ஆண் ஆய பேருளாளன்" (ஷ திருக்கண்ணார் கோயில், 1), "பெண் ஆணாம் பெருமான்" (ஷ திருக்கள்ளில், 3.)*

மூன்று குணங்களின் வசப்பட்டே மக்கள் செயலாற்றுகின்றனர். அந்தக் குணங்களாகவும் இறைவன் நிற்கிறான். ஒரு தனி முதல்வன் பெண் ஆண் என்னும் இரு வேறு பாலாகி, மூன்று குணமாகி விளங்குகிறான்.*

இறைவனுடைய பெருமையையும், மக்கள் இன்னது செய்ய வேண்டும் இன்னது செய்தல் கூடாது என்பதையும் சொல்வது வேதம். பாரத நாட்டில் உள்ள பழஞ் சமயங்கள் யாவும் வேதத்தைப் பிரமாணமாகக் கொண்டவை. ஆதலின் அவற்றை வைதிக சமயங்கள் என்று சொல்வார்கள். இந்து மதம் என்று இக்காலத்தில் வழங்கும் பெயர் பல சமயங்களுக்கும் பொதுவானது. அப்படி ஒரு தனிச் சமயம் இல்லை. ஆனாலும் சைவம், வைணவம் முதலிய சமயங்கள் பலவற்றிற்குப் பொதுவாக அந்தப் பெயர் அயல்நாட்டவரால் வழங்கப்பெற்று, நாளடைவில் நாமும் வழங்கும்படியாயிற்று. இச் சமயங்கள் அனைத்தையும் பழங்காலத்துப் பெரியோர்கள் வைதிகம் என்ற பொதுப் பெயராலே குறிப்பர். வேதத்தைப் பிரமாணமாக உடையவை என்பது அதற்குப் பொருள்.

ஆதலின் வேதம் பாரத தேசத்திற்கு மிகச் சிறந்தது. ஞானசம்பந்தப் பெருமானது திருவவதாரத்தைப் பற்றிச் சொல்ல வந்த சேக்கிழார்,

''வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்க''

என்று பாடுகிறார்.

இறைவனே வேதத்தை அருள் செய்தான். வேதத்தின் பயனாக இருக்கிறான். வேதமாகவே இருக்கிறான். நான்கு என்ற எண்ணிக்கையுள்ள பொருளைச் சொல்ல வந்த சம்பந்தர், *''மாறாமறை நான்காய்''* என்று சொல்கிறார். வேதத்தை அநாதி என்றும், அநந்தம் என்றும், அபௌருஷேயம் என்றும் சொல்வார்கள். காலத்துக்கு ஏற்றபடி மாறுவன ஸ்மிருதி முதலியன. ஆனால் சுருதியாகிய வேதமோ என்றும் மாறாமல் இருப்பது. ஆதலின் 'மாறாமறை' என்று சொன்னார். இறைவன் நான்கு வேதங்களையே தன் நுட்பமான திருவுருவங்களில்

---

* *''காணுமா றரியபெரு மானாகிக் காலமாய்க் குணங்கள் மூன்றாய்'' (திருஞா. தேவாரம், திருவீழிமிழலை, 5.)*

ஒன்றாகக் கொண்டிருக்கிறான். அதனால் அவனுக்கு வேதமூர்த்தி என்று ஒரு திருநாமம் உண்டு.

"பண்ணார்தரு மறையாய்உயர் பொருளாய்இறை யவனாய்"*

இறைவன் இருப்பதை வேறிடத்திலும் சம்பந்தர் திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார்.

இறைவன் ஐம்பெரும் பூதங்களாகவும் இருக்கிறான். புலன்களுக்கு எட்டும் பொருள்கள் யாவும் ஐந்து பூதங்களின் கலப்பினால் அமைந்தனவே.

"நிலத்தீ நீர்வளி விசும்போடு ஐந்தும்
கலந்த மயக்கம் உலகம் ஆதலின்"

என்பது தொல்காப்பியம். இந்த ஐந்து பூதங்களும் இறைவனுடைய திருவுருவங்களே. இறைவனுக்கு அட்ட மூர்த்தி என்பது ஒரு பெயர். ஐம்பெரும் பூதங்கள், இருசுடர், வேள்வித் தலைவன் என்னும் எட்டும் அவன் திருவுருவங்கள். இந்த எட்டில் ஐந்து பூதங்களும் அடங்கியிருக்கின்றன. ஆதலால், **"பூதம் அவை ஐந்தாய்"** என்று சம்பந்தர் பாடினார்.†

இப்படியே இறைவன் ஆறு சுவையுமாக இருக்கிறான். பிறந்தது முதல் இறக்கும் வரையில் மனிதனிடம் விடாமல் நிற்கும் உணர்ச்சி சுவை யுணர்ச்சி. சுவையுணர்ச்சியை வென்றவர்கள் மற்ற உணர்ச்சிகளை எளிதில் வெல்ல முடியும். இனிப்பு, துவர்ப்பு, கார்ப்பு, புளிப்பு, கைப்பு, உவர்ப்பு என்று சுவையை ஆறு வகைகளாகப் பிரித்துச் சொல்வார்கள். இறைவன் இந்த ஆறு சுவையுமாக இருக்கிறான். ஆறாகிய ஆர்கின்ற சுவைகள் அவனே என்பார், **"ஆறார் சுவை"** என்றார்.

சங்கீதம் இனிய ஒலியைப் பற்றியது. ஓசையினால் இன்பத்தை உண்டாக்குவது. இன்னோசையின் ஏற்றத் தாழ்வினால் கீதம் பிறக்கிறது. ஓசையைக் கணக்குப் பண்ணி அடிப்படையான ஓசைகள் இன்னவை என்று வரையறுத்

---

* *திருவியலூர், 5.*

† *"புவிமுதல்ஐம் பூதமாய்ப் புலன்ஐந்தாய்......நின்றான்" (திருஞான தேவாரம், திருக்கழுமலம், 7.)*

திருக்கிறார்கள். அவை ஏழு. அவற்றை நரம்பென்றும் ஸ்வரம் என்றும் சொல்வார்கள். சரிகமபதநி என்ற ஏழு எழுத்துக் களாலும் குறிக்கப்பெறும் ஓசைகளே அவை. அவற்றை ஸட்ஜம், ரிஷபம், காந்தாரம், மத்தியமம், பஞ்சமம், தைவதம், நிஷாதம் என்று வட மொழியிலும், குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்று தமிழிலும் கூறுவர். இவற்றிற்கு ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என்பவற்றை எழுத்தாக வைத்து வழங்குவது பழந்தமிழ் மரபு.

இறைவன் இசை மயமாய் இருக்கிறான். நாதம் என்ற தத்துவத்தை உண்டாக்கினவனும் நாதமாகவே இருப்பவனும் அவன்தான். ஆதலின் இசையும் அவனாகவே இருக்கிறான். இசையின் அடிப்படையாகிய ஏழு ஓசையாக அவன் விளங்குகிறான்; அதனால், ''ஏழோசை யொடு'' என்று சம்பந்தர் பாடினார்.*

மக்கள் அறிந்த பொருள்களாக இருந்தாலும் எல்லை அறியப்படாத பொருள்கள் இரண்டு. அவை காலம், இடம் என்பவை. மனிதன் காலத்துக்கும் இடத்துக்கும் உட்பட்டவன். அவற்றின் எல்லையை உணராதவன். யார் காலத்துக்கும் இடத்துக்கும் அப்பாற்பட்டவனோ அவனே அவற்றின் எல்லையை உணர முடியும். காலமும் இடமும் காலத்துக்கும் இடத்துக்கும் அப்பாற்பட்டவனையே எல்லையாக உடையவை என்றும் சொல்லலாம்.

இடத்தின் எல்லையை, கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு என்ற சொற்களால் குறிக்கிறோம். பின்னும் வடகிழக்கு, வடமேற்கு, தென்கிழக்கு, தென்மேற்கு என்று நான்கு கோணத் திசைகளையும் கூட்டி எட்டு என்று சொல்கிறோம். ஆனால் இந்தத் திக்கின் முடிவை நாம் காணமுடியாது. கிழக்கின் முடிவு, இடம் முடிகின்ற இடந்தான். ஓர் ஊர் நாம் இருக்கும் இடத்துக்குக் கிழக்கே இருக்கிறது. அதனோடு கிழக்கு முடிந்து விடுகிறதில்லை. அதற்குக் கிழக்கிலும் பல ஊர்கள் உண்டு. இப்படியே தொடர்ந்து சென்றால் கிழக்கு நீண்டு கொண்டே போகும். 'இனிமேல் கிழக்கு இல்லை; கடைசிக் கிழக்கு இதுதான், என்று அறிந்து சொல்வார் யாரும் இல்லை. கிழக்கின்

---

* *''ஏழிசையாய் இசைப்பயனாய்'' (சுந்தரர் தேவாரம்.)*

முடிவிலே இடம் என்பதும் முடிவடைகிறது. அங்கே இடம் கடந்த இறைவன் இருக்கிறான். எனவே, கிழக்கின் கடைசியாக, எல்லாவற்றிற்கும் கிழக்காக இருப்பவன் இறைவன்தான். இப்படியே ஒவ்வொரு திக்கிலும் எல்லையாக நிற்கிறவன் இறைவன்.

கிழக்கு எப்போதும் கிழக்காகவே இருப்பதில்லை. ஒரூர் தனக்கு மேற்கே உள்ள ஊருக்குக் கிழக்கே இருக்கிறது. ஆனால் தனக்குக் கிழக்கே உள்ள ஊருக்கு அது மேற்கில் உள்ளது. ஆதலின் அந்த ஊரைக் கிழக்கில் உள்ளது என்று சிலரே சொல்ல முடியும். அதற்கு வடக்கே உள்ளவர்கள் அது தெற்கில் உள்ளது என்பார்கள். தெற்கே உள்ளவர்கள் வடக்கே உள்ளது என்பார்கள். ஆதலின் கிழக்கு, மேற்கு என்று வரையறையாக ஓரிடத்தைச் சுட்டிக் காட்டமுடியாது. இங்கிலாந்து நமக்கு மேற்கே இருக்கிறது; ஆனால் அது அமெரிக்காவுக்குக் கிழக்கே இருக்கிறது.

கிழக்காகவே நிற்கும் இடம் தனக்கு அப்பால் இடம் இல்லாத இடந்தான். அதுவே கிழக்கின் எல்லை; கடைசிக் கிழக்கு. அந்த இடமாக இருப்பவன் இறைவன். அவன்தான் சுத்தமான கிழக்கு என்று சொல்வதற்கு உரியவன். அது போலவே மற்றத் திசைகளாகவும் அவன் இருக்கிறான். இதனைக் கருதியே சம்பந்தர், ''எட்டுத் திசை தானாய்'' என்றார்.

இப்படி ஒன்று முதல் எட்டு வரைக்கும் எண்ணின பொருள்களெல்லாம் தானாகி, பிரபஞ்சத்தோடு அபேத நிலையில் இறைவன் இருப்பதைப் புலப்படுத்தினார் ஆளுடைய பிள்ளையார். பிறகு சுருக்கமாக மற்ற இரண்டு நிலைகளையும் தெரிவிக்கிறார். இவ்வளவாகவும் நின்றவன் இவற்றோடு சாராமல் வேறாகவும் இருக்கிறான். தத்துவா தீதனாக நிற்கும் நிலை அது. அதையே ''வேறாய்'' என்றார்.

அடுத்தபடி, சொல்லும் பொருளும் போலப் பேதமும் அபேதமும் ஒருங்கே அமைந்த பேதாபேத நிலையை ''உடன் ஆனான்'' என்று அருளிச் செய்தார்.

இறைவன் எல்லாப் பொருளுமாய் நிற்கிறான், எல்லாவற்றினும் வேறாகி நிற்கிறான், எல்லாப் பொருளினூடும் பிரிவின்றி நிற்கிறான் என்று இப்பாட்டினால் சொன்னார்.

அப்படி இருக்கின்ற பெருமான் எழுந்தருளியிருக்கும் தலம் திருவீழி மிழலை. இது சோழ நாட்டில் உள்ள திருப்பதி. வீழி என்பது ஒருவகைச் செடி. அதனைத் தல விருட்சமாகப் பெற்றமையால் இதற்குத் திருவீழி மிழலை என்ற பெயர் வந்தது. திருமாலுக்குச் சக்கராயுதம் அருளிய தலம் இது. இத்தலத்துக்குத் திருஞான சம்பந்தப் பெருமான் பல பதிகங்கள் பாடியருளியிருக்கின்றனர். அப்பெருமான் அருளிய தேவாரத்தில் சீகாழிக்கும், திருவீழிமிழலைக்கும் மிகுதியான பதிகங்கள் இருப்பதை, 'காழி பாதி, வீழி பாதி'' என்ற பழமொழி புலப்படுத்தும்.

இந்தப் பாசுரத்தோடு ஒருபுடை ஒப்புமையுடைய பாசுரம் வேறு உண்டு; அது வருமாறு:

பற்று மாகி வானு ளோர்க்குப்
பல்கதி ரோன்மதிபார்
எற்று நீர்தீக் காலும் மேலை
விண்இய மானனோடு
மற்று மாதோர் பல்லு யிராய்
மால்அய னும்மறைகள்
முற்று மாகி வேறும் ஆனான்
மேயது முதுகுன்றே.

இதுவும் திருஞான சம்பந்தர் திருவாக்கே.

★

உள் நின்றவன்

இறைவன் எங்கும் இருக்கிறான்; எல்லோருடைய உள்ளத்திலும் இருக்கிறான். ஆயினும் அவ்வாறு அவன் இருப்பதனால் நன்மையைப் பெறுகிறவர்கள் மிகச் சிலரே. மழை பரவலாகப் பெய்யும்போது காட்டிலும், நாட்டிலும், மேட்டிலும், பள்ளத்திலும் பெய்கிறது. எல்லாவிடத்திலும் பெய்தாலும் அதன் பயன் எல்லாவிடத்திலும் ஒரே மாதிரி இருப்பதில்லை. மேட்டிலே பெய்த நீர் அங்கே தங்காமல் போய்விடுகிறது. காட்டிலே பெய்த நீர் மரங்களுக்குப் பயன் படுகிறது. பள்ளத்திலே பெய்த நீர் தேங்கியிருக்கிறது. இவ்வாறே இறைவன் யாவருடைய உள்ளத்திலும் எழுந்தருளி யிருந்தாலும் சிலருடைய உள்ளத்திலே தான் அவனுடைய அருளீரம் தேங்கி நிற்கிறது. அதை அத்தகைய பெரியார் களுடைய முகமும் உரையும் செயல்களும் எடுத்துக் காட்டுகின்றன.

அப்படி உள்ள சிலரைப் பற்றிச் சம்பந்தப் பிரான் சொல்கிறார்.

நாம் யாவரும் எதையும் அமைதியாகச் சிந்திப்பதில்லை. மனம் எப்போதும் அலைந்து கொண்டேயிருப்பது. எவ்வளவு தான் அன்புடையவர்களாக இருந்தாலும் அவர்களை ஐந்து நிமிஷம் வேறு நினைவு வராமல் நினைக்க நம்மால் முடியாது. நம்மோடு நித்தமும் பழகுகிறவர்கள், நம்முடைய நன்மையையே விரும்புகிறவர்கள், நம் அன்புக்கு உரியவர்கள் - இத்தகையவர்களைக்கூட நாம் சிறிது நேரம் நினைத்திருக்க இயலாது. நம் மனைவியையே நினைக்கிறோம். கண்ணை மூடிக்கொண்டு பாருங்கள்; அவளுடைய உருவம் அப்படியே தெளிவாக நம் அகக் கண்ணில் தோன்றாது.

'எந்தப் பொருளும் அகக் கண்ணில் தெளிவாகத் தோன்றாது' என்று சொல்லலாம். அது தவறு. கனவில் நாம்

காணும் உருவம் தெளிவாகத்தானே் தெரிகிறதுள? அப்போது புறக்கண்ணா திறந்திருக்கிறது? ஆதலின் மனத்துக்குள் இருக்கும் கண்ணால் தெளிவாக ஒரு பொருளைக் காணமுடியும். அப்படியானால் கண்ணை மூடிக்கொண்டால் கனவிலே தெரிவதுபோலத் தெளிவாகத் தெரியாமல் இருப்பதற்கு என்ன காரணம்? நனவிலே நாம் ஒரு பொருளை நினைக்கும்போது மனம் ஒன்றி அதை நினைப்பதில்லை. கண், வாய், மெய், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகளும் திறந்திருக்கின்றன. ஒரு வீட்டுக் கூட்டத்தில் ஐந்து சன்னல்கள் இருக்கின்றன. அவற்றைத் திறந்துவிட்டுக் கூடத்தின் நடுவிலே ஒரு குத்துவிளக்கை ஏற்றிவைத்தால் சுடர்நின்று எரியாது. அது நின்று எரிய வேண்டுமென்றால் சன்னல்களை அடைத்துவிட வேண்டும். ஐம்பொறிகளும் இயங்காமல் அடங்கி நிற்க, மனத்தை ஒருநிலைப் படுத்தித் தியானம் செய்தால் இறைவனுடைய திருவுருவத்தை உள்ளத்தே காணலாம். அலையின்றி அமைந்த குளத்திலே கதிரவன் உருவம் தோன்றுகிறது. ஆனால் குளத்தின் நீரில் சிறிது அலை எழுந்தாலும் கதிரவன் உருவமும் அசைவதுபோல இருக்கும். அலைகளின் அசைவே கதிரவன் உருவம் அசைவது போலக் காணச் செய்கிறது.

இறைவன் எல்லோருடைய உள்ளத்திலும் எழுந்தருளியிருந்தாலும் அவன் அங்கே நிற்பதாகத் தோன்றுவதில்லை. ஐம்பொறிகளின் வழியே வரும் அவாவினால் மனம் அலைகிறது. அந்த அலைச்சலால் இறைவன் அங்கே நின்றாலும் தெரிவதில்லை. அவ்வாறு இன்றிப் பொறியாகிய வாயிலை அடைத்து மனத்தை ஒருமைப்படுத்தித் தியானம் செய்தால் இறைவன் அங்கே நிற்பான். அது மாத்திரமா? ''இதுகாறும் நாம் இங்கே நின்றும் இவன் ஓடிக்கொண்டே இருந்தான். தான் ஓடும் ஓட்டத்தினால் நாம் ஓடுவதாக எண்ணியிருந்தான். இப்போதுதான் இவன் நின்றான்; எண்ணத்தை ஒருமைப்படுத்தி ஒன்றி நின்று நினைக்கிறான். இவனுக்கு அருள வேண்டும்'' என்று இறைவன் தன் திருவுள்ளத்திலே உவகை பூண்பான்.

எண்ஒன்றி நினைத்தவர் தம்பால்
உள்நின்று மகிழ்ந்தவன்.

பலபல எண்ணங்களிலே மனத்தைச் சிதறவிடாமல் ஒரே எண்ணத்திலே ஒன்றுகிறார்கள் அன்பர்கள். இறைவனைச் சிந்திக்கும் எண்ணந்தான் அது. அவ்வாறு தியானம் செய்பவர் களிடம் இறைவனுக்கு அளவற்ற மகிழ்ச்சி. ஒருவர் வீட்டுக்கு விருந்தாளி ஒருவர் போகிறார். அவரைக் கண்டவுடன், ''வாருங்கள், உட்காருங்கள்'' என்று கூறினால் வந்தவருக்கு மகிழ்ச்சி உண்டாகும். விருந்தாளியைப் பார்க்காமலே இருந்தால் அவருக்கு எவ்வளவு வருத்தமாக இருக்கும்! தெரிந்தவர்கள், ''உங்கள் வீட்டுக்கு வந்திருக்கிறாரே; அவரைக் கவனித்தாயா?'' என்று கேட்கிறார்கள். அவர்கள் உரையைக் கேட்ட பிறகும் சும்மா இருந்தால் வந்தவர் எப்படித் தம் இன்முகத்தைக் காட்டுவார்?

சிவபரஞ்சுடர் நம் உள்ளக்கூடத்தில் இருக்கிறான் என்பதை அறிந்தவர்கள் சொல்கிறார்கள். அதைக் கேட்டும் நாம் அவனைக் கவனிப்பதில்லை.

புதையல் இருப்பது தெரியாதவனுக்கு அந்தப் புதையலுள்ள இடம் சொந்தமாக இருந்தாலும், அதன் மேலே அவன் எப்போதும் நடந்து கொண்டே இருந்தாலும் அதனால் அவனுக்குப் பயன் ஏதும் இல்லை. மற்றச் செயலை நிறுத்திவிட்டு, அதைத் தோண்டியெடுத்தால் அவனுக்குப் பயன் உண்டாகும். இறைவனை அன்பர்கள் எண் ஒன்றி நினைக்கிறார்கள். அதனால் அவன் அருளைப் பெறுகிறார்கள். இறைவனும் அவர்கள் உள்ளத்தே தன் முழு நிலையும் அமையும்படி பொருந்தியிருந்து மகிழ்ச்சி அடைகிறான்.

★

அன்பர்களுடைய உள்ளத்தே நின்று மகிழும் பெருமான் பல திருத்தலங்களில் மூர்த்தீகரித்து எழுந்தருளியிருக்கிறான். அன்பர்கள் உள்ளத்தால் பற்றி ஒன்றிச் சிந்திப்பதற்காகவே அவ்வாறு பல தலங்களில் பல கோலத்தோடு அவன் திருக்கோயில் கொண்டிருக்கிறான். அத்தகைய தலங்களில் ஒன்று திருப்பனையூர். அது சோழ நாட்டில் உள்ளது. பனையைத் தல விருட்சமாக உடையதாதலால் பனையூர் என்ற திருப் பெயரைப் பெற்றது.

எண் ஒன்றி நினைந்த அன்பர்களிடம் அவர்களுடைய உள்ளத்துக்குள்ளே நின்று மகிழ்ந்தவன் ஊர் திருப்பனையூர் என்று சொல்ல வருகிறார் சம்பந்தர். அந்த ஊர் இயற்கை வளம் செறிந்தது. தமிழ் விரகர் இயற்கையழகை இனிதாகப் பாடுவதில் வல்லவர். இங்கே பனையூரின் சோலை வளத்தைச் சொல்கிறார்.

பனையூர் என்ற பெயரைக் கொண்டு அங்கே வெறும் பனை மாத்திரம் இருக்கிறது என்று எண்ணக்கூடாது. பலவகை மரங்களும் அடர்ந்த சோலைகள் அவ்வூரில் உண்டு. மிகவும் வளமாக அந்த மரங்கள் வளர்ந்திருக்கின்றன. வானத்தை நோக்கி எழுந்த சோலைகள் உள்ளன. வளப்பம் மிக்க சோலையில் மரங்கள் நன்றாக வளர்ந்து மலர்கின்றன. மலர்கள் தேனிருக்கும் கிண்ணங்கள் அல்லவா? தேன் மலர்களில் தேங்கி நிற்கிறது. தேன் நிரம்பிய சோலைகள் இருக்கையில் வண்டுகளுக்குச் சொல்லியா அனுப்ப வேண்டும்? தேன் எங்கே இருக்கிறதென்று ஆராய்வதே தொழிலாக உடைய வண்டுகள் எங்கெங்கோ அலைந்து இங்குள்ள சோலைகளை வந்து அடைகின்றன. கள் (தேன்) நின்ற சோலை அல்லவா? இனி எங்கும் போக வேண்டிய அவசியமே இல்லை. சுகமாக அந்தத் தேனை உண்டு களிக்கின்றன. வேறு இடங்களுக்குச் செல்லும் வேலை இல்லாமையால் அவை அமைதியாகச் சோலையிலே தங்குகின்றன. இனிய தேனை உண்டு அமைதியுற்ற அவ்வண்டுகள் பெற்ற இன்பம் மிகப் பெரிது. அந்த நிலையில் அவை முரலத் தொடங்குகின்றன. அந்த ரீங்காரத்தைக் கேட்டால் காது குளிர்கின்றது. இனிய பண்களை அல்லவா அவை பாடுகின்றன?

மகிழ்ந்தவன் ஊர்ஆம்,
கள்நின்றெழு சோலையில் வண்டு
பண்நின்றொலி செய்பனை யூரே.

★

எம்பெருமான் எழுந்தருளியிருக்கும் தலத்தில், பல இடங்களுக்குச் சென்று திரிந்த வண்டுகள் அவ்வாறு திரியாமல் அமைதி பெற்று இன்னொலி செய்கின்றன. அவனுடைய அன்பர்களின் மனத்தை அந்த வண்டுகள் நினைப்பூட்டுகின்றன.

பலவாறு எண்ணங்களைச் சிதறவிடாமல் ஒன்றியிருந்து நினைக்கும் அவர்கள் தம் உள்ளத்தில் இறைவன் நின்று மகிழ்ந்து செய்யும் அருளை நுகர்கிறார்கள். அந்த நுகர்ச்சி அவர்களுடைய உரையிலே செயலிலே வெளிப்படும்.

'கள்ளானது தேங்கி நிற்க, மேலும் மேலும் ஓங்கி வளர்கின்ற சோலையிலே வண்டுகள் (தேனை உண்டு அந்த அமைதியினாலே) நின்று நிதானித்துப் பண்களை ஒலி செய்கின்ற திருப்பனையூர், இறைவனுடைய ஊராகும்' என்று சம்பந்தப் பெருமான் பாடுகிறார்.

எண்ஒன்றி நினைந்தவர் தம்பால்
உள்நின்று மகிழ்ந்தவன் ஊர்ஆம்,
கள்நின்றெழு சோலையில் வண்டு
பண்நின்றொலி செய்பனை யூரே.

(எண்ணம் ஒருமைப்பட்டுத் தியானம் செய்கின்ற அன்பர்களிடத்தில் அவர்களுடைய உள்ளத்துள்ளே நின்று மகிழ்ச்சி பெற்ற இறைவனது ஊராகும், தேன் தேங்கி நிற்க ஓங்கி வளரும் சோலையில் வண்டுகள் பண்களை அமைதியாக இருந்து முரலும் திருப்பனையூர்.

பனையூர், மகிழ்ந்தவன் ஊராம் என்று வாக்கியம் முடியும்.

எண் - எண்ணம். ஒன்றி - ஒருமைப்பாட்டு. ''ஒன்றி யிருந்து நினைமின்கள் உந்தமக் கூனமில்லை'' என்பது இங்கே நினைவுக்கு வருகிறது. உள் - உள்ளம். ஆம் - ஆகும். கள் - தேன். நின்று - நிற்க; எச்சத்திரிபு. எழு - ஓங்கி வளரும். பண் - ராகம். ஒலிசெய் - பாடும்.)

திருப்பனையூர் என்னும் தலம் நன்னிலத்துக்கு அருகில் இருக்கிறது. சுவாமி திருநாமம்: சௌந்தரிய நாதர்; அம்பிகை திருநாமம்: பெரியநாயகியம்மை.

★

விடம் உண்ட ஈசர்

ஒருகால் அமரர்கள் அமுது கடைய எண்ணினர். பாற்கடலில் மந்தரத்தை மத்தாக வைத்து வாசுகியைக் கயிறாகக் கொண்டு கடைந்தார்கள். ''இதில் எழும் அமுதத்தை உண்டால் என்றும் சாவாமல் இருக்கலாம்'' என்பது தேவர்களின் எண்ணம். இறைவனுடைய அருளைத் துணையாக்கிக்கொள்ள வேண்டும் என்ற நினைவு அவர்களுக்கு இல்லை. பாற்கடலைக் கடைந்தார்கள். அப்போது ஆலகால விடம் எழுந்தது. அதன் வேகம் யாராலும் தாங்க முடியவில்லை. அதன் காற்றுப் பட்டாலே அமரர்கள் யாவரும் இறந்துவிடுவார்கள் என்று தோன்றியது. அப்போதுதான் அவர்களுக்கு இறைவனுடைய நினைவு எழுந்தது. 'எல்லாம் நாமே சாதித்துக் கொள்ளலாம்' என்று எண்ணிய அவர்களுடைய செருக்கே ஆலமாக வந்ததோ! இப்போது செருக்கு அழிந்து தேவரெல்லாம் ஒருங்கே திரண்டனர். யாவரும் இறைவனிடம் ஓடிச் சென்று, ''இறைவா! நீ இன்று எங்களைக் காப்பாற்ற வேண்டும். இந்த நஞ்சினால் நாங்கள் உயிரை இழந்து விடுவோம்போல் இருக்கிறதே!'' என்று ஓலம் இட்டார்கள்.

துன்பம் வந்தால்தான் இறைவனை நினைக்கும் எண்ணம் உண்டாகும். இன்பம் உண்டாகும்போது, 'எல்லாம் நம்மால் உண்டானது' என்ற அகந்தை நினைவுதான் இருக்கும். ஆலகால விடத்துக்கு அஞ்சித் தம் அகந்தை ஒழிந்து அமரர்கள் ஓலமிட்டபொழுது பரம கருணாநிதியாகிய சிவபெருமான், ''அமுதத்தைக் கடைவதாக என்னிடம் ஒரு வார்த்தை சொன்னீர்களா?'' என்று கேட்கவில்லை. ''இதுவரையில் என்னை நினைக்காமல் செருக்குற்ற உங்கள் வேண்டுகோளைக் கேட்க மாட்டேன்'' என்று மறுக்கவில்லை. ''இப்பொழுதேனும் இவர்கள் வந்தார்களே!'' என்ற அருள் நினைவுதான்

அப்பெருமானுக்கு உண்டாயிற்று. அவர்கள் படும் அல்லலை அவன் கண்டு இரங்கினான்.

அந்த நஞ்சினைத் திருக்கரத்தில் வாங்கினான் சிவ பெருமான். அதனை அமுதம்போல் உண்டான். உண்ண வில்லை; விழுங்கினான். எப்போதும் மறையை ஓதும் பெருமையை உடைய திருக்கழுத்தில் தங்கும்படியாக வைத் தருளினான். யாரும் உண்ணமாட்டாமல் அஞ்சிய நஞ்சை அவன் யாரும் காணத் தன் திருக்கழுத்தில் வைத்தான். இறைவனுடைய கருணைக்கும் பேராற்றலுக்கும் அடையாள மாக அந்த விடம் அவனுடைய இருங் களத்தில் (பெரிய கழுத்தில்) ஆர்கின்றது.

ஒருங்கு, ''அளி நீஇறை வா'' என்று
உம்பர்கள் ஓலம் இடக்கண்டு
இருங்களம் ஆர விடத்தை
இன்னமுது உண்ணிய ஈசர்.

(தேவர்கள், ''இறைவனே, இந்த நஞ்சினால் யாங்கள் இறவா வண்ணம் நீ காப்பாறுவாயாக'' என்று ஒன்றுபட்டு வந்து ஓலமிடக் கண்டு, அவர்களுக்கு இரங்கி, தம்முடைய பெருமையையுடைய திருக்கழுத்தில் தங்கும்படியாக ஆலகாலவிடத்தை இனிய அமுதாக உண்ட ஈசர் - கற்குடி மலையில் உள்ளார் என்று சொல்ல வருகிறார்.

'உம்பர்கள் ஒருங்கு ஓலமிட' என்று கூட்டிப் பொருள் செய்யவேண்டும். அளி - காப்பாற்று. இறைவன் - எங்கும் நிறைந்திருப்பவன். இரும் களம் - பெரிய கழுத்து; பெருமை, அளவினால் வந்தன்று; வேதம் ஒலிக்கும் தன்மையால் வந்தது. இன்னமுது உண்ணிய - இனிய உணவுபோல உண்ட. அமுது - அமுதம் என்றும் சொல்லலாம். உண்ணிய: உண் என்பதன் அடியாகப் பிறந்த இறந்தகாலப் பெயரெச்சம்; எண், நண், பண் என்பவற்றிலிருந்து எண்ணிய, நண்ணிய, பண்ணிய எனப் பெயரெச்சங்கள் வந்ததுபோல வந்தது இது. இச்சொல் தமிழ் வீரகர் தாமே படைத்துக்கொண்டது. இவ்வாறு இவ்வருட்பெருஞ் செல்வர் புதியனவாக அமைத்துக் கொண்ட சொற்கள் பலவற்றைத் தேவாரத்தில் காணலாம்.)

இப்படியாக அமரர்கள்மேல் வைத்த கருணையால் விடத்தை உண்ட ஈசர் திருக்கற்குடி என்னும் தலத்தில் எழுந்தருளி யிருக்கிறார். திருச்சிராப்பள்ளிக்கு அருகில் உய்யக் கொண்டான் என்ற பெயரோடு உள்ள ஊரே கற்குடி. இங்கே சிறு குன்றின்மேல் ஆலயம் இருக்கிறது.

இயற்கைவளம் பாடும் திருஞானசம்பந்தப் பிரானுக்கு இது மாமலையாகத் தோன்றியது. மலையும் மலையைச் சார்ந்த இடங்களும் குறிஞ்சி நிலமாகும். இத்தலத்தில் குறிஞ்சி நிலத்தில் நிகழும் அழகிய நிகழ்ச்சிகள் நடப்பதாகப் பாடுகிறார்.

களிறும் பிடியுமாகிய இரண்டு யானைகள் மலைச்சாரற் காட்டினூடே செல்லுகின்றன. பிடிக்குச் சற்றே நடை தளர்கிறது. அதற்குப் பசி உண்டாயிருக்கிறது என்பதைக் குறிப்பால் உணர்ந்த களிறு அதன் பசியைத் தீர்க்க எண்ணுகிறது. அது களிற்றினிடம் மிக்க அன்புடைய பிடி அல்லவா? எப்போதும் அதன் மருங்கிலே நிற்கும் பிடி அது.

அருகே மூங்கிற் காடு. மூங்கில் முளை யானைக்கு மிகவும் விருப்பமான உணவு. ஆண் யானை வாழ்வேலியாக உள்ள மூங்கிலின் முளைகளைப் பறித்துக் கை நிறைய வாருகிறது. பிடியை நீ உண் என்று சொல்லவில்லை. மூங்கில் முளை சுவையுடையதானாலும், அதற்குப் பின்னும் சுவையூட்டும் செயலில் ஆண் யானை முற்படுகிறது. தான் வாரிய வெதிர் முளையை (மூங்கில் முளையை)த் தன் கையாலேயே பிடிக்குக் கொடுக்கிறது. கரிய யானை, மதம் பொருந்திய ஆண் யானை, அன்புடைய பிடியினிடம் அன்பு செய்யும் காட்சி இது.

இப்படி அன்பு மணக்கும் கற்குடியிலே அருள் மணக்கும் ஈசர் எழுந்தருளியிருக்கிறார்.

மருங்குஅளி யார்பிடி வாயில்
வாழ்வெதி ரின்முளை வாரிக்
கருங்களி யானை கொடுக்கும்
கற்குடி மாமலை யாரே.

(பக்கத்தில் நிற்கும் அன்பு நிறைந்த பெண் யானையின் வாயில், வளர்கின்ற பச்சை மூங்கிலின் முளையை வாரி, கரிய மதம்

பொருந்திய ஆண் யானையானது கொடுக்கும் திருக்கற்குடி மாமலையில் இருக்கிறார்.

ஈசர் கற்குடி மாமலையார் என்று கூட்ட வேண்டும். மலையார்: குறிப்பு வினைமுற்று.)

தன்னுடைய தொடர்புடையார்பால் உண்டாவது அன்பு; தொடர்பில்லாதவரிடத்தும் பகைவரிடத்தும் உண்டாவது அருள். இறைவன் எழுந்தருளியிருக்கும் இடத்தில் வாழும் விலங்கின'ப களிடங்கூட அன்பு விளக்கம் பெறுகிறது. அவ்விடத்தில் அன்பின் விரிவாகிய அருள் விளங்கும் சிவபெருமா' எழுந்தருளி யிருக்கிறான்.

தேவர்கள் தனித்தனியே மாய்வதையன்றி, எல்லோரும் ஒருங்கே மாயும்படியாக வந்தது ஆலகாலவிடம். இறைவன் அவர்கள் அனைவரையும் ஒருங்கே காப்பாற்றினான். ஆதலின் ஒருங்கு என்பதையும் தேவர் கூற்றாகச் சேர்த்து, ''நாங்கள அனைவரும் மாயும்படி நஞ்சு எழுந்திருக்கிறது. எங்கள் அனைவரையும் ஒருங்கே காத்தருள வேண்டும்'' என்று கொள்வதும் பொருந்தும்.

நஞ்சை உண்ட இறைவன் அந்த நஞ்சின் கொடுமையை நினைக்கவில்லை. ''இது இந்தக் குழந்தைகளுக்கு நல்லறிவு கொளுத்திய பொருள்'' என்று எண்ணியமையால் அதனை இனிய அமுதாகக் கொண்டான். எம்பெருமான் முன்னே இனிய அமுதாக அதனை உண்டமையால்தான், பின்னே உம்பர்கள் இனிய அமுதை உண்ண முடிந்தது.

ஒருங்களி நீஇறை வாஎன்று
உம்பர்கள் ஓல மிடக்கண்டு
இருங்களம் ஆர விடத்தை
இன்னமு துண்ணிய ஈசர்,
மருங்களி யார்பிடி வாயில்
வாழ்வெதி ரின்முளை வாரிக்
கருங்களி யானை கொடுக்கும்
கற்குடி மாமலை யாரே.

★

நல்லபடி நாமம் நவிலுதல்

எதிலே பார்த்தாலும் படபடப்பு; வேகம். பேசினால் படபடப்பு; ஒரு காரியத்தைச் செய்தால் பரபரப்பு. பூமியிலே தானே நிற்கிறோம்? அதற்குள் என்ன அவசரம்? ஒருவரை ஒருவர் முந்திக்கொள்ள வேண்டும் என்று போட்டி போட்டுக்கொண்டு ஓடுகிறோமே! எதற்காக இந்த ஓட்டம்? கடவுளே! இந்த வேகம் இல்லாமல், ஆறுதலாக வாழ வகை இல்லையா? ''வேகங் கெடுத்தாண்ட வேந்தன்''* அல்லவா நீ?

மனத்திலே உண்டாகும் வேகத்துக்கு ஏதாவது அளவு உண்டா? மேகத்தை வேகத்துக்கு அளவாகச் சொன்னார்கள்; அது சரிப்படவில்லை. காற்றைச் சொன்னார்கள்; அதுவும் பொருத்தமாக இல்லை. கடைசியில் மனத்தைச் சொன்னார்கள். மனோவேகத்துக்கு மிஞ்சின வேகம் இல்லை. அத்தனை வேகமாக ஓடுகிற மனம் ஒரு பொருளிலே ஒட்டி அமைந்து நிற்கிறதா? ஒரு கணத்தில் ஆயிரம் ஆயிரம் சிந்தனைகள் எழுகின்றன. வேகம் அடங்கி இந்த உள்ளமானது உன்னுடைய திருவடிக் கண்ணே ஈடுபடுகிறதா? ஒருமைப்பாட்டுக்கும் அதற்கும் வெகுதூரமாயிற்றே!

இந்த மனம் தனக்குள்ளே எத்தனை எண்ணங்களை வைத்துக் கொண்டிருக்கிறது! அவற்றில் சிலவற்றையே மற்றவர்களால் உணர முடிகிறது. மற்றவற்றைப் பிறரால் உணர முடிவதே இல்லை. அத்தனை எண்ணங்களையும் தனக்குள்ளே மறைத்துக் கொண்டிருக்கிறது இந்தப் பொல்லாத மனம். இதனுடைய கள்ளத்தனத்தை முற்றும் அறிய வல்லவன் நீ ஒருவன்தான். சிவபெருமானே! இந்தக் கள்ளம் நிரம்பிய மனம் மற்ற எண்ணங்களையெல்லாம் தனக்குள் புதைத்து வைத்துக்

---

* *திருவாசகம், சிவபுராணம்.*

கொண்டிருக்கும் போக்கை விட்டு, கள்ளம் ஒழிந்து, உன் அளவிலே ஒன்றி நிற்குமா? அதற்கு ஏதாவது வழி உண்டா?

என் வாயிலிருந்து வரும் வார்த்தைகளில் எத்தனை வெப்பம்! பிறருடைய உள்ளத்தைச் சுடும் சொற்களைச் சொல்லவா இந்த நாக்கை நீ படைத்தாய்? தீயினாற் சுட்ட புண்ணாவது ஆறும், நாவினாற் சுட்ட வடு ஆறாது என்று சொல்கிறார்களே; அது தெரிந்தும் துப்பாக்கியிலிருந்து குண்டு வீசுவதுபோல் அல்லவா இந்த நாக்கு வார்த்தைகளை வெடித்துக் கொட்டுகிறது? உடம்பில் உள்ள அங்கங்களுக்குள் மென்மை உடையதாக, எப்போதும் ஈரம் உடையதாக இந்த நாக்கை நீ படைத்தாய். இதிலிருந்து எழும் சொற்களும் மென்மை உடையனவாக ஈரம் உடையனவாக இருப்பதுதானே பொருத்தம்?* அதற்கு மாறாக வெய்ய சொல்லையே சொல்லும் பழக்கத்தை உடையதாக இருக்கிறது என் நா. இந்த நிலை மாற வகை உண்டா? வெய்ய சொல் இன்றி ஆறுதலாகப் பேசும் வண்ணம் இந்த நாக்குக்கு ஏதேனும் வழி அருளுவாயா? வெய்ய சொல் சொல்லாமல் ஆறி நல்ல சொல் பேச வேண்டும். அப்பனே! அப்போதுதான் என் நாக்குத் தூய நாக்கு ஆகும். இதுவரையிரும் தூயன அல்லாத பலவற்றைப் பேசி விட்டேன். பொய், குறளை, கடுஞ்சொல், பயன் இல்லாதன ஆகிய அழுக்குச் சொற்களால் இது தூய்மை கெட்டுவிட்டது. இதைத் தூய்மை செய்ய வேண்டும். வழி உண்டா?

உள்ளம் ஒன்றிக் கள்ளம் ஒழிய வேண்டும்; இது மனத்தைப் பொறுத்த காரியம். வெய்ய சொல் ஆறித் தூய்மை செய்ய வேண்டும்; இது வாக்கைப் பொறுத்த காரியம். இறைவா! நீ எனக்கு மனம், வாக்கு, காயம் என்ற மூன்று கரணங்களையும் அளித்து, ''நீ வாழ்'' என்று அருள் செய்திருக் கிறாய். இந்த மூன்று கரணங்களினாலும் தீங்கு புரியாமல் வாழும் வாழ்வே நல்வாழ்வு. என்னுடைய மனத்தால் எண்ணும் எண்ணங்களும், வாயால் பேசும் உரைகளும், உடம்பாற் செய்யும் செயல்களும் நல்லனவாக அமைய வேண்டும். என் செய்கைகளோ என்னுடைய ஆசையால் நிகழ்வனவாக

---

* *''இன்சொலால் ஈரம் அளைஇப் படிறிலவாம், செம்பொருள் கண்டார் வாய்ச் சொல்'' (குறள்.)*

இருக்கின்றன. அது வேண்டும், இது வேண்டும் என்று மேலும் மேலும் ஆசைப்பட்டு அவற்றைப் பெறுவதற்காகப் பல வினைகளைப் புரிகின்றேன். நினைத்த பொருள் கிடைத்தால் அதனோடு நிற்பதில்லை. அதற்கு மேலும் ஆசை விரிகிறது; அதனால் என் செயலும் விரிகிறது. செயல் விரிய நான் பல பாவங்களுக்கு ஆளாகிறேன். ஆதலின் ஆசையினால் செய்யும் செயல்களை நான் ஒழிக்க வேண்டும். அப்போதுதான் உள்ளத்திலே சாந்தி பிறக்கும். காமத்தை (ஆசையை)ச் சார்ந்த வினைகளை அகற்ற வேண்டும். நிஷ்காமனாக, விருப்பு இல்லாதவனாகக் கன்மங்களைச் செய்து வாழவேண்டும். காம வினையை அகற்றினால்தான் நான் வாழும் வாழ்வு தூய வாழ்வு ஆகும்.

வேகம் ஆறி, உள்ளம் ஒன்றிக் கள்ளம் ஒழிய வேண்டும்; வெய்ய சொல் இன்றி ஆறித் தூய்மை செய்ய வேண்டும்; காம வினை அகற்ற வேண்டும். இப்படி மூன்று கருவிகளிலும் தூய்மையுடையவனாக இருந்து, நல்ல முறையில் உன் திருநாமத்தைப் பல காலும் சொன்னால் இன்ப வளம் கொழிக்கும். உள்ளம் மாசுபட, உரை மாசுபட, உடல் மாசுபட எத்தனை தரம் உன் பெயரைச் சொன்னாலும் அதனால் பயன் இல்லை. சர்க்கரை என்று எழுதின காகிதம் இனிக்கிறது இல்லை. தகுதியில்லாதவர்கள் உன் திருநாமத்தைச் சொல்வதே தவறு. சொன்னாலும் பயன் இல்லை. அவர்கள் கரடியாய்க் கத்தி, ''நான் எத்தனையோ முறை நாமம் நவின்றேன்; அவன் புகழை ஏத்தினேன்; எனக்கு ஒரு பயனும் கிடைக்கவில்லை'' என்று சொல்லி ஏசுகிறார்கள். அந்தோ பாவம்! உன் நாமத்துக்குக் குறை உண்டா? அவர்களிடமல்லவா குறை இருக்கிறது? அலிகளுக்கு இன்பம் ஏது? தூயர் அல்லாதார் நின் திருநாமத்தை நவில்வதனால் முழு இன்பம் அடைய முடியுமோ? பிறரை ஏமாற்ற வேண்டுமானால் நின் நாமத்தைச் சொல்லிக் கொண்டிருக்கலாம்.

நான் அப்படி எல்லாம் சொல்லி ஏமாற்றிப் பிழைக்க விரும்பவில்லை ஐயனே! நல்லபடியாக உன் திருநாமத்தை நாவில் நவில நினைக்கிறேன். உன்னைப் புகழ்ந்து ஏத்த விரும்புகிறேன். மூன்று கரணங்களும் அமைதியோடு தூய்மையைப் பெற்றால் அப்போதுதான் நல்லவாறு உன்

நாமத்தை நவின்று ஏத்தலாம். அதற்குரிய வன்மையை நீ அருள வேண்டும்.

நாமம் நவின்று ஏத்த வல்லவனாகும்படி நீ அருள் புரிய வேண்டும். நீ உள்ள இடம் தேடி நான் உன்னை ஏத்தும் ஆற்றல் பெறுவது எனக்கு எளிதன்று. நீயே எழுந்தருளி வந்து எனக்குத் திருவருளை வழங்க வேண்டும்.

—இவ்வாறு வலிவலம் என்னும் திருத்தலத்து இறைவனைப் பார்த்து வேண்டுகிறார் ஞானசம்பந்தர்.

ஒல்லை ஆறி உள்ளம் ஒன்றிக்
கள்ளம் ஒழிந்துவெய்ய
சொல்லை ஆறித் தூய்மை செய்து
காம வினைஅகற்றி
நல்ல வாறே உன்றன் நாமம்
நாவில் நவின்றேத்த
வல்ல வாறே வந்து நல்காய்
வலிவலம் மேயவனே!

(வேகம் ஆறி உள்ளம் ஒன்றுபட்டுக் கள்ளம் ஒழிந்து, வெம்மையான சொற்கள் ஆறித் தூய்மையை உண்டாக்கி, ஆசையினாற் செய்யும் செயல்களை விட்டு, நல்லபடி உன்னுடைய திருநாமத்தை நாவினால் பலகாலும் சொல்லி உன்னைப் புகழவல்ல வழியை என்பால் எழுந்தருளி வந்து வழங்குவாயாக, வலிவலத்தில் எழுந்தருளிய பெருமானே!

ஒல்லை ஆறுதலும், ஒன்றுதலும், கள்ளம் ஒழிதலும் உள்ளத்தின் செயல்; வெய்ய சொல் ஆறுதலும், தூய்மை செய்தலும் உரையின் செயல்; காம வினை அகற்றல் உடம்புக்குரியது. தூய்மை பெறும் முறையில் உள்ளத்தின் பங்கு பெரிது; அதற்கு அடுத்தது உரையின் பங்கு; அதற்கு அடுத்தது செயலின் பங்கு. ஆதலின் முறையே மூன்று, இரண்டு, ஒன்று என்ற வினைகளாற் புலப்படுத்தினார். நல்லபடி நாமம் நவிலுவதற்கு முதலில் உள்ளம் தூயதானால், உரை தூயதாம்; பின்பு செயல் தூயதாம். இந்தக் காரண காரிய முறைப்படி வைத்துச் சொன்னார்.

சொல்லை: ஐ சாரியை. சொல்லினின்றும் ஆறி என்று உருபு மயக்கமாக் கொள்ளுதலும் பொருந்தும். சொல்லை ஆற்றுவித்து என்றும் சொல்லலாம். சினம் வருவது இயல்பு; அதனை ஆற்றுதலே

அறிவின் பயன். ''ஆறுதல் சினம்'' என்று ஔவையாரும், ''உள்ளங் கவர்ந்தெழுந் தோங்கு சினங்காத்துக், கொள்ளுங் குணமே குணம்என்க'' என்று சிவப்பிரகாசமும் கூறியவை காண்க.

காமம் - ஆசை. ஆசை பற்றிச் செய்யும் செயலைக் காமவினை என்றார்.

வேகத்தோடு ஒருமைப்பாடின்றிக் கள்ளம் கொண்டு உள்ளம் நிற்கவும், வெய்ய சொல்லோடு தூய்மை நீங்கி நாக்கு இருக்கவும், காம வினையை உடம்பு செய்யவும் இறைவன் நாமத்தை நவிலுதல் நல்லது அல்லாத ஆறு. மனம் வேகம் அடங்கிக் கள்ளம் ஒழிந்து இறைவனையே சிந்திக்கவும், வாக்குத் தண்ணிய தூய சொல்லைச் சொல்லவும், உடம்பு ஆசையின்றிப் பணி புரியவும் நிற்கும் நிலையே நல்ல ஆறு.

நவிலுதல் - பலகால் சொல்லுதல். ஏத்துதல் - துதித்தல்; புகழ்தல். ஏத்த என்று சொன்னமையால் அவனுடைய பலவகைப் புகழையும் கூறித் துதிக்க என்று சொன்னவாறாயிற்று.

வல்ல ஆறு - வல்ல முறையை; வல்ல வழியை; ஏகாரம், அசை நிலை. நல்குதல் - அருள் செய்தல். வலிவலம், திருவாரூருக்கு அருகில் உள்ளது. மேயவன் - விரும்பி எழுந்தருளியிருப்பவன்.)

இவ்வாறு ஞானசம்பந்தப் பிள்ளையார் சொன்னது தம்மை நினைந்தன்று. நம் போலியருக்கு, இறைவனை அணுகி இன்னபடி வேண்டிக்கொள்ள வேண்டும் என்று தெரியாமையால் நம்முடைய சார்பிலே நின்று, நமக்காகப் பாடிய பாடல் இது என்றே கொள்ள வேண்டும். நல்லவாறே எம்பெருமானுடைய நாமத்தை நவின்று ஏத்தும் திறம் கைவந்தவர் சம்பந்தர். ஆதலின் அவர் இனிப் புதியதாக வேண்டுகோள் விடுக்க வேண்டுவதில்லை. ஆயினும் அவன் அருளைப் பெறாது தடுமாறித் தவிக்கும் மற்ற மக்களுக்குப் பயன்படும் பொருட்டு இத்தகைய விண்ணப்பங்களைச் சம்பந்தரைப் போன்ற அருட்செல்வர்கள் திருவாய் மலர்ந்தருளி யிருக்கிறார்கள்.

★

வண்டுவிடு தூது

அழகிய பொய்கை; நீர் நிரம்பி நிற்கும் பூம்பொய்கை; மெல்லிய தென்றற் காற்று வீச, அதனாலே சிறிய அலைகள் அசையும் பொய்கை. அந்தப் பொய்கையில் தாமரை மலர்கள் மலர்ந்திருக்கின்றன. வளவிய அலைகளையுடைய புனலிலே நன்றாக வளர்ந்த கொடியில் பூத்த கமலத்தில் தேன் நிரம்பியிருக்கிறது. அதனை மாந்திக் களிக்கின்றன வண்டுகள். ஆணும் பெண்ணுமாகிய வண்டுகள் தேனை உண்டு மகிழ் கின்றன. அவற்றின் இன்ப வாழ்வின் சிறப்புத்தான் என்னே! மெத்தென்ற மலரணையிலே நறுமணம் வீசும் சூழலிலே பெடை வண்டோடு ஆண் வண்டு தங்குகிறது. மெல்லிய அலைகள் வீசும்போது மலரும் அசைகிறது. ஆடும் ஊஞ்சலிலே அணை போட்டுப் படுத்தால் எத்தனை இன்பமாக இருக்கும்!

இப்படி இன்பம் நுகரும் வண்டுகள் அந்தக் களிப்பினால் முரல்கின்றன; இன்னிசை பாடுகின்றன. அந்த இனிய ஒலி அலை அலையாக வந்து நுட்பமான செவிப்புலனை யுடையார் காதில் விழுகிறது.

பூம்பொய்கையின் கரையில் ஞானசம்பந்த நாயகியார் வந்திருக்கிறார். ஆம்; ஞானசம்பந்தப் பெருமானே இப்போது பெண்ணாகி விட்டார். அந்த நாயகியின் காதில் வண்டு பாடும் இசையலை விழுகிறது. ''வண்டின் பாடு கொண்டாட்டந்தான்'' என்ற நினைவோடு தம்முடைய திண்டாட்டமும் நினைவுக்கு வருகிறது. பெடை வண்டோடு சேர்ந்து ஆண் வண்டு நுகரும் இன்பத்தை நினைத்தார். ''இத்தகைய இன்பத்தை நாம் பெறவில்லையே! நம்மை ஆட்கொள்ள வேண்டிய காதலன் நம்மைப் பிரிந்திருக்கிறானே!'' என்ற விரகம் மேலெழுந்தது. இனியும் பிரிவைத் தாங்கிக் கொண்டிருக்க முடியாத நிலை வந்துவிட்டது. எப்படியாவது தம் விரக நிலையைத் தம்

தலைவனாகிய தோணிபுரேசனுக்குத் தெரிவிக்க வேண்டுமென்ற எண்ணம் உண்டாயிற்று.

யாரிடம் சொல்லி அனுப்புவது? எந்த வண்டின் இன்னிசை ஒலி இந்த எண்ணத்தை எழுப்பியதோ, அந்த வண்டையே தூதாக அனுப்பலாமே என்று தோன்றியது. ''ஆம்; அது சரியான வழி'' என்று உறுதிப்படுத்திக் கொண்டார். வண்டைப் பார்த்துப் பேச ஆரம்பித்தார்.

பிரிவுத் துன்பத்தால் அலமரும் காதலிமார் இப்படிக் ண்ட கண்ட பொருளையெல்லாம் பார்த்துப் பேசுவது இயற்கை. மனத்திலே பொங்கி வரும் துயரத்தை ஆற்றிக் கொள்ள இது ஒரு வழி. காமம் மிக்க கழிபட்டர் கிளவி என்று இத்தகைய பேச்சைச் சொல்வார்கள். வண்டைப் பார்த்து ஞானசம்பந்த நாயகியார் பேசுகிறார்.

''ஏ வண்டு ராஜாவே!'' என்று அழைத்தார். அது இப்போது ராஜ போகத்தில் அல்லவா இருக்கிறது? வண்டு, மதுகரம், அரி, பிரமரம் என்று வண்டுக்கு எத்தனையோ பேர் உண்டு. அவற்றையெல்லாம் சொல்லாமல், ''அளியரசே!'' என்று விளித்தார். அளி என்பதற்கு வண்டென்றும் அன் பென்றும் பொருள் உண்டு. ''நீ வண்டு ராஜாதான். உன்னுடைய நாயகியோடு இன்புறுகிறாயே! இத்தகைய இன்பத்தை மற்றவர்களும் பெறும்படி வைக்க வேண்டாமா? பசித்துச் சாப்பிட்டவன் மற்றவர் பசியை உணர்ந்து உணவு வழங்குவது போல, ஒன்றுபட்ட வாழ்வு வாழும் உனக்குத்தானே அந்த அருமை தெரியும்? நீ தானே எனக்கும் அந்த வாழ்வை வழங்க வேண்டும்? அன்புக்கு அரசன் என்று சொல்லும்படியாக அல்லவா உன் பெயர் இருக்கிறது? வண்டு ராஜாவாக இருப்பதனால் மாத்திரம் அன்றி அன்பினாலும் அரசனாக இருப்பாயானால் அளியரசு என்னும் பெயருக்கு இரட்டிப்புப் பொருத்தம் அமையுமே! இவற்றையெல்லாம் நினைத்துப்பார்'' என்று பலபல எண்ணங்களையும் எண்ணி அதன் பயனாகச் சுருக்கமாய், ''அளியரசே!'' என்று விளித்தார்.

வண்தரங்கப் புனற்கமல மதுமாந்திப் பெடையினொடும்
ஒண்தரங்க இசைபாடும் அளியரசே!

★

மேலே வண்டரசினிடம் தமக்கு இன்னது செய்ய வேண்டுமென்று பணிவுடன் சொல்கிறார் ஞானசம்பந்த நாயகியார்.

''நீ அதிக முயற்சி செய்ய வேண்டாம். உடலுக்குச் சிரமத்தைக் கொடுக்கும் பெரிய காரியங்களைச் செய்ய வேண்டாம். ஒரு வார்த்தை சொன்னால் போதும்.''

''ஒரு வார்த்தையா?''

''ஆம்; ஒரு வார்த்தையை ஒரு முறை சொன்னால் போதும்.''

''எப்படிச் சொல்ல வேண்டும்?''

''பரிவுடன் சொல்ல வேண்டும். என் நிலைக்கு இரங்கி, என் காரியம் நிறைவேற வேண்டும் என்ற பரிவோடு ஒருகால் பகர்ந்தால் போதும்.''

''உன் நிலை என்ன?''

''என் நாயகன் என்னைப் பிரிந்து நிற்கிறான். அவனுடைய பிரிவுத் துன்பத்தால் நான் அடைந்துள்ள வாட்டம் சிறிதன்று. இந்த நிலைமையை நான் எடுத்துச் சொல்ல வேண்டுவதில்லை. நீயே பார். பார்த்துவிட்டு, என்பால் பரிந்து என் நிலைமையை ஒருகால் பகர்.''

''யாருக்குப் பகரவேண்டும்?''

''என் காதலருக்குத்தான்.''

''அவர் யார்? எங்கே இருக்கிறார்?''

''அவர் இருக்குமிடத்தைக் கஷ்டப்பட்டுத் தேடவேண்டும் என்பதில்லை. குன்றின் மேலிட்ட பெருவிளக்கை அடையாளம் வைத்துக் கொண்டே சென்றால் குன்றின் அடிவாரத்தை அடையலாம். அதுபோல என் காதலர் உள்ள இடத்தை அடைய வேண்டுமானால் அப்படி ஓர் அடையாளம் உண்டு. அவர் திருமுடிமேல் பிறையை, சந்திர துண்டத்தை வைத்திருக்கிறார். அதுவே அடையாளமாக அதன் ஒளியைப் பற்றிக் கொண்டு நடந்தால் அவர் இருக்குமிடத்தை அடையலாம்; அவர் எழுந்தருளியிருக்கும் தோணிபுரத்தைச் சேரலாம்.''

''பலர் இருக்குமிடத்தில் அவரை எப்படி அடையாளம் கண்டுபிடிப்பேன்? நெடுந்தூரத்தில் முடியிலுள்ள நிலாத் தெரியும். அருகில் சென்று அடி அடைந்தால் அது தெரியாதே! அங்கே போனால் தெரிந்துகொள்ள அடையாளம் உண்டா?''

''ஆகா! தூரத்திலிருந்து வழி கண்டு செல்ல மதித்துண்டம் உதவுகிறது. அருகிலே சென்றாலும் என் காதலரை எளிதிலே அடையாளம் கண்டு கொள்ளலாம். எல்லோரும் இன்ப மலர் மாலையை அணிந்திருப்பார்கள். அவரோ என்பு மலி மாலையை அணிந்திருப்பார். அதனால் அவரைத் தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம். அங்கத்தை (எலும்பை)ப் பூணாக மார்பில் அணிந்திருக்கும் பெருமான் அவர். அவர் திருத்தோணிபுரத்தில் உறைகிறார். அவர் அப்படி இருக்கிறாரே என்று எண்ணாதே. அவர் அற்புதமாக நடனம் ஆடுகிறவர். பாட்டுப் பாடுகிறவன் நீ. உனக்கு ஆட்டம் ஆடுகிறவரைக் கண்டால் மகிழ்ச்சி உண்டாகும். அவர் பாண்டரங்கம் என்னும் நடனத்தைத் திரிபுர சங்கார காலத்தில் ஆடினவர். அவரிடம் என் நிலைமையை ஒருமுறை சொன்னாலே போதும். குறிப்பறிந்து ஆண்டருளுகிற பெருமான் அவர். பலமுறை சொல்லித் தெரிய வேண்டும் என்பது இல்லை. என் தீவினைப் பயனால் எனக்கு அருள் செய்யாமல் இருக்கிறார்; என்னை மறந்து நிற்கிறார். ஒருமுறை நினைப்பூட்டினால் போதும்; உடனே வந்து அருள் செய்வார். அதிக வேலையை உனக்கு நான் வைக்கவில்லை.''

இவ்வாறு ஞானசம்பந்த நாயகியார் வேண்டுகிறார்.

வண்தரங்கப் புனற்கமல மதுமாந்திப் பெடையினொடும்
ஒண்தரங்க இசைபாடும் அளியரசே! ஒளிமதியத்
துண்டர், அங்கப் பூண்மார்பர், திருத்தோணிபுரத்துறையும்
பண்டரங்கர்க் கென்நிலைமை பரிந்தொருகாற் பகராயே.

[*வளப்பமான அலைகளையுடைய (பொய்கை) நீரில் பூத்த தாமரை மலரிலே உள்ள தேனை உண்டு பெண் வண்டோடு விளக்கமான அலை போல வருகின்ற இசையைப் பாடும் வண்டரசே! ஒளியையுடைய சந்திரன் துண்டாகிய பிறையை அணிந்தவரும், எலும்பை அணிந்த மார்பை உடையவரும், திருத்தோணிபுரமாகிய சீகாழியில் எழுந்தருளியிருக்கும் பண்டரங்கரும் ஆகிய என்*

காதலருக்கு (பிரிவினால் வருந்தும்) என்னுடைய நிலைமையை என்னிடம் இரக்கம் காட்டி ஒருமுறை சொல்வாயாக.

இது வண்டுவிடு தூது.

வண் தரங்கத்தையுடைய புனல்; தரங்கம் - அலை. புனலிலே பூத்த கமலம். பெடையினொடும் மாந்தி இசை பாடும். மதியத் துண்டர் - சந்திரனுடைய துண்டத்தை அணிந்தவர். "நிலாத் திங்கள் துண்டம்" என்று பிறையைக் கூறுவதுண்டு. அங்கம் - எலும்பு.

பண்டரங்கன் : பாண்டரங்கன் என்பதன் விகாரம். பாண்டரங்கம் என்பது, சிவபிரான் முப்புரத்தை எரித்து எங்கும் நீறு பரவிய இடமே அரங்கமாக ஆடிய கூத்து.

"மண்டமர் பலகடந்து மதுகையால் நீறணிந்து
பண்டரங்கம் ஆடுங்கால்"

என்பது கலித்தொகை (கடவுள் வணக்கம்)*]

இறைவனைக் காதலனாகவும் தம்மைக் காதலியாகவும் வைத்துத் திருஞானசம்பந்தர் பாடிய பல பாடல்களுள் இது ஒன்று.

★

பாண்டரங்கக் கூத்தைப் பற்றிய விரிவான செய்திகளை, "பிடியும் களிறும்" என்ற புத்தகத்தில் காணலாம்.

குணமும் கோலமும்

"அணுவுக்கு அணுவானவன், மகத்துக்கு மகத்தானவன்" என்று வேதம் இறைவனைப் பாராட்டுகிறது. நுட்பத்திலும் நுட்பமான பொருளாகிப் பெரியவற்றிலும் பெரியதாகி இருக்கும் அவனை,

நுண்ணியான் மிகப்பெரியான்

என்று புகழத் தொடங்குகிறார் சம்பந்தர்.

கடவுளை எல்லோரும் நினைக்கிறார்கள் என்று சொல்லமுடியாது. அன்பர்கள் மாத்திரம் நினைக்கிறார்கள்; புகழ்கிறார்கள். ஆனால் மனிதர்கள் கடவுளைப்பற்றிப் பேசுவ துண்டு. துன்பம் வந்தால் கடவுள் நாமத்தை உச்சரிப்பார்கள். கண்ணன் குந்திதேவியிடம், "உனக்கு என்ன வரம் வேண்டும்?" என்று கேட்டானாம். "தினந்தோறும் எனக்கு ஏதாவது துன்பம் வரவேண்டும்" என்று அவள் வேண்டிக் கொண்டாள். "ஏன் அப்படிக் கேட்கிறாய்?" என்றான் கண்ணன். "அப்போதுதான் உன்னை நினைக்கத் தோன்றும்" என்று அவள் சொன்னாளாம்.

இன்பத்தை நுகரும்போது மக்கள் இறைவனை எண்ணுவ தில்லை. துன்பம் வந்தால், "கடவுளே! கடவுளே!" என்று கதறுவார்கள். ஆகையால் சம்பந்தர்,

நோயுளார் வாயுளான்

என்கிறார்.

ஆரம்பத்தில் ஒன்றுக்கொன்று மாறான, நுண்மையையும் பெருமையையும் சேர்த்துச் சொன்னார். மேலும் அப்படி உள்ள இரட்டைகளாகத் தொடுத்துச் சொல்கிறார். 'அவன் அன்பர்களுக்குக் குளிர்ச்சியாக இருக்கிறான்; அல்லாதாருக்குக்

கொடியவனாக இருக்கிறவன். தண்ணீரிலே குளிர்ச்சியாக இருக்கிறவன்; சூரியனிடத்தில் வெப்பமாய் இருக்கிறவன்' என்ற எண்ணத்தால்,

தண்ணியான் வெம்மையான்

என்று பாடுகிறார்.

எல்லோருக்கும் மேலே நிற்கிறவன் அவன்; எல்லோருக்கும் உள்ளே இருப்பவன் அவன். எல்லோரையும் தாளின் கீழே அடக்கி எல்லோர் தலையையும் தாழ்த்தி மேலே நிற்கிறவன்; எல்லோரிடத்திலும் அடங்கி மனத்துக்குள்ளே இருக்கிறவன். அன்பர்கள் தலையாலே வணங்கும்படி இருப்பவன்; அவர்கள் உள்ளத்தாலே தியானிக்கும்படி மனத்தில் இருப்பவன். இப்படியெல்லாம் தெளிந்து கொள்ளும்படி,

நம் தலைமேலான் மனத்துளான்

என்கிறார்.

எதற்கும் அசையாதவன். எதனாலும் தளர்ச்சி இல்லாதவன். பகைவரால் தளராத திண்மையை உடையவன். காலத்தால் நெகிழாத உரம் உடையவன். வலிய பொருள்களுக்கெல்லாம் வலிய பொருளானவன். யாவும் அழிந்த காலத்தும் தான் அழியாத திண்மையை உடையவன். இவ்வளவையும் உள்ளடக்கி,

திண்ணியான்

என்கிறார்.

இப்படியெல்லாம் இருக்கும் சிவபிரான் திருச்செங்காட்டங்குடியிலுள்ள கணபதீச்சரம் என்ற திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கிறான்.

செங்காட்டங் குடியான்.........
கணபதீச் சரந்தானே.

அவன் தன்மையைச் சொல்லிவிட்டார். கொஞ்சம் அடையாளம் சொல்ல வேண்டாமா? அவன் தலை சடைத்தலை. செக்கச் சிவந்த சடையுடையவன் அவன். அதில் கண்ணியைப் போலச் சந்திரனைச் சூடியிருக்கிறான். அது அவனுக்கே உரிய

அடையாளம். ''அவன் அணிந்த கண்ணி உடம்போடு ஒட்டாததுதானே? உடம்போடு ஒட்டிய அடையாளம் ஏதாவது உண்டா?'' என்றால், வேறு யாருக்கும் இல்லாத தனி அடையாளம் உண்டு. அவன் நெற்றியிலே கண் படைத்தவன்; கண்ணையுடைய நுதலைக் கொண்டவன்; கண்ணுதலான்.

இவ்வாறு குணத்தையும், குடியிருக்கும் இடத்தையும், கொண்ட கோலத்தையும் ஞானசம்பந்தர் பாடுகிறார்.

நுண்ணியான் மிகப்பெரியான்
நோயுளார் வாயுளான்
தண்ணியான் வெய்யான்நம்
தலைமேலான் மனத்துள்ளான்
திண்ணியான் செங்காட்டங்
குடியான்செஞ் சடைமதியக்
கண்ணியான் கண்ணுதலான்
கணபதீச் சரத்தானே.

(நுட்பமானவன்; மிகப் பெரியவன்; துன்பம் உடையவர்கள் வாயில் இருப்பவன்; குளிர்ச்சியுடையவன்; வெப்பமுடையவன்; நம்முடைய தலையின்மேல் இருப்பவன்; மனத்தில் இருப்பவன்; திண்மையை உடையவன்; திருச்செங்காட்டங்குடியில் இருப்பவன்; சிவந்த சடையில் மதியாகிய கண்ணியைப் பூண்டவன்; கண்ணை யுடைய நெற்றியை உடையவன்; கணபதீச்சரத்தில் உள்ளவன்.*

கணபதீச்சரத்தான் என்பதை எழுவாயாக்கி நுண்ணியான் முதலியவற்றைப் பயனிலையாக்கி வாக்கியத்தை முடிக்கலாம். நுண்ணியானும் பெரியானும் ஆக இருப்பவன் கணபதீச்சரத்தில் உள்ளான் என்று முடிப்பதும் பொருந்தும். அப்போது கணபதீச்சரத்தான் என்பதைக் குறிப்புவினை முற்றாகக் கொள்ளவேண்டும்.

திருச்செங்காட்டங்குடி என்பது ஊரின் பெயர்; கணபதீச்சரம் என்பது ஆலயத்தின் பெயர். இப்படியே ஊரின் பேர் வேறாகவும், ஆலயத்தின் பெயர் வேறாகவும் சில இடங்களில் இருக்கும். உதாரணம்: கருவூர் என்பது ஊரின் பெயர்; ஆநிலை என்பது திருக்கோயிற் பெயர்.)

★

---

* *''மனத்தகத்தான் தலைமேலான் வாக்கினுள்ளான்'' என்பது அப்பர் வாய்மொழி.*

இறுதித் துணை

''எப்படி இருக்கிறது அவருக்கு?''

''நேற்றுக்கூட நாம் கூப்பிட்டால் ஏன் என்று கேட்டார். இன்றைக்கு என்ன சொன்னாலும் கேட்கவில்லை. காது அடைத்து விட்டது.''

''கண் தெரிகிறதா?''

''அதுதான் நாலு நாளுக்கு முன்பே போய்விட்டதே. கண்ணைத் திறந்து பார்க்கிறதே இல்லை.''

''கைகால் சுவாதீனம் எப்படி இருக்கிறது?''

''போட்டது போட்டபடியே கிடக்கிறார். எறும்பு மொய்த்தாலும் தெரியவில்லை; ஈ மொய்த்தாலும் தெரியவில்லை.''

இவ்வாறு நடக்கும் பேச்சை எத்தனையோ முறை நாம் கேட்டிருக்கிறோம். உடம்பிலே உயிர் இருந்து வாழு மட்டும் மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐந்து பொறிகளும் வேலை செய்கின்றன. உயிர் உடம்பை விட்டுப் போவதற்கு முன்பே இவை ஒவ்வொன்றாக அடைத்து விடுகின்றன. பொறியினால் நுகரும் நுகர்ச்சிகளைப் புலன் என்று சொல்வார்கள். கண்ணாகிய பொறியினால் நுகரப்படும் புலன் உருவம். காதால் உணரப் பெறுவது ஒலி. சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற ஐந்துமே ஐம்புலன்களாகும்; இவற்றைப் பஞ்ச தன்மாத்திரைகள் என்று சொல்வர் வடமொழியாளர். ஐம்பொறிகளும் ஐம்புலன்களைத் தெளிவாக உணரும் உணர்ச்சி, உடம்பு நன்னிலையில் இருக்கு மட்டும் நன்றாக இருக்கும். உடம்பை விட்டு உயிர் புறப்படுவதற்கு முன்பு இந்தப் பொறிகளின் நுகர்ச்சி தெளிவாக இல்லாமல்

கலங்கிவிடும்; புலன் ஐந்தையும் தெளிவாக உணராமல் ஐம்பொறிகளும் கலங்கும்.

'நாம் இன்ன நிலையில் இருக்கிறோம்; இன்ன வழியே போகப் போகிறோம்' என்ற நினைவும் இராது. உடம்பிலே பலகாலம் இருந்த உயிர் இனி இவ்வுடலை விட்டு யாத்திரை செய்யப் போகிறது. ஓர் ஊருக்குப் போக முயல்பவர் தாங்கள் எந்த வழியிலே செல்ல வேண்டுமோ அதைத் தெளிவாகத் தெரிந்து கொண்டிருப்பார்கள். ஆனால் உயிருக்குத் தான் இனிச் செல்லும் நெறி எது, எத்தகையது என்ற தெளிவு உண்டாவது இல்லை. பொறிகள் கலங்கியதோடு, செல்லும் நெறி இன்னதென்று தெரியாத மயக்கமும் இறக்கும் தருணத்தில் உயிருக்கு உண்டாகிறது. அறிவும் தடுமாறி அழிகிறது.

உடம்பிலே வாதம், பித்தம், கபம் என்ற மூன்றும் உள்ளன. அவை அளவாக இருந்தால் உடல்நிலை இனிதாக இருக்கும். அளவு மாறினால் நோய் உண்டாகும். இறக்கும் போது கபம் மேலே வந்து தொண்டையை அடைக்கும். மரணத்தின் குறிகளில் ஐ(கபம்) மேல் உந்தி வருவதும் ஒன்று.

பொறி கலங்கி நெறி மயங்கிக் கபம் கட்டின பிறகு இந்த உலகத்தில் உள்ள யாராலும் அந்த உயிரைக் காப்பாற்ற இயலாது. உடம்புக்கும் உயிருக்கும் உறவு அறும் சமயம் அது என்பது உறுதி.

இத்தகைய சமயத்தில் உயிரைக் காப்பாற்றுபவன் ஒருவன்தான். நல்ல நெறியில் உயிரைச் சேர்த்தி இறப்பும் பிறப்பும் இல்லாத இன்ப வீட்டை அருளும் பெருமான் அவன். அவன்தான் இறுதியான துணை.

உயிர் இறக்கும் தறுவாயில் நின்று கலங்கிச் சுழன்று வருந்தும்போது, ''அஞ்சாதே!'' என்று சொல்லி அருள் பாலிக்கும் சிவபெருமான் திருவையாறு என்னும் தலத்தில் எழுந்தருளியிருக்கிறான்.

புலன்ஐந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி
அறிவழிந்திட்டு ஐம்மேல் உந்தி
அலமந்த போதாக அஞ்சேல்என்று
அருள்செய்வான் அமரும் கோயில்.

(ஐந்து வகைப் பொருளிடத்தும் செல்லாமல் பொறிகள் கலங்கி நிற்க, செல்லும் நெறி இன்னதென்ற தெளிவின்றி மயங்கி அறிவானது அழிந்து போக, கபம் மேலே தள்ளி வந்து தொண்டையை அடைக்க, உயிரானது சுழலும் சமயம் உண்டாக அப்போது, 'நீ பயப்படாதே' என்று அருள் செய்யும் சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் திருக்கோயில் - திருவையாறு என்று சொல்ல வருகிறார்.

பொறி புலன் ஐந்தும் கலங்கி, மயங்கி, அழிந்திட்டு, உந்தி என்பவற்றைக் கலங்க, மயங்க, அழிந்திட, உந்த என்று செயவென் எச்சங்களாகக் கொள்ளவேண்டும். ஐ - கபம். மேல் என்றது தொண்டையைச் சுட்டியது. அலமருதல் - சுழலுதல். போது ஆக - சமயம் வரும்போது; மரண சமயத்தில் என்பது கருத்து. அலமருதல் உயிரின் செயல். உயிரென்பது பாட்டில் சொல்லாவிட்டாலும், குறிப்பாற் புலப்பட்டது.)

பலகாலம் ஒன்றுபட்டு வாழ்ந்த பொறிகளும் அறிவும் இறுதிக் காலத்தில் உயிருக்குப் பயன்படாமற் போவதனால், அவற்றின் சார்பை உறுதியாகக் கொள்ளாமல், உயிருக்கு என்றும் பற்றுக் கோடாக இருக்கும் இறைவனைப் பற்றினால், பொறியும் அறிவும் உடலும் கைவிடும்போது அவன் வந்து அருள் செய்வான் என்று சம்பந்தர் உபதேசிக்கிறார்.

'இத்தகைய பேருபகாரத்தைச் செய்யும் பெருமான் எங்கோ கண்காணாத, உள்ளம் எட்டாத இடத்தில் இருக்கிறான் என்று எண்ண வேண்டாம். சோழ நாட்டுத் திருவையாற்றில் திருக்கோயில் கொண்டிருக்கிறான்' என்று சொல்ல வருகிறார்.

★

நீர் வளமும் நில வளமும் மிக்க ஊர் திருவையாறு. திருக்கோயிலைச் சுற்றிலும் மடவார்கள் வலம் வருகிறார்கள். வலம் வந்த பிறகு இறைவன் சந்நிதியில் நடனமிடுகிறார்கள். அப்போது சிலர் மிருதங்கம் வாசிக்கிறார்கள். பெண்கள் ஆடையணி மின்ன நடமிடுவதைக் கண்டும் முழவின் ஒலியைக் கேட்டும் அங்கே இருந்த குரங்குகள் மழை வருமோ என்று அஞ்சுகின்றன. வானத்தில் மழைக்குரிய அறிகுறிகள் இருக்கின்றனவா என்பதை அறியும் பொருட்டு விறுவிறுவென்று மரத்தின்மேல் ஏறி வானத்தை அண்ணாந்து பார்க்கின்றன; மேகத்தைப் பார்க்கின்றன.

மழை வரும் என்று அஞ்சுவதற்குக் காரணம் என்ன? மடவார்கள் உருவத்தாலும் நடனத்தாலும் மயிலைப்போலத் தோற்றுகின்றனர். முழவின் ஒலி மேகத்தின் ஒலியைப் போல இருக்கிறது. மேகம் மழை பெய்யத் தொடங்கும் போது இடி இடிக்கும்; அதைக் கண்டு மயிலாடும் அல்லவா? மடவார் இடும் நடமும் முழவு அதிரும் ஒலியும் மயிலின் நடனமாகவும் மேகத்தின் முழக்கமாகவும் தோற்றி, மழை வருமோ என்ற அச்சத்தை உண்டாக்கின. அதனால் மந்திகள் மரம் ஏறி முகிலைப் பார்த்தன.

வலம்வந்த மடவார்கள் நடமாட
முழவதிர மழையென்று அஞ்சிச்
சிலமந்தி அலமந்து மரம்ஏறி
முகில்பார்க்கும் திருவை யாறே.

(திருக்கோயிலை வலம் வந்த தளிப்பெண்டுகள் நடனமிட, முழவு முழங்க, மழை என்று அஞ்சி, சில மந்திகள் மனம் கலங்கி மரத்தின்மேல் ஏறி மேகத்தைப் பார்க்கும் திருவையாறு.

அமரும் கோயில் திருவையாறு என்று கூட்டவேண்டும்.

மடவார்கள் என்றது கோயிலில் நடமிடும் உருத்திர கணிகையரைக் குறித்தது. முழவு என்றது மிருதங்கத்தை. மந்தி - பெண் குரங்கு. குட்டியுடன் இருப்பதனால் பாதுகாப்புத் தேடவேண்டியிருக்கும்; ஆதலின் அஞ்சின.)*

தமக்கு மரணம் வந்துவிடும் என்பதை முன்பே அறிந்து இறைவனை வழிபட்டவர்களுக்கு, உயிர் உடலை நீங்கும் காலத்தில் வந்து அவன் அருள் செய்வான். அப்போதைக்கு இப்போதே பாதுகாப்பைத் தேடிக் கொள்ளவேண்டும். இறைவன் எழுந்தருளியிருக்கும் திருவையாற்றில் உள்ள விலங்குகள்கூடப் பின்னால் தமக்குத் துன்பம் வருமே என்று அஞ்சிப் பாதுகாப்பைத் தேட முயல்கின்றன. மனத்துக்குக் குரங்கை உவமை கூறுவது வழக்கம். அந்த மனத்தால் இறைவ னுடைய திருவடியை நினைந்து, முன்னாலே பாதுகாப்புச் செய்துகொள்ளும் இயல்பு, திருவையாற்றுத் தலத்தில்

---

* *''கழைமேவு மடமந்தி மழைகண்டு மகவினொடும் புகவொண்கல்லின், முழை மேவும்.'' (திருஞான. திருமுதுகுன்றம்.)*

உள்ளாருக்கு உண்டு என்பதை அங்குள்ள மந்தியின் செயல் காட்டுகிறது.

ஒரு நிலையின்றித் திரியும் குரங்கு உண்மையில் மழை வராதபோதும் மழை வருமோ என்று அஞ்சிப் பாதுகாப்பைத் தேடிக் கொள்ளுகிறது. ஆறறிவு படைத்த மனிதன் எந்தக் கணத்திலும் இறக்கும் நிலையில் இருக்கிறான்; யமன் வாயில் நிற்பதுபோல நிற்கிறான். அவன் பின்னாலே பொறி கலங்கி நெறி மயங்கி அறிவு அழியும்போது அருள் செய்ய வரும் ஒருவனுடைய அருளாகிய பாதுகாப்பைத் தேடிக்கொள்ள வேண்டியது அவசியம் அல்லவா? - இந்தக் குறிப்பெல்லாம் தோன்றும்படி இந்த இரண்டு காட்சியையும் இணைத்து ஆளுடைய பிள்ளையார் இந்தப் பாசுரத்தைப் பாடியிருக்கிறார்.

புலன்ஐந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி
அறிவுஅழிந்திட்டு ஐம்மேல் உந்தி
அலமந்த போதாக, அஞ்சேல்என்று
அருள்செய்வான் அமரும் கோயில்:
வலம்வந்த மடவார்கள் நடம்ஆட
முழவுஅதிர மழைஎன்று அஞ்சிச்
சிலமந்தி அலமந்து மரம்ஏறி
முகில்பார்க்கும் திருஐ யாறே.

★

புராணர் கோயில்

இறைவன் இல்லாத இடம் ஒன்று இல்லையென்றாலும் சில இடங்களில் அவன் இருப்பது தெளிவாகத் தெரியும். பூமிக்கு அடியில் நீர் இருக்கிறது; என்றாலும் சில இடங்களி லிருந்து நீர் ஊற்றுக்கள் பொத்துக்கொண்டு வருகின்றன. இறைவனுடைய திருவருள் விளக்கம் மிகுதியாகத் தோன்றும் இடம் இரண்டை அருகருகே வைத்தச் சொல்கிறார் ஞானசம்பந்தர். இறைவன் இருக்கும் இடம் எதுவானாலும் அது கோயில்தானே? இங்கே இரண்டு வகைக் கோயில்களைச் சொல்கிறார். ஒன்று அகக்கோயில்; மற்றொன்று புறக்கோயில்.

முதலில் அகக் கோயிலைப் பார்க்கலாம். அது ஒரு தாமரைக் கோயில்; தாமரையைப் போன்ற மலர்ச்சியும் மணமும் அழகும் உடைய கோயில். உள்ளமாகிய புண்டரிகக் கோயில் அது. திருவள்ளுவரும் அதைச் சொல்லியிருக்கிறார். 'தன்னை நினைந்து அன்பு செய்கிறவர்களுடைய உள்ளமாகிய தாமரையில் எழுந்தருளியிருப்பவன்' என்ற கருத்தோடு,

''மலர்மிசை ஏகினான்''

என்று கடவுளைச் சொல்கிறார். அந்தக் கோயிலைப் பற்றிச் சற்று விரிவாக ஞானசம்பந்தர் சொல்கிறார். உள்ளக்கோயில் தான் கருப்பக்கிருகம். அதனோடு மண்டபங்களும் கோபுரமும் திருச் சுற்றாலையும் இருக்கின்றன. அவை அனைத்தும் சேர்ந்தது ஆலயம். அன்பர்களுடைய உடம்பே ஆலயம். அதற்குள் இருக்கும் தாமரை போன்ற உள்ளமாகிய கருப்பக் கிருகத்தி னுள்ளே இறைவன் எழுந்தருளியிருக்கிறான்.

மனங் கசிந்து உறவாடும் தன்மையுடையோர் அவர்கள்; இறைவனிடம் ஒரு கணமும் மாறாமல் உள்ளத்தை அர்ப்பணம் செய்து வாழ்கிறவர்கள்.

அகன் அமர்ந்த அன்பினர்.

யாவரும் அந்த அன்புடையவராக இருக்கலாம். ஆனால் அவர்களுடைய இயற்கை, அன்பை வளர வொட்டாது. இறைவனிடம் அன்பு வைக்க இயலாதபடி மனத்தை அலைக் கழிக்கும் பகைவர்கள் இருக்கிறார்கள். அந்தப் பகை உட்பகை; வெளியிலிருந்து வருவன அல்ல. ஆறு வகையான பகை அவை: காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியம் என்ற ஆறையும் அரிஷட்வர்க்கம் என்பர் வடமொழியாளர். இந்த ஆறும் மக்களுடைய உள்ளத்தை ஆட்கொண்டு பேய்க் காடாக ஆக்கிவிடுகின்றன. இறைவன் எழுந்தருளும் கோயிலாக இருக்கவேண்டிய உள்ளம் இந்த ஆறு பொல்லாத பகைக்கு இருப்பிடமாகி விடுகிறது. அன்பர்களிடத்திலும் முதலில் இந்த ஆறு பகைவரும் தலை நீட்டினர். ஆனால் அவர்களுடைய முயற்சி அன்பர்களிடம் பலிக்கவில்லை. ஆறு பகைகளையும் அன்பர்கள் இறைவன் திருவருளைக் கொண்டு அழித்து விட்டார்கள்.

அறுபகை செற்று.

இந்த ஆறு பகைவரும் வளர்வதற்குத் துணையாக உடம்பிலே ஐந்துபேர் இருக்கிறார்கள். நன்மை விளைகிற காரியங்களில் நமக்குத் துணையாக இருப்பது போய் நம் பகைவர்களாகிய ஆறுபேர்களுக்கு உதவியாக இருந்து நமக்குத் துன்பம் உண்டாக்குகிறார்கள் அவர்கள். ஆறுபகையைச் செறவேண்டுமானால் அந்த ஐவருடைய கொழுப்பையும் அடக்க வேண்டும். அந்த ஐந்து பேர் யார்? மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐம்பொறிகள். அவை நம்முடைய உள்ளமாகிய கோயிலில் இறைவனை நிறுவ முயற்சி செய்யும்போது, அதற்கு உறுதுணையாக இருக்கலாம். அப்படிச் செய்யாமல் காமம் முதலிய பகைவர்கள் கைப்பற்றி வாழ் வதற்கு ஏற்ற வகையிலே அவை வேலை செய்கின்றன. அன்பர்கள் அந்த ஐம்பொறிகளின் கொட்டத்தையும் அடக்கி விட்டார்கள்.

ஐம்புலனும் அடக்கி.

உள்ளத்திலே தோன்றிய அன்பு விரிந்து நிற்க, ஆறு தீய பண்புகளாகிய பகையையும் ஐம்பொறிகளாகிய பகையையும்

அடக்கிய அன்பர்களுடைய உள்ளத்திலே ஒளி தவழ்கிறது. சுற்றியுள்ள மரங்களையும் புதர்களையும் வெட்டிவிட்டால் வீட்டுக்குள்ளே பளிச்சென்று ஒளிபுகும் அல்லவா? அதுபோல ஆறு குணம், ஐம்பொறிகள் ஆகியவற்றை அடக்கிவிட்ட பிறகு உள்ளத்தில் ஞானமாகிய ஒளி புகுகின்றது.

ஞானம் புகலுடையோர்.

அத்தகைய அன்பர்களுடைய உள்ளம் இறைவன் எழுந்தருளியிருக்கும் கோயில் ஆகிவிடுகிறது. அதனுள்ளே அவன் வந்து அமர்கிறான்.

புறத்தே கட்டிய கோயில்களுக்குச் சரித்திரத்தோடு ஒட்டிய காலம் உண்டு. அங்கே ஒரு குறிப்பிட்ட திருநாமத்தோடு எழுந்தருளியிருக்கும் மூர்த்திக்கும் இன்ன காலத்தில் பிரதிஷ்டையானவன் என்று வரலாறு உண்டு. ஆனால் உள்ளக் கோயிலில் எழுந்தருளியிருக்கும் இறைவனுக்கு இன்ன காலத்தில் பிரதிஷ்டை நடந்தது என்று சொல்ல இயலாது. உலகில் உள்ள எல்லாப் பொருளுக்கும் தோற்றம், மறைவு உண்டு. அப்படியே உள்ளமும் ஏதோ ஒரு காலத்தில், மிகமிகப் பழங்காலத்தில், தோன்றியது என்று வைத்துக் கொண்டால், அந்தப் பழங்காலத்தில் இறைவன் இருதயாலயேசுவரனானான் என்று சொல்லலாம்.

இப்போது புறத்திலிருக்கும் கோயில்களில் பல நூற்றாண்டுகளுக்கு முன் எழுந்த பழங் கோயில்களும் உண்டு; அணிமையில் 'தோன்றியனவும் உண்டு. குடைவரைக் கோயில்கள் பல்லவர் காலத்தில் உண்டான பழங் கோயில்கள் என்று ஆராய்ச்சியாளர் கூறுவர். அவற்றைவிடப் பழமையான கோயில் உள்ளக் கோயில். ஆகவே அதில் எழுந்தருளி யிருக்கும் அகக் கோயிலுடையான் மிகப் பழமையானவன். புராணம் என்பது பழமைக்கு ஒரு பெயர். மிகப் பழமையானவனாகிய உள்ளக் கோயிலுடையான் புராணம்; பழம் பெரும் கடவுள்.

உள்ளப் புண்டரிகத் துள்ளிருக்கும் புராணர்.

★

அகக் கோயிலாகிய இருதய கமலத்தில் எழுந்தருளி யிருக்கும் அந்தப் பெருமானே புறத்தில் பல தலங்களில் கோயில் கொண்டிருக்கிறான். அவற்றில் திருவீழிமிழலை என்பது ஒன்று. அதன் நீர் வளத்தையும் நில வளத்தையும் ஓர் அழகிய காட்சியைக் கூறிப் புலப்படுத்துகிறார் ஞானசம்பந்தர்.

நல்ல நீர் நிரம்பிய பொய்கை; அதன் ஒரு பக்கத்தில் பளிங்குப் பாறை; அதன்மேலே பல சங்குகள் தொகுதியாகத் தவழ்ந்து வந்திருக்கின்றன. காற்று அடித்தால் அவை முழங்குகின்றன. அங்கே ஓர் ஓரத்தில் தாமரைக் கொடியில் செக்கச் செவேலென்று மலர்ந்த மலரைப் பார்த்தால் தீயைப்போலத் தோற்றம் அளிக்கிறது. அதனை அடுத்துக் கரையிலே ஒரு புன்கமரம் நன்றாகப் பூத்துக் குலுங்குகிறது. அப்பூவைப் பார்த்தால் பொரி போல இருக்கும். அந்தப் பூக்கள் தாமரைப் பூவில் உதிர்கின்றன. பொரியைத் தீயில் இடுவது எப்போது? திருமணத்தில் பொரியட்டுவார்கள். அது மட்டுமா? சங்குகள் வேறு முழங்குகின்றன. வலம்புரிச் சங்கு முழங்க மணம் புரிவது வழக்கம் அல்லவா? திருமணத்தில் நிகழும் காரியங்களை இங்கே பார்க்கிறோம். பூம்பொய்கையில் உள்ள உயிர்க் கூட்டங்களில் ஆணும் பெண்ணும் மணம் செய்து கொள்கின்றன. அந்த மணத்தில் வலம்புரி முழங்குவது போலச் சங்கின் வர்க்கம் திகழ்கிறது. மணவேள்வித் தீயில் பொரியிடுவதுபோலத் தாமரை மலரில் புன்கமலர் உதிர்கிறது. என்ன அழகு, என்ன அழகு!

தகவுடைநீர் மணித்தலத்துச் சங்குளவர்க்
கம்திகழச் சலசத் தீயுள்
மிகவுடைய புன்குமலர்ப் பொரியட்ட
மணம்செய்யும் மிழலை யாமே.

திருவீழிமிழலையில் இறைவன் திருமணக் காட்சியை அன்பர்களுக்குக் காட்டியருளினான். இன்றும் கருப்பக் கிருகத்தில் மணவாளக் கோலத்தோடு எழுந்தருளியிருக்கும் எழிலைக் காணலாம். இறைவன் மணக்கோலம் கொண்டுள்ள தலமாதலால், பொய்கையிலும் ஒரு மணம் நிகழ்வதாகக் கற்பனை செய்து காட்டுகிறார் தமிழ் விரகர்.

அகன்அமர்ந்த அன்பினராய் அறுபகைசெற்று
ஐம்புலனும் அடக்கி ஞானம்
புகலுடையோர் தம்உள்ளப் புண்டரிகத்
துள்இருக்கும் புராணர் கோயில்:
தகவுடையநீர் மணித்தலத்துச் சங்குளவர்க்
கம்திகழச் சலசத் தீயுள்
மிகவுடைய புன்குமலர்ப் பொரியட்ட
மணம்செய்யும் மிழலை யாமே.

(உள்ளத்தே பொருந்திய அன்பை உடையவராய், காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியம் என்னும் ஆறு பகையையும் அழித்து, ஐந்து பொறிகளையும் அடக்கி, ஞானம் உள்ளே புகுதலை யுடையவர்களுடைய உள்ளமாகிய தாமரையினுள் எழுந்தருளியிருக்கும் பழைய பெருமானுடைய திருக்கோயில், தூய்மை முதலிய தகுதியை உடைய நீரையுடைய பளிங்குப் பாறையில் உள்ள சங்குக் கூட்டம் முழங்கியபடி விளங்க, தாமரையாகிய தீயில் புன்கமரம் தன் மலராகிய பொரியை இட, அங்குள்ள மீன் முதலிய உயிர்கள் மணம் புரியும் திருவீழிமிழலையாம்.

அகன் - உள்ளம்; அகம் என்பதன் போலி. செற்று - அழியச் செய்து. புலன் என்பது பொறியால் நுகரப் பெறும் தன்மாத்திரைக்குரிய பெயரேனும் இங்கே ஆகு பெயராய்ப் பொறியைக் குறித்து நின்றது. புண்டரிகம் - தாமரை. புராணர் - பழையவர்; ''தொல்லோன் காண்க'' (திருவாசகம்). தகவு - தகுதி; நீருக்கு உள்ள தகுதி. மணி - பளிங்கு; மணித்தலம் - பளிங்காகிய இடம்; பளிங்குப் பாறை. உள சங்கு வர்க்கம் என்று கூட்டிப் பொருள் கொள்ளவேண்டும். வர்க்கம் - கூட்டம். திகழ - விளங்க. சங்குக்கு விளக்கம் அதன் முழக்கம். சலசம் - நீரில் தோன்றியது; தாமரை. புன்கு - புன்கமரம்; எழுவாய். அட்ட - இட. மணம் செய்வார் இன்னார் என்று கூறாவிடினும் இடம் நோக்கிப் பொய்கையிலுள்ள பிராணிகள் என்று கொள்ளவேண்டும்.)

★

பின்னு செஞ்சடை

முகவுரை

சைவத் திருமுறைகள் பன்னிரண்டும் சைவப் பெரு மக்களுக்கு வேதத்தைப் போன்ற சிறப்புடையன. அவற்றுள்ளும் சைவ சமயாசாரி யார் நால்வரும் அருளிய எட்டுத் திருமுறைகள் அடிக்கடி பயிலப் பெறுவன. அவற்றுள்ளும் மூவர் தேவாரம் பலவகைப் பண்ணோடு அமைந்தமை யால் திருக்கோயில்களில் விரிவாக ஓதப் பெறு கின்றன. ஆகையால் சைவத் திருமுறைகள் என்று சொல்லும் வழக்கம் அதிகமாகக் காதில் விழுவ தில்லை; தேவார திருவாசகமென்றே மிகுதியாகப் பேசுகிறார்கள்.

தேவாரத் திருப்பதிகங்களில் பெரும் பாலானவை சிவத் தலங்களைப் பற்றியவை. அவ்வத்தலத்தில் அதற்குரிய தேவாரத்திற்குத் தலைமை இருப்பது இயல்பு. இதனால் எல்லாத் தலங்களின் தேவாரங்களும் அடிக்கடி ஓதப் பெறுகின்றன.

திருஞான சம்பந்தப் பெருமான் முருகப் பிரானுடைய திருவவதாரம் என்ற கொள்கை நெடுங்காலமாக இருந்து வருகிறது. சேக்கிழார் தம்முடைய பெரிய புராணத்தில் அப்படிக் கூறவில்லை. சிவபெருமானுடைய பிள்ளையார் என்று குறிப்பிப்பதுண்டு.

உமாதேவியாரின் ஞானப்பாலுண்டது பற்றி வந்த வழக்கென்றும், அதனால் ஆளுடைய பிள்ளையா

ரென்ற திருநாமம் அப்பெருமானுக்கு வந்ததென்றும் அதற்குக் காரணம் கூறுவர். ஆனால் சேக்கிழார் காலத்தில் வாழ்ந்த பெரும் புலவராகிய ஒட்டக் கூத்தர், திருஞான சம்பந்தர் முருகனுடைய திருவவதாரமென்றே சொல்கிறார்.

வருகதை தெய்வமகள்என் மருமகள் வள்ளிவதுவை
மனமகிழ் பிள்ளைமுருகன் மதுரையில் வெல்லும்இனிய
தொருகதை சொல்லு, தவள ஒளிவிரி செவ்விமுளரி
ஒளிதிகழ் அல்லிகமழும் ஒருமனை வல்லிஎனவே

என்று தக்கயாகப் பரணியில் அவர் பாடுகிறார்.

அவரைப் போலவே பிற்காலத்தில் முருகனைப் பாடிய புலவர்களிற் பலர் இந்தக் கருத்தை உடையவர்கள். அருணகிரி நாதர் திருப்புகழில் பல இடங்களில் ஞானசம்பந்தர் முருகனது அவதாரம் என்பதைத் தெளிவாகச் சொல்கிறார்.

உபயகுல தீபதுங்க விருதுகவி ராஜசிங்க
உறைபுகலி யூரில்அன்று வருவோனே
இறைவியெனு மாதி பரைமுலையின் ஊறி
எழும் அமிர்தம் நாறு கனிவாயா
புழுகொழுகு காழி கவுணியரில் ஞான
புனிதனென எடு தமிழாலே
புனலிலெதி ரேற சமணர்கழு வேற
பொருதகவி வீர குருநாதா!

என்றும் பிறவாறும் அவர் பாராட்டிப் பாடி யிருக்கும் பகுதிகளைக் காண்க.*

இந்தக் கொள்கை ஞானசம்பந்தப் பெருமானுக்கு உள்ள சிறப்பை வெளிப்படுத்தும். பெரிய புராணத்தில் திருஞான சம்பந்தருடைய புராணம் மிக விரிவானது. 4286 பாடல்கள் அடங்கிய பெரிய புராணத்தில் ஞானசம்பந்தர் புராணம் 1256

* 'பெரும்பெயர் முருகன்' என்ற நூலில் உள்ள "எது சரி?" என்ற கட்டுரையையும் பார்க்க.

பாடல்கள் அடங்கியது. இதனை நினைத்து, ''பிள்ளை பாதி, புராணம் பாதி'' என்ற பழமொழி ஒன்று தமிழில் வழங்குகிறது. பதினோராந் திருமுறையில் உள்ள பிரபந்தங்களில் நம்பியாண்டார் நம்பி பாடிய ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி, ஆளுடைய பிள்ளையார் திருச்சண்பை விருத்தம், ஆளுடைய பிள்ளையார் திருமும்மணிக்கோவை, ஆளுடைய பிள்ளையார் திருவுலா மாலை, ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகம், ஆளுடைய பிள்ளையார் திருத்தொகை என்னும் ஆறு நூல்கள் சம்பந்தப் பெருமானைப் பற்றியவை. பிற்காலத்தில் அப்பெருமானைப்பற்றி யெழுந்த பிள்ளைத் தமிழ் நூல் ஒன்று உண்டு.

இவ்வாறு முருகனைப் புகழ்வார் அவனுடைய அவதாரமாக எண்ணிச் சார்த்தும் புகழும், தனியே துதிக்கும் புகழும் மிகுதியாகப் பெற்றவர் ஞானசம்பந்தப் பிள்ளையார். இன்றும் மதுரையில் திருஞான சம்பந்தமூர்த்தியின் வழி வந்த ஞான பரம்பரையினர் தலைவர்களாக வீற்றிருந்து சைவத்தைப் பரிபாலனம் செய்துவரும் ஆதீனம் ஒன்று உண்டு. இவை சம்பந்தப்பிரான் பால் சைவ உலகம் வைத்திருக்கும் பெருமதிப்புக்கு அடையாளங்கள்.

★

ஞானசம்பந்த மூர்த்தியினுடைய தேவாரப் பதிகங்களில் இறைவனுடைய திருக்கோலச் சிறப்பும், அருட் சிறப்பும், ஆற்றற் சிறப்பும் ஒருபால் திகழும். தலத்தின் இயற்கை யெழில் ஒருபால் விளங்கும். மக்களுக்கு அறிவுறுத்தல், இறைவனிடம் குறையிரத்தல் என்பன மற்றவர்களின் திருவாக்குகளில்விடக் குறைவாகவே இருக்கும். இயற்றமிழ், இசைத் தமிழ் என்னும் இருவகைக்கும் இப்பாடல்கள் இலக்கியமாக அமைந்தவை. பற்பல பாக்களும், திருவிராகம்,

திருவியமகம் முதலிய தமிழ்ச் செய்யுள் தொடை நயங்களும் இப்பெருமானுடைய வாக்கில் விரவி வரும். இவருடைய பாவில் ஒருவகை மிடுக்கைக் காணலாம். இளமையின் மிடுக்கும் இறைவன் திருவருளை எளிதிற் பெற்ற மிடுக்கும் கலந்த பெருமிதத்தின் மணம் சம்பந்தர் தமிழில் இருப்பது இயல்புதானே?

இவர் பாடிய திருப்பதிகம் ஒவ்வொன்றிலும் சில வரையறைகள் உண்டு. 8-ஆவது பாட்டில் இராவணனைப் பற்றியும், 9-ஆம் பாட்டில் பிரமனையும், திருமாலையும், 10-ஆம் பாட்டில் சமண பௌத்தர்களையும், 11-ஆம் பாடலில் தம்மையும் பற்றிச் சொல்வது இவர் வழக்கம். இந்த நான்கு செய்திகளையும் ஒவ்வொரு பதிகத்தி லும் அந்த அந்தப் பாட்டிலே காணலாம்.

மண்ணுலகில் வாழ்வார்கள் பிழைத்தாலும் வந்தடையிற்
கண்ணுதலான் பெருங்கருணை கைக்கொள்ளும் எனக்காட்ட
எண்ணமிலா வல்லரக்கன் எடுத்துமுறித் திசைபாட
அண்ணல்அவற் கருள்புரிந்த ஆக்கப்பா டருள்செய்தார்.
தொழுவார்க்கே அருளுவது சிவபெருமான் எனத்தொழார்
வழுவான மனத்தாலே மாலாய மாலயனும்
இழிவாரும் கருவிலங்கும் பறவையுமாய் எய்தாமை
விழுவார்கள் அஞ்செழுத்துத் துதித்துய்ந்த படிவிரித்தார்.

வேதகா ரணராய வெண்பிறைசேர் செய்யசடை
நாதன்நெறி அறிந்துய்யார் தம்மிலே நலங்கொள்ளும்
போதம்இலாச் சமண்கையர் புத்தர்வழி பழியாக்கும்
ஏதமே எனமொழிந்தார் எங்கள்பிரான் சம்பந்தர்.

திருப்பதிகம் நிறைவித்துத் திருக்கடைக்காப் புச்சாத்தி
இருக்குமொழிப் பிள்ளையார் எதிர்தொழுது நின்றருள

என்று சேக்கிழார் இந்த நான்கையும் குறிப்பிப்பார். பத்துப் பாட்டுக்கள் அமைந்தது ஒரு பதிகம்.

டயினும் பதினோராவது பாட்டில் ஞானசம்பந்தப் பெருமான் பயனைச் சொல்லி முடிப்பார். அதற்குத் திருக்கடைக்காப்பு என்று பெயர். அதில் சம்பந்தர் தம் பாடலைப் பற்றிய சிறப்பையும் சொல்லி யிருப்பார். இவ்வாறு கூறும் ஆற்றல் இறைவ னுடைய திருவட் பலத்தால் இவருக்குக் கிட்டியது.

ஒருநெறியமனம் வைத்துணர் ஞானசம்
பந்தன் உரைசெய்த
திருநெறிய தமிழ்.

நண்ணிய கீர்த்தி நலங்கொள் வேள்வி
நான்மறை ஞானசம் பந்தன்சொன்ன
பண்ணியல் பாடல்.

கடற் காழியர்கோன்
துன்னிய இன்னிசை யாற்றுதைந்து
சொல்லிய ஞானசம் பந்தன் நல்ல
தன்னிசை யாற்சொன்ன மாலைபத்தும்.

பூசுரன் ஞானசம் பந்தன் சொன்ன
இன்புடைப் பாடல்கள்.

கலிகடந்தகை யான்கடற் காழியர் காவலன்
ஒலிகொள் சம்பந்தன் ஒண்தமிழ்

என்று பலபடியாகத் தம்மையும் தாம் பாடிய திருப்பதிகங்களையும் இப்பெருமான் சிறப்பிக் கிறார்.

★

இந்தப் புத்தகத்தில் ஞானசம்பந்தர் திருவாய் மலர்ந்தருளிய தேவாரத்தில் இரண்டாந் திருமுறை யிலிருந்து எடுத்த பன்னிரண்டு பாடல்களுக்குரிய விளக்கத்தைக் காணலாம்.

இரண்டாம் திருமறை 122 திருப்பதிகங்களை உடையது. அப்பதிகங்கள் இந்தளம், சீகாமரம், காந்தாரம், பியந்தைக் காந்தாரம், நட்டராகம், செவ்வழி என்னும் ஆறு பண்களால் அமைந்தவை.

இத்திருமுறையில் திருஞான சம்பந்தப் பெருமான் செய்தருளிய அற்புதச் செயல்களோடு தொடர்புடைய பதிகங்கள் ஐந்து உள்ளன. அவை திருமருகலில் விடந்தீர்க்கப் பாடியது, திருமறைக் காட்டில் திறந்த கதவை அடைக்கப் பாடியது, திருமயிலாப்பூரில் என்பைப் பூம்பாவையாக எழுப்பப் பாடியது, கூன் பாண்டியனுடைய வெப்பு நோயை நீக்கப் பாடிய திருநீற்றுப்பதிகம், நாளும் கோளும் நல்லன அல்ல என்று திருநாவுக்கரசர் கூறியபோது பாடிய கோளறு திருப்பதிகம் என்பன.

★

இதில் உள்ள பன்னிரண்டு பாடல்களும் சீகாழி, திருமங்கலங்குடி, திருப்புறம்பயம், திருச்சாய்க்காடு, திரு வெண்காடு, திருக்குடவாயில், திருப்பாசூர், திருமுதுகுன்றம், திருவாரூர், திருத்தேவூர், திருவலஞ்சுழி என்னும் பதினொரு தலங்களைப் பற்றியவை; சீகாழியைக் பற்றியவை இரண்டு.

இந்தப் பன்னிரண்டு பாடல்களில் நெஞ்சை விளித்துச் சொல்லும் பாசுரங்கள் மூன்று (4, 9, 12). இறைவனை முன்னிலைப் படுத்திப் பாடியவை மூன்று (1, 3, 6). படர்க்கையாக வைத்துச் சொன்னவை ஐந்து (2, 5, 7, 8, 10). உலகத்தவரைப் பார்த்துச் சொன்னது ஒன்று (11).

செந்நெ லங்கழ னிப்பழ னத்தய லேசெழும்
புன்னை வெண்கிழி யிற்பவ ளம்புரை பூத்தராய். (1)

குலைவாழை கமுகம்பொன் பவளம் பழுக்கும்
குடவாயில். (6)

பைவாய் நாகம் கோடல் ஈனும் பாசூரே. (7)

மந்தியேறி யினமா மலர்கள் பலகொண்டு
முந்தித் தொழுது வணங்குங் கோயில் முதுகுன்றே. (8)

முழுமணித் தரளங்கள்
மன்னு காவிரி சூழ்திரு வலஞ்சுழி (12)

என்பவை இவற்றில் வரும் இயற்கைக் காட்சிகள்.

★

இந்தப் புத்தகத்தில் கண்ட பாடல்களை யல்லாமல் வேறு சுவையான பாடல்கள் பல பல இரண்டாம் திருமுறையில் இருக்கின்றன. குறிப்பிட்ட அளவுக்குள் இந்தப் புத்தகத்தை அமைக்க வேண்டியிருந்தமையால் இந்தப் பன்னிரண்டு பாடல்களை மாத்திரமே விளக்க முடிந்தது. பதவுரை, பொழிப்புரை, விசேடவுரை என்ற பழைய முறையில் எழுதியிருந்தால் இன்னும் பல பாடல்களைச் சேர்த்திருக்கலாம். குறிப்புரை மாத்திரம் எழுதியிருந்தால் பின்னும் பல பாடல் களை இதில் தொகுத்திருக்கலாம். ஆனால் நிறையப் பாடல்களைக் கொடுக்க வேண்டும் என்பது என் நோக்கம் அன்று. கொடுத்துள்ள பாடல்களில் பொருள் நன்கு விளங்க வேண்டும் என்பதே என் கருத்து. பழைய முறையில் உரை வரைந்தால் தேவாரத்தில் அக்கறையுடையவர்களே நாடிப் படிப்பார்கள். அப்படியின்றிக் கதை போலவும் கட்டுரை போலவும் அமைத்து, எழுதிக் கொண்டு போகும் போக்கிலே பாடலில் வரும் சொற்களையும் பெய்து, நயங்கள், தடை விடைகள், விசேட உரைகள் ஆகியவற்றையும் இடையே பொருத்திக் காட்டினால், ஓரளவு தமிழ் உரைநடை நூல்களைப் படிப்பவர்களும் விரும்பிப் படிக்கக் கூடுமென்று எண்ணினேன். பாடல்களுக் கேற்றபடி வெவ்வேறு வகையில் நிலைக்களத்தை அமைத்து விளக்கங்களை எழுதியிருக்கிறேன். நன்றாகப் படித்தவர்களுக்கும் தேவாரத்திற்கு உரை காணும் திறமை உடையவர்களுக்கும் இதிலுள்ள விளக்கங்கள் மிகையாகத் தோற்றலாம். தேவாரத்தி னூடே புக அஞ்சுகிறவர்களை எண்ணியே இவற்றை எழுதுவதனால், சில இடங்களில் விளக்கம் நீண்டதாக இருத்தல் கூடும்.

முதல் திருமுறையிலிருந்து எடுத்த எட்டுப் பாடல்களின் விளக்கத்தை, ''உள்ளம் கவர்

கள்வன்'' என்ற பெயரோடு இந்த வரிசையின் முதல் புத்தகமாக வெளியிட்டேன். இரண்டாவது புத்தகம் இது. 'சங்கநூற் காட்சிகள்' என்ற சங்கத் தமிழ்ப் பாடல்களின் விளக்கப் புத்தகங்களைப் பெற்றுப் படித்துப் பாராட்டிய தமிழுலகம், இந்த நூல் வரிசையையும் படித்து ஆதரிக்கும் என்று நம்புகிறேன்.

முருகன் திருவருள் ''திருமுறை மலர்கள்'' என்ற இந்த நூல் வரிசையும் நிறைவேறத் துணை செய்வதாகுக!

கி.வா. ஜகந்நாதன்

பின்னு செஞ்சடை

உலகத்தில் உள்ள மக்கள் பிறரோடு பழகி நட்புப் பாராட்டியும், பகை பாராட்டியும், பழக வகை இல்லாமலும் இருக்கிறார்கள். இந்த மூன்று நிலையையும் நட்பு, பகை, நொதுமல் என்று சொல்வார்கள். பார்த்துப் பழகாதவர்களை அயலார் அல்லது நொதுமலர் என்று சொல்வது வழக்கம். பழகினவர்களில் வேண்டியவர், வேண்டாதவர் என்று இரண்டு வகையினர் இருக்கின்றனர். மனிதனுக்கு விருப்பு, வெறுப்பு என்ற இரண்டு குணங்கள் இருப்பதனால் நண்பர், பகைவர் என்ற வேறுபாடு உண்டாகிறது. உணவு, உடை, பொருள்கள் எல்லாவற்றிலும் இந்தப் பிரிவு அமைகிறது. ''எனக்கு இது பிடிக்கும்'' என்றும், ''எனக்கு இது பிடிக்காது'' என்றும் சொல்கிறோம். விருப்புக்கு உட்பட்டதை எனது என்று சொல்கிறோம். அது மமகாரம். நமக்கு விருப்பமான பொருளைப் பிறருக்கு அளிக்காமல் பற்றிக் கொள்கிறோம். அது பற்று. நாம் விரும்பும் பொருள் பிறரிடம் இருந்தால் அது நமக்கு வேண்டும் என்று எண்ணுகிறோம். அது அவா. நாம் விரும்பும் பொருள் பிறரிடம் இருந்தால், ''இவனுக்குக் கிடைத்து விட்டதே!'' என்று எண்ணுகிறோம். அது அழுக்காறு அல்லது பொறாமை. அவனைக் கண்டால் வெறுப்பு உண்டா கிறது. இது பகை. இப்படியாக மனிதன் விருப்பு வெறுப்புக் களின் வழியே பல தீய குணங்களை வளர்க்கிறான். அவ் விரண்டையும் நீத்து நடு நிலையில் இருப்பவர்கள் மெய்ஞ் ஞானிகள். இறைவனும் விருப்பு வெறுப்பு இல்லாதவன்.

''வேண்டுதல்வேண் டாமை யிலான்அடி சேர்ந்தார்க்
கியாண்டும் இடுப்பை இல''

என்பது திருக்குறள். இறைவன் விருப்பு வெறுப்பு அற்றவன். அவன் அடி சேர்ந்தவர்களும் விருப்பு வெறுப்பு அற்றவர்கள்.

விருப்பு வெறுப்பு அற்றவர்களுக்குப் பிறரால் வரும் துன்பம் இல்லை. தம்மவர், அல்லாதார் என்ற வேறுபாடு இன்மையின் அவர்கள் எல்லோருக்கும் உறவினர்கள் ஆகிவிடுகிறார்கள்.

ஞானசம்பந்தப் பெருமானுக்கு இறைவனுடைய அருங் குணங்கள் நன்றாகத் தெரியும். சில சில குணங்களை அங்கங்கே குறிப்பாகவும் வெளிப்படையாகவும் எடுத்துக் காட்டுவார். அவன் விருப்பு வெறுப்பு இல்லாதவன் என்பதை வெளிப்படையாகச் சொல்லாமல் குறிப்பாகப் புலப்படும்படி சொல்கிறார். இறைவன் விருப்பு வெறுப்பு இல்லாதவன் என்று சொல்வதுகூட அத்தனை சிறப்பதன்று. அவனைச் சார்ந்த பொருள்களும் உலகியலின்படி பார்த்தால் ஒன்றற்கு ஒன்று பகையாக இருந்தாலும் அவனைச் சார்ந்த பிறகு தம்முள்ளே உள்ள பகைமை நீங்கி ஒரே நிலையில் அருகருகே இருக்கின்றன.

பழங்காலக் கதைககளில், செங்கோன்மையிற் சிறந்த மன்னர்களின் ஆட்சி முறையை வருணிக்கையில், ''புலியும் பசுவும் ஒரு துறையில் நீர் குடித்தன'' என்று வருவதைப் பார்க்கலாம். நல்ல அரசர்களுடைய ஆட்சியிலேயே அப்படி இருக்குமானால் அருளே உருவமாக உடைய இறைவன் சார்பிலே, பகையுடையார் பகை நீங்கி இருப்பதில் வியப்பு என்ன?

உலகில் பகையென்றும் நட்பென்றும் கேட்டுக் கேட்டுப் பழக்கப்பட்டு விட்டோம். ஆகையால் பகைவர்கள் ஒன்று பட்டால் நமக்கு வியப்பாகத்தான் இருக்கிறது. சிவபெருமானுடைய செஞ்சடையிலே பிறையும் பாம்பும் இருக்கின்றன. பாம்புக்கும் திங்களுக்கும் பகை. முற்றிய திங்களை ராகு என்னும் பாம்பு விழுங்கும்; அதனால் பகை என்பது ஒன்று. திங்களும் பாம்பும் தம்முடைய இயற்கையால் மாறுபடுவன. யாவரும் காண வானத்தில் உலாவருவது திங்கள்; பிறர் கண்ணிற் படாமல் வளைக்குள் ஒளிந்திருப்பது பாம்பு. தன்னுடைய தோற்றத்தால் யாவருக்கும் மகிழ்ச்சியைத் தருவது மதி; தன்னைக் கண்டால் படையும் நடுங்கும்படி செய்வது பாம்பு. வெண்ணிறம் உடையது சந்திரன்; கருநிறம் உடையது

பாம்பு. அமுத மயமாக இருப்பது சந்திரன்; அதனால் அமுத கிரணன் என்ற பெயர் அமைந்தது; பாம்போ நஞ்சு கொப்புளிப்பது. சந்திரன் ஒளி உருவமானது; பாம்பு நிழலுருவமானது.* ஒன்றுக்கொன்று மாறுபட்ட இவ்விரண்டும் ஓரிடத்தில் இருப்பது அருமை. இருந்தால் அது வியப்பைத் தரும் காட்சிதான்.

சிவபிரானுடைய சடை தனித்தனிக் கேசமாக இல்லை. பிரிந்து பரந்து நிற்கவில்லை. சிதறாமல் ஒன்றிப் பின்னிய சடையாகச் செம்மையாக இருக்கிறது. பின்னியது போன்ற அந்தச் செஞ்சடையிலே பிறையும் பாம்பும் உடன் உறைகின்றன. என்ன ஆச்சரியம்! அவை தாமே வந்து தங்கினவா? இல்லை, இல்லை. இறைவன் அவற்றை அங்கே வைத்திருக்கிறான். அவன் சடையில் ஏறுவதற்கு முன் அவை ஒன்றோடு ஒன்று பகைத்தன. சடையில் ஏறிய பிறகு இரண்டும் பகை ஒழிந்து அப்பெருமான் சடைக்கு அணியாகத் திகழ்கின்றன. ''ஒத்த இயல்புகளையுடைய பொருள்கள் இருக்கவும், ஒன்று கண்ட இடத்தில் மற்றொன்றைக் காண முடியாத பிறையையும் பாம்பையும் உடன் வைத்திருக்கிறீரே! இது என்ன வியப்பு! ஏன் அப்படி வைத்துக்கொண்டீர்? சொல்லும் ஐயா!'' என்று சிவபெருமானை நோக்கி ஆளுடைய பிள்ளையார் கேட்கிறார்.

சொலீர்:

பின்னு செஞ்சடை யிற்பிறை பாம்புடன் வைத்ததே.

(பின்னியது போன்ற சிவந்த சடையில் ஒன்றுபட்டு வாழாத பிறையைப் பாம்போடு வைத்ததற்குக் காரணம் சொல்லும்.)

இந்த நினைவும் வியப்பும் சம்பந்தப் பெருமானுக்குத் தம்முடைய சொந்த ஊராகிய சீகாழியில் பிரமபுரீசரைத் தரிசிக்கும்போது தோன்றின. ஆதலின் அந்தப் பெருமானையே கேட்கிறார். சீகாழிக்குப் பன்னிரண்டு திருப்பெயர்கள் உண்டு. பூந்தராய் என்பது அவற்றில் ஒன்று.

---

* *ராகு கேதுக்களை நிழற்கோள் அல்லது சாயாக் கிரகம் என்று சொல்வார்கள்.*

மாறுபட்ட பொருள்களை ஒரு சேர வைத்த வியப்பை எண்ணியவுடன் வேறு பல செய்திகள் நினைவுக்கு வருகின்றன. வேறு வேறான இயல்புடையவை ஒன்றுபட்டு விளங்கும் காட்சிகள் அவருக்கு ஒன்றன்பின் ஒன்றாகத் தோன்றுகின்றன. பூந்தராயாகிய சீகாழியின் நிலப்பரப்பு, அங்குள்ள புன்னைமரம், இறைவனுடைய பூங்குழல் ஆகிய இவற்றில் வேறு வேறு இயல்புடையவை இணைந்து நிற்கும் அதிசயங்களைச் சொல்கிறார்.

★

சீகாழி நிலவளம் உடையது. மருத நிலத்தில் இருப்பது. மருதநிலத்துக்குப் பழனம் என்பது ஒரு பெயர். எங்கே பார்த்தாலும் வயல்கள். அந்த வயல்களில் நெற்பயிர் நன்றாக வளர்ந்திருக்கின்றது. நெல்லில் செந்நெல் என்றும் வெண்ணெல் என்றும் இருவகை உண்டு; சம்பா, குறுவை என்பன போன்றவை. இவ்விரண்டிலும் செந்நெற் சிறப்புடையது. பூந்தராய்க் கழனிகளில் செந்நெல்லே விளைகின்றது.

செந்நெல் விளையும் கழனிகளுக்கு அயலில் புன்னை மரங்கள் நிற்கின்றன. புன்னைமரம் நெய்தல் நிலத்துக்கு உரியது. சீகாழிக்குச் சில மைல்களுக்கப்பால் கடற்கரை இருக்கிறது. அதனால் நெய்தல் நிலத்தின் சார்பும் இந்த ஊருக்கு உண்டு. ஞானசம்பந்தரே, சீகாழி கடற்கரையில் இருப்பதாகப் பாடியிருக்கிறார்.

"மொய்பவளத் தொடுதரளம்
துறையாரும் கடற்றோணி புரத்தீசன்"

என்பது அவர் திருவாக்கு. ஆகவே சீகாழியில் மருத நிலக்காட்சியும் நெய்தல்நிலக் காட்சியும் அருகருகே தோன்று கின்றன. செந்நெல்லையுடைய அழகிய கழனிகள் பழனத்தைக் காட்ட, அயலில் செழித்து வளர்ந்த புன்னைமரம் நெய்தல்நிலப் பண்பைப் காட்டுகிறது.

செந்நெல் லங்கழ னிப்பழ னத்தய லேசெழும் புன்னை.

(செந்நெல் வளரும் அழகிய வயல்களையுடைய மருத நிலத்துக்கு அயலே வளர்ந்த செழுமையான புன்னைமரம்.)

★

அந்தப் புன்னையிலும் வேறு வேறான பண்புகள் இணைந்திருக்கின்றன. புன்னைமரம் பூத்திருக்கிறது. அதன் இதழ்கள் வெள்ளை வெளேரென்று இருக்கின்றன. அதன் நடுவே உள்ள கர்ணிகை அல்லது கொட்டை பவளத்தைப் போலச் செக்கச் செவேலென்று ஒளிர்கிறது. வெவ்வேறு நிறங்களாகிய வெண்மையும் செம்மையும் அடுத்தடுத்து இருக்கும்போது விளக்கமாகத் தெரிகின்றன. நவமணிகளில் ஒன்று பவளம் ஆதலின் அதை மக்கள் பாதுகாப்பாக வைப்பார்கள். அழுக்குப் படாமல் வைத்துக் கொள்வார்கள். பவளத்தைத் தூய வெண்கிழியில் (துணியில்) பொதிந்து வைத்தது போல இருக்கிறது புன்னைப் பூவின் தோற்றம்.*

புன்னை வெண்கிழி யிற்பவ ளம்புரை பூந்தராய்.

(புன்னைமலர் வெள்ளைத் துணியில் வைத்த பவளத்தை யொக்கும் சீகாழி.)

★

மருதமும் நெய்தலும் இணைந்த இணைப்பும், வெண்மையும் செம்மையும் ஒன்றிய ஒற்றுமையும் கொண்டது பூந்தராய். இங்கே எழுந்தருளியிருக்கிறான் இறைவன். அவனுடைய திருமுன் மற்றோர் இணைப்பைக் காண்கிறோம். உலகம் பதினான்கானாலும் இவற்றை மூன்றாகச் சொல் வார்கள், அந்தர் மத்திய பாதலம் என்று. வானம், பூமி, பாதலம் என்ற மூன்று தட்டை, 'மூவுலகம்'† என்றும் வழங்குவதுண்டு. இந்த மூன்றில் பூமியில் இருப்பது பூந்தராய். அங்கே எழுந்தருளியிருக்கும் பெருமானுடைய பூங்கழல் பாதாளத்தை யும் ஊடுருவி நிற்பது.

''பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்''

என்பது திருவாசகம். வானத்தில் இருப்பவர்கள் இமையோர். அவர்கள் தங்கள் பதவியை விடாமல் பற்றிக் கொண்டிருப்

---

* *''பவளமும் பொன்னுங் குவைஇய முத்திற், றிகழரும்பீன்றது புன்னை'' என்பது இங்கே நினைப்பதற்குரியது.*

† *''மூவகை யுலகும் முகிழ்த்தன முறையே'' (ஐங்குறுநூறு, கடவுள் வாழ்த்து.)*

பவர்கள்; எல்லோருக்கும் உயர்ந்தவர்கள் என்று தம்மை நினைத்துக்கொண்டு இருக்கின்றவர்கள். அவர்கள் வாழும் உலகம் உயர்ந்த உலகம். அவ்வளவு உயரத்தில் இருப்பவர்கள் தாழ்ந்து இறங்கி வருகிறார்கள். அவர்களுடைய தலைகள் வணங்கா முடிகள். அவை மிக மிக் கீழே உள்ள இறைவன் அடியிலே ஒன்றுகின்றன. மேலுலகமாகிய வானில் இருக்கும் நல்ல இமையவர்களின் உயர்ந்த முடிகள் பாதாளம் ஏழினும் கீழாக உள்ள இறைவன் அடியிலே ஒன்றுகின்றன. இந்த இணைப்பு வியப்பதற்கு உரியதல்லவா?

இது அமைவதற்கு இறைவன் பெருமையே காரணம். தமக்கு வரும் துன்பங்களை நீக்குவதற்கு வேறு புகல் காணாமல், தம் உயர் நிலையைப் பாதுகாத்துக் கொள்வதற்காகவே இமையவர்கள் பூந்தராய்க்கு வந்து இறைவன் கழலடியில் முடியை வைத்து வணங்குகிறார்கள். வணங்காத முடியை வணங்கச் செய்யும் அடி இறைவன் திருவடி. அடியார் தொழுவது பெரிதன்று. தம் பெருமையையே நினைந்திருக்கும் தேவர்கள் பணிந்து முடியை அடியிலே வைப்பது அரிய. செயல்.

பூந்தராய்
துன்னி நல்இமை யோர்முடி தோய்கழலீர்!

(பூந்தராயை அடைந்து நல்ல தேவர்களுடைய முடிகள் படிந்து வணங்கும் கழலணிந்த திருவடிகளை உடையீர்!)

மருத நிலத்துத நெல் வயலுக்கு அருகே நெய்தல் நிலத்துப் புன்னை வளர்கிறது; அந்தப் புன்னையில் வெள்ளிய கிழியில் செம்பவளம் வைத்தது போன்ற காட்சி வளர்கிறது; அவ்விடத்தில் உயர்ந்தோங்கிய வானுலகத்தினரின் முடிகள் பாதாளத்தின் கீழுள்ள இறைவன் அடியிற் படிந்து வளர்கின்றன. அப்படி உள்ள பெருமான் சடையிலே அமுதத்தையுடைய திங்களும் நஞ்சையுடைய பாம்பும் ஒன்றாக வளர்கின்றன. அவை தங்கும் சடை வெவ்வேறாகப் பிரிந்திராமல் பின்னி ஒன்றிய செஞ்சடையாக இருக்கிறது.

செந்நெ லங்கழ னிப்பழ னத்தய லேசெழும்
புன்னை வெண்கிழி யிற்பவ ளம்புரை பூந்தராய்

துன்னி நல்லிமை யோர்முடி தோய்கழ லீர்! சொலீர்
பின்னு செஞ்சடை யிற்பிறை பாம்புடன் வைத்ததே.

(கழனி - வயல். புன்னை - புன்னைமலர்; ஆகுபெயர். கிழி - துணி புரை - ஒக்கும். கழல் - கழலையணிந்த திருவடி; ஆகுபெயர். வைத்தது சொலீர் என்று கூட்ட வேண்டும்.)

★

இறைவன் அருளால் பகைப் பொருள்கள் தம் பகைமை நீங்கி ஒன்றுபடும் என்பது குறிப்பால் புலப்பட்டது. பிறையும் பாம்பும் இறைவன் திருமுடியிலே வேறுபாடற்று அவன் திருக்கோலத்தில் ஒன்றி நின்றாற்போல, இறைவன் அருள் இணைந்தால் இணையாத பொருள்கள் ஒன்றும்; நில்லாத பொருள்கள் நிற்கும்; சிதறிய பொருள்கள் சேரும். இறைவன்பால் ஒன்றுபட்டால் அமுதமும் நஞ்சும் ஒரே தன்மை பெறும்.

இறைவனுடைய அருளுக்கு உட்படாத வரையில் மனிதர்கள் தம் தம் தகுதியால் வேறுபடுவர். ஆனால் அவனுடைய அருளைப் பெற்ற பின்னர் அவர்களுடைய முன்னை இயல்புகள் யாவும் மாறி ஒரே நிலையை அடைவார்கள். வேதியராகிய சிவகோசரியாரும் வேடராகிய கண்ணப்பரும் இறைவன் திருவருள் பெற்ற பின் வேறுபாடு இலராயினர். கங்கைக்குள் புகுவதற்கு முன் யமுனையாகவும், சாக்கடையாகவும் இருந்தவை கங்கையிலே சேர்ந்த பிறகு கங்கையே ஆகிவிடுகின்றன.

ஆதலின், இறைவனைச் சார்வதற்கு முன் எந்த நிலை இருந்தாலும் சார்ந்த பிறகு அவன் அடியாராகும் திறத்தில் மேல் கீழ் இல்லை. இவற்றையெல்லாம், 'பின்னு செஞ்சடையிற் பிறை பாம்புடன் வைத்த' செய்தி சொல்லாமற் சொல்கிறது.

இந்தப் பாசுரம் திருஞானசம்பந்தர் தேவாரத்தில் இரண்டாம் திருமுறையின் முதற் பதிகத்தின் முதற்பாட்டு.

★

உய்யும் வகை

இனிமை என்று சொன்னவுடன் நமக்குக் கற்கண்டும் தேனுமே நினைவுக்கு வருகின்றன. மனிதன் பிறந்தவுடன் தாய்ப்பாலை உண்ணுகிறான். அவனுடைய சுவையுணர் பொறியாகிய நாக்கு இயங்குகிறது. குழந்தை, காளை, முதியவன் யாராக இருந்தாலும் நாச் சுவை அவர்களைப் பற்றிக் கொண்டிருக்கிறது. மற்ற இந்திரியங்களெல்லாம் வயசு ஆக ஆகத் தளர்ச்சி அடைகின்றன. கண் ஒளி மழுங்குகிறது. காது மந்தமாகிறது. மூக்கு நாற்றத்தைத் தக்கபடி உணர்வதில்லை. உடம்பும் மரத்துப் போகிறது. ஆனால் நாக்கு மாத்திரம் பின்னும் அதிகக் கூர்மையாக இருக்கிறது. வயசான முதியவர் களுக்கு உணவுச் சுவையில் எத்தனை 'சபலம்' இருக்கிற தென்பதை யாவரும் அறிவர். இதனால் மனிதனை இறுகப் பற்றிக்கொண்டிருக்கும் புலனுணர்வு சுவை என்பதை உணரலாம்.

ராமகிருஷ்ண பரமஹம்சர் கூறும் கதை ஒன்று இங்கே நினைக்கத் தக்கது. ஒரு ஞான முனிவரிடம் உலகத்தில் வெறுப்புற்ற ஓர் இளைஞன் வந்து தனக்கு உபதேசம் செய்ய வேண்டுமென்று இறைஞ்சி வேண்டினான். ஞான முனிவர் அவனைச் சோதித்துப் பார்க்க எண்ணினார். ''நாக்கை நீட்டப்பா'' என்றார். இளைஞன் நாக்கை நீட்டினான். சிறிது சர்க்கரையை எடுத்து அந்த நாக்கின்மேல் வைத்தார்; வைத்துவிட்டு ஊதினார். சர்க்கரை தூள் போலப் பறந்தது. ''நீ நாக்கை வென்றவன். ஆதலால் மற்றப் பொறிகளையும் நிச்சயமாக வென்றிருப்பாய். உனக்கு உபதேசம் செய்கிறேன்'' என்று அவனை மாணாக்கனாக ஏற்றுக் கொண்டாராம். நம்முடைய நாக்கில் சர்க்கரையைப் போட்டால் உடனே அது கரைந்துவிடும். போடவே வேண்டாம்; சர்க்கரையைக்

கண்டாலும் சரி, சர்க்கரையென்று நினைத்தாலும் சரி, நாக்கில் நீர் ஊறும்.

மேலே சொன்ன கதையாலும் நாச் சுவை மக்களை எவ்வளவு இறுகப் பற்றியிருக்கிறது என்பது புலனாகும். அதனால் இறைவனை நினைந்து விரதம் இருக்கிறவர்கள் விரதத்துக்கு முக்கியமான இலக்கணமாக உணவு வகைகளைக் குறைப்பதைக் கொண்டிருக்கிறார்கள்.

"உண்ணாது நோற்பார் பெரியர்"

என்று வள்ளுவரும் கூறினார்.

ஆகவே, சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் ஐந்து புலன்களில் சுவை எளிதில் மனிதனை விடுவதில்லை. மற்ற இன்பங்களை நாடாதவர்களும் சுவை ஒன்றை நாடுவார்கள். இவ்வாறு தலைமை பெற்றமையால், சுவைக்குரிய பொருள் களையே மற்ற இந்திரிய நுகர்ச்சிப் பொருள்களுக்கு அளவு கோலாகவும் உவமையாகவும் எடுத்தாள்வது வழக்கமாகப் போய்விட்டது.

''பாட்டு எப்படி இருந்தது?''

''அமிர்தமாக இருந்தது.''

''சொற்பொழிவு எப்படி இருந்தது?''

''தேன் மாரி போல் இருந்தது.''

செவிப்புலனுக்கு இன்பம் உண்டாகிறது. அதற்கு நாவாலே சுவைக்கும் அமுதமும் தேனும் அளவு கோலாகின்றன. ''என் கனியே, தேனே, கட்டிக் கரும்பே'' என்று அன்புடையாரைச் சொல்கிறோம். இதற்கெல்லாம் காரணம் சுவையினிமையே மக்கள உள்ளத்தில் சிங்காதனமிட்டு ஆட்சி புரிகிறது என்பதுதான்.

இறைவனையும் அன்பர்கள் சுவைப் பொருளாகப் பாராட்டினார்கள். அமுதென்றும், தேனென்றும், கனியென்றும், கரும்பென்றும் பாராட்டினர். திருஞானசம்பந்தப் பெருமான் அப்படிச் சொன்ன இடங்கள் பல பல.

★

சோழ நாட்டில் திருமங்கலக்குடி என்பது ஒரு தலம். அங்குள்ள ஆவிநாயகராகிய சிவபெருமானைத் தரிசித்துப் பதிகம் பாடினார், சிவ ஞானப்பால் அருந்திய பெரியார். இறைவனுடைய நல்லருளையும் ஞானத்தையும் பாலாக உண்ட பெருமான் அவர். அவருக்கு இறைவன் தேனாகி அமுதாகி நிற்பவன். அவருக்கு மாத்திரம் அப்படி இருப்பவன் என்று சொல்லலாமா? மற்றவர்களுக்கும் தேனாய் அமுதாகி நிற்பவன்தான். ஆனால் அந்த 'மற்றவர்கள்' யார்? உலகிலுள்ள யா பருமா? இல்லை, இல்லை.

பசித்தவனுக்கு உணவு ருசிக்கும். பசியில்லாமல் வயிற்று வலி கொண்டவனுக்கும், பிற நோயாளிகளுக்கும் உணவு சுவைக்காது. அதுபோல, இறைவனிடத்திலே அன்பு கொண்டு அவன் அருளைப் பெற வேண்டுமென்று பசித்திருப்பவர் களுக்கு அவன் இனியவனாக இருப்பவன்.

அவன் எல்லோருடைய உள்ளத்திலும் இருக்கிறான். ஆனால் உள்ளத்தில் அவன் இருப்பதைப் பற்றிக் கருதாதவர் பலர். அவர்களுடைய உள்ளம் அழுக்கடைந்த கண்ணாடிப் பெட்டி போன்றது. அதனுள்ளே வைர மணி போன்ற இறைவன் இருந்தாலும் அதன் மேலே உள்ள அழுக்கினால் அவன் இருப்பது தெரிவதில்லை. மாசு நீங்கிய உள்ளம் அழுக்கின்றித் துலக்கிய கண்ணாடிப் பெட்டி போன்றது. அங்கே இறைவன் இருப்பது தெளிவாகத் தெரியும். ஆசைகளாலும் தீய குணங்களாலும் அழுக்கடைந்து கலங்காமல் இறைவனிடம் அமைந்த முறுகிய பக்தியினால் அழுக்கற்றுத் தூயதாய்த் தெளிந்திருக்கும் சிந்தைக்குள் இறைவன் தன் அருள் வெளிப்பட நிற்கிறான். அவனுடைய அருளால் அன்பர்களுடைய தெளிந்த சிந்தையில் இன்பம் பொங்குகிறது. உலகில் உள்ள ஏனைய சுஷவகளெல்லாம் சுவையற்றுப் போகின்றன.

"பெரும்பைம் புனத்தினுள் சிற்றேனல்
காக்கின்ற பேதைகொங்கை
விரும்புங் குமரனை மெய்யன்பி
னால்மெல்ல மெல்லஉள்ள
அரும்பும் தனிப்பர மானந்தம்
தித்தித் தறிந்தஅன்றே

கரும்பும் துவர்த்துச்செந் தேனும்
புளித்தறக் கைத்ததுவே''

என்பர் அருணகிரி நாதர்.

இறைவனுடைய அன்பு முறுகுவதற்குமுன் உலகத்திற் சுவைப் பொருளாகத் தேனென்றும் பழமென்றும் இருந்தவை யாவும், அந்த அன்பு முறுகிப் பயன் கொள்ளும்போது சுவை குன்றுகின்றன. இறைவனே தேனுமாய் அமுதுமாய்த் தித்திக் கின்றான். அவனுடைய அருளே புகலென்று தெளிந்த சிந்தை யில் அவ்வாறு தித்திப்பான்; மற்றவர்கள் சிந்தையில் நின்றிருந்தும், தெளியப் பெறாமல் இருப்பான்.

தேனு மாய்அமு தாகிநின் றான்தெளி சிந்தையுள்.

இறைவன் தேனாய் இருக்கிறான்; அமுதாயிருக்கிறான்; மாசு இன்றித் தெளிந்த சிந்தையில் தோன்றி இன்பந் தருகிறான்.

★

மனம் நுட்பமானது. அதை அணுவென்றும் சொல்வ துண்டு. இறைவன் அதற்குள்ளே இருக்கிறான். அப்படி இருப்பது மற்றவரிடம் தெரியாவிட்டாலும், தெளி சிந்தை யுடையாரிடம் தெரிகிறது. அவர்கள் நுகரும் இன்பத்தினால் இது தெளிவாகிறது. மனத்தில் நுட்பமாக இருப்பவன் ஆனாலும் எல்லாவற்றையும் தனக்குள் அடக்கி நிற்பவன் அவன். ஐம்பெரும் பூதங்களில் வானம் எல்லாவற்றையும் தனக்குள் அடக்கிக் கொண்டிருப்பது.* சிந்தைக்குள் நுண் பொருளாய் நின்று இனிக்கும் தேன் அவன்; எல்லாப் பூதங்களையும் தனக்குள் அடக்கிய பெரிய பொருளாய் நிற்கும் வானும் அவன்.

வானமாய் இறைவன் இருக்கிறான் என்று சொல்லும் போதே மற்றோர் அடையாளமும் நினைவுக்கு வருகிறது. இறைவன், வானத்தைப் போல எல்லாவற்றையும் தன்னுள் அடக்கி வைத்திருக்கிறான்; இது தத்துவப் பொருள்.

---

* *''அகல் இரு விசும்பு - தன்னையொழிந்த நான்கு பூதமும் தன்னிடத்தே அகன்று விரிவதற்குக் காரணமாகிய பெரிய ஆகாயம்'' (பெரும்பாணாற்றுப்படை, 1, நச்சினார்க்கினியர் உரை.)*

வானத்தைப்போல மதியைச் சூடியிருக்கிறான்; இது அவனுடைய திருக்கோலத்தோடு ஒட்டிய பொருள். புலன் கடந்த நிலையில் வானத்தைப்போல விரிந்து நிற்கிறான்; அதனை நினைப்பூட்டுபவனைப் போல அருள்திருமேனி தாங்கும்போது வானத்தைப்போல மதியைப் சூடி விளங்கு கிறான்.

தேனு மாய்அமு தாகிநின் றான்தெளி சிந்தையுள்;
வானு மாய்மதி சூடவல் லான்.

நுண்பொருளாய், விரிபொருளாய், இன்பந்தரும் பொருளாய், அருள் திருமேனி கொண்டவனாக இருக்கும் எம்பெருமான் அங்கங்கே திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கிறான். திருமங்கலம் குடியில் நம்மையாளும் கடவுளாக, தலைவனாக, கோனாக விளங்குகிறான்.

தேனு மாய்அமு தாகிநின் றான், தெளி சிந்தையுள்;
வானு மாய்மதி சூடவல் லான்மங்க லக்குடிக்
கோனை.

★

இறைவன் இவ்வாறு எழுந்தருளியிருப்பதற்குத் தன் பெருமையை யாவரும் தெரிந்து தன்னைப் பாராட்ட வேண்டும் என்பது காரணம் அன்று. நாம் உய்யும் பொருட்டே, நன்மை பெற்று வாழும் பொருட்டே, அவ்வாறு திருக்கோயில் கொண்டிருக்கிறான். நமக்கு உய்திவேண்டுமானால் அவனை அடையவேண்டும். என்ன செய்ய வேண்டுமென்பதைச் சம்பந்தர் அருள் செய்கிறார்.

தெளிந்தார் சிந்தையுள் அடங்கித் தேனாய் அமுதமாய் இனித்து நின்றவனும், எல்லாப் பொருளையும் தனக்குள்ளே அடக்கி நின்றவனுமாகிய இறைவன் நம்மை நாடி வந்து திருமங்கலக்குடிக் கோயிலில் எழுந்தருளியிருக்கும்போது நாம் சிறிது தூரமேனும் அவனை நோக்கிச் செல்ல வேண்டாமா?

நமக்கு இன்பம் தரும் காரியத்தை நாள்தோறும் செய்கிறோம். உண்பதும் உறங்குவதுமாகியவற்றை ஒரு நாளாவது மறப்பதில்லை. உடல் வளம்பெறும் செயலை நாள்தோறும் செய்யும்போது, உயிர் வள்ம்பெறும் செயலை

அடுத்தடுத்துச் செய்வதுதானே முறை? நம்மை நாடி வந்திருக்கும் இறைவனை நாமும் நாள்தோறும் நாடிச் செல்ல வேண்டும். சென்று ஏத்த வேண்டும். இணையிலா ஆற்றலும் வரம்பிலாக் கருணையும் உடைய எம்பெருமானை ஏத்துவது தான் நாவைப் பெற்றதற்குப் பயன். அவனை ஏத்தும் புகழ்தான் உண்மையான புகழ்.

"இறைவன், பொருள்சேர் புகழ்"

என்று வள்ளுவரும்,

"பூமிமேல் புழ்தக்க பொருளே"

என்று அப்பரும் எடுத்துச் சொல்வார்கள். ஆதலின் இறைவனை நாடிச் சென்று ஏத்த வேண்டும். அவனுடைய கல்யாண குணங்களைச் சிந்தித்தால் நம் உள்ளம் உருகும். அவற்றைச் சிந்தித்துச் சிந்தித்துச் சொல்ல வேண்டும்.

இறைவன் குணங்கள் நிறைந்தவன்.

"உயர்வற உயர்நலம் உடையவன்"

என்பது ஆழ்வார் வாக்கு.

கோதற்ற குணங்கள் நிறைந்த இறைவனுடைய அருட் செயல்களை நினைத்துப் பார்த்தால் நம் உள்ளம் தூயதாகும்; எந்த வகையான குற்றம் இருந்தாலும் போய்விடும். அழுக்குடம்பைக் கங்கை நீராற் கழுவுவது போல அழுக்குச் சிந்தையை இறைவனை ஏத்தி அவன் குணங்களை எடுத்துச் சொல்வதால் கழுவித் தூயதாக்கலாம். அப்போது ஊனம் ஆனவை இருந்த இடம் தெரியாமல் ஒழியும். சிந்தை தெளியும். தேனாக அமுதாக அவன் தித்திப்பான்.

இது எளிய வழி; உரிய வழி. இதுவே உய்யும் வகை.

தேனு மாய்அமு தாகிநின் றான்தெளி சிந்தையுள்;
வானு மாய்மதி சூடவல் லான்மங்க லக்குடிக்
கோனை நாள்தொறும் ஏத்திக் குணங்கொடு கூறுவார்
ஊனம் ஆனவை போய்அறும்; உய்யும் வகைஅதே.

[*மாசற்று இறைவனுடைய அன்பினாலே தெளிந்த அன்பர் களுடைய உள்ளத்தில் தேனாகவும் அமுதாகவும் இனிமை தந்து*

நின்றவன், எல்லாப் பூதங்களையும் தனக்குள் அடக்கிய வானத்தைப் போல யாவற்றையும் தனக்குள் அடக்கிக் கொண்டு சந்திரனைத் தலையிலே அணிந்துகொள்ள வல்லவன், திருமங்கலக் குடியில் எழுந்தருளியிருக்கும் இறைவன் ஆகிய சிவபெருமானை, நாள்தோறும் புகழ் பாடித் துதித்து அவனுடைய குணங்களை எடுத்துக் கூறும் அன்பர்களின் குறைகளானவை முற்றும் போய் ஒழியும்; உய்வதற்கு உரிய வழியும் அதுதான்.

புலன்களில் உள்ள சுவையை மாற்றுவதனால் தேனுமாய் என்றார். இறப்பினின்றும் காப்பாற்றுதலால் அமுதாகி என்றார். சிந்தை சலித்தாலும் தான் சலிப்பின்றி எழுந்தருளியிருப்பவனாதலின் நின்றான் என்றார். சிந்தை உலகியலிற் பட்டு மயலுழந்து கலங்கி நிற்கும் இயல்பு மாறுவதையே இங்கே தெளிதலாகச் சொன்னார். அடுத்தடுத்து நினைப்பதாதலினால் சிந்தையென்றார். சிந்தையுள் நுண் பொருளாக இருப்பதோடு விரிந்த பொருளாகவும் நிற்கிறான். இந்த இரண்டையும் ஒருங்கே நினைத்துப் பார்த்தால் அவன் பெருமை தெரியும் என்ற கருத்தால், வானாய் என்னாமல் வானுமாய் என்று இறந்தது தழீஇய எச்சவும்மை கொடுத்துப் பாடினார். பிறர் யாரும் மதி சூடும் வன்மை பெற்றிலர், அதற்கென்று தனி வன்மை வேண்டும் என்பார், மதிசூட வல்லான் என்றார். மங்கலக்குடி, சோழ நாட்டுத் திருத் தலங்களுள் ஒன்று. யாவற்றையும் தன் அருளாட்சிக்கு உட்படுத்தியவனாதலின் கோன் என்றார்.

நின்றானும், சூடவல்லானுமாகிய கோனை. கோனை ஏத்தி என்று முடியும்.

அன்பில்லாதவர் பிறர்பொருட்டு ஏத்தலின் அருமையாகச் செய்வர்; அன்புடையார் தம்பொருட்டே ஏத்தலினால் நாள்தோறும் ஏத்துவர். நல்லோர் குணங்களை உரைப்பதனால் மனம் உயர்ச்சி பெறுகிறது. எல்லா நல்ல குணங்களுக்கும் உறைவிடமாகிய இறைவன் குணங்களைக் கொண்டு (எடுத்துக்) கூறுவாருக்கு ஊனம் போய் நன்மை உண்டாகும் என்றார். ஏத்துதல் பொது; குணங்கொடு கூறுதல் சிறப்பு. ஊனம் - குறை. போய் அறும் - விலகிச் சென்று ஒழியும். உய்யும் வகை - நன்மையை அடையும் முறை. அதே என்பது, நாள்தோறும் ஏத்திக் குணங் கூறும் முறையைச் சுட்டியது.]

இது திருமங்கலக்குடிப் பதிகத்தில் வரும் ஆறாவது பாட்டு.

★

விரிந்து குவிந்தவன்

அழகிய தாமரை மலர் பகற் போதில் விரிகிறது; இரவிலே குவிகிறது. அது விரிந்து விளங்கும்போது பார்ப்பதற்கு மிக அழகாக இருக்கிறது. குவிந்த தாமரையிலும் அழகு தோற்றினாலும் விரிந்த தாமரையிலே உள்ள அழகு அதற்கு இல்லை. தாமரை விரியும்போது அதன் இதழ்கள் மாத்திரமா விரிகின்றன? அதன் மணம் விரிகிறது. அதனூடே உள்ள தேன் விரிகிறது. அதற்கு முன் இல்லாத செம்மை விரிகிறது. இறுகச் செறிந்த அரும்பிலே மென்மை தெரிவ தில்லை; மலர்ந்த மலரில் அது நன்றாகத் தெரிகிறது.

விரிந்த தாமரையைப் பார்த்தால் அதன் அடுக்கடுக்கான இதழ்களும் நடுவே கொட்டையும் தெரியும். மேலே புறவிதழ் இருக்க, அதனையடுத்து அகவிதழ்கள் வரவரச் சிறியனவாக, அடுக்கடுக்காக இருக்கின்றன. பிரபஞ்சம் விரிந்திருக்கும் கோலம் இந்தத் தாமரையின் விரிவைப் போன்ற தென்றே சொல்லலாம். ஒன்றிலிருந்து ஒன்று விரிந்து விளங்கி நிற்பது பிரபஞ்சம். ஒரு தத்துவத்திலிருந்து மற்றொரு தத்துவம் தோன்ற, அதிலிருந்து மற்றொன்று தோன்ற, கடைசியில் அகில புவனங்களும் விரிந்து நிற்கின்றன. அவை தாமே விரிந்து நிற்கவில்லை. அவ்வாறு விரியும்படி இறைவன் செய்கிறான்.

இப்படியே பிரபஞ்சம் ஒடுங்கும்பொழுது ஒரு தத்துவத்துள் மற்றொன்று ஒடுங்கி வருகிறது. விரிந்த மலர் பொழுதானதும் கூம்புவது போல, சர்வ சங்கார காலத்தில் பிரபஞ்சம் முழுவதும் குவிகின்றது. அப்படிக் குவியும்படி இறைவன் செய்கிறான்.

பிரபஞ்சம் விரிவதற்கும் குவிவதற்கும் காரணனாக இருப்பவன் இறைவன். அவன் பிரபஞ்சத்தோடு ஒன்றாகி அபேதமாகவும் இருப்பவனாகையால் பிரபஞ்சத்தின் விரிவை

அவனுடைய விரிவாகவே சொல்லிவிடலாம். அவனுடைய திருமேனி என்று தனியே ஒன்று இல்லை. பிரபஞ்சமே அவன் திருமேனி. புவனத்தில் உள்ள அழகெல்லாம் அவனுடைய பேரழகுதான். புவன சுந்தரனாகிய அவனுடைய பெருமையை யும் விரிவையும் ஆற்றலையும் பிரபஞ்சத்தைக் கொண்டே உணர்ந்து கொள்ளலாம்.

தத்துவத்தின் மூல விதையாக இருக்கும் இறைவன் தானே தத்துவங்களாகவும், பிரபஞ்சமாகவும் விரிந்து விளங்குகிறான். ஒடுங்கும் காலத்தில் அவற்றையெல்லாம் ஒடுக்கிக் கொண்டு குவிந்து நுண் பொருளாக நிற்கிறான். உலகம் தோற்றிய பொழுது அவன் விரிந்து விளங்குகிறான். குழந்தைகளுக்கு நீராட்டி ஆடையணிந்து உணவூட்டி விளையாடவிடும் தாய் அந்தச் செயல்களுக்கு ஏற்ற பண்டங்களைக் கொண்டு சுறுசுறுப்பாக வேலை செய்கிறாள். இறைவனும் பிரபஞ்சக் கடையை விரித்து வைக்கும்பொழுது யாருக்கும் இல்லாத சுறுசுறுப்போடு இருக்கிறான். அவன் அருள் என்றும் இல்லாத விரிவை அடைகிறது. பிரபஞ்சத்தை ஒடுக்கும் பொழுது அவன் தன் விரிவைச் சுருக்கிக்கொண்டு குவிகிறான். இவற்றை நினைந்த ஆளுடைய பிள்ளையார்,

விரிந்தனை குவிந்தனை

என்று பாடத் தொடங்குகிறார். திருப்புறம்பயம் என்னும் தலத்திற்குச் சென்று அங்கே எழுந்தருளியிருக்கும் சாட்சிநாதரையும் கரும்பன்ன சொல்லியம்மையையும் தரிசித்துக் கொண்டு, திருநெறித் தமிழாகிய பதிகம் பாடலானார்.

★

பிரபஞ்சமாக விரிந்தும் அவற்றை ஒடுக்கிக் கொள்ளும்போது குவிந்தும் விளங்கும் இறைவன் உயிர்களை என்ன செய்கிறான்? சர்வ சங்கார காலத்தில் எல்லா உயிர்களையும் தன் தாளிணையின்கீழ் ஒடுக்கி மறைத்துக் கொள்கிறான். இதையே திரோபவம் என்று சொல்வார்கள். மறைப்பான் என்றும், தாளின்கீழ் அடக்குவான் என்றும் சொல்வது போலவே இறைவன் தன் திரு வயிற்றுக்குள் வைத்துக் கொள்வான் என்றும் சொல்வதுண்டு. திருமாலின்

அடியார்கள், பிரளய காலத்தில் இறைவன் ஆருயிர்களை யெல்லாம் தன் திரு வயிற்றுக்குள் அடக்கிக் கொண்டு மீட்டும் படைப்புக் காலத்தில் அவற்றைப் புறப்பட விடுவான் என்று சொல்வார்கள். உயிர்கள் அனைத்தையும் உண்டும் மீண்டு உமிழ்ந்தும் அருள் புரிபவன் இறைவன் என்று கவிஞர்கள் பாராட்டுகிறார்கள்.

பிரபஞ்சமாகி விரிந்தும், அப்பால் குவிந்தும் நிற்கிற இறைவன் குவிந்த காலத்தில் உயிர்களை விழுங்குகிறானாம்; பின்பு உமிழ்கிறானாம். திரோபவத்தால் மறைத்து மீட்டும் படைக்கும்போது உயிர்களை உலகில் உலவவிடுவதையே அப்படிச் சொல்கிறார் ஞானசம்பந்தர்.

விழுங்குயிர் உமிழ்ந்தனை.

★

உலகம் தொழிற்படும் பொழுது இறைவனுக்கு வேலை அதிகம். அவன் தன் அருளாணையால் உலகை இயங்கப் பண்ணினாலும் அடியார்கள் இருக்குமிடத்துக்கெல்லாம் சென்று அநுக்கிரகம் செய்யும் கடமையைத் தானே மேற் கொண்டிருக் கிறான். எங்கே அன்பர்கள் இருக்கிறார்களோ அங்கே சென்று அருள் செய்யும் பொருட்டு அவ்ன் எப்போதும் திரிந்து கொண்டேயிருக்கிறான்.*

இவ்வளவும் இறைவனுடைய கருணைத் திறத்தை விளக்குகின்றன.

விரிந்தனை குவிந்தனை; விழுங்குயிர் உமிழ்ந்தனை;
தி.ரிந்தனை.

[*பிரபஞ்சமாக விரிந்தாய்; சர்வ சங்கார காலத்தில் அவற்றையெல்லாம் ஒடுக்கிக் கொண்டு குவிந்தாய்; (அப்போது எல்லா உயிர்களையும் நீ திரோபவத்தால் விழுங்கிவிட, அப்பால் படைப்புக் காலத்தில்) முன்பு விழுங்கிய உயிர்களை மீட்டும் புறப்படவிட்டாய்; எப்போதும் இயங்கிக் கொண்டே இருந்தாய்.*]

★

---

* *"ஆரேனும் அன்புசெயின் அங்கே தலைப்படுவன், ஆரேனுங்காணா அரன்."*

உயிர்களை விழுங்கி உமிழ்வதும் அடியார்களைக் காப்பதற்காக இயங்குவதுமாகிய செயல்களைத் திருமாலின் அடியார்களும் சொல்வார்கள். இராமன் முதலிய அவதாரங் களை எடுத்துத் தன்னைப் புகலடையும் அன்பர்களைக் காக்கும் பொருட்டு, 'கானும் கடலும் கடந்து' திரியும் அருளாளன் இறைவன் என்று பாடுவர் புலவர்.

உயிரை விழுங்கி உமிழ்ந்து திரியும் செயல்கள் திருமாலுக்கு மாத்திரமா உரியன? சிவபிரானும் அவற்றைச் செய்கிறார். அவ்விருவரும் வெவ்வேறு அரசு செலுத்தித் தம்முடைய ஆட்சியில் அடங்கிய பகுதிகளில் இப்படிச் செய்கிறார்கள் என்று சொல்லலாமா? இருவரும் ஒரே பிரபஞ்சத்தில்தான் இந்தக் கருணைத் திருவிளையாட்டை நிகழ்த்துகிறார்கள். உண்மையில் இருவரும் ஒருவர்தாம். ஒருவனே இரு வேறு உருவமாகத் தோற்றமளிக்கிறான். ஒரு சாரார் அவனை வலப் பக்கத்திலிருந்து பார்க்கிறார்கள்; சிவபெருமானாகக் காண்கின்றனர். மற்றொரு சாரார் இடப் பக்கத்திலிருந்து பார்க்கிறார்கள்; திருமாலாகக் காண்கிறார்கள். இருவரும் ஒருவரே என்பதை ஆழ்வார்கள் பாடியிருக்கிறார்கள். இருவரும் ஒருவர் என்ற உண்மையைச் சிவபெருமானுடைய இருபத்தைந்து மூர்த்தங்களில் ஒன்றாகிய சங்கர நாராயணத் திருக்கோலம் காட்டும். அந்தக் கோலத்தில் திருமாலோடு ஒன்றியிருக்கிறான் இறைவன். அப்படியின்றித் தான் வேறாக, திருமால் வேறாகப் பிரிந்து நிற்பதும் உண்டு. இதை ஞானசம்பந்தர் சொல்கிறார்.

குருந்தொசி பெருந்தகையும் நீயும்
பிரிந்தனை, புணர்ந்தனை.

(குருந்த மரத்தை ஒடித்த பெருமானாகிய திருமாலும் நீயும் வேறு வேறு உருவமுடையவர்களாக இருக்கும்படி பிரிந்து நின்றாய்; ஒரே திருவுருவத்தில் இருக்கும்படி ஒன்றாகச் சேர்ந்தும் நின்றாய்.)

குருந்த மரத்தை ஒசித்தது கண்ணனாக வந்தபோது. அவதார காலத்துச் செயலைச் சொன்னாலும் அது திருமாலின் திருவிளையாட்டாகையால், குருந்தொசி பெருந்தகை என்னும் தொடர் மூலமூர்த்தியாகிய திருமாலையே சுட்டியது.

★

இவ்வளவு சிறப்பாக இருக்கும் இறைவன் தனக்குரிய இடங்களாகச் சிலவற்றை விரும்பி ஏற்றுக் கொண்டிருக்கிறான். அவன் எங்கும் நிறைந்தவனாக இருந்தாலும் அவனுடைய நினைப்பை யாவருக்கும் ஊட்டும் இடங்கள் அவை. நம்முடைய வீட்டில் பல அறைகள் இருக்கின்றன. எங்கும் இறைவன் இருக்கிறான். ஆயினும் பூசை அறை என்று ஒன்று இருந்தால், அங்கே இறைவன் இருப்பதாகச் சொல்கிறோம். ஏன்? அங்கேயன்றி மற்ற இடங்களில் அவன் இல்லையா?

அப்படியே கோயிலில் இறைவன் இருப்பதாகச் சொல்லி வழிபடுகிறோம். மற்ற இடங்களில் இல்லையா? மனிதர்களைப் போலத் தமக்கென்று வீடும் விலாசமும் வகுத்துக்கொண்டு இருப்பவனா அவன்? இல்லை, இல்லை. நாம் ஓரிடத்தில் இருப்பதற்காக நமக்கென்று வீட்டை வகுத்துக்கொள்கிறோம்; நாமே வகுத்துக்கொள்கிறோம். இறைவன் தனக்கு வேண்டு மென்று பூசை அறையையும் கோயிலையும் தானே வகுத்துக் கொள்ளவில்லை. பக்தர்களே அவற்றை வகுத்திருக்கிறார்கள். அந்த இடங்களில் இறைவன் இருப்பதாக நாம் சொல்கிறோம்; வழிபடுகிறோம். மற்ற இடங்களில் சாமான்ய மக்கள் இறைவனை வழிபடுவது இல்லை. காரணம் என்ன?

மற்ற இடங்களில் இறைவனுடைய நினைவு நமக்கு வருவதில்லை. அதற்கு ஏற்ற சூழ்நிலை அங்கே இல்லை. ஆனால் பூசை அறையிலும் கோயிலிலும் அந்தச் சூழ்நிலை இருக்கிறது. அதனால் கடவுள் நினைவு நமக்கு உண்டாகிறது. அந்த நினைவு நம்மிடத்தில் எழும்போது அங்கே கடவுள் இருக்கிறார் என்று சொல்கிறோம். நிலத்துக்கடியில் எங்கும் தண்ணீர் இருந்தாலும், கிணற்றில் தண்ணீர் இருக்கிறது என்று சொல்கிறோம். ஓரிடத்தில் முயன்று வெட்டித் தண்ணீரைக் காண்பதனால் அவ்வாறு சொல்கிறோம். கோயிலில் இறைவனுடைய நினைவும் தியானமும் அவற்றால் அன்புப் பெருக்கமும் அமைவதனால் இறைவன் அங்கே இருப்பதாகச் சொல்கிறோம்.

எனவே, கடவுள் நினைவைத் தோற்றுவிக்கும் இடங்களெல்லாம் அவன் விரும்பி உறையும் கோயில்கள்

என்று சொல்லிவிடலாம். கோயிலுக்குப் போகாத மனிதர்களும் கடவுளை நினைக்கும் இடம் ஒன்று உண்டு. எடுத்தவுடனே நேரடியாகக் கடவுளை நினைப்பது அன்பர்களின் இயல்பு. தமக்கு ஒரு துன்பம் வந்தால் நினைப்பது எல்லா மக்களுக்கும் இயல்பு. துன்பமோ, பயமோ உண்டானால் உடனே கடவுள் நினைவு வரும். உலகம் நிலையாது என்பதையும், நம்முடைய வாழ்க்கை நிலையாது என்பதையும் உணரும்போது என்றும் நிலையான பரம்பொருளை எண்ணும் நிலைவரும். யாரேனும் இறந்து போனால் மனிதர்களுக்குத் தாமும் இறக்கக் கூடியவர்களே என்ற நினைவு வருகிறது. இறந்தவர்களின் பிணத்தோடு மயானம் செல்கிறார்கள். மயானத்தில் புகுகின்ற எவருக்கும் வாழ்க்கை நிலையாமை நினைவுக்கு வருகிறது. ''இனி இறைவனை வழிபட்டு நல்லகதி பெறவேண்டும்?'' என்ற வேட்கையும் எழுகிறது. இதைத்தான் 'ஸ்மசான வைராக்கியம்' என்று சொல்வார்கள். கோயில்களைக் காட்டிலும் மயானமே மக்களுக்கு மரண பயத்தையும், அந்தப் பயத்தைப் போக்கும் இறைவன் ஒருவன் உள்ளான் என்ற நினைவையும் அழுத்தமாக உண்டாக்குகிறது. மக்களுக்குக் கடவுள் நினைவு எழும் இடம் எதுவோ அதுவே அவன் கோயில் என்றால், அந்த நினைவு தெளிவாக உண்டாகும் இடமாகிய மயானமும் அவன் திருக்கோயில் என்று சொல்வதில் என்ன பிழை? அதனால்தான் இறைவன் மயானத்தில் எழுந்தருளியிருக்கிறான் என்று சொல்வர் பெரியோர். மற்ற எல்லா இடங்களையும்விட அந்த இடத்தில் இறைவனுடைய உண்மை நன்றாகப் புலப்படுகிறது. ஆகவே பிணம் புகும் மயானத்தில் அவன் விரும்பி எழுந்தருளி மகிழ்கிறானாம்.

மற்றவர்களுக்கெல்லாம் மயானம் தங்குவதற்குரிய இடம் அன்று. மாடமாளிகைகளையெல்லாம் பிறருக்கு அளித்துவிட்டு மயானத்தில் நான் இருப்பேன் என்று சொல்லும் பெருமானது கருணையை நினைத்துப் பார்க்கவேண்டும். யாவருக்கும் உணவு அருத்திவிட்டுப் பாத்திரத்தின் அடியிலே கருகிக் கிடக்கும் மிச்சத்தை உண்ணும் தாய்போல, இறைவன் மற்ற வர்கள் வாழ விரும்பாமல் ஒதுக்கிய இடத்தில் விரும்பி

வாழ்கிறான். நிலையாமையை மக்களுக்கு நினைப்பூட்டும் தகுதி அவ்விடத்துக்கு இருப்பதனால்தான் அவ்வாறு எழுந்தருளி யிருக்கிறான்.

பிணம்புகு மயானம்
புரிந்தனை மகிழ்ந்தனை, புறம்பயம் அமர்ந்தோய்!

(பிணங்கள் புகுகின்ற மயானத்தை விரும்பி எழுந்தருளி அதனை நின் இருக்கையாக ஏற்று மகிழ்ந்தாய், புறம்பயத்தில் அமர்ந்தருளிய பெருமானே!

புரிந்தனை - விரும்பி; முற்றெச்சம். மகிழ்ந்தனை இருக்கையாக ஏற்றுக்கொண்டு மகிழ்ச்சி பெற்றாய்.)

★

'இறைவன் பிரபஞ்சமாகி விரிந்து நிற்கிறான்; அவை ஒடுங்கும்போது குவிந்து நிற்கிறான். எல்லாம் ஒடுங்குங் காலத்தில் தனக்குள்ளே அடக்கி உயிர்களையெல்லாம் பிறகு படைக்கும் காலத்தில் வெளிவிடுகிறான். அடியார்களுக்கு அருள் செய்யும் பொருட்டுக் கணமேனும் சும்மா இராமல் திரிந்தபடியே இருக்கிறான். திருமாலும் தானும் வெவ்வேறாகப் பிரிந்தும், ஒரே உருவத்தில் ஒன்றியும் இருப்பது உண்டு. பிணங்கள் புகும் மயானத்தைத் தன் இருக்கையாகக்கொண்டு எழுந்தருளி யிருக்கிறான்' என்பவற்றை நினைந்து புறம்பயம் அமர்ந்த இறைவனை முன்னிலைப் படுத்திச் சொல்கிறார் சம்பந்தர்.

விரிந்தனை, குவிந்தனை; விழுங்குயிர் உமிழ்ந்தனை;
திரிந்தனை; குருந்தொசி பெருந்தகையும் நீயும்
பிரிந்தனை, புணர்ந்தனை; பிணம்புகு மயானம்
புரிந்தனை, மகிழ்ந்தனை; புறம்பயம் அமர்ந்தோய்!

★

யார் அறிவார்?

''மனத்தினால் மனிதனாகிறான்'' என்று வடமொழியில் ஒரு செய்யுள் உண்டு. வாசனை ஏறி ஏறிப் படலம் படலமாக அடுக்கி நிற்க, அமைந்த மனந்தான் மனிதனுடைய இன்ப ீ ன்பங்களுக்குக் காரணமாகிறது. மனத்தின் வசப்பட்டு வாழ் வாருக்கு நிலையான முயற்சியும் நிலையான வாழ்க்கையும் இருப்பதில்லை. மனம் போன போக்கின்படியே போகிறவர்கள் மேலும் மேலும் பிறவிப் பிணிக்கு ஆளாவார்கள்.

ஆனால் அந்த மனத்தைக் கொண்டே நன்னெறியிலே சென்று நற்பயன் கொள்ளலாம். மனத்தின் வசப்பட்டு நாம் இயங்காமல் நம் வசப்பட்டு மனம் இயங்கினால் நன்மை உண்டாகும். அதற்கு நெடுங்காலப் பழக்கம் வேண்டும். அடியார்களின் கூட்டத்திலே பழகுவதனால் மனத்தின் இயக்கம் நம் வசப்பட்டு வரும். மனத்தை அடக்கிப் பின்பு அதனை அழித்தால் இன்பம் உண்டாகும். மனம் அழிவதற்கு அந்த மனத்தையே துணையாகக் கொள்ளவேண்டும்.

ஞானசம்பந்தப் பெருமான் மனத்தைப் பார்த்துப் பேசுகிறார்; நாம் பேச வேண்டியதை அவர் பேசிக் காட்டு கிறார். சொன்னபடி கேளாத குழந்தையைத் தட்டிக் கொடுத்து வேலை வாங்குவது போல நெஞ்சத்தைத் தட்டிக் கொடுக்கிறார்.

''நீ நல்ல நெஞ்சம் அல்லவா? உன்னாலேதானே எனக்கு இன்பம் உண்டாக வேண்டும்? எங்கும் பரந்து அளவு கடந்து நிற்கும் பரம்பொருளை உனக்குள்ளே அடக்கிக்கொள்ளும் ஆற்றல் உனக்கு இருக்கிறதே! நீ நினைத்தால் நல்ல கதியை அடைவிக்கும் சக்தி உன்பால் உண்டு. நீ நல்ல துணையாக இருந்தால் நான் உய்ந்துவிடுவேனே! நல்ல நெஞ்சமே.''

நெஞ்சு : நான் இப்போது என்ன செய்யவேண்டும்? சொன்னபடி செய்ய நான் காத்திருக்கிறேனே!

ஞானசம்பந்தர் : நீ தினந்தோறும் நினைப்பாயாக.

நெஞ்சு : என்னுடைய தொழிலே நினைப்பதுதானே? அது புதியதாக இப்போது செய்ய வேண்டியது அல்லவே?

ஞான : நினைப்பே உருவாக இருக்கிறாயென்பதை நான் அறியமாட்டேனா? கண்ட கண்ட பொருளையெல்லாம் நினைப் பதை நான் சொல்ல வரவில்லை. நான் சொல்வதை நினைக்க வேண்டும்.

நெஞ்சு : எல்லாப் பொருளையும் நினைத்துக் கொண்டுதானே இருக்கிறேன்? புதியதாக நினைக்க எந்தப் பொருள் இருக்கிறது?

ஞான : புதிய பொருள் அன்று; பழைய பொருள்தான். நீ எப்போதாவது அந்தப் பொருளை நினைக்கிறாய். அது போதாது. நாள்தோறும் நினைக்க வேண்டும். சாய்க்காட்டில் எழுந்தருளி யிருக்கும் சிவபெருமானை நினைக்க வேண்டும்.

நெஞ்சு : எதற்காக?

ஞான : நீ எப்போதாவது துன்பம் வந்தால், நம் கவலையைப் போக்குவார் யாரென்று சிந்தித்துத் தேடுகிறாயே. எல்லாத் துன்பங்களிலும் பெரிய துன்பம் மரணம். அதனைப் போக்கி, மீட்டும் பிறவாமல் காத்து ஆட்கொள்ளும் பெருமான் அவன். ஆகையால் அவனை நினைக்க வேண்டும். நாள்தோறும் நினைக்க வேண்டும்.

நெஞ்சு : மரணம் வரும்போதல்லவா அந்தத் துன்பத்தி னின்றும் மீள அவனை நினைக்கவேண்டும்? இப்பொழுதே அது பற்றிய கவலை எதற்கு?

ஞான : மரணம் வரும்போது நினைக்க வேண்டும் என்பதையாவது உறுதியாக நம்புகிறாயா?

நெஞ்சு : ஆம்; இறைவன் தனக்குவமை இல்லாதவன். அவன்தான் யாராலும் தீர்க்க இயலாத மரணக் கவலையைப் போக்குவான் என்று தெரிந்து கொண்டேன். ஆனால் அதற்காக இப்போதே அவனை நினைத்து அவனுக்கு வேலை கொடுப்பானேன்?

ஞான : மரணம் வரும்போது அவனை அழைக்கலாம் என்பது நல்ல நினைவுதான். எப்போது அழைத்தாலும் வந்து அருள் செய்யும் கருணைக் கடல் அவன். எனக்கு இப்போது செவ்வி இல்லை என்று சொல்லமாட்டான். 'வேறு ஒருவனுக்கு உதவி செய்ய வேண்டும்; ஆதலின் உன்னிடம் வர இயலாது' என்றும் சொல்லமாட்டான். ஒரே சமயத்தில் உலகில் உள்ள அனைவரும் அழைத்தாலும் உடனே அனைவருக்கும் அருள் செய்வான். அவன் சர்வாந்தர்யாமி; ஆதலின் ஒரே காலத்தில் பலருக்கு உதவும் ஆற்றல் உடையான்.

நெஞ்சு : ஆதலின் துன்பம் வரும்போது அவனை அழைத்தால் போதுமே!

ஞான : அது சரிதான். ஆனால் மரணம் இன்ன நேரத்தில் தான் வரும் என்பது திட்டமாகத் தெரியுமா? இவ்வளவு காலம் வாழ்வோம், இன்ன காலத்தில் நமக்கு மரணம் நேரும் என்று யாராவது தெரிந்து கொண்டிருக்கிறார்களா? மரணம் ஏற்படும் நேரம் இன்னதுதான் என்று தெரிந்துகொள்ளும் ஆற்றல் இருந்தால் அது வரும்போது நினைக்கலாம் என்று இருக்கலாம். அதுதான் யாருக்கும் தெரியாதே!

நெஞ்சு : ஆம், யாரும் அதை அறியமாட்டார்கள்.

ஞான : யமன் தான் வரும் நேரம் இன்னதென்று முன்னே அறிவிப்பதில்லை. மனிதராகப் பிறந்தாருக்கு இன்ன பிராயத்தில் மரணம் நேரும் என்ற வரையறையும் இல்லை. மனிதருக்கு வயசு நூறு என்று சொல்வது, எல்லோரும் அத்தனை காலம் வாழ்வார் என்று நினைந்து சொல்வது அல்ல. மனிதன் அதிக நாள் வாழ்ந்தால் நூறு ஆண்டுகள் வரையில் வாழலாம் என்ற கருத்தோடுதான் அந்தக் கணக்கு உண்டாகி யிருக்க வேண்டும். ஒவ்வொரு மனிதனும் தனித்தனியான ஆயுட் கணக்கை உடையவனாக இருக்கிறான். அறுபது ஆண்டிலே சிலர் இறக்கிறார்கள். அதைக் கொண்டு அவருடைய மக்கள் அறுபதாவது ஆண்டிலே இறந்து போவார்கள் என்று சொல்வதற்கில்லை. எண்பது ஆண்டு வாழ்ந்தவருடைய பிள்ளை எட்டு ஆண்டிலே இறப்பதும் உண்டு. முப்பது ஆண்டு வாழ்ந்தவருடைய மகன் எண்பது ஆண்டு வாழ்ந்ததும் உண்டு. எந்தச் சார்பைக் கொண்டும் சா நாளும் வாழ்நாளும் இன்னவை

என்று அறிதல் அரிது. அறிந்தார் இலர். இந்த உண்மையை நினைந்து பார்க்கும்போது, மரணக் கவலையை மாற்ற வேண்டுமானால் அப்போது பார்த்துக் கொள்ளலாம் என்று இருக்க முடியாது.

நெஞ்சு : அப்படியானால் என்ன செய்வது?

ஞான : அதைத்தான் சொல்ல வருகிறேன்; கேள். இறக்கும் காலம் இன்னதென்று யாருக்கும் தெரியாதென்பதை நீ அறிந்து கொண்டாய் அல்லவா? ஒரு கால் அதனை அறியும் ஆற்றல் யாருக்கேனும் இருந்தாலும் அவனும் மரணக் கவலையை மாற்ற முடியாது.

நெஞ்சு : ஏன்?

ஞான : இறைவனை மரண சமயத்தில் நினைக்க வேண்டுமானால் அதற்கு நெடுங்காலப் பயிற்சி வேண்டும். உழுங்காலத்திலெல்லாம் ஊர் சுற்றிவிட்டு அறுக்கும் காலத்தில் அரிவாள் எடுத்து வந்தால் அவனுக்கு என்ன கிடைக்கும்? பல காலமாக இறைவனைத் தியானித்துத் தியானித்துப் பழகினால்தான் எந்தச் சமயத்திலும் அவனை நினைக்க வரும்.

நெஞ்சு : தாங்கள் என்னதான் வழி சொல்கிறீர்கள்?

ஞான : சாநாளும் வாழ்நாளும் அறியாமல் இருக்கிறோம். மரணம் வருவது உறுதி. அது எந்தச் சமயத்திலும் வரக்கூடும். அதற்கு ஏற்ற பாதுகாப்பை எப்போதுமே உடையவர்களாக இருந்தால் அதைப் பற்றிய கவலையே வேண்டுவதில்லை. உணவைச் சேமித்து வைத்திருப்பவனுக்குப் பசி வருமே என்ற கவலை இல்லை. எப்போது பசித்தாலும் உண்டு பசியாறலாம். மரணக் கவலையை நீக்கும் இறைவனை எப்போதுமே நினைத்து வழிபட்டால், மரணம் எப்போது வந்தாலும் அதற்கு அஞ்சவேண்டியதில்லை. ஆதலின் நெஞ்சமே, நீ நாளும் சர்க்காட்டு எம் பெருமானை நினைகண்டாய்.

நீநாளும் நன்னெஞ்சே,
நினைகண்டாய்; யார் அறிவார்
சாநாளும் வாழ்நாளும்?

நெஞ்சு : நினைத்தால் போதுமா?

ஞான : நினைப்பு எழுந்தால் அது செயலாக விளையும். எந்தக் காரியம் செய்தாலும் மனத்தோடு செய்தால் அதற்குப் பலன் அதிகம். மனத்தில் ஆர்வத்தோடு செய்யும் அறமே அறம்.

''மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்;
ஆகுல நீர பிற''

என்பதை நீ கேட்டதில்லையா? உன்னிடத்திலே நினைப்பு எழுந்தால் இறைவனுடைய திருமுன் உடம்பும் வாக்கும் தொழிற்படும். நீ போகிற வழியே அவை தொடர்ந்து வரும். இறைவனுடைய நினைவு உனக்கு வந்து விட்டால் அந்த நினைவு பலபல உருவத்தைக் கொள்ளும். இறைவனை மலரெடுத்துப் பூசிக்க வேண்டும் என்று நினைப்பாய். கையாலே சில மலரைப் பறித்துப் பூசிக்கும் அளவிலே உன் விருப்பம் நில்லாது; சுமையாக மலரைச் சுமந்து சென்று பூசிக்கவேண்டும் என்று தோன்றும். உலக வாழ்விலே பொருளானாலும் போகமானாலும் அளவின்றி விரும்புவது உன் இயல்பாயிற்றே! இறைவனிடம் மெய்யான அன்பு தலைப்பட்டால் அவன் திறத்துச் செய்யும் செயல்களுக்கு அளவு ஏது? ஆதலின் மலரைத் தினந்தோறும் சுமை சுமையாகத் தலையாலே சுமந்து சென்று பூசிக்க ஆசை தோன்றும். அப்படியே செய்யவும் கூடும். இறைவன் உருவமும் நாமமும் இல்லாதவன் ஆனாலும் ஆருயிர்களின் அன்பு படர்வதற்குப் பற்றுக்கோடு வேண்டுமென்று உருவங்களையும் நாமங்களை யும் ஏற்றுக்கொண்டிருக்கிறான். அவனுடைய திவ்ய மங்கள மூர்த்தங்களைப் பூசித்து வழிபடுவது அன்பர்களுக்கு இனிக் கின்ற செயல். ஆதலின் மனத்திலே அன்பு முறுக முறுக இறைவனுடைய மங்கலத் திருவடிவங்களைப் பூசித்து வழிபடும் செயல் மிகுதியாகும்.

நெஞ்சு : பூ நாளும் தலைசுமக்கும்படி நினைக்கிறேன். பிறகு?

ஞான : இறைவனுடைய கருணைத் திருவிளையாடல்கள் பல. அவனுடைய குணநலங்கள் பல. அவனைப் புகழும் அன்பர்கள் இவற்றையெல்லாம் எடுத்துச் சொல்லிப் பாராட்டுவார்கள். அவனுடைய திருநாமங்களை வாயாரச் சொல்லுவார்கள். அவற்றையெல்லாம் கேட்கும்போது காதுக்கு இனிக்கும். கன் காதலனுடைய செயல்களையும் நாமத்தையும்

கேட்கும்போது காதலிக்கு இனிப்பதுபோல அவை இனிக்கும். எங்கே யார் இறைவன் புகழைப் பேசுகிறார்கள், இறைவன் நாம பஜனை செய்கிறார்கள் என்று தேடிப் போய்க் கேட்கும் படியான ஆர்வம் உண்டாகும். அன்பு இப்படியெல்லாம் விளையும். இறைவனுடைய புகழையும் நாமத்தையும் செவி கேட்பதோடு நின்றுவிட முடியுமா? நாமும் நவிலவேண்டும் என்ற ஆவல் எழும். இடைவிடாது நவின்று ஏத்த வேண்டும் என்ற ஆர்வம் மீதூரும். தலை பூவைச் சுமக்க, காது புகழையும் நாமத்தையும் கேட்க, நா நாள்தோறும் அந்தப் புகழையும் நாமத்தையும் நவின்று ஏத்த, இவ்வாறு உரமேறி வரும் அன்பினாலே நல்ல வினையைப் பெறலாம்; புண்ணியம் உண்டாகும். இந்தப் புண்ணியம் சொர்க்க போகத்தைத் தருவதோடு நிற்பது அன்று. சிவபோகத்தைத் தரும் புண்ணியம் இது. எல்லாவற்றிற்கும் மூலம், நல்ல நெஞ்சமாகிய நீ இறைவனை அன்போடு நினைப்பதுதான். மனம், வாக்கு, காயம் என்னும் மூன்று கரணங்களில் தலைமைபெறும் கரணம் நீதானே? நீ இயங்கும் வழியிலே மற்ற இரண்டும் இயங்கும். தலையும் செவியும் இயங்க மற்ற உறுப்புக்களும் அன்புச் செயலைச் செய்யும். நாவும் இறைவன்பால் இயங்கும். இப்படி மூன்று கரணங்களும் அன்பு மயமாக இயங்கினால் நிச்சயமாக நல்ல புண்ணியத்தைப் பெறலாம்.

நீநாளும் நன்னெஞ்சே,
    நினைகண்டாய்; யார் அறிவார்
சாநாளும் வாழ்நாளும்?
    சாய்க்காட்டுஎம் பெருமாற்கே
பூநாளும் தலைசுமப்பப்
    புகழ்நாமம் செவிகேட்ப
நாநாளும் நவின்றேத்தப்
    பெறலாமே நல்வினையே.

(நாளும் - ஒவ்வொரு நாளும்; எப்போதும். சாநாள் - சாம்நாள்; சாகும் நாள். சாய்க்காடு - சோழநாட்டில் காவிரிப்பூம் பட்டினத்துக்கு அருகில் உள்ள தலம்; சாயா வனம் என்றும் வழங்கும். நவின்று - நாமத்தை அடுத்தடுத்துக் கூறி. ஏத்த - துதி செய்ய. நல்வினை - புண்ணியம்; இங்கே சிவபுண்ணியம்.)

★

முக்குள நீர்

மனத்தை வசப்படுத்தி அமைதி காண்பதுவே எல்லாச் சமயத்திலும் காணும் அடிப்படையான நெறி. அதனை வசப்படுத்தும் முறைகளில் வேறுபாடு இருக்கலாம். ஆனால் அந்த முறைகளினால் அடையும் பயன் ஒன்றுதான்.

மனம் தனியே இயங்காது. அது ஐந்து பொறிகளின் வாயிலாக இயங்குகிறது; நுகர்ச்சியை அடைகிறது; அந்த நுகர்ச்சிகளின் வாசனையே தன் உருவமாக இருக்கிறது. மனத்தில் தோன்றும் எண்ணங்கள் ஐம்பொறிகளின் சார்புடையவை. கண் என்னும் பொறியினால் உருவத்தைக் காண்கிறோம். அந்தக் காட்சி மனத்தில் நினைவாகப் பதியும். காதினால் ஒரு பெயரைக் கேட்கிறோம். அந்தப் பெயரும் மனத்தில் பதியும். இப்படியே ஐந்து பொறிகளின் அநுபவங் களும் மனத்தில் பதிந்து வாசனைய்யாக நிற்கின்றன. நல்ல வகையிலே அநுபவங்கள் இருந்தால் மனத்திலே நல்ல வாசனை அமையும். அல்லாத வகையிலே இருந்தால் பொல்லாத வாசனை அமையும். மனம் நல்ல வாசனை அமைந்ததாக இருந்தால் நல்ல எண்ணங்களும் உயிருக்கு இன்பத்தைத் தரும் அமைதியும் அதனிடம் உண்டாகும். நல்ல வாசனை அன்மவதற்கு ஐம்பொறிகளும் நல்ல நுகர்ச்சியை அடைய்ய வேண்டும்.

ஐம்பொறிகளையும் நல்லோர்களுடைய தொடர்பினால் நல்ல செயல்களில் ஈடுபடுத்தலாம். நல்ல செயல்கள் பலவகை, இடத்தாலும் காலத்தாலும் அவை மாறுபடுகின்றன. அவற்றைச் தேர்ந்து செய்வது எளிதன்று. நல்ல செயல்களைச் செய்வது நல்லதுதான். ஆனால் அல்லாத செயல்களைச் செய்யாமல் இருப்பதுதான் மிக மிக முக்கியம். அதனால் ஐந்து பொறிகளும் பொல்லாத செய்கைகளில் ஈடுபடாமல் இருப்பதற்கு, அவற்றை

இறைவனுடைய நினைவு வருவதற்குரிய செயல்களில் ஈடுபடுத்தும் தந்திரத்தை ஆன்றோர்கள் அறிவுறுத்தினர். ஒரு பண்டத்தைக் கையில் எடுத்த குழந்தையிடம், ''அதைத் தொடாதே; போட்டுவிடு'' என்றால் போடாது. அதற்கு வேறு ஒரு பண்டத்தைக் காட்டி, ''இந்தா, இதை வாங்கிக் கொள்'' என்றால் அது நாம் சொல்லாமலே தன் கையில் உள்ளதைக் கீழே போட்டுவிட்டு நாம் கொடுத்ததை வாங்கிக்கொள்ளும். இப்படியே தீய செயல்களில் ஈடுபடும் ஐம்பொறிகளுக்கும் இறைவனது தொடர்புடைய வேலைகளைக் கொடுத்தால் அவை அவற்றில் ஈடுபட ஈடுபட மற்றவற்றின் தொடர்பு குறையும்; மனமும் கெட்ட வாசனை குறைந்து பின்பு அறவே நீங்கி இறைவனது நினைவிலே நிற்கும்.

இதற்காகத்தான் ஆன்றோர்கள் இறைவனுடைய திருவருளையே துணையாகக் கொண்டு, இறைவன் தன் கருணையாற் காட்டிய உருவங்களைக் கண்டு, மற்றவர்களுக்கும் அவற்றை வெளிப்படுத்தினார்கள். அந்த உருவங்களுக்குப் பூசை முதலியன இயற்றும் முறைகளை விரிவாக அமைத்துத் தந்தார்கள். பல தலங்களில் பல மூர்த்திகளைத் தாபித்தார்கள்; பல தீர்த்தங்களை அமைத்தார்கள். பல காலம் உலகில் வாழப் பிறந்த மக்கள் தம் வாழ்நாளில் மூர்த்தி தலம் தீர்த்தங்களைத் தரிசித்துப் பயன் கொள்ளத் தொடங்கினால் அந்த வகையில் நெடுங்காலம் செல்லும். ஐம்பொறிகளுக்கும் உரிய அநுபவங்களில் பெரும்பாலானவை இறைவனுடைய தொடர்புடையனவாகவே இருக்கும்.

கண்ணாலே அழகிய காட்சிகளைக் காணவேண்டும் என்ற அவா இருப்பது மனித இயல்பு. திருக்கோயில்களில் கண்ணுக்கினிய சிற்பக் காட்சிகளையும் மலர் நிறைந்த நந்தவனங்களையும் விக்கிரகங்களையும் திருவுலாக்காட்சிகளையும் பரத நாட்டியங்களையும் கண்டு களிக்கலாம். இனிய இசைப் பாடல்களைக் கேட்டுக் களிக்கலாம். அறுசுவை உண்டிகளையும் இறைவனுக்கு நிவேதனம் செய்து நுகரலாம். இனிய நீரில் ஆடித் தண்ணிய தென்றல் வீச இன்புறலாம். நறுமலர், தூபம் ஆகியவற்றின் மணத்தைத் துய்க்கலாம். இப்படி ஐம்பொறிகளின் நுகர்ச்சிகளும் இறைவனோடு தொடர்புடையனவாகவே

இருப்பதால் மனமும் இறைவனோடு சார்ந்த எண்ணங்களையே பெரும்பாலும் எண்ணும். அதனால் தீய எண்ணங்களுக்கு இடமில்லாமல் ஒழியும். இத்தகைய நல்ல பயனைக் கருதியே தமிழ் நாட்டில் மூர்த்தி தலம் தீர்த்தங்கள் அமைந்தன.

''மூர்த்திதலம் தீர்த்தம் முறையாய்த் தொடங்கினர்க்கு
வார்த்தைசொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே''

என்று தாயுமானவர் பாடினார்.

★

திருவெண்காடு பழைய தலங்களில் ஒன்று; சோழ நாட்டில் காவிரிப்பூம் பட்டினத்தை அடுத்து விளங்குவது. வால்மீகி ராமாயணத்தில் அந்தத் தலச் செய்தி வருகின்றது. அங்கே சோம தீர்த்தம், சூரிய தீர்த்தம், அக்கினி தீர்த்தம் என்ற மூன்று தீர்த்தங்கள் இருக்கின்றன. அவற்றை முக்குளம் என்று சொல்வார்கள். அந்தத் தீர்த்தங்கள் மிக்க புனிதமானவை. அவற்றில் மூழ்கினவர் தாம் வேண்டும் பொருள்களைப் பெறுவர் என்ற நம்பிக்கை அன்பர்கள் மனத்தில் நெடுங்கால மாக இருந்து வருகிறது.

திருஞான சம்பந்தப் பெருமான் திருவெண்காட்டுக்கு எழுந்தருளினார். தமிழ் நாட்டிலுள்ள பல ஊர்களிலிருந்தும் அடியார்கள் அங்கே வந்து இறைவனை வழிபட்டார்கள். அவர்களுடைய பக்தியையும் நம்பிக்கையையும் கண்டு இறைவன் கருணையை வியந்து மகிழ்ந்தார் சம்பந்தர். அடியார் களை அணுகி விசாரித்தார். ஒருவர், ''என்னுடைய மனைவியை நெடு நாட்களாகப் பேய் பிடித்திருக்கிறது. ஒரு பெரியவர் வெண்காட்டு முக்குளத்தில் ஒரு மண்டலம் நீராடிச் சுவேதாரணியேசுவரரையும் பிரம்மவித்தியா நாயகியையும் வழிபட்டால் இந்தத் துன்பம் தீரும் என்று சொன்னார். அவர் கூறியதை நம்பி இங்கே வந்து நீராடி வழிபட்டோம். இப்போது என் மனைவிக்கு யாதொரு குறையும் இல்லை. பழைய தொல்லை நீங்கியது. நாற்பத்தெட்டு நாள் இருக்க வேண்டும் என்ற சங்கற்பம் இருப்பதனால், பேய்த் தொல்லை நீங்கினா லும் நாங்கள் இங்கே இருந்து வருகிறோம். அதன் பயனை இப்போது உணர்ந்தோம்; தேவரீரைத் தரிசிக்கும் பேறு

கிடைத்தது'' என்று சொல்லி அவரும் அவர் மனைவியும் சம்பந்தப் பெருமான் திருவடியில் வீழ்ந்து பணிந்தனர். வேறு சில மகளிர் பேயாடுவதையும் அப்பெருமான் பார்த்தார்.

மற்றோர் அன்பர் வந்தார். ''உங்கள் குறை என்ன? அது நிறைவேறி விட்டதா? நிறைவேறப் போகிறதா?'' என்று கேட்டார்.

அந்த அன்பர் பெருஞ் செல்வர். அந்தச் செல்வத்தைத் தமக்குப்பின் அநுபவிக்கப் பிள்ளையின்றி வருந்தினார். தானமும் தவமும் புரிந்தார். கடைசியில் திருவெண்காட்டுக்கு வந்து முக்குள நீரில் தம் மனைவியுடன் மூழ்கிச் சில காலம் அந்தத் தலத்தில் இருந்தார். ஊர் சென்ற ஓராண்டில் அவருக்குக் குழந்தை பிறந்தது. அந்த ஆண் குழந்தைக்கு இப்போது ஓராண்டு நிரம்பி விட்டது. குழந்தைக்கு வெண்காடன் என்று பெயர். அக் குழந்தையையும் எடுத்துக் கொண்டு இப்போது தரிசனத்துக்காக வந்திருக்கிறார்.

இந்தச் செய்தியைக் கேட்டார் திருஞான சம்பந்தர். அந்தக் குழந்தைக்கு ஆசி கூறினார். தம்பதிகளை வாழ்த்தினார்.

அடுத்தபடி ஓரன்பர் வந்தார். தமக்கு நெடு நாட்களாக இருந்த நோய் முக்குள நீரில் ஆடியதால் போயிற்று என்று சொன்னார். மற்றொருவர் தம் மகளுக்கு ஏற்ற வரன் கிடைக்காமல் திண்டாடி இறுதியில் இங்கே வந்து முக்குளத்தில் ஆடிய பிறகு சிறந்த மாப்பிள்ளையைப் பெற்றதாகக் கூறினார். வறுமை நீங்கிச் செல்வம் பெற்றாரும், சண்டை நீங்கி அமைதி அடைந்தாரும், காணாமற் போன உறவினரை மீட்டும் காணப் பெற்றாரும், தாம் வேண்டிய கல்வித் துறையில் புலமை பெற்றாரும், பெற எண்ணி வழிபடுவாருமாகப் பலரைச் சம்பந்தர் கண்டார். இறைவனின் கருணையை நினைந்து நினைந்து இன்புற்றார். பாவம் போக்கி நினைந்தவற்றை யெல்லாம் தரும் முக்குளத்தையும், திருவெண்காட்டப்பனையும் கண்டு கண்டு உருகினார். தாம் கண்டவற்றையும் கேட்ட வற்றையும் தாம் பாடிய பதிகத்தில் இணைத்து மொழிந்தார்.

பேய்அடையா பிரிவுஎய்தும்;
பிள்ளையினோடு உள்ளநினைவு
ஆயினவே வரம்பெறுவர்;
ஐயுறவேண் டாஒன்றும்;

வேயனதோள் உமைபங்கன்
வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையார் அவர்தம்மைத்
தோயாவாம் தீவினையே.

(மூங்கிலைப் போன்ற வழுவழுப்பும் பசுமை நிறமும் உள்ள தோளைப் பெற்ற உமாதேவியைத் தன் பங்கிலே வைத்தருளும் இறைவனுக்குரிய திருத்தலமாகிய திருவெண்காட்டில் உள்ள முக்குள நீரில் தோய்ந்து ஆடும் செயலுடையாரைத் தீய செயல்கள் சாரா; அவர்களைப் பேய்கள் அடையா: முன்பே அடைந்திருந்தால் பிரிந்து நீங்கிவிடும். பிள்ளை வேண்டுமென்றால் அதனையும், அதனோடு மனத்தில் வேறு எவற்றை நினைந்தார்களோ அவற்றையும் பெறுவார். இவற்றை அடைவதுபற்றிச் சிறிதளவும் ஐயுற வேண்டாம்.

பேய் பலவகை யாதலின் அடையா என்று பன்மையினாற் சொன்னார். பிரிவெய்தும் என்றது. முன்பு அடைந்தவற்றை நினைந்து. உள்ளம் நினைந்தனவாகிய வரங்கள். ஒன்றும் - சிறிதளவும். வேய் - மூங்கில். முக்குளம் - சோம சூரியாக்கினி தீர்த்தங்கள். தோய்தல் - நீராடுதல். வினை - செயல். வினையாராகிய அவர்தம்மை. தோயா - சாரா. தீவினை - தீய செயல்; பாவமும் ஆம்.)

இறைவனுடைய நினைவோடு நீராடித் தொழுபவர்களிடத்தே தீய வினை தோயா என்று சம்பந்தர் சொல்வது நினைவு கொள்வதற்குரியது. சூழ்நிலையினாலும் பழக்கத்தாலும் பழைய வாசனை மாறி நல்ல செயல்களிலே ஈடுபடுவார்கள் என்று கூறுகிறார்.

★

இப்பாட்டோடு தொடர்புடைய வரலாறு ஒன்று உண்டு. அது வருமாறு:

நடுநாட்டில் பெண்ணாகடம் என்ற தலத்தில் ஏறக்குறைய எழுநூறு ஆண்டுகளுக்கு முன் அச்சுதக் களப்பாளர் என்ற வேளாளர் ஒருவர் இருந்தார்; சைவ சமயத்தினர். அவருக்கு நெடுங்காலம் மக்கட்பேறே இல்லை. அதனால் மிக்க வருத்தத்தை அடைந்த அவர் பலவகையான பரிகாரங்களைச் செய்ய எண்ணினார். தம்முடைய குலகுருவாகிய சகலாகம பண்டிதரிடம் போய், தம் குறை நீங்க என்ன செய்யலாம் என்று கேட்டார். அவர் உடனே தம்முடைய பாராயணத்தில் உள்ள

தேவாரத்தை எடுத்துக் கயிறுச்சாத்திப் . பார்த்தார். பார்த்த இடத்தில், ''பேயடையா பிரிவெய்தும்'' என்ற இந்தப் பாசுரம் கிடைத்தது. இதில், ''பிள்ளையினோடு உள்ளநினை வாயினவே வரம் பெறுவர்'' என்று இருப்பதைக் கண்டார். அச்சுதக் களப்பாளருடைய குறை, பிள்ளையில்லை என்பதுதானே? அவர் குறைக்குப் பரிகாரம் சொல்வதுபோலப் பாட்டு அமைந்திருந்தது கண்டு சகலாகம பண்டிதர் இறைவன் திருவருளை எண்ணி அதிசயித்து, திருவெண்காட்டுக்குச் சென்று முக்குள நீரில் வழிபட்டுக் கொண்டு சிலகாலம் இருக்கும்படி களப்பாளரைப் பணித்தார். அவர் அவ்வாறே செய்து ஊர் திரும்பினார்.

அது தொடங்கியே அவர் மனைவி கருவுற்று ஓர் ஆண் குழந்தையை ஈன்றாள். திருவெண்காட்டு மூர்த்தியை வழிபட்டதன் பயனாகப் பிறந்த குழந்தையாதலின் அதற்குச் சுவேதவனப் பெருமாள் என்ற திருநாமம் சூட்டி வளர்த்து வந்தார்கள். அந்தக் குழந்தையே பின்பு சிவஞானபோதம் என்னும் சைவ சாத்திர நூலை இயற்றிச் சந்தனாசாரியர்களில் முதல்வராகத் திகழ்ந்த மெய்கண்டார். சைவ சித்தாந்த சாத்திரங்கள் யாவற்றிற்கும் மூலம் சிவஞானபோதம். அது பிறக்கக் காரண மூர்த்தியாக இருந்தவர் மெய்கண்டார். அவர் திருவவதாரம் செய்ய உறுதுணையாக இருந்தது, ''பேயடையா'' என்ற இந்தத் தேவாரப் பாசுரம்.

★

கலையும் கங்கையும்

மான் என்றாலே மென்மைத் தன்மைதான் நினைவுக்கு வரும். அதுவும் மான் கன்று எத்தனை மென்மையுடையது! பெண்களுக்கு மானை உவமை கூறுவார்கள், அவர்கள் மெல்லியலார்கள் ஆதலின். ஆனால் அந்த மான் வன்மை யுடையதாக ஆயிற்று என்றால் நம்பமுடிகிறதா?

தாமரைப்பூ மென்மையானதுதான். அதை ஒருவன் வேகமாக வீசி எறிய, அது கண்ணில் பட்டால் வேதனையை உண்டாக்கும். எறிபவனுடைய வேகம் தாமரையின் மென்மையை மாற்றி வன்மையை ஊட்டுகிறது. இது சார்பினால் வந்த வினை.

அவ்வாறே சார்பினால் இளமான் கன்று வன்மை யுடையதாயிற்று. தனக்கு இயல்பாக அமைந்தது மென்மையே யானாலும், தன்னைப் படைத்து ஏவி விட்டவர்களின் தீய இயல்பினால் இந்த மான் கன்று சிங்கக் குட்டியைப்போல ஆகிவிட்டது; பேய்ப் பிள்ளை போல ஆகியது என்றும் சொல்லலாம்.

இதை ஏவினவர்கள் எப்படிப்பட்டவர்கள்? அவர்கள் தம் இயல்பிலே நின்றிருந்தால் சத்துவ குணம் மிக்கவர்களாக, இறைவனுடைய அருளிலே ஊறினவர்களாக, எவ்வுயிர் களிடத்தும் கருணை பாலிப்பவர்களாக இருப்பார்கள். அவர்கள் அந்தணர்கள்.

> ''அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்
> செந்தண்மை பூண்டொழுக லான்''

என்று திருவள்ளுவர் சொல்லுகிறார். எல்லா உயிர்களிடத்தும் தயை காட்டும் தர்மத்தை அவர்கள் மறந்தார்கள். போலி வேடதாரிகளாக, அன்பின்றிக் கருமம் செய்தார்கள்; அருளின்றி

வேள்வி வேட்டார்கள்; குழைவின்றி மறையை ஓதினார்கள். அன்பும் அருளும் குழைவும் உள்ள இடத்தில் இறைவன் உறைவான். அவர்களுடைய வாழ்விலே வளர்ச்சியும் இன்பமும் உண்டாகச் செய்வான். ஆனால் அவை இல்லாத தாருகாவனத்து முனிவர்களுக்கு அருளுருவாகிய இறைவன் பகைவனாகத் தோற்றினான். அன்புருவாகிய பரமசிவன் விரோதியாக விளங்கினான். பகைஞனை ஒழித்து விடவேண்டும் என்று அவர்கள் கங்கணம் கட்டிக்கொண்டார்கள்.

தீமையை மாற்றப் பலந்தேடும் சில முறைகள் உண்டு. முட்செடியை வெட்டக் கோடரி இருக்கிறது. அதைக் கொண்டு, வாழும் மரத்தை வெட்டியதுபோல, தீமையை மாய்க்க வைத்த முறைகளால் நன்மையுருவாகிய ஆண்டவனை அழிக்க எண்ணினார்கள். அதற்கென அமைந்த வேள்வியை இயற்றி னார்கள். அதிலிருந்து தோற்றிய அனைத்தையும் சிவபெருமான் மேல் ஏவிவிட்டார்கள். பெருங்கடலில் தீப்பந்தத்தை இட்டால் கடலா சூடு ஏறும்? அவர்கள் விட்ட எல்லாவற்றையும் இறைவன் கைப்பற்றிக் கொண்டான். அதுமட்டும் அன்று; அவர்கள் செய்த செயலையும் தன் ஆற்றலையும் கருணையை யும் காட்டும் அடையாளமாக அவற்றைத் தன்னிடத்திலே வைத்துக் கொண்டான்.

அப்படி வந்தவற்றுள் ஒன்று மான்கன்று. அது தாருகா வனத்து முனிவருடைய பகையுணர்ச்சியினால் உந்தப்பெற்றுப் படையாக வந்தமையால் தன் மென்மை மாறி வன்மை பெற்று மோத வந்தது. ஆனால் இறைவன் திருக்கரத்தை அடைந்த வுடன் அது தன் இயல்பைப் பெற்றது; அழகாகத் திரும்பி நின்றது. பிறருடைய கைப்பட்டு மிடுக்கும் அடங்காத் தன்மையும் உடைய குழந்தை தன் தாயின் மடியிலே தூங்குவது போல மான் இறைவன் கையில் மானாகவே இருக்கிறது. வேறு யாரை நோக்கியேனும் அது சென்றிருந்தால் அது அவரை மாய்த்திருக்கும்; அல்லது தான் மாய்ந்திருக்கும். பிறரை மாய்த்தால் அதன் மான் தன்மை மாய்ந்திருக்கும். வெற்றி யினால் மான் தன்மை மாயும்; தோல்வியானால் மானே மாயும். இங்கேயோ மானுக்கு வெற்றியும் இல்லை: தோல்வியும் இல்லை. அதை விட்டவர்களுக்குத்தான் தோல்வி உண்டா யிற்று.

ஆனால் மான் இப்போது தான் மாயாமல், தன் தன்மையும் மாயாமல் மானாகவே வாழ்கிறது; இறைவனுடைய அழகிய கையிலே எப்போதும் வாழ்கிறது. தாய்மடியில் இருக்கும் குழந்தையைப்போல, அது அப்பெருமானுடைய திருக்கரத்தில் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறது. அதற்கு வாய்த்த வாழ்வு எத்தகைய வாழ்வு!

இதை நினைக்கிறார் சம்பந்தர். 'கலைமான் தன் உருவம் மாயாமல் தன் தன்மை மாயாமல் என்றும் கலையாகவே வாழும் இடமாகிய அங்கையையுடைய பெருமானே!' என்று இறைவனைத் துதிக்கிறார்.

கலைவாழும் அங்கையீர்!

★

பிறருடைய சார்பினால் இயல்பு மாறுவது ஒரு விதம். தாமே இயல்புமாறி நிற்றல் ஒரு வகை. தாருகாவனத்து முனிவர் தாமே தம் இயல்பு மாறி அந்தன்மையினின்றும் நீங்கி நின்றனர். அவரைச் சார்ந்து மான் தன் இயல்பு மாறியது. கங்கையாறு ஒரு சமயம் தன் இயல்பு மாறி நின்றது. பிறர் தன்பால் வந்து ஆடிக் குளிர்ச்சியையும் தூய்மையையும் அடையும்படி செய்வது கங்கை. தண்மையையும் மென்மையையும் உடையதாதலின் அதனைப் பெண்ணாகச் சொல்வார்கள். பிறருடைய புற அழுக்கையும் மன அழுக்கையும் போக்கும் அது அகங்காரத்தால் வெப்பம் அடைந்தது. தன் முன்னோரின் சாம்பலின்மேற் பாயவேண்டு மென்று பகீரதன் தவம்புரிந்து கேட்டபோது, ''என்னைத் தாங்குவார் யார்?'' என்று அகங்கரித்துக் கேட்டது. அப்போது இறைவன் அதனைத் தாங்கித் தன் சம்பந்தத்தால் அதன்பால் உண்டான அகந்தை அழுக்கைப் போக்கினான். அதுகாறும் வானுலகத்துக்கு மாத்திரம் பயன்பட்ட கங்கை இறைவன் திருச்சடையில் ஏறியவுடன் தூய்மையும் பெருமையும் பெற்று மூன்று உலகத்துக்கும் நன்மை செய்வதாயிற்று. இறைவனுடைய கருணையில் இது ஒரு வகை. தன் இயல்பு மாறிய கங்கையை மீட்டும் தூயதாக்கினான் அவன். அவனுடைய செஞ்சடையில் கருங்கூந்தலையுடைய அலை மகளாகிய கங்கை வாழ்கிறாள்.

கலைவாழும் அங்கையும் கங்கை வாழும் செஞ்சடையும் இயல்பு மாறியவற்றைத் தன் அருளால் இனியனவாக்கும் திறமுடையான் என்பதைக் காட்டுகின்றன. அதற்குமேல், ஒன்றனோடு ஒன்று பகைமையை உடையது என்று உலகம் எண்ணும் அரவையும் பிறையையும் ஒன்றாக இணைய வைத்து அவற்றையும் உயர் பொருளாக்கினான். ஆகவே, அவனுடைய அருளின் தொடர்பால், சார்புபற்றி இயல்பு மாறிய மான் நல்லதாயிற்று; தானே தூய்மை மாறிய கங்கை தூயதாயிற்று; இயல்பாகவே தம்முள்ளே பகைமையை உடையவை பகை நீங்கி ஒரு குடிற்கீழ் வாழ்வன ஆயின. அவன் அருளின் அற்புத ஆற்றல்தான் என்னே!

கலைவாழும் அங்கையீர்!
கொங்கை ஆருங் கருங்கூந்தல்
அலைவாழும் செஞ்சடையில்
அரவும் பிறையும் அமர்வித்தீர்!

(கலைமான் கன்று வாழும் அழகிய கையை உடைய பெருமானே! நறுமணத்தைப் பொருந்திய கரிய கூந்தலையுடைய கங்கை வாழும் செம்மையான சடையில் அரவையும் பிறையையும் பொருந்தி அமரும்படி செய்தவரே!

கலை - ஆண்மான். அங்கை: உள்ளங்கையில் ஏந்தாமையின் இங்கே அழகிய கை என்றே பொருள் கொள்ளவேண்டும். கொங்கை - நறுமணத்தை. ஆரும் - பொருந்தும். அலை - அலையையுடைய ஆறு; ஆகுபெயர். அமர்வித்தீர் - அமரச்செய்தீர்; அமர்தல் - விரும்பித் தங்குதல்.)

★

திருக்குடவாயில் என்னும் தலத்திற்கு ஞானசம்பந்தப் பெருமான் சென்றார்; அங்கே எழுந்தருளியிருக்கும் கோணேசு வரரைத் தரிசித்துத் திருப்பதிகம் பாடியபோது இப்படிப் பாடலானார். இறைவனுடைய சிறப்பை இவ்வாறு பாடிய பாலறாவாயர் அப்பால் தலத்தின் சிறப்பைச் சொல்லப் புகுந்தார். வாழையும் கமுகும் எழில் பெற்று நிற்கும் நிலவளத்தை உடையது குடவாயில். அந்த வளத்தைச் சொல்கிறார்.

வாழைமரம் தாறுபோட்டு நிற்கிறது. குலையில் இருந்த படியே காய்கள் பழுக்கின்றன. அப்போது அவை பொன்

நிறத்தை அடைகின்றன. கமுக மரத்திலும் குலைகுலையாகக் காய்கள் தொங்குகின்றன. அவை பழுத்துப் பவள நிறம் பெற்று விளங்குகின்றன. வாழை பொன் பழுக்கிறதாம். கமுக மரம் பவளம் பழுக்கிறதாம். இத்தகைய குடவாயிலிலே நிலையாக வாழ்வதற்காக ஒரு கோயிலை இறைவன் ஏற்றுக்கொண்டான். அந்தக் கோயிலையே தன்னுடைய அரண்மனையாகக் கொண்டு மகிழ்ந்து தன் அருள் என்றும் வெளிப்படும்படி அங்கே நின்று நிலவுகிறான்.

குலைவாழை கமுகம்பொன்
பவளம் பழுக்கும் குடவாயில்
நிலைவாழும் கோயிலே
கோயி லாக நின்றீரே

(குலைகளையுடைய வாழை பொன் போன்ற பழங்களைப் பழுக்கவும், குலைகளையுடைய கமுகமரம் பவளம் போன்ற கனிகளைப் பழுக்கவும் இடமாகிய திருக்குடவாயிலில் நிலையாக வாழ்வதற்குரிய திருக்கோயிலே நீர் வாழும் அரண்மனையாக மகிழ்ந்து நின்றீர்.

குலைவாழை, குலைக்கமுகம் என்று இரண்டுக்கும் கூட்டிப் பொருள்கொள்க. வாழை பொன்னும், கமுகம் பவளமும் பழுக்கும் என்று நிரனிறையாகக் கொள்க. நிலைவாழும் - நிலையாக வாழும். கோயிலாக; கோ இல் - தலைவன் வாழும் அரண்மனை; தலைமையையுடைய மாளிகை என்றும் சொல்லலாம். ஏ : அசைநிலை.)

★

திருக்குடவாயில் வயல் சூழ்ந்த மருத நிலத்தில் அமைந்ததாதலின் அங்குள்ள வாழையையும் கமுகையும் வருணித்தார். அவ்வூர் பொன்னாற் குறையுடையதன்று, வாழைப்பழமுடைமையினால்; பவளத்தாற் குறையுடையதன்று, கமுகம் பழத்தையுடைமையினால் என்ற நயமும் தோற்றியது. வாழையும் கமுகும் நீர் வளத்தையும் நில வளத்தையும் புலப்படுத்துபவை.

இயல்பினின்றும் மாறுபட்டவற்றையும் பகைமையை யுடையவற்றையும் அந்நிலையினின்றும் மாற்றும் அருளுடையா

னாதலின் அப்பிரானைத் தொழுதால் நம் அஞ்ஞான நிலைமாறி ஞான நிலை உண்டாகும் என்பது குறிப்பால் தெளிவாகும்.

கலைவாழும் அங்கையீர்!
கொங்கை ஆரும் கருங்கூந்தல்
அலைவாழும் செஞ்சடையில்
அரவும் பிறையும் அமர்வித்தீர்!
குலைவாழை கமுகம்பொன்
பவளம் பழுக்கும் குடவாயில்
நிலைவாழும் கோயிலே
கோயி லாக நின்றீரே.

இது திருக்குடவாயிற் பதிகத்தின் முதல் திருப்பாசுரம்.

★

நோய் தீர்க்கும் விமலர்

சிவபெருமானுக்கு அன்பர் அவர். அவர் அன்பு வளர்ந்த வரலாறே அழகானது. இளம் பருவத்தில் பெரியவர்களோடு கோயிலுக்குச் செல்வது வழக்கம். அவர்கள் இறைவனைக் கும்பிடும்போது அவரும் வழிபட்டார். இந்தப் பழக்கத்தால் தென்னங் குரும்பையில் நீர் புகுந்ததுபோல அவர் உள்ளத்தில் அன்பு தலைப்பட்டது. பெரியவர்கள் கோயிலுக்குப் போகாத நாளிலும் அவர் போய் வந்தார். அவர் வளர்ந்தார்; அவர் அன்பும் வளர்ந்தது.

கோயிலுக்குள் போய் இறைவன் திருமுன் விழுந்து வணங்கி உள்ளம் கசிந்து வாயாரப் பாடும் இயல்புடைய அவர், கோயிலுக்குப் போகாத போதும் கோபுரத்தைக் கண்டால் கும்பிடு போடுவார்; தலை வணங்குவார்; உள்ளம் கசிவார். பிறகு அடியார்களைக் கண்டபோது சிவபெருமானை நினைந்து கையால் அஞ்சலி செய்வார்; தலைசாய்ப்பார்; உள்ளம் கசிவார். இந்த நிலையும் தாண்டியது. எந்த இடத்திலும் எந்தக் காலத்திலும் இறைவனை நினைத்துக் கொள்வார். உடனே கையைக் குவித்துத் தொழுது தலைசாய்த்து உள்ளம் குழைவார்.

இறைவன் திருமுன் வீழ்ந்து வணங்குவது முறை. கையைக் குவித்துத் தொழுதல் ஒரு முறை. வீழ்ந்து வணங்கினாலும் மீண்டும் எழுந்து கையைக் குவிப்பது வழக்கம். அப்படிக் குவிப்பது எதைக் காட்டுகிறது? கை செய்கைக்கு அடையாளம். செயலில் ஊற்றம் இல்லாதவனைக் கையாலாகாதவன் என்று சொல்கிறோம். கையைக் குவித்து நிற்பது, ''இறைவனே, நான் செயலொழிந்தேன். என் செயலென்று யாதொன்றும் இல்லை. எல்லாம் நின் செயலே'' என்பதைக் காட்டும் அடையாளம். எல்லாம் இறைவன் செயலே என்று உணர்ந்து செயலற்று நிற்பதே ஞானம் நிறைந்த நிலை. அதை நினைவூட்டவே அஞ்சலி செய்கிறோம்.

தலை நிமிர்ந்து நிற்பது சில இடங்களில் வீரத்தையும் சில இடங்களில் அகங்காரத்தையும் காட்டும். தீயனவற்றைக் கண்டபோது அஞ்சாமல் நிமிர்ந்து நிற்க வேண்டும். நல்லவர் களைக் கண்டால் நாம் இவர்க்குமுன் எம்மாத்திரம் என்று தலை குனிந்து நிற்க வேண்டும். தலை குனிவது நாணத்துக்கும் பணிவுக்கும் அடையாளம். இறைவன் முன் தலைவணங்கி நிற்பது, ''இதுகாறும் இறைவனைக் காணாமல் பல நாட்களைப் போக்கி விட்டோமே!'' என்ற நாணத்தையும், ''இறைவனுக்கு முன் நாம் எல்லாம் எம்மாத்திரம்?'' என்ற பணிவையும் எடுத்துக் காட்டும். இறைவன் முன் தலை வணங்கினார் இடும்பையின்முன் தலைநிமிர்ந்து நிற்பார்.

கை தொழுவது, தலை வணங்குவது ஆகிய செயல்கள் போலியாக இருந்தால் பயன் இல்லை. உள்ளத்திலே அன்பு இன்றி, இப்படிச் செய்தால் பிறர் நம்மை அன்பர் என்று எண்ணிப் பாராட்டுவார்கள் என்ற எண்ணத்தோடு செய்யும் வணக்கம் தம்மைத் தாமே ஏமாற்றும் தொழில். உள்ளம் கசிந்து எழும் அன்பினாலே இறைவனைக் கையால் தொழுதும் தலை சாய்த்து வணங்கியும் வாழும் அன்பர்கள் இறைவனுடைய அருளைப் பெறுவார்கள்.

அன்பு வளர வளர்ந்த பெரியார் கையால் தொழுது தலைசாய்த்து உள்ளம் கசிந்து வாழ்பவர். அவருக்கு முன்பு உடம்பில் ஏதோ நோய் இருந்தது. மெய்யிலே ஆர்ந்த அந்தக் குறையை அவர் பொருட்படுத்தினாரோ இல்லையோ, யாரும் அறியார். ஆனால் நாளடைவில் அந்த நோய் இருந்த இடம் தெரியாமல் ஒழிந்து போயிற்று. அவர் உடம்பிலே பொலிவும், முகத்திலே தேசும் உண்டாகி விட்டன. அவர் திருமேனியில் பூசும் வெண்ணீறு அந்த மேனிக்குப் பின்னும் எழிலை ஈந்தது.

அவர் மனிதர்தாமே? மனம் படைத்த மனிதர்களுக் கெல்லாம் துயரம் இருப்பது இயல்பு. உடம்பிலே நோயும் உள்ளத்திலே துயரும் வாட்ட வாடுபவர்கள் மனிதர்கள். உடம்பிலே உள்ள நோயையாவது மருத்துவர்களை அணுகி அவர் ஈயும் மருந்துகளை உண்டு போக்கிக் கொள்ளலாம். ஆனால் மன நோய்க்கு மருந்து இல்லை. இறைவன் அருளைத் துணையாகக் கொண்டாலன்றி மனக்கவலை மாறாது.

''தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது''

என்பது வள்ளுவர் வாய் மொழி.

முன்னே சொன்ன அன்பருக்கு மெய்யிலே இருந்த நோய் பெரிதல்ல. அவர் மனத்திலே உள்ள துயர்களெல்லாம் போயின. மாசு மறுவற்ற அந்த மனத்தின் முழு இடத்திலும் இறைவன் வெளிப்பட்டு அமர்ந்திருக்கும்போது மற்றொன்றிற்கு அங்கே இடம் ஏது?

இப்படி அவர் ஒருவர் மட்டுமா இருக்கிறார்? பல்லாயிரம் அன்பர்கள் இருக்கிறார்கள். நமக்கு அவர்களைத் தெரிந்து கொள்ளும் பாக்கியம் கிடைப்பதில்லை. தெரிந்து கொண்டவர் களுக்கு அவர்களுடைய பெருமை தெரியும். அவர்களுடைய மெய்யில் ஆர்ந்த குறையையும் மனத் துயரத்தையும் தீர்க்கும் விமலனாகிய இறைவனுடைய பெருமையும் தெரியும். அந்தப் பெருமை தெரிந்த ஞான சம்பந்தர் சொல்லுகிறார்.

கையால் தொழுது தலைசாய்த்து
உள்ளம் கசிவார்கள்
மெய்ஆர் குறையும் துயரும்
தீர்க்கும் விமலனார்

★

அந்த விமலனைப் பற்றிய நினைவு நீளுகிறது. அன்பர்கள் அவனை வழிபடும் வகைகளை நினைக்கிறார். பூசை செய்யும் பொற்பை எண்ணுகிறார். அவனை அபிஷேகம் செய்யும் காட்சி அவர் நினைவுக்கு வருகிறது. இறைவன் உருவம் இல்லாதவனாயினும் தன்னை நினைக்கச் செய்யும் உருவத்தை அமைத்து வழிபடுபவர்களுக்கு அருள் புரிகிறான். அவர் புரியும் வழிபாடுகளை ஏற்றுக் கொள்கிறான். அன்பர்கள் அவன் திருவுருவத்தை எண்ணெயால் முழுக்காட்டுகிறார்கள். மந்திரம் சொல்லித் தோத்திரம் சொல்லி அபிஷேகம் செய்கிறார்கள். அவர்கள் ஆட்டும் நெய்யிலே ஆடுகிறான் இறைவன். நெய் மாத்திரந்தானா? வேறு பல திரவியங்களும் உண்டு. அவற்றுள் முக்கியமானது பஞ்ச கவ்வியம்; ஆன்

அஞ்சு; பசுமாட்டிலிருந்து கிடைக்கும் ஐந்து பொருள்கள். பால், தயிர், நெய், கோமயம், கோஜலம் என்னும் ஐந்து இணைந் ததைப் பஞ்ச கவ்வியம் என்றும் ஆன் ஐந்து என்றும் கூறுவர்.

''ஆவினுக் கருங்கலம் அரன்அஞ் சாடுதல்''

என்று வாகீசப் பெருந்தகையார் திருவாய் மலர்ந்தருளினார்.

இறைவன் அன்பர்கள் ஆட்டும் நெய்யிலே ஆடுவான்; அவர்கள் கலந்து ஆட்டும் ஆனஞ்சிலும் ஆடுவான். இப்படி அன்பர்கள் பூசிக்கும்படியாக உருவமும் திருக்கோயிலும் தலமும் உடையவனாக அவன் இருக்கிறான்.

நெய்ஆ டுதல்அஞ்சு உடையார்
நிலாவும் ஊர்போலும்.

அவன் எழுந்தருளியிருக்கும் திருத்தலங்களுக்குள் ஒன்று திருப்பாசூர். அது தொண்டை நாட்டில் உள்ளது. குறிஞ்சி நிலப்பண்பு மிக்கு இருப்பது. அங்கே காந்தட் செடிகள் பூத்து நிற்கின்றன. காந்தள் என்பது வேலிக்காலில் வளரும் ஒருவகைச் செடி. அதன் மலர் கைவிரல்களைப் போல இருக்கும். அதன் பூவைத் துடுப்பென்று பழம் புலவர்கள் சொல்வார்கள். தூரத்திலிருந்து பார்த்தால் பாம்பு படம் எடுத்தாற்போல இருக்கும். படத்தையுடைய நாகத்தைப் போன்ற தோற்றத்தை உண்டாக்கும் காந்தள் மலிந்த ஊர் பாசூர். இயற்கையின் எழில் நலத்தோடு இறைவனுடைய அருள் நலத்தையும் இணைத்துக் காட்டுபவர் ஆளுடைய பிள்ளையார்.

ஊர்போலும்.
பைவாய் நாகம் கோடல்
ஈனும் பாசூரே.

★

இறைவனுடைய நினைப்போடு காந்தளைப் பார்க்கின்ற கண்களுக்கு வேறு பொருள் உவமையாகத் தோன்றவில்லை. அப்பெருமான் அணியும் நாகந்தான் உவமையாக வருகிறது. பை (படம்) வாய்ந்த நாகத்தைக் கோடல் (காந்தள்) ஈனுகின்றதாம்.

கையால் தொழுது தலைசாய்த்து
உள்ளம் கசிவார்கள்
மெய்யார் குறையும் துயரும்
தீர்க்கும் விமலனார்

நெய்ஆ டுதல்அஞ்சு உடையார்
நிலாவும் ஊர்போலும்
பைவாய் நாகம் கோடல்
ஈனும் பாசூரே.

[கையினாலே கும்பிட்டுத் தலைவணங்கி உள்ளம் உருகும் அன்பர்களுடைய உடம்பிலே பொருந்திய குறைகளாகிய நோய்களையும் (மனத்திலே பொருந்திய) துயரங்களையும் போக்கும் மலமற்ற தூயரும், நெய்யில் ஆடுவதையும் பஞ்சகவ்வியத்தில் ஆடுவதையும் உடையவரும் ஆகிய சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் திருப்பதி, படம் வாய்ந்த நாகத்தின் தோற்றத்தைக் காந்தள் தன் மலரால் உண்டாக்கும் பாசூர் ஆகும்.

கசிவார்கள் - உருகும் அன்பர்கள். துயர், மனத்தைச் சார்ந்தது. நெய் - பசுவின் நெய்; எண்ணெயும் ஆகும். ஆடுதல் என்பதை நெய் ஆடுதல் என்றும் அஞ்சு ஆடுதல் என்றும் இரண்டிடத்தும் கூட்டவேண்டும். இது நடுநிலை விளக்கு. நிலாவும் - தங்கியிருக்கும். போலும்; அசைநிலை. பை - படம். வாய் - வாய்ந்த. நாகம் - நாகத்தின் தோற்றம்; ஆகுபெயர். கோடல் - காந்தள். ஈனும் - உண்டாக்கும். விமலனார், உடையார் ஊர் பாசூர். ஏ : அசைநிலை.]

★

இரண்டு கோயில்கள்

பெரிய செல்வர்களானால் பரிவாரங்களுடன் பல இடங்களுக்குப் போவார்கள், வருவார்கள். அவர்களை அழைத்து உபசரிக்க எல்லோராலும் முடியாது. அவர்களோடு நெருங்கிப் பழகுவதே அருமை. ஆதலால் யாரோ சிலரே அவர்களை அழைத்து உபசரிப்பார்கள். செல்வர்கள் நிலையே இதுவானால் மன்னர்களைப் பற்றிச் சொல்லவே வேண்டிய தில்லை. விரிவான இடமும் செயலும் இருப்பவர்கள் அவர்களை வரவேற்று உபசரிக்கலாம்.

எல்லாவற்றையும் தன் அருளாணையால் ஆட்சி புரியும் இறைவன் மன்னர்களுக்கெல்லாம் மேலான மன்னன். ''மன்னே மாமணியே'' என்று சுந்தரமூர்த்தி நாயனார் சொல்வார். அந்த மன்னனை அழைத்து உபசரிக்க வேண்டுமானால் எல்லாராலும் முடியாது என்றுதான் முதலில் தோன்றுகிறது. ''அவர் நம்முடைய வீட்டுக்கு வருவாரா?'' என்று செல்வர்களை நினைந்து பேசுவதுண்டு. செல்வர்களுக்குச் செல்வனாகிய இறைவனைப் பற்றியும் அப்படித்தான் சொல்ல வேண்டுமா?

இறைவன் வெறும் செல்வர்களைப் போல எல்லா வற்றுக்கும் உடையவனாக மட்டும் இருந்தால் ஒருகால் இடம் பார்த்துப் போவான். ஆனால் அவன் யாரிடமும் இல்லாத பெருங்கருணை படைத்தவன். அன்பினால் யார் அழைத்தாலும் அவர்பால் செல்பவன். தன்னை வணங்குபவர்களின் உள்ளத்தையே கோயிலாகக் கொண்டு திகழ்பவன்.

அவனைத் தேவாதி தேவர்களெல்லாம் வணங்குகிறார்கள்; ''எங்களையெல்லாம் உண்டாக்கிய தந்தை இவன்'' என்று போற்றுகிறார்கள். அந்தத் தேவர்கள் கிடக்கட்டும். கண் காணும் தெய்வமாக உலகனைத்தும் போற்றும் சூரியன் தன் ஒளியைப் பெற்றது இறைவனிடத்தில்தான். அவன் இறைவனைச்

சிந்தையால் நினைந்து வழிபடுகிறவன். அவனுடைய உள்ளத்தே இறைவன் உறைகிறான். சிவபெருமான் சூரியனுடைய நடுவில் உறைகிறானென்று வேதம் பேசுகிறது. இரவியைப் போலவே பிற அமரர்களும் இறைஞ்சுகிறார்கள். உலகிலுள்ள பக்தர்களும் இறைஞ்சுகிறார்கள். எல்லோருடைய சிந்தையிலும் ஆண்டவன் இருக்கிறான்.

உலகில் உள்ள மக்கள் அனைவருடைய உள்ளத்திலுந் தானே இறைவன் உறைகிறான்? அப்படி இருக்க, இறைஞ்சுவார் சிந்தையுள்ளே மாத்திரம் திகழ்கிறான் என்று சொல்லலாமா?

யாவருடைய உள்ளத்திலும் இறைவன் இருக்கிறான் என்பது உண்மை. ஆனால் இறைஞ்சுவாருடைய உள்ளத்தே இருக்கும் இயல்பு வேறு; ஏனையவர் உள்ளத்தில் இருக்கும் முறை வேறு. ஓர் அரசன் தனக்கு வேண்டாதவருடைய ஊருக்குப் போய்ச் சிக்கிக் கொள்கிறான். அங்கே த்தான் மறைந்து நிற்கும் இடம் எதுவென்று தேடி அலைந்து அதற்கு ஏற்ற இடம் கிடைத்ததானால் அதற்குள் புகுந்து மறைந்து நிற்கிறான். தன்னை அவ்வூரினர் காணாதபடி இருக்கிறான். தன் அரச நிலையையெல்லாம் காட்டிக் கொள்ளாமல் சும்மா இருக்கிறான். அவ்விடத்தில் அரசன் இருக்கிறான் என்பது உண்மை. ஆனால் அவன் தன் இயல்புகளோடா இருக்கிறான்? எல்லோரும் காணும்படியா இருக்கிறான்?

அவன் தன் நாட்டில் தன் அரண்மனையில் எப்படி இருக்கிறான்? தன் நாட்டார் நன்கு காணும்படியாக உலவுவான். தனக்குரிய கோலத்தோடு விளங்குவான். ஆணை செலுத்துவான்.

இறைவன் எல்லோருடைய சிந்தையிலும் உறைந்தாலும் எல்லாவிடத்தும் அவனுடைய அருளாற்றல் வெளியாவதில்லை. அன்பில்லாதவர்களுடைய உள்ளத்தில் கள்வனைப்போல மறைந்து நிற்கிறான். ஆனால் தன்னை இறைஞ்சுபவர்களுடைய சிந்தையிலோ தன் முழு அருளோடும் இலங்குகிறான். நினைப்பவர் மனம் அவனுக்குக் கோயிலாகி விடுகிறது. தனக்குரிய அரண்மனையிலே தன் இயல்பு விளங்க வீற்றிருக்கும் மன்னனைப்போல, இறைஞ்சுவார் சிந்தையுள்ளே திகழ்கிறான் இறைவன்.

எந்தை இவன்என்று இரவிமுதலா இறைஞ்சுவார்
சிந்தை யுள்ளே கோயி லாகத் திகழ்வானை.

(எம்மைப் படைத்த தந்தை இவன் என்று எண்ணிக் கூறிச் சூரியன் முதலாக வணங்குவார் அனைவருடைய சிந்தைக்குள்ளும் அச்சிந்தையே தான் தன் இயல்பு வெளிப்பட உறையும் கோயிலாகக் கொண்டு விளங்குகின்றவனை.

எந்தை - எம் தந்தை. இரவி - சூரியன். முதலா - முதலாக. இறைஞ்சுவார் - வணங்குபவர்களுடைய. சிந்தையுள்ளே - உள்ளத்தினுள்ளே. கோயிலாக - அந்தச் சிந்தையே தான் உறையும் கோயிலாக. திகழ்வானை - விளங்குபவனை.)

★

இப்படி இரவிமுதலோர் வணங்க அவர்தம் சிந்தையே கோயிலாகத் திகழும் சிவபெருமான் புறத்தே உள்ள கோயிலிலும் திகழ்கிறான். அந்தக் கோயிலில் வழிபடுபவர் யார்?

சிந்தையுள்ளே தியானித்து இறைவனை வழிபடுதல் எளிதன்று. இரவி முதலானவர்கள் பல காலம் சாதனம் பண்ணி அவனைத் தியானிக்கும் நெறி கைவரப் பெற்றார்கள். எல்லாருமே எடுத்தவுடன் தம் சிந்தையை இறைவன் கோயிலாக்கிவிட முடியாது. அந்தத் தகுதி இல்லாதவர்களும் கண்டு வணங்குவதற்கு ஏற்றபடி இறைவன் அங்கங்கே திருக்கோயிலில் சிவலிங்கப் பெருமானாகவும், நடராஜ மூர்த்தியாகவும், பிறவாறும் எழுந்தருளி யிருக்கிறான். அப்படி எழுந்தருளியிருக்கும் கோயில்களில் திருமுது குன்றக் கோயில் ஒன்று. இது நடு நாட்டில் உள்ள தலம். இப்போது விருத்தாசலம் என்று வழங்குகிறது. பழமலையென்றும் இலக்கியங்களில் இதன் பெயர் காணப்பெறும்.

முதுகுன்றக் கோயிலில் அன்புள்ள மக்கள் வந்து வழிபடுகிறார்கள். அன்பர்கள் வழிபடுவதைக் கண்டு மற்ற மக்களும் வழிபடத் தொடங்குகிறார்கள். நாளடைவில் அவர்களும் அன்பர்களாகி விடுகிறார்கள். காந்தத்தோடு உரசி உரசி இரும்பும் காந்த சக்தியைப் பெற்றுவிடும். அப்படி அன்பர்களின் கூட்டத்தோடு கலந்துகொண்டு வழிபடும் மக்களுக்கும் அன்பு உண்டாகி வளர்கிறது. ஓரிடத்தில் திருக்கோயில் இருந்தால் அதைச் சுற்றி உள்ள மக்கள் அன்பு

பூண்டு வழிபடும் பழக்கத்தை மேற்கொள்கிறார்கள். ஓர் இடத்தில் ஏரி இருக்குமாயின் அதனைச் சுற்றி நல்ல வயல்கள் இருப்பது போலத் திருக்கோயில்களைச் சுற்றி அன்பர்கள் வாழ்கிறார்கள். ஏரியின் நீர் பாயும் வசதியிருக்குமானால் தரிசு நிலமும் வயலாகிவிடுகிறது. கோயில் இருக்குமானால் அதனுடைய சார்பினால் அன்பு இல்லாதவர்களும் அன்புடைய வர்களாய் விடுகிறார்கள்.

முதுகுன்றத்தில் வரும் அன்பர்களின் கூட்டம் மிக அதிகம். அவர்களுடைய வழிபாடுகளைக் கண்டு மற்ற மக்கள் உள்ளம் உருகி அவர்களைப் போலவே வழிபடப் புகுவது ஆச்சரியம் அன்று. இதோ குரங்குகள்கூட வழிபடுகின்றன.

ஆம்; மனிதன் செய்வதைப் பார்த்து அது மாதிரியே செய்வது குரங்கின் இயல்பு. திருமுதுகுன்றக் கோயிலின் அருகில் உள்ள சோலைகளில் வாழும் குரங்குகள், அன்பர்கள் இறைவனை வழிபடும் முறைகளைக் கவனிக்கின்றன; மலர்களைக் கொண்டு வழிபடுவதையும் கனிகளைக் கொண்டு போய் நிவேதனம் செய்வதையும் பார்க்கின்றன.

அவைகளும் அவ்வாறு செய்ய எண்ணுகின்றன. பலவகை மலர்களைப் பறித்துத் தொகுக்கின்றன. முதுகுன்றத்தின் சூழலிலே வாழ்வதனால் அவை தம் இயல்பே மாறிப் போகின்றன. குரங்கின் கையில் மலரைக் கொடுத்தால் அது அதைக் கசக்கிவிடும் என்று சொல்வார்கள். இந்தக் குரங்குகளோ சார்பின் சிறப்பால் தாமே பல இனமலர்களைப் பறித்துக் கொண்டு திருக்கோயிலுக்கு முன்பு சென்று மலரைத் தூவிக் கைகுவிக்கின்றன; தலை சாய்த்து வணங்குகின்றன. குரங்காட்டியினாற் பழக்கப்பெற்ற குரங்குகள் 'எசமானுக்குச் சலாம் போடு' என்றால் போடுகின்றன. இங்கேயோ யாரும் பழக்காமல் சூழ்நிலையின் வாசனையினால் அன்பர்களைப் போல மரத்தில்மேல் ஏறிப் பல இன மலர்களைக் கொண்டு வந்து திருக்கோயிலின் முன்பு அவற்றைத் தூவித் தொழுது வணங்குகின்றன.

இத்தகைய அற்புதமான சூழ்நிலையையுடையது திருமுது குன்றத்துக் கோயில்.

............திகழ்வானை
மந்தி ஏறி இனமா மலர்கள் பலகொண்டு
முந்தித் தொழுது வணங்கும் கோயில் முதுகுன்றே.

[சிந்தையாகிய கோயிலில்) விளங்கும் சிவபெருமானைக் குரங்குகள் (மரத்தின் மேல்) ஏறிப் பலஇனமாகிய பெரிய மலர்கள் பலவற்றைப் பறித்துக் கொண்டு (திருக்கோயிலிற்கு) முன்வந்து (மலரைத் தூவிக்) கையால் தொழுது (தலை சாய்த்து) வணங்கும் திருக்கோயில் திருமுதுகுன்றம் ஆகும்.

மந்தி என்பது பெண் குரங்குக்குப் பெயர். ஆயினும் இங்கே பொதுவாகக் குரங்குகளைச் சுட்டியது. இனம் - வகை. இனம் ஆம் மலர்கள் என்றும் பிரித்துப் பொருள் கொள்ளலாம். முந்தி - முன் சென்று. முதுகுன்றமாகிய தலத்தில் உள்ளது கோயில். இரண்டுக்கும் உள்ள ஒற்றுமைபற்றிக் கோயில் முதுகுன்றே என்றார். திகழ்வானை வணங்கும் என்று கூட்டவேண்டும்.]

இரவி முதலாக இறைஞ்சும் பக்குவர்களின் உள்ளமாகிய திருக்கோயிலிலும் இறைவன் எழுந்தருளியிருக்கிறான்; அன்பர்கள் வழிபட அது கண்டு மந்திகளும் வழிபட யாவருக்கும் எளியவனாக முதுகுன்றக் கோயிலிலும் விளங்குகின்றான். சிந்தையென்னும் திருக்கோயிலும் சிலையால் அமைத்த திருக்கோயிலும் இறைவன் உறையும் இருவகைக் கோயில்கள். அகக் கோயிலில் வழிபடும் தகுதி வரவேண்டுமானால் முன்பு புறக் கோயிலில் வழிபட வேண்டும்.

மனத்துக்குக் குரங்கை உவமை சொல்வது வழக்கம். இறைவனுடைய திருக்கோயிற் சார்பு பெற்றால் பலவாறு திரியும் மனம் ஒரு வழிப்பட்டு இறைவனை வழிபடும் என்ற குறிப்பும் இந்நத் திருப்பாட்டினால் புலனாகும்.

எந்தை இவன்என்று இரவி முதலா இறைஞ்சுவார்
சிந்தை யுள்ளே கோயி லாகத் திகழ்வானை
மந்தி ஏறி இனமா மலர்கள் பலகொண்டு
முந்தித் தொழுது வணங்கும் கோயில் முதுகுன்றே.

★

அஞ்சல் நெஞ்சே!

ஆசையும் பாசமும் மாறாமல் வாழும் செல்வர் அவர். தந்தையையும் தாயையும் தெய்வமாக வழிபட்டுப் பாதுகாக்கும் பெருந்தகையார். இறைவன் திருவருளால் செல்வ வருவாய் குறையாமல் இருந்தது.

தாய் தந்தையரும், ''இந்தப் பிள்ளையைப் போல யாரும் இல்லை. நெடுங்காலம் இவனுடைய பாதுகாப்பிலே நாம் கவலையின்றி வாழலாம்'' என்று எண்ணியிருந்தார்கள். ஆனால் காலம் என்ற ஒன்று யார் எது செய்தாலும் செய்யாவிட்டாலும் தன் காரியத்தை நடத்திக்கொண்டேதான் போகும். உரிய காலத்தில் நிகழ வேண்டியதை யாரும் நிறுத்த முடியாது.

தந்தையார் தளர்ச்சி அடைந்து வந்தார். அவர் இனி நெடுங்காலம் உலகில் வாழமாட்டார் என்ற எண்ணம் பிள்ளைக்கும் வந்தது; தாய்க்கும் வந்தது. அவர் ஏன் தளர்ச்சி பெற்றார்? உணவிலே குறைவா? உவகையிலே குறைவா? அதுதான் காலத்தின் விளைவு. உணவு உண்டு சிலர் வளர்ச்சி பெற்றுக்கொண்டு வந்தார்கள். சிலர் தளர்ச்சி அடைந்து வந்தார்கள். புதிய தளிர் தோன்றி இலையாதலும், பழைய சருகு உதிர்தலும் காலம் செய்யும் விளையாட்டுகள்.

தந்தையாருக்கு நோயும் உண்டாயிற்று. மருத்துவர்கள் வந்து பார்த்தார்கள்; மருந்து அளித்தார்கள். நோய் குறைந்தது போலத் தோன்றியது. ஆனால் காலம் வளர வளர அவருடைய வாழ்நாள் சுருங்கிக்கொண்டே வந்தது. கடைசியில் தந்தையார் உலகை விட்டுப் போய்விட்டார்.

தந்தையார் சௌக்கியமாக இருக்கிறார் என்று நினைத் திருந்த காலம் ஒன்று. அவர் அசௌக்கியமாகப் படுத்திருந்தா லும், இருக்கிறார் என்று சொன்ன காலம் ஒன்று. இப்போதோ

அந்தச் செல்வர், ''தந்தையார் போயினார்'' என்று அங்கலாய்க்கிறார். போனவர் வரப் போகிறாரா? அவர் போனவர் போனவர்தாம்.

அடுத்த முறை தாயினுடையது. அவள் தந்தையாருக்குப் பின் வாழ்ந்தாள். ஆனால் வாழும் வகையில் வாழ முடியுமா? அவளும் தளர்ச்சி அடைந்தாள்; நோயுற்றாள்; மாண்டாள். இப்போது அந்தச் செல்வர், ''தந்தையார் போயினார், தாயரும் போயினார்'' என்று சொல்லி அழுகிறார்.

இந்த அழுகை அவரோடு நிற்கிறதா? அவர் தந்தையார் தாம் படைத்த பெருஞ் செல்வத்தை அவருக்கு விட்டுச் சென்றார். அந்தச் செல்வத்தை இந்தச் செல்வர் தம்முடைய மக்களுக்கு விட்டுச் செல்லப் போகிறார். அது மட்டுமா? ''தந்தையார் போயினார்; தாயரும் போயினார்'' என்று சொல்லும் சொல்லையும் அந்த மக்களும் சொல்லத்தான் போகிறார்கள். ஒரு குடும்பத்தில் பரம்பரை பரம்பரையாகச் செல்வம் வருவது நிச்சயம் அன்று. ஆனால், ''தந்தையார் போயினார்; தாயரும் போயினார்'' என்ற அழுகை மாத்திரம் எல்லாக் குடும்பத்துக்கும் பரம்பரைச் சொத்தாக வந்து கொண்டே இருக்கிறது.

ஆதலின் தந்தை தாயை இழந்த அந்தச் செல்வரும் போகத்தான் போகிறார். அவருடைய குழந்தைகள் அவர் சொன்னதைப் போலவே, ''தந்தையார் போயினார்; தாயரும் போயினார்'' என்றே சொல்லப் போகிறார்கள்.

செல்வர் தாமும் போவார் என்று அறிவுள்ளவர்கள் தெரிந்து கொள்வார்கள்; அவர் உணர்வுடையவராக இருந்தால் இந்த உண்மையைத் தெரிந்துகொண்டு அதற்கு ஏற்ப நடந்து கொள்வார். ''தந்தையார் போயினார்; தாயரும் போயினார்'' என்று எல்லோருமே சொல்கிறார்கள். ஆனால், ''நாமும் போவோம்'' என்று எண்ணுகிறவர்கள் சிலரே. அவர்கள் எண்ணினாலும் எண்ணாவிட்டாலும் அவர்களுடைய நாட்களை எண்ணிக் கொண்டிருக்கிற பெரியவர் இருக்கிறார். அவர் யார் தெரியுமா?

சில காரியாலயங்களில் காலக் கணக்கர் (Time keeper) என்று ஓர் ஊழியர் இருப்பார். இன்ன இன்ன காலத்தில் இன்ன இன்ன வேலை நடைபெற வேண்டும், இன்ன இன்ன வண்டி புறப்பட வேண்டும் என்று நினைவுறுத்துவது அவர் தொழில். பழங்காலத்தில் அரசர்களுக்குக் காலத்தை நினைவுறுத்த நாழிகைக் கணக்கர் எஃ்ற பெயருடைய சிலர் அரண்மனைகளில் இருப்பார்கள். இன்ன நாழிகை ஆயிற்று; இன்ன வேலை செய்யவேண்டும் என்று குறிப்பார்கள். அதேபோல எல்லாருக்குமே வாழ்நாளைக் கணக்குப் பார்க்க ஒருவர் இருக்கிறார். காலக் கணக்கைப் பார்த்து அறிவதனால் அவரைக் காலதேவர் என்று சொல்வார்கள். வாழ்நாளின் இறுதிக்காலம் வந்தால் உயிரை உடம்பிலிருந்து கூறுபடுத்திப் பிரித்துச் செல்வதனால் கூற்று, கூற்றம், கூற்றுவனார் என்ற பெயர்களும் அவருக்கு வழங்கும்.

மற்றக் காலக் கணக்கருக்கும் இவருக்கும் முக்கியமான வேறுபாடு ஒன்று உண்டு. அவர்களெல்லாரும் காலத்தை அறிந்து மற்றவர்களுக்கு அறிவிப்பார்கள். இவரோ தாம் அறிவதோடு நிற்பார்; காலம் வந்தவுடன் தம் காரியத்தைச் செய்வார்; பிறருக்குத் தெரிவிக்க மாட்டார். யார் தடுத்தாலும் தம் காரியத்தை இவர் நிறுத்துவதே இல்லை.

ஆகவே, 'நாமும் போவோம்' என்று நினைத்தாலும் நினையாவிட்டாலும், ''அவரை நாம் கொண்டு போவோம். அதற்குரிய நாள் எது?'' என்று கூற்றுவனார் பார்த்துக் கொண்டே இருக்கிறார். அவருடைய கையிலே சூலம் இருக்கிறது. மூவிலை வேலாலே உயிரைக் கொத்திக் கொண்டு போகக் கூற்றுவனார் காலத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். உரிய காலம் வந்தால், செல்வர் வரமாட்டேன் என்று சொன்னாலும், ''முன்னாலே நீ ஏன் சொல்லி அனுப்ப வில்லை?'' என்று கேட்டாலும், ''உனக்குக் கோடிப் பொன் தருகிறேன்'' என்று சொன்னாலும், கெஞ்சினாலும் கொஞ்சினா லும், வெருட்டினாலும் தெருட்டினாலும் கூற்றத்தார் நிச்சயமாக அவரைக் கொண்டு போவார்.

இப்படி இருக்கிற உலகில் நீ எவ்வளவு காலம் வாழலாம் என்று எண்ணியிருக்கிறாய்? ஏதாவது குறிப்பிட்ட ஒரு

நாளிலாவது நிச்சயமாக வாழ்ந்திருக்கலாம் என்று நீ உறுதியுடன் சொல்ல முடியுமா? அறிவற்ற ஏழை நெஞ்சே! எந்த நாளிலாவது வாழ்வதற்கு விருப்பம் வைத்து ஆசைப்பட முடியுமா? யோசித்துப்பார்.

ஐயோ, பாவம்! இப்போது உண்மை விளங்குகிறதா? **'தந்தையார் போயினார்; தாயரும் போயினார்; தாமும் போவார்; ஒரு கூற்றத்தார் கொந்த, வேல் கொண்டு பார்க்கிறார்; கொண்டு போவார்; நாமும் போவோம்;** கூற்றத்தார் கையினின்றும் தப்பமுடியாது' என்பதை நன்றாக உணர்ந்தாயா? ஆம்; உணர்ந்து விட்டாயென்றே தோன்றுகிறது. உணர்ந்து அஞ்சுகிறாயே. இந்த அச்சம் வேண்டியதுதான். உயிருக்கு இறுதி வருமே என்ற அச்சம் உண்டானால்தான் அதற்குப் பரிகாரம் எது என்ற கேள்வி பிறக்கும்.

பரிகாரம் நான் சொல்கிறேன், கேள். அஞ்சாதே. கூற்றுவனாருக்கும் கூற்றுவன் ஒருவன் இருக்கிறான். காலத்துக்குள் அகப்பட்டவர்களிடம் காலனார் ஆற்றல் செல்லும்; காலத்துக்குள் அகப்படாதவன் ஒருவன் உண்டு. அவனிடம் கூற்றுவனார் ஆற்றல் செல்லாது. அப்பெருமான் திருவாரூரில் வாழ்கின்றான். அழகிய தண்ணிய ஆரூரைத் தெரியாதா உனக்கு? ஊரும் அழகு; பேரும் அழகு; தேரும் அழகு; நீரும் அழகு. தனக்குரிய எல்லாவற்றையும் அடியார்களுக்கு வழங்குகின்ற தியாகராசப் பெருமானை அடைந்தால் உய்ய லாம். வயலும் குளமும் நிறைந்த தண்ணிய ஆரூர் புகுந்தால் கூற்றுவனாருடைய வெப்பம் ஒழிந்துபோகும். கூற்றுவனாருக்கு அஞ்சினால்தான் பக்தி பிறக்கும். அந்தப் பயபக்தியினாலே ஆரூரனைத் தொழுது உய்யலாம். இது பற்றி வீணே மயக்கம் அடைய வேண்டாம். உறுதியாக இதை நம்பு. அஞ்சாதே.

தந்தையார் போயினார்; தாயரும் போயினார்;
தாமும் போவார்;
கொந்தவேல் கொண்டுஒரு கூற்றத்தார் பார்க்கின்றார்,
கொண்டு போவார்;
எந்தநாள் வாழ்வதற் கேமனம் வைத்தியால்?
ஏழை நெஞ்சே!
அந்தண்ஆ ரூர்தொழுது உய்யலாம்; மையல்கொண்டு
அஞ்சல் நெஞ்சே!

(அவர்களுடைய தகப்பனார் இறந்து போனார்; தாய்மாரும் இறந்து போனார்; அவர்களும் இறந்து போவார்கள். கொத்திக் கொண்டு போவதற்காகச் சூலத்தைக் கையிலே வைத்துக்கொண்டு கூற்றுவனார் காலத்தை எதிர்பார்த்து நிற்கின்றார்; உறுதியாக அவர் உயிரைக் கொண்டே போவார். இந்த நிலையில் எந்த நாளில் வாழ்வதற்காக மனசு வைத்திருக்கிறாய்? அறிவில்லாத நெஞ்சே! அழகிய குளிர்ச்சி பொருந்திய திருவாரூரைத் தொழுது உய்தியை அடையலாம்; ஆதலால் மயக்கத்தை மேற்கொண்டு அஞ்சாதே, நெஞ்சே!

தாம் என்றது மக்கள் அனைவரையும். கொந்த - கொத்த. வேல் - இங்கே சூலம். கூற்றத்தார் - கூற்றுவனார். மனம் வைத்தி - எண்ணுகிறாய்; விரும்புகிறாய். ஆல் : அசை. நெஞ்சையும் உறுப்புடையது போலமும் உணர்வுடையது போலவும் வைத்தே பேசும் மரபுபற்றி அதற்கும் மனம் கூறினார். ஏழை - அறிவிலி. அந்தண் - அழகும் தண்மையும் உடைய. ஆரூர் தொழுது என்றாரேனும் அங்கே எழுந்தருளியிருக்கும் சிவபெருமானைத் தொழவேண்டும் என்பதே கருத்து. உய்யலாம் - துன்பத்தினின்றும் நீங்கலாம். மையல் - மயக்கம். நெ ஞ்சே, நெஞ்சே என்று இரண்டு முறை விளித்தது, அதன்பால் உள்ள பரிவினால்.

நெஞ்சைப் பார்த்துச் சொல்வதுபோலச் சொன்னாலும். மக்கள் அனைவரும் உணரவேண்டும் என்ற கருணையினால் ஞான சம்பந்தப் பெருமான் இதனை அறிவுறுத்தினார்.)

★

பொருளானவன்

இறைவனுடைய தொண்டர்களில் எத்தனை வகை! எவ்வளவோ காலமாக அவனுடைய திருவருளை வேண்டி அன்பு செய்யும் தொண்டர்கள் அங்கங்கே இருந்தார்கள்; இருக்கிறார்கள்; இன்னும் இருப்பார்கள். அவர்களைக் கணக்கெடுக்க முடியுமா? அந்த அன்பர்களில் ஒவ்வொருவரும் வெவ்வேறு வகையில் வழிபட்டாலும் எல்லோருக்கும் இலக்காக இருப்பவன் இறைவன் ஒருவனேதான்.

இறைவனுடைய புகழைப் பாட்டினாற் சொல்வதில் தனி இன்பம் இருக்கிறது. பாட்டு மனத்தைக் குவிய வைப்பது; சிதறிய நினைவுகளிலே செல்லும் மனத்தை உருட்டித் திரட்டிப் பக்தி உணர்ச்சியை ஊட்டி இன்புற வைப்பது. சிதறிப் பறக்கும் பஞ்சை வேகத்தால் நூலாக்கினால் அது ஓர் ஒழுங்கான உருவம் பெறுவதோடு ஒரு பொருளைக் கட்டும் உறுதியுடையதாகிறது. மனமும் அத்தகையதுதான். பக்தி என்னும் வேகத்தால் முறுக்கு ஏறினால் மனம் சிதறாமல் ஒருமுகப்பட்டு இறைவனையே கட்டி அகப்படுத்தும் உறுதியைப் பெற்றுவிடுகிறது. அதற்கு இறைவன் புகழை இசையுடன் பாடுவது சிறந்த வழி.

இந்தத் தந்திரத்தை அறிந்தே பக்தர்கள் கூடிப் பாடுகிறார்கள்; பஜனை செய்கிறார்கள்; தனியே இருந்தும் பாடுகிறார்கள். 'இறைவனே பொருள், பிற யாவும் போற்றுதற் குரியன அல்ல' என்ற உள்ளத்தோடு அவர்கள் இறைவன் புகழை இசையில் அமைத்துப் பாடுகிறார்கள்.

பாடுவார் இசை.

★

இறைவன் புகழ் ஒன்றையே எண்ணி இசை பாடும் தொண்டர் ஒரு வகை. அவர்கள் மிகச் சிறந்தவர்கள்.

அவர்களுக்கு அடுத்தபடி உலகில் தமக்கு வேண்டிய பொருள்களைப் பெறுவதற்கு அவனை நாடுபவர்கள் இருக் கிறார்கள். அறம், பொருள், இன்பம் என்னும் மூன்றையும் இவ்வுலகத்திலும் வீட்டை மறுமையிலும் பெறவேண்டும் என்ற எண்ணத்தோடு அன்பு செய்கிறார்கள் அவர்கள். உலகில் யார் யாரையோ நச்சிப் பல பொருள்களைப் பெறுவதற்காகக் கும்பிட்டு வாழும் மக்கள் பலர் உண்டு. இவர்களோ தமக்கு வேண்டிய பல பொருளாகிய பயன்களையும் அருள்பவன் இறைவனே என்று நம்பி அவனையே அணுகுகிறார்கள். இவர்களும் பிறரைப் பொருளாக மதியாமல் இறைவனையே பொருளாக மதிப்பவர்கள்.

பல்பொருட் பயன்உகந்து அன்பால்
கூடுவார்.

★

மற்றொரு வகைத் தொண்டர்கள் இருக்கிறார்கள். அவர்கள் பயன் ஏதும் கருதாமல் பாடும் பக்தர்கள் அல்லர். பயன் கருதிப் போற்றும் அறநெறிச் செல்வரும் அல்லர். முதலில் உலகில் உள்ள மக்களையும் பண்டங்களையும் தமக்குத் துணையென்றும் கருவியென்றும் பற்றியிருந்தார்கள். நாளடைவில் அவரைப் பற்றுவது வீண் முயற்சியென்று தெரிந்து அந்தப் பற்றை அறுத்துக் கொண்டார்கள். இறைவன் திருவருள் ஒன்றே துணை என்று கொண்டு அவனை வழிபடும் நெறியைப் பற்றி அவனையே இப்போது தேடுகின்றார்கள். இறைவனையன்றி வேறு பொருள் இல்லை என்ற துணிவு இவர்களுக்கும் வந்துவிட்டது.

.......துணைக் கொண்டதம் பற்றுஅறப் பற்றித்
தேடுவார்.

★

இப்படி இன்னும் பலவகையில் அவனையே பொருளாகக் கொண்டு வழிபடுவோர் அளவிறந்தோர். அவர்கள் யாவருக்கும் பரம்பொருளாய், வழிபடு பொருளாய், லட்சியப் பொருளாய், மதிக்கத்தக்க பொருளாய், நினைந்து வாழ்த்தி வழிபட்டு அடையத்தக்க பொருளாய், கற்ற கல்விக்குப்

பொருளாய், கேட்ட கேள்விக்குப் பொருளாய், எழுதாக் கிளவியின் பொருளாய், எழுதுங் கிளவியின் பொருளாய், சொல்லின் பொருளாய், அழியாப் பொருளாய், அளவிடாப் பொருளாய், பிரபஞ்சத்தின் பொருளாய்த் திகழ்பவன் இறைவன். இசை பாடுவாருக்குப் பொருளானான் அவன்; பல்பொருட் பயன் உகந்து அன்பால் கூடுவார் பொருளானவன் அவன்; துணைக்கொண்ட தம் பற்று அறப் பற்றித் தேடுவார் பொருளானவன் அவன்.

பாடு வார்இசை, பல்பொருட் பயன்உகந்து அன்பால்
கூடு வார், துணைக் கொண்டதம் பற்றுஅறப் பற்றித்
தேடு வார்பொருள் ஆனவன்.

(தன்னுடைய புகழைப் பாட்டினால் பாடுவாருக்கும், பல பொருளாகிய பயனை விரும்பி அன்பினால் ஒன்றுபடுவாருக்கும், துணையாகப் பற்றிக் கொண்ட தம் பழைய பற்றெல்லாம் அற்றுப் போகத் தன்னைப் பற்றித் தேடுவாருக்கும் பொருளானவன்.

இசை பாடுவார் என்க. இசை - புகழ்; சங்கீதமும் ஆகும். பாடுவார் என்றமையாலே பாட்டுப் பெறப்படுவதால் இசையென்பதற்குப் புகழென்று பொருள் கொள்வது சிறப்பு. பல்பொருட் பயன் - பல பொருள்களாகிய பயன்; பல பொருளென்றது, அறம் பொருள் இன்பம் வீடு என்பவற்றை; இவற்றை உறுதிப் பொருள்கள் என்று கூறுவது வழக்கம். உகந்து - விரும்பி. கூடுவார் - தம்முளே கூடுவார். துணைக்கொண்ட - துணையாகக் கொண்ட. பற்று அற - முன்னைப் பற்றுக்களெல்லாம் நீங்க. பற்றி - இப்போது இறைவனைப் பற்றி. தேடுவார் - இறைவனுடைய முழுத்தன்மையையும் உணரும் பொருட்டுத் தேடுபவர். பொருளானவன் - இலக்காக இருப்பவன்.)

★

இவ்வாறு பலவகைத் தொண்டர்களுக்கும் பொருளாக நின்ற இறைவன் தேவூர் என்னும் திருத்தலத்தில் எழுந்தருளியிருக்கிறான். சோழ நாட்டுத் தலம் அது; பொழில்கள் நெருங்கியது. அங்கே சிவலிங்கப் பெருமானாகவும் நடராசனாகவும் இறைவன் தோற்றம் அளிக்கிறான். சிதம்பரத்தில் மாத்திரம் ஆடுகிறவன் அல்ல அவன். எல்லாத் தலங்களிலும் எல்லோருடைய உள்ளங்களிலும் ஆடுகிறவன்.

...செறிபொழில் தேவூர்
ஆடுவான்.

(மரங்கள் நெருங்கி யடர்ந்த சோலைகளையுடைய தேவூர் என்னும் தலத்தில் திருக்கூத்தியற்றுபவன்.)

பலவகைத் தொண்டர்களுக்குப் பொருளானவனும், தேவூரில் ஆடுவானுமாகிய சிவபெருமானுடைய திரு வடியையே பற்றாகப் பற்றினால் அப்பால் அத்தகையவர் களுக்கு எவ்விதமான அல்லலும் இல்லையாகிவிடும். அன்பினால் இறைவன் அடியைப் பற்றினாருக்குப் பிற பற்று ஒன்றும் இல்லாமையால் துன்பம் இல்லை; வேறு அவா ஒன்றும் இன்மையால் அல்லல் இல்லை.

"ஆசை அறுமின்கள் ஆசை அறுமின்கள்
ஈசனோ டாயினும் ஆசை அறுமின்கள்
ஆசைப் படப்பட ஆய்வரும் துன்பம்
ஆசை விடவிட ஆனந்தம் ஆமே"

என்பர் திருமூலர். இறைவன் அடியை அடைந்தவர்களுக்குப் பற்றும் அவாவும் பறிபோவதனால் துன்பம் சிறிதளவும் அணுகாது.

அடியைச் சேர்வதாவது அதனை இடைவிடாது நினைந்து வாழ்தல்.

ஆடு வான்அடி அடைந்தனம் அல்லல்ஒன்று இலமே.

(ஆடுபவனுடைய திருவடிகளை அடைந்தோம்; அதனால் துன்பம் ஒன்றும் இல்லோமாயினோம்.

அடி அடைதல் - திருவடியை இடைவிடாது தியானித்தல். "மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்" என்ற குறட்பாவின் உரையில், 'சேர்தல் - இடைவிடாது நினைத்தல்' என்று பரிமேலழகர் எழுதியிருப்பதைக் காண்க. ஒன்றும் என்பது ஒன்று என நின்றது; உம்மை தொக்கது.)

★

'பல காலமாக அன்பர்கள் பாடியும் கூடியும் தேடியும் வழி காட்டினார்கள். இறைவனே பொருள் என்று வாழ்ந்தார்கள். அவன் நாம் காணாத இடத்திலே இருக்கிறான்,

அடைய முடியாத சூழலில் இருக்கிறான் என்று அஞ்சாமல் தேவூரில் ஆடுவான் என அறிந்தோம். முன்னைப் பெரியோர் காட்டிய வழியே, ஆடுவான் அடியை அடைந்தோம். அதன் பயனாக இப்போது அல்லல் ஏதும் இன்றி வாழ்கின்றோம்' என்று பெருமிதத்தோடு பேசுகிறார் சம்பந்தர்.

பாடு வார்இசை, பல்பொருட் பயன்உகந்து அன்பால்
கூடு வார், துணைக் கொண்டதம் பற்றறப் பற்றித்
தேடு வார்பொருள் ஆனவன், செறிபொழில் தேவூர்
ஆடு வான்அடி அடைந்தனம்; அல்ல ்ஒன்று இலமே.

(பாடுவார், கூடுவார், தேடுவார் ஆகியவர்களுக்குப் பொருள் ஆனவனும் ஆடுவானுமாகிய பெருமானது அடியை அடைந்தனம்; அதனால் அல்லல் இலம்.)

★

வருமுன் காத்தல்

''ஐயோ பாவம்! இத்தனை இளவயசிலே இறந்து விட்டானே! காளை போல வளர்ந்தான். என்ன என்னவோ செய்யப் போகிறான் என்று அவன் தாய் தந்தையர்கள் நம்பியிருந்தார்கள். எல்லாம் பாழாயின!'' என்று ஒரு வீட்டில் இருந்த கட்டிளங் காளை இறந்து பட்டதைக் குறித்து ஒருவர் வருந்துகிறார். ஆனால் அடுத்த வீட்டிலே நெடுநாட்களாக வாழும் மனிதர் ஒருவர் இருக்கிறார். ''கிட்டத்தட்ட நூறு இருக்கும் இந்தக் கிழத்துக்கு'' என்று சொல்கிறார்கள்; ''அது சோற்றுக்குக் கேடாய் இன்னும் வாழ்கிறது'' என்று ஏசுகிறார்கள்.

உலகின் போக்கே விசித்திரம். இளைஞன் இறந்தபோது அவன் நெடுங்காலம் வாழவில்லையே என்று அங்கலாய்க்கிறது. நெடுங்காலம் வாழ்ந்தவனைப் பார்த்து, ''இவன் இன்னும் இறந்து போகவில்லையே!'' என்கிறது. இவன் என்றுகூடச் சொல்வதில்லை; இது என்று சொல்கிறது. உயர்திணை மனிதன் முதுமை வந்தால் உலகத்தின் கண்களுக்கு அஃறிணையாகி விடுகிறான்!

காரணம் என்ன? முதுமை மனிதனுடைய ஆற்றலைக் குறுக்கி விடுகிறது. நரையும் திரையும் மூப்பும் சாக்காட்டுக்கு முன் தோன்றும் அடையாளங்கள். முதுமை ஏற ஏற மனிதனுக்குப் பொறிகளின் ஆற்றல் குறைகிறது. பிறருடைய உதவியை மிகுதியாக எதிர்பார்க்க நேர்கிறது. ஒருவன் பிறருக்கு உதவியாக இருக்கும் வரையில் உலகம் அவனை மதிக்கும். பிறர் உதவியை எதிர்பார்த்தால் அவனை அவமதிக்கும். பிறர் உதவியினால் வாழ்கிறவர்கள் இருவகையினர்: குழந்தைகளும் முதியவர்களும். குழந்தைகள் வளர்ந்து தமக்கு உதவுவார்கள் என்ற நம்பிக்கையால் உலகம் அவர்களைப் பாதுகாக்கிறது.

முதியவர்களால் இனி நமக்கு உதவியில்லை என்று தெரிவதனால் அவர்களைப் புறக்கணிக்கத் தொடங்குகிறது.

ஆதலின் மனிதர்களைத் துணையென்று நம்புவதில பயன் இல்லை. பெரிய துணை வேறு ஒன்றை நாம் தேடிக்கொள்ள வேண்டும். முதுமையை அடைந்தாலும் அடையாவிட்டாலும் பாதுகாப்பாக இருக்கக்கூடிய ஒரு துணையைத் தேடிக்கொள்ள வேண்டும். அதனை விரைவிலே தேடிக்கொள்ள வேண்டும். முதுமை வரும்போது பார்த்துக் கொள்ளலாம் என்று இருந்தால் அது இயலாது. வருமுன் காப்பதுதான் அறிவுடையாருக்கு அழகு. ஞான சம்பந்தர் இதனை அறிவுறுத்துகிறார்.

★

முதுமைப் பருவம் வந்தால் உடம்பு தளர்கிறது; பொறிகள் தளர்கின்றன; நோய்கள் எளிதிலே பற்றிக் கொள்கின்றன. எத்தனை கூர்மையான கண்ணுடையவராக இருந்தாலும் அது வரவர மங்கிப் போகிறது; நாளடைவில் பார்வையை இழந்து விடுகிறது. ஐந்து இந்திரியங்களில் சிறந்தது கண். அது போயிற்றென்றால் அப்புறம் வாழ்க்கையில் என்ன பயன் கிடைக்கப் போகிறது? கண்ணைப் போலவே, காது மூக்கு எல்லாம் தம்முடைய சக்தியை மெல்ல மெல்ல இழந்து வருகின்றன. சுட்ட கத்தரிக்காயைப் போலத் தோல் சுருங்கிவிடுகிறது.

இந்த நிலையில், இளைத்துப் போன வேந்தனுடைய பலவீனத்தை அறிந்து படையெடுக்கும் பகைவரைப்போல ஒன்றின்மேல் ஒன்றாகப் பல நோய்கள் வந்து கப்பிக் கொள் கின்றன. நோய் மிகுதியாக ஆக நாக்குக்கு ருசி தெரிவதில்லை. உணவே வேண்டியிருப்பதில்லை.

இப்படி நாளடைவில் நோய்கள் இந்த உடம்பைக் குலைத்துத் தம் போக்கிலே இழுத்தடித்து அழித்து விடுகின்றன. இத்தகைய காட்சியை நாம் பலரிடத்தில் பார்க்கிறோம். நமக்கும் இப்படி நேர்ந்தாலும் நேரலாம். ஆதலின் அதற்கு முன்பே ஏற்ற பாதுகாப்பைத் தேடிக் கொள்ள வேண்டும்.

கண்கள் காண்பு ஒழிந்து மேனி கன்றிஒன்ற லாதநோய்
உண்கிலாமை செய்து நும்மை உய்த்துஅழிப்ப தன்முனம்.

(கண்கள் காண்பதை நீங்கி, மேனி கன்றினாற் போலச் சுருங்கி, ஒன்றல்லாத பல நோய்கள் உண்ணும் ஆற்றல் இல்லாமையை உண்டாக்கி உங்களைத் தம் போக்கிலே செலுத்தி, அழிப்பதற்கு முன்னால்.

காண்பு - காணுதல். ஒழிந்து - கெட்டு. கன்றி - திரைந்து. ஒன்று அலாத நோய் என்றது பல நோய்கள் என்பதைப் புலப் படுத்தியது. உண்கிலாமை செய்து - உண்ணும் ஆற்றலில்லாமையை உண்டாக்கி. உய்த்து - செலுத்தி; நாம் நம் விருப்பப்படி செல்வதை விட்டு நோய்கள் தம் போக்கிலே நம்மைப் போகும்படி செய்கின்றன. அழிப்பதன் முனம் - இறுதியிலே மரணம் அடையச் செய்வதற்கு முன்னாலே.)

★

பாதுகாப்பு வேண்டியதுதான். அது எங்கே இருக்கிறது? அதைப் பெற என்ன செய்ய வேண்டும்?

''நீங்கள் சீகாழியை அடையுங்கள்'' என்று உபதேசிக்கிறார் ஆளுடையபிள்ளையார்.

காழி சேர்மினே.

எங்கும் வெள்ளம் சூழும்போது மேடான இடத்துக்குச் சென்று தங்களைப் பாதுகாத்துக் கொள்வது உலக இயல்பு. ''முதுமை வந்து நோயால் துன்புற்று மரணம் என்னும் பெருவெள்ளம் நம்மை அடித்துக் கொண்டு போவதற்குமுன் இந்த மேடான இடத்துக்குப் போய்விடுங்கள்'' என்று சொல்கிறார் சம்பந்தர். அது உண்மையில் பிரளயத்திலே மிதந்த இடந்தானே?

காழிக்குப் பெருமை வந்தது அங்கே இறைவன் எழுந்தருளியிருப்பதனால்தான். ''எமக்குத் தலைவராகிய கடவுள் அங்கே இருக்கிறார். அது பாதுகாப்பான இடம். அங்கே போய்ச் சேருங்கள்'' என்று கூறுகிறார் சம்பந்தர்.

எம் கருத்தர் காழி சேர்மினே.

அந்தக் கருத்தர் தம் செயலாலும் கோலத்தாலும் வேறு யாருக்கும் இல்லாத சிறப்புடையவர். கண்கள் இருந்தும் காணமுடியாமற் செய்வது முதுமைப் பருவம். வலிமையுள்ள

உடலில் உள்ள கண்கள் பார்த்தாலும் அது பார்க்கும் பார்வை உண்மைப் பார்வை அன்று. புறக் கண்ணாற் பார்க்கும் பார்வையைவிட அகக் கண்ணாகிய அறிவினாலே காணும் பார்வையே சிறப்பானது.

> "முகத்திற் கண்கொண்டு பார்க்கின்ற மூடர்காள்
> அகத்திற் கண்கொண்டு பார்ப்பதே ஆனந்தம்"

என்று திருமூலர் சொல்வார்.

கண் பார்வையை இழக்கச் செய்யும் முதுமையினின்றும் பாதுகாப்பை அடையப் பார்வை சிறப்பாக உள்ள ஒருவனை அடைய வேண்டும். இறைவன் எல்லோரையும் போல இரண்டு கண்களைப் பெற்றதோடு, யாருக்கும் இல்லாத மூன்றாவது கண் ஒன்றை உடையவன். அது ஞானக்கண்.

> "...........இமையாத முக்கண்
> மூவரிற் பெற்றவன்"

என்று மணிவாசகப் பெருமான் போற்றுவார். 'கண்கள் மூன்றுடைய கருத்தன்' சிவபெருமான்; ஞானக்கண் படைத்தவன். அவன் காட்ட மற்றவர்கன் காணுகிறார்கள். ஆகவே 'கண்கள் காண்பு ஒழிந்து' முதுமை எய்தும் மக்களுக்கு கண்கள் மூன்றுடைய கருத்தன் பாதுகாப்பாக இருப்பான்.

★

உடம்பு தளர்ந்து நோய் வந்து சோறு வேண்டி யிருக்காமல் துன்புறுவது முதியவர்களின் இயல்பு. தேவர்கள் கூட ஒரு காலத்தில் அப்படித்தான் இருந்தார்கள். அவர்கள் அதை மாற்றவும், சாவாமலே இருக்கவும் மருந்து தேடினார்கள். உலகத்திலுள்ள மூலிகைகளையெல்லாம் தொகுத்துக் கொண்டு வந்து கசக்கிப் பாற்கடலிலே பிழிந்தார்கள். பிறகு அதைக் கடைந்தால் அமுதம் வருமென்று எண்ணிக் கடைந்தார்கள். அமுதம் கிடைத்துவிட்டால் நரை திரை மூப்புச் சாக்காடு பசி தாகம் ஒன்றும் இல்லாமல் வாழலாம் என்பது அவர்கள் எண்ணம். அமுதம் எளிதிலே கிடைப்பதாக இல்லை. அதற்கு முன்பு அவர்கள் எதிர்பாராதபடி பாற்கடலிலிருந்து ஆலகால

விடம் எழுந்தது. அந்த நஞ்சைக் கண்டு தேவர்கள் வெருண்டனர். அமரர் அத்தனை பேரையும் ஒரு கணத்திலே தன் காற்று வீசினாலே சாகும்படி செய்யவல்ல நஞ்சு அது. அது கண்டு வெருவி இறைவனிடத்திலே ஓடினார்கள்; அலறிப் புடைத்து அழுதார்கள். இறைவன் கருணை பூத்து அந்த நஞ்சை எடுத்து அயின்றான். தேவர் உயர்ந்தனர். பின்பு அமுது கடைந்து உண்டனர். நோயும் மூப்பும் பிற அல்லல்களும் நீங்கி ஒளி படைத்த மேனியினர் ஆனார்கள். விண்ணிலே இப்போது குலாவிக்கொண்டிருக் கிறார்கள். அவர்கள் இப்படி மேனி ஒளிபெற்றுக் குலாவுவதற்குக் காரணம் இறைவன் நஞ்சமுண்ட அருட்செயல்தான். அத்தகைய அருளைச் செய்தவன், மேனி கன்றி நோயால் துன்புறும் இயல்புடைய மக்களைக் காப்பாற்றமாட்டானா? ஆகவே, அவன் உள்ள இடமாகிய சீகாழிக்குச் சென்று அவனைப் புகலடையுங்கள். உங்களுக்கு இன்பம் உண்டாகும்.

> விண்குலாவு தேவர்உய்ய வேலைநஞ்சு அமுதுசெய்
> கண்கள்மூன்று உடையஎம் கருத்தர்காழி சேர்மினே.

(விண்ணுலகத்தில் மகிழ்ச்சியோடு குலாவுகின்ற தேவர்கள் உயிர் பிழைப்பதன்பொருட்டு, பாற்கடலிலே தோன்றிய ஆலகால விடத்தை உண்ட, மூன்று கண்களை உடைய எம்முடைய தலைவருக்குரிய சீகாழியை அடையுங்கள்.

விண் - தேவர் உலகம். உய்ய - பிழைக்க. வேலை - கடல்; இங்கே பாற்கடல். அமுதுசெய் - உண்டருளிய. அமுதுசெய் கருத்தர், உடைய கருத்தர் என்க. காழி - சீகாழி. சேர்மின் என்றது, அடைந்து வழிபடுங்கள் என்ற கருத்தை உடையது.)

★

தேவர்கள் பைத்தியக்காரச் செயல் செய்தார்கள். அமுதம் டைவதற்கு முன்பே இறைவனிடம் வந்து, ''தேவரீர் துணையிருந்து அமுதம் எங்களுக்குக் கிடைக்கும் வண்ணம் திருவருள் புரியவேண்டும்'' என்று கேட்கவில்லை. தம்முடைய ஆற்றலாலே எல்லாம் செய்து விடலாம் என்ற அகந்தையோடு கடைந்தார்கள். நஞ்சம் வந்தது. அது தோன்றிய போதுதான் இறைவன் நினைவு அவர்களுக்கு வந்தது.

அவர்களைப் போலத் துன்பம் வரும்போது அவனை நாடாமல் அதற்கு முன்பே அவனை நாடிப் பணியுங்கள் என்பதையும் குறிப்பாக நினைவுபடுத்துகிறார் காழிப்பிரான். ''சாகுங்காலத்தில் சங்கரா சங்கரா என்று சொல்லுதல் அரிது. வாழுங் காலத்திலே சீகாழி சென்று பாதுகாப்பை முன் கூட்டியே தேடிக் கொள்ளுங்கள்'' என்று அறிவுறுத்துகிறார்.

கண்கள்காண்பு ஒழிந்துமேனி கன்றிஒன்ற லாதநோய்
உண்கிலாமை செய்துநும்மை உய்த்தழிப்ப தன்முனம்
விண்குலாவு தேவர்உய்ய வேலைநஞ்சு அமுதுசெய்
கண்கள்மூன்று உடையஎம் கருத்தர்காழி சேர்மினே.

★

என்ன புண்ணியம் செய்தனை!

நெஞ்சமே! உன்னை இழிவாக அல்லவா பலர் பேசுகிறார்கள்? நானும் அப்படிப் பேசியதுண்டு. ஆனால் இப்போது கிடைத்திருக்கும் பாக்கியத்தை நினைத்தால் நீ என்ன விதமான புண்ணியத்தைச் செய்திருக்க வேண்டும் என்று தோற்றுகின்றது, பொதுவான புண்ணியமாக இருந்தால் இந்தப் பேறு கிடைத்திராது. ஏதோ மிகச் சிறப்பான புண்ணியம் செய் திருப்பதனால்தான் இந்த இன்ப அநுபவம் கிடைத்திருக்கிறது.

ஒரு நாளா, இரண்டு நாளா? எத்தனை காலம் நீ என்னோடு வாழ்கிறாய்! எத்தனை இடங்களில் நான் பிறந்து வாழ்ந்தாலும் அங்கெல்லாம் என்னோடு ஒட்டி வாழ்கிறாய்! பெரிய கடல் சூழ்ந்த வையத்தில் இடப்பரப்புக்குப் பஞ்சமா? இந்த விரிந்த உலகத்தில் எல்லை காண்பதற்கரிய காலமாக உன்னுடன் நான் வாழ்கிறேன். இத்தனை காலத்திலும் நீ என்ன என்னவோ செய்திருக்கிறாய். நீ நல்லது செய்தால் நான் வாழ்வேன்; அல்லது செய்தால் தாழ்வேன். நல்வினை பல செய்திருத்தலினால்தான் மானிடப் பிறவி கிடைத்திருக்கிறது. எம்பெருமானை நினைந்து வாழும் வாழ்க்கை கிடைப்பதற்குப் பல காலமாக முன்பு நல்வினை பல செய்திருக்க வேண்டும்.

ஆனால் இப்போது கிடைத்திருக்கும் பாக்கியத்துக்கு இந்த நல்வினைக்குள்ளும் மிகச் சிறப்பான புண்ணியச் செயல்களே காரணமாக இருக்கவேண்டும்.

'முன்பு நீ செய்த நல்வினைப் பயன்களுள்ளே என்ன புண்ணியஞ் செய்தனை!' என்று ஞான சம்பந்தப் பெருமான் தம் நெஞ்சைப் பார்த்துச் சொல்கிறார்.

என்ன புண்ணியஞ் செய்தனை நெஞ்சமே!
இருங்கடல் வையத்து
முன்னை நீசெய்த நல்வினைப் பயனிடை?

இந்த எண்ணம் திருவலஞ் சுழியென்னும் திருத்தலத்துப் பெருமானைத் தரிசித்து இன்புற்றபோது தோற்றியது. சோழ நாட்டில் காவிரிக்குத் தென் கரையில் இருப்பது திருவலஞ்சுழி. அங்கே திருஞான சம்பந்தர் வந்து சில நாட்கள் தங்கியிருந்தார். அடியார்களோடு அந்த அழகிய தலத்தில் நாள்தோறும் வழிபட்டதனால் உண்டான இன்பம் இன்னதென்று சொல்ல முடியாத அளவில் நிரம்பியிருந்தது.

''கூடும் அன்பினிற் கும்பிட லேஅன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கிய''

சம்பந்த பெருமானுக்கு அந்த இன்பம் பேரின்பத்தோடு ஒத்ததாக இருந்தது. அத்தகைய இன்பத்தைப் பெறுவதற்குப் பலகாலம் புண்ணியச் செயல் பல புரிந்திருக்க வேண்டும் என்று தோற்றியது. அதனால் நெஞ்சை விளித்து இவ்வாறு சொல்லத் தொடங்கினார்.

திருவலஞ்சுழி காவிரியின் அழகிய கரையில் அமைந்த தலம். பொன்னும் மணியும் முத்தும் கொழிக்கும் காவிரியாறு அங்கே கோயிலை வலஞ் செய்வதுபோல வளைந்து வருகிறது. மலைமேல் விளையும் மணியையும் பொன்னையும் அரித்துக்கொண்டு வரும் ஆறு அல்லவா அது? அவற்றோடு யானைக் கொம்பின் முத்தும், மூங்கிலின் முத்தும் மலைப் பகுதியிலிருந்து கொண்டு வருகிறது. அந்த அழகிய காட்சியில் உள்ளத்தைப் பறிகொடுத்து, அப்பால் வலஞ்சுழி வாணனாகிய இறைவனைத் தரிசித்தார்கள் அன்பர்கள். முழுமணியும் தரளங்களும் மன்னும் காவிரியானது சூழ்கின்ற வலஞ்சுழி வாணனை வழிபட்டார்கள். எப்படி வழிபட்டார்கள்?

இறைவனுடைய திருநாமத்தைப் பலமுறை சொன்னார் கள்; வாயாரப் பன்னினார்கள். அதோடு நிற்கவில்லை. அவர்கள் உள்ளத்தில் எழுந்த ஆதரம் - அன்பு - மிகுதியானது. ஆதலால் அவன் திருநாமத்தைப் பலகால் சொன்னதோடு அவர்களுக்கு மன நிறைவு உண்டாகவில்லை. அவனுடைய புகழை விரித்துச் சொன்னார்கள்; பாடினார்கள். வாயாரத் திரு நாமத்தைச் சொல்லியும் வாயார ஏத்தியும் வாயாரப் பாடியும் வழிபட்டார்கள்.

எல்லோருக்கும் இப்படிச் செய்ய வராது. இறைவனை வழிபடத் துணிவு பிறப்பதே அருமை. அதன்பின் அவன் சந்நிதியில் வந்து நின்றால் வாய் திறந்து அவனைப் பாடுவதற்கு நாணம் தடை செய்யும். பிரிந்து நின்ற தாயைக் கண்டதும் குழந்தை, ''அம்மா!'' என்று கத்தவில்லையா? அது நாண மடைந்து வாயை மூடிக்கொண்டா இருக்கிறது? அன்பு எத்தனை முறுகியதோ, அத்தனை முறுகியதாக இறைவன்பால் அன்பு இருந்தால், நாணமின்றி ஆண்டவன் சந்நிதியில் வாய் திறந்து அவனைத் துதிக்கும் இயல்பு அமையும்; நம் குறையைச் சொல்லி அழத் தோன்றும்.

ஆகவே, வாயார அவன் திருநாமத்தைப் பன்னுவதற்குத் தைரியம் வேண்டும்; அதைவிட அதிகமான தைரியம் ஏத்து வதற்கு வேண்டும்; அதைவிடப் பின்னும் மிகுதியான துணிவு பாடுவதற்கு வேண்டும். அறியாதார் இவ்வாறு பாடிப் பணியும் பக்தர்களைக் கண்டு ஏசலாம்; சிரிக்கலாம். அவற்றைப் பொருளாக எண்ணுவதானால் அத்தகையவர்களின் அன்பு உயர்ந்ததாகாது.

''நாடவர் பழித்துரை பூணது வாக''

என்று மாணிக்க வாசகர் சொல்லுகிறார். பிறர் பழிப்பையும் புகழையும் எதிர்பாராமல் இறைவனைப் பன்னுதலும் ஏத்துத லும் பாடுதலும் வழிபடுதலும் அன்பர்களுக்கு இயல்பு.

ஞான சம்பந்தப் பெருமானும் அவருடன் வந்த தொண்டர்களும் வலஞ்சுழி வாணனை வாயாரப் பன்னினார் கள்; ஆதரித்து ஏத்தினார்கள்; வாயாரப் பாடினார்கள். ஒருவரேனும் பிறர் ஏதேனும் சொல்வார்களே என்று எண்ணி நாணவில்லை. அப்பனுடைய சந்நிதானத்தில் குழந்தைகள் தம் குறையைச் சொல்லிக் கொண்டால் அதற்குத் தடை செய்வார் யார்?

இந்த வழிபாட்டினால் பெற்ற இன்பம் தனிச் சிறப் புடையதாக இருந்தது. அந்த இன்பத்தைப் பெற்ற தொண்டர் கூட்டத்தினர் அனைவரையும் நினைந்து ஞான சம்பந்தர் பாடலானார்.

''நெஞ்சே! வலஞ்சுழி வாணனை வழிபடப் பெற்றோம்; அப்படிப் பெற்றது முன்னைப் புண்ணியத்தின் பயன். இப்படிச் செய்ததற்கு ஒரு பயன் உண்டு என்று எண்ண வேண்டாம். இதுவே பெரும் பயன். இதுவே இன்பம் பயப்பது. இதுவே முன் செய்த பெரும் புண்ணியத்தின் சிறந்த பயன். இது எல்லோருக்கும் எளிதிலே கிடைக்காது'' என்றெல்லாம் நினைக்கும்படி திருப்பாட்டுப் பாடினார்.

என்ன புண்ணியம் செய்தனை, நெஞ்சமே!
இருங்கடல் வையத்து
முன்னை நீபுரி நல்வினைப் பயனிடை?
முழுமணித் தரளங்கள்
மன்னு காவிரி சூழ்திரு வலஞ்சுழி
வாணனை வாயாரப்
பன்னி ஆதரித்து ஏத்தியும் பாடியும்
வழிபடும் அதனாலே.

(நெஞ்சே! முழுமையாகிய மாணிக்கமும் முத்துக்களும் தங்கும் காவிரியாறு வளையவரும் திருவலஞ்சுழியிலே எழுந்தருளியிருக்கும் சிவபெருமானை, வாயாரத் திருநாமத்தைச் சொல்லி, அன்பு செய்து புகழ் பரவியும், பாடியும் வழிபடும் அந்த இன்பம் தரும் அநுபவத்தாலே, இந்தப் பெரிய கடல் சூழ்ந்த உலகத்தில் முன்பு நீ செய்த நல்ல வினையின் பயனாகிய புண்ணியங்களுக்குள்ளே அதற்குக் காரணமாக என்ன புண்ணியத்தைச் செய்தாய்?

என்ன - எத்தகைய. புண்ணியம் - புண்ணியச் செயல். இருங்கடல் - பெரிய கடல் சூழ்ந்த. நல்வினைப் பயனிடை - நல்ல பயனையுடைய வினையிடை என மாற்றிப் பொருள் கொள்க; நல்ல பயனைத் தருகின்ற செயல்களுக்குள்ளே. பயனிடை என்ன புண்ணியஞ் செய்தனை என்று கூட்ட வேண்டும். முழுமணி - துளைக்காத மணி. பிறக்கும் இடங்களாற் பலவாகும் முத்துக்களைத் தரளங்கள் என்று பன்மையாற் கூறினார். வாணன் - வாழ்நன்; எழுந்தருளியிருக்கும் சிவபெருமான். வாயார என்பதைப் பன்னு தலுக்கும் ஏத்துதலுக்கும் பாடுதலுக்கும் கூட்டுக. ஆதரித்து - விரும்பி. ஏத்துதல் - புகழ் கூறுதல். அதனால் என்றது பன்னுதல் முதலிய வற்றைத் தொகுத்துச் சுட்டியது. அந்த இன்ப விளைவு உண்டானதால் அதற்குக் காரணமாக இருந்த புண்ணியம் யாது என்று வினாவினார்.

நல்வினைப் பயனிடை வழிபடும் அதனாலே, என்ன புண்ணியஞ் செய்தனை என்று கூட்டியும் பொருள் கொள்ளலாம். முன்பு நீ செய்த நல்ல வினைகளின் பயன்களை இப்போது அநுபவித்து வருகிறோம். அவற்றுள் வலஞ்சுழி வாணனை வழிபடும் அநுபவம் மிகச் சிறந்தது. அதற்குக் காரணமான புண்ணியச் செயல் யாது? - இவ்வாறு அந்த முடிவுக்கு ஏற்பப் பொருள் விரித்துக் கொள்ளலாம்.)

★

> "தவமும் தவமுடையயோர்க் காகும் அவம்அதனை
> அஃதிலார் மேற்கொள் வது"

என்னும் திருக்குறளின்படி இறைவனுடைய திருவடிகளை வணங்கும் நிலை வருவதற்கும் புண்ணியம் செய்திருக்க வேண்டும்.

காவிரி இத்தலத்துக்கு அருகே வருகையில் ஒரு பிலத்திற்குள் சென்று விட்ட்து. ஏரண்ட முனிவர் என்னும் பெரியார் அந்தப் பிலத்தில் இறங்கித் தம்மையே பலியாக்கிக் கொள்ள, காவிரி மேலே வந்து வலமாகச் சுழித்துக் கொண்டு போனதால் இத்தலத்துக்குத் திருவலஞ் சுழி என்ற பெயர் அமைந்ததென்பர்.

★★★

சிற்றம்பலம்

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

முகவுரை

சைவத் திருமுறைகள் பன்னிரண்டிலும் முதல் மூன்று திருமுறைகள் திருஞானசம்பந்தப் பெருமான் திருவாய் மலர்ந் தருளியவை. இந்த மூன்று திருமுறைகளிலும் இப்போதுள்ள பதிகங்கள் 383. இவற்றில் முதல் திருமுறையில் 136 திருப்பதி கங்களும், இரண்டாம் திருமுறையில் 122 பதிகங்களும், மூன்றாந் திருமுறையில் 125 பதிகங்களும் அடங்கியுள்ளன. திருமுறைகண்ட புராணத்தில் நம்பியாண்டார் நம்பிகள்,

''பண்புற்ற திருஞான சம்பந்தர் பதிகம்முந்நூற்
றெண்பத்து நான்கினால் இலங்குதிரு முறைமூன்று'' (25)

வகுத்ததாக ஒரு செய்தி இருக்கிறது. 384 பதிகங்கள் என்று அங்கே காணப்படினும் அடங்கன் முறையில் 383 பதிகங்களே இருக்கின்றன. விட்டுப்போன பதிகம் இன்னதென்று தெரியவில்லை. அரசாங்கத்தின் முயற்சியால் கல்வெட்டுகளை ஆராயும் ஆராய்ச்சி தொடங்கியபிறகு திருவிடைவாய் என்னும் தலத்துக்குரிய திருஞானசம்பந்தர் தேவாரப் பதிகம் ஒன்று கல்வெட்டிலிருந்து கிடைத்தது. அது நம்பியாண்டார் நம்பிகள் வகுத்த பதிகங்களில் அடங்காததென்றே தோன்றுகிறது. இராசராச சோழனும் நம்பியாண்டார் நம்பிகளும் தில்லைத் திருக்கோயிலில் தேவாரம் எழுதியிருந்த ஏட்டுச் சுவடியைக் கண்டுபிடித்து எடுத்தபோது அவ்வேடு கறையானால் மூடப்பட்டிருந்தது. பிறகு எண்ணெயை ஊற்றிக் கரையானைப் போக்கி ஏட்டை எடுத்துப் பார்க்கும்போது பதிகங்கள் சிதைந் திருந்தன. அதைக் கண்டு மன்னன் வருந்தியபோது,

''ஈண்டு வேண்டுவன வைத்தோம்'' என்று அசரீரி வாக்கு எழ, அப்பால், கிடைத்தவற்றை ஒழுங்குபடுத்தத் தலைப்பட்டார்கள். இந்தச் செய்தியைப் பின்வரும் பாடல்கள் தெரிவிக்கின்றன:

ஐயர் நடமாடும்அம் பலத்தின் மேற்பால்
அருள்பெற்ற மூவர்தம தருள்சேர் செய்ய
கையதுவே இலச்சினையாய் இருந்த காப்பைக்
கண்டவர்கள் அதிசயிப்பக் கடைவாய் நீக்கிப்
பொய்யுடையோர் அறிவுதனைப் புலன்கள் மூடும்
பொற்பதுபோல் போதமிகும் பாடல் தன்னை
நொய்யசிறு வன்மீகம் மூடக் கண்டு
நொடிப்பளவி னிற்சிந்தை நொந்த வேந்தன்.

பார்த்ததனைப் புறத்துய்ப்ப உரைத்து மேலே
படிந்திருந்த மண்மலையைச் சேரத் தள்ளிச்
சீர்த்ததில தயிலமலி கும்பங் கொண்டு
செல்லுநனை யச்சொரிந்து திருஏ டெல்லாம்
ஆர்த்தஅரு ளதனாலே எடுத்து நோக்க
அலகிலா ஏடுபமு தாகக்கண்டு,
தீர்த்தமுடிக் கணிபரனே பரனே என்னச்
சிந்தைதளர்ந் திருகண்ணீர் சோர நின்றான்.

ஏந்துபுகழ் வளவன் இவ்வா றன்பி னாலே
இடர்க்கடலின் கரைகாணா தினையுங் காலை
சார்ந்தமலை மகள்கொழுநன் அருளால், வேதச்
சைவநெடுத் தலைவரெனும் மூவர் பாடல்
வேய்ந்தனபோல் மண்மூடச் செய்தே ஈண்டு
வேண்டுவன வைத்தோம்என் றுலகில் உள்ள
மாந்தரோடு மன்னவனும் கேட்கும் ஆற்றால்
வானகத்தில் ஓரோசை எழுந்த தன்றே.[1]

---

1. திருமுறை கண்ட புராணம், 21-23.

இப்போது கிடைத்துள்ள திருப்பதிகங்களிலும் சில பதிகங்களிற் சில பாசுரங்கள் இல்லை.[1] சில பாசுரங்கள் முழுமையாக இல்லை.[2] சிதலாலே குறைவுற்ற ஏட்டி லிருந்து கிடைத்தவை என்பதற்கு இப்படி உள்ள குறைகள் சான்றாகும்.

பெரிய புராணத்தில் திருஞானசம்பந்தர் பல இடங் களுக்குச் சென்று திருப்பதிகம் பாடியதாகச் சேக்கிழார் சொல்லு கிறார். ஆனால் சில தலங்களின் திருப்பதிகங்கள் இப்போது கிடைக்கவில்லை.[3] இதனால் இப்போதுள்ள தேவாரப் பதிகங்களையல்லாமல் வேறு பதிகங்களும் தமிழ்நாட்டில் வழங்கிவந்தன என்பது தெரியவரும்.

★

மூன்றாந் திருமுறையில் காந்தார பஞ்சமம்; கொல்லி, கொல்லிக் கௌவாணம், கௌசிகம், பஞ்சமம், சாதாரி, பழம் பஞ்சுரம், புறநீர்மை, அந்தாளிக் குறிஞ்சி என்ற ஒன்பது பண்களில் அமைந்த பதிகங்கள் இருக் கின்றன.

சந்த வகையாலும் எழுத்தமைப்பு முதலியவற்றாலும் வேறுபடுகின்ற நாலடிமேல் வைப்பு, திருவிருக்குக் குறள், திருவிராகம், வழிமொழித் திருவிராகம், திருமுக்கால், ஈரடி, திருஇயமகம், மாலைமாற்று என்ற வகைப் பாடல்கள் இந்தத் திருமுறையில் இருக்கின்றன.

தம்முடைய தந்தையார் வேள்வி செய்யும் பொருட்டுப் பொன் பொறுதற்காக ஞானசம்பந்தர் பாடிய பதிகமும், ஆற்றைக் கடக்கப் பாடியதும், பாண்டியனைச் சுரநோய் பற்றும்படி பாடியருளியதும், ஏடு வையையின் எதிரே செல்லப் பாடிய திருப்பாசுரமும், சமணர்களோடு

---

1. சில உதாரணங்கள் : முதல் திருமுறையில் 6-ஆம் பதிகத்தில் 6-ஆம் பாட்டு இல்லை; இல்லாதன: 9:7, 18:8 முதலியன. இரண்டாம் திருமுறையில் இல்லாதன: 1,7,11:10 முதலியன. மூன்றாந் திருமுறையில் இல்லாதன: 10:9. 23:7 முதலியன -

2. அரைகுறைப் பாடல்கள். 1.53:11, 1:15:2. 39:

3. ஆராய்ச்சித் தொகுதி: (மு. இராகவையங்கார்) ப. 282 - 292 பார்க்க.

வாதிட இறைவன் அருள் செய்ய வேண்டுமென்று வேண்டியதும், திருமணத்தின் போது பாடியதும், சோதியிற் கலக்குமுன்பு பாடிய நமசிவாயத் திருப் பதிகமும், ஐந்தெழுத்தின் பெருமையைச் சொல்லும் பஞ்சாக்கரப் பதிகமும் இந்தத் திருமுறையில் உள்ளன.

மூன்றாந் திருமுறையிலிருந்து எடுத்த பதினொரு பாடல்களுக்குரிய விளக்கத்தை இப்புத்தகத்தில் காணலாம். தில்லை, திருவாவடுதுறை, திருக்கழுமலம், திருக்கானப்பேர், திருவேடகம், திருக்காளத்தி, திருக் கருகாவூர், திருவைகாவூர் என்னும் தலங்களைப்பற்றிய பாடல்கள் எட்டும், பொதுப் பாடல்கள் மூன்றும் இங்கே விளக்கம் பெறுகின்றன.

★

தமிழ்நாட்டில் தேவாரம் எழுந்ததற்கு முன்பே சிவாலயங்கள் இருந்து வந்தன. அடியார்கள் அவ்வவ்வூர்களிலிருந்து ஆலய வழிபாடு செய்து வந்தார்கள். தமிழர்களுக்குக் கடவுள் உணர்ச்சியும் கடவுள்பால் அன்பும் பல காலமாக இருந்து வருகின்றன. இப்போது கிடைக்கும் நூல்களில் மிகப் பழையது தொல்காப்பியம் என்னும் இலக்கணம். அதற்கு அப்பால் எழுந்த நூல்களில் பழையவை கடைச்சங்க நூல்கள் என்று வழங்கும் பத்துப் பாட்டு, எட்டுத் தொகை என்னும் தொகை நூல்கள். இந்த நூல்களிலுள்ள குறிப்புகளைக் கொண்டு பார்த்தால் தமிழ் மக்கள் சிவபிரான், முருகன், திருமால், பலதேவர், காளி, இந்திரன், வருணன், கதிரவன் முதலிய தெய்வங்களை வணங்கி வந்தார்க ளென்பது தெளிவாகும். தெய்வங்களுக்கு உருவம் அமைத்தும், மரம் முதலியவற்றில் எழுந்தருளி யிருப்பதாகக் கொண்டும் வழிபட்டார்கள். மரத்தினடியில் திருவுருவங்களை வைத்து வணங்கினர். கடவுளைப் பூசிக்கும் வழக்கத்தையுடைய சில வகுப்பினர் இருந்தனர். மதுரை, திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவினன்குடி, பழமுதிர் சோலை மலை, திருவேரகம், திருமருதந்துறை, புகார், காஞ்சீபுரம்

முதலிய தலங்களில் தெய்வங்களின் திருக்கோயில்கள் இருந்தன என்பதை மேலே சொன்ன நூல்களால் உணரலாம். வரவரப் பிற்காலத்தில் திருக்கோயில்களின் கட்டிட அமைப்பு விரிந்தது; குகைக் கோயில்களும், கற்கோயில்களும் வந்தன.

மூவர் தோன்றித் தேவாரம் பாடிய பிறகு தமிழ் மக்களுக்கு கடவுள் உணர்ச்சி மிகுதியாயிற்று. தல வழிபாட்டில் ஊக்கம் வளர்ந்தது. தேவாரப் பதிகங்களைப் பக்தியோடு ஓதத் தொடங்கினர். திருமுறைகளை நம்பியாண்டார் நம்பி வகுப்பதற்கு முன்பே திருப்பதி கங்களைத் தலந்தோறும் ஓதும் வழக்கம் உண்டாயிற்று. பழைய காலத்துச் சிலா சாசனங்களில் வரும் குறிப்புக் களால் இந்தச் செய்தியை அறியலாம்.[1] இராசராச சோழன் தேவாரங்களைக் கண்டெடுத்து நம்பியாண்டார் நம்பி களைக் கொண்டு திருமுறைகளாக வகுத்த பிறகு, தல வழிபாடும் தேவாரம் ஓதுவதும் பின்னும் பெருகின. அப்பால் இரண்டாம் குலோத்துங்கன் காலத்தில் சேக்கிழார் பெரிய புராணம் பாடி நாயன்மார்களின் பெருமையைத் தமிழுலகம் நன்கு அறியச் செய்தார். அதுமுதல் நாயன்மார்களிடம் தமிழ் மக்களுக்கு அன்பு

---

1. 'முதல் இராஜராஜ சோழனே திருமுறை கண்டவனென்று பெரும்பாலும் கூறப்படுபவனாயினும், அதற்கும் முற்பட்ட சோழராட்சிகளில் பழைய தலங்களில் எல்லாம் திருப்பதிகம் ஓதும் வழக்கு இருந்ததென்பது சாசனங்களால் நன்கறியப்படுகின்றது. 9-ஆம் நூற்றாண்டினனான மூன்றாம் நந்திவர்மன் காலத்தே திருவல்லத்தும், 10-ஆம் நூற்றாண்டினனான முதல் இராஜகேசரி, அவன் மகன் முதற் பராந்தகன் காலங்களில் பழுவூர் அள்ளூர்களிலும், 11-ஆம் நூற்றாண்டினரான இரண்டாம் பரகேசரி, உத்தமசோழன் காலங்களில் முறையே திருவாவடுதுறை, அந்துவநல்லூர்த் திருவாலந்துறைகளிலும் திருப்பதிகங்கள் ஓதப்பட்டு வந்த செய்தியை அவை கூறுதல் காணலாம். இதனால் தேவாரம் பாடிய மூவரின் வரலாறுகளும் பதிகங்களும் நாட்டிற் சிறுக அறியப்பட்டிருந்தவற்றை அவ் இராஜராஜ சோழன் பிரபலமடையச் செய்தவன் என்பது தகுமேயன்றி அச்சோழனுக்கு முன்பு அவை முழுவதும் வழக்கற்றிருந்தன எனல் பொருந்தாதென்பது பெறப்படும்.' (மு. இராகவையங்கார் எழுதிய ஆராய்ச்சித் தொகுதி, ப. 287,288.)

அதிகமாயிற்று. அவர்களிலும் சிறப்பாக மூவருடைய வரலாறுகளை உணர்ந்தும் அவர்களுடைய திருப்பதி கங்களை ஓதியும் இன்புற்றனர். பொதுவாக எல்லாத் தலங்களையும் மக்கள் வழிபட்டு வந்தாலும் தேவாரம் பெற்ற தலங்களுக்குத் தனி மதிப்பு மிகுதியாக ஏற்பட்டது.

ஆலயங்களில் வழிபாட்டு வகைகள் விரிந்தன. சோழ அரசர்களுக்குப் பின்பு வந்த மன்னர்களும் ஆலயங்களை விரிவாக அமைத்தனர். அதன் பின்பு சென்ற நூற்றாண்டில் தனவணிக மக்கள் தேவாரம் பெற்ற தலங்களிலுள்ள சிவாலயங்களை மிகச் சிறந்த வகையில் கட்டினர்.

இவ்வாறு தல வழிபாடு சிறப்படைய அடைய அவற்றைப் பற்றிய புராணங்களும், பிரபந்தங்களும் கணக் கில்லாமல் எழுந்தன. சில தலங்களுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட புராணங்கள் பாடப்பெற்றன. புலவர்கள் தல புராணங்களிலே தங்கள் புலமைத் திறத்தைக் காட்டத் தொடங்கினர். வடமொழியில் தல புராணங்களுக்கு, இலக்கியமாக வைத்து எண்ணப்பெறும் நிலை இல்லை. தமிழிலோ, பல பெரிய புலவர்கள் புராணங்களைக் காப்பியமாகவே இயற்றத் தொடங்கினர். சைவ எல்லப்ப நாவலர், சிவஞான சுவாமிகள், கச்சியப்ப முனிவர், மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை முதலிய புலவர்கள் புராணங்களைக் காப்பியச் சுவை அமையும்படி இயற்றியிருக்கிறார்கள்.

தலங்களில் மண்டப வகைகளும், பசு மடங்களும், வேத பாடசாலை, தேவார பாடசாலை, ஆகம பாட சாலைகளும், திருவிழாக்களும் விரிவாக ஏற்பட்டன. முப்பது ஆண்டுகளுக்கு முன் வரையிலும் இந்தத் தலப் பற்று தமிழ் நாட்டில் வளர்ந்து கொண்டே வந்தது. இவ்வாறு கடவுளுணர்ச்சியும் தல வழிபாடும் வளர்ந்து வந்ததற்கு மூலகாரணம் தேவாரத் திருப்பதிகங்களென்றே சொல்லவேண்டும்.

தேவாரம் ஓதும் ஓதுவார்கள் ஆலயங்களில் திருப்பதி கங்களை ஓதி வந்தார்கள். இப்போதும் பலர் அங்கங்கே உள்ளனர். ஆயினும் தேவாரத்தின் இலக்கியச் சுவையை உணர்ந்து இன்புறும் முறை தமிழ் மக்களிடத் தில் வளரவில்லை. சிவஞான போதம் முதலிய சாத்திரங் களுக்கு உரைவகுத்த பெரியோர் அங்கங்கே பல பாடல்களை மேற்கோளாகக் காட்டினர். நச்சினார்க் கினியர் எங்கோ ஓரிரண்டு இடங்களில் சுட்டிப் போயினர். தேவாரத்துக்கு உரை காணவோ, அதன் இலக்கிய நயத்தை ஆராயவோ பலர் முற்படவில்லை. அதனால் ஓதுவார்கள் ஓதுவதைத் தவிரத் தேவாரத்துக்கு வேறு பயன் இல்லாமற் போய்விட்டது. சொற்பொழி வாளர்கள் சில பாசுரங்களை மேற்கோளாகக் காட்டிப் பேசினர். தமிழ்ப் பாட புத்தகங்களில் முன்பு தேவாரப் பதிகங்களைச் சேர்த்து வந்தனர். தமிழ் வித்துவான் தேர்வுக்குத் திருமுறைகளில் எதையாவது பாடமாக வைத்தார்கள். இப்போது இந்த வழக்கம் நின்று விட்டது.

இந்த நிலையில் தேவார அறிவு தமிழ் மக்களிடத் தில் வளராமல் இருப்பது வியப்பன்று. வரவரக் குறைந்து போகுமாயின் அதுவும் வியப்பாகாது. பண்ணோடு முறையாகத் தேவாரத்தைப் பாடுவதுகூட இப்போது அருகி வருகின்றது. பழைய மரபு என்றால் வேப்பங் காயாக எண்ணும் சிலர், தேவாரம் பாடும் புண்ணியச் செயலை உடையவராக இருந்தும், அப்பாடல்களுக்குரிய பண்ணை மாற்றிச் சினிமாமெட்டில் பாடுவதற்கும் துணிந்து விட்டார்கள். வேதமாக எண்ணிப் பக்தியுடன் பாடுவதற்குரியது தேவாரம். வேதத்துக்குச் சுரம் அமைந்ததுபோலத் தேவாரத்துக்குப் பண்கள் அமைந்திருக் கின்றன. திருமுறைகளைக் கண்டெடுத்த இராசராசன் அவற்றை அப்படியே வெளிப்படுத்தாமல், பண்களுடன் பாடுவது இன்றியமையாதது என்று அறிந்தே திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனாருடைய மரபிலுதித்த மங்கையொருத்தியின் உதவியினால் பண்களை அமைக்கச் செய்தான். தேவாரத் திருமுறை களின் வகுப்பே பண்ணை அடிப்படையாகக் கொண்டது. இன்ன இன்ன பண்ணுக்கு

இத்தனை பதிகங்கள் என்ற வரையறையை இந்த வகுப்பில் காணலாம். அப்படியிருக்கப் பண்களை மாற்றி ஓதுவதும், சினிமாப் பாட்டாக எண்ணும்படி ராகம் அமைத்து ஓதுவதும் தேவாரத்துக்குரிய தெய்விகப் பண்பைக் குறைத்துவிடும்.

★

தேவாரம் ஓதுவதும், தேவாரத்தின் இலக்கியச் சுவையை நுகர்ந்து இன்புறுவதுமாகிய செயல்கள் தமிழ் மக்களிடத்தில் மிகுதியாக இருக்கவேண்டும் என்ற விருப்பத்தி னால் இதனை இங்கே தெரிவிக்கலானேன். திருமாலடியார்கள் திவ்யப் பிரபந்தத்தைப் பாதுகாக்கும் முறையையும், அதற்கு உரை பல தோன்றிச் சிறப்புற்று விளங்கும் செய்தியையும் நினைத்துப் பார்த்தால் தேவாரத்துக்குச் சிவனடியார்கள் செய்தது எள்ளளவுகூட இல்லை என்பது தெரியவரும்; தேவாரம் மீண்டும் பழைய நிலையைப் பெறுவதோடு, அதிலுள்ள இலக்கியச் சுவையை அறிந்து இன்புற்றும் பிறரை இன் புறச் செய்தும் வரும் முயற்சிகள் பல்க வேண்டுமென்று இறைவன் திருவருளை வழுத்துகிறேன்.

கி.வா. ஜகந்நாதன்

★

சிற்றம்பலம்

சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் தலங்கள் பல. சிவபெருமானுடைய வழிபாடு எந்தக் காலத்தில் உண்டாயிற் றென்று இன்னும் வரையறுக்க முடியவில்லை. சிந்து வெளியில் மொகெஞ்சதரோவில் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த மக்கள் சிவலிங்கப் பெருமானை வழிபட்டு வந்தார்கள் என்ற செய்தி அந்தப் பகுதியில் அகழ்ந்தெடுத்த பழம்பொருட் சிதைவுகளால் தெரியவருகிறது.* பாரதநாட்டில் சிவ வழிபாடு இருந்ததோடன்றி, ஜாவா முதலிய நாடுகளிலும்† இருந்தது என்பதை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்து உரைக்கின்றனர்.

இவ்வாறு உலகில், பல இடங்களிலே பரவியிருந்த சிவழிபாடு தமிழ்நாட்டில் சிறப்பாக நிலவுகிறது. சிவ பெருமானுக்குரிய கோயில்கள் இந்த நாட்டில் இருப்பது போல வேறு எங்கும் இல்லை. ஊர்தோறும் கோயில்கள் பல இன்றும் இருக்கின்றன.

''கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்''

என்பதும், ''ஊரானோர் தேவகுலம்'' என்ற மேற்கோளும் தெய்வத் திருக்கோயில்களின் அவசியத்தை உணர்த்துகின்றன.

---

* "Among the rcvelations that Mohenjadaro and Harappa had in store for us none perhaps is more remarkable than this diseovery that Saivism has a history going back to the chalcolithic age or perhaps even further still and that it thus takes place as the most ancient living faith in the world."

-Sir John Marshall.

†Relation of Indian Art with Java by Dr.J.Ph. Vogel, pp.17.1

திருக்கோயில் இல்லாத ஊர் திருவில்லாத ஊரென்றும், மக்கள் வாழாமல் விலங்கினங்கள் வாழும் காட்டுக்கு ஒப்பான தென்றும் அப்பர் சுவாமிகள் அருளுகிறார்.

"திருக்கோயில் இல்லாத திருவில் ஊரும்
....
அவையெல்லாம் ஊரல்ல; அடவி காடே."

அந்த அந்த ஊரில் உள்ள மக்கள் தங்கள் ஊரில் உள்ள திருக்கோயில்களில் நாள்தோறும் வழிபட்டார்கள். சில சிறப்பான நாட்களில் வேறு தலங்களுக்கும் சென்று இறை வனைத் தரிசித்து வந்தார்கள். சில தலங்கள் தம்பால் வந்து வழிபட்டுப் பேறுபெற்ற பெரியோர்களால் மிக்க சிறப்பைப் பெற்றிருக்கின்றன. இறைவனுடைய கருணைத் திருவிளை யாடல்கள் பல நிகழ்ந்தமை யால் பல தலங்கள் பெருமை பெற்றன. இறைவன் அறுபத்து நான்கு திருவிளையாடல்களை இயற்றிய மதுரை மிகப் பெரிய தலம் என்பதைத் தமிழ்நாட்டார் நன்கு அறிவார்கள்.

இவ்வாறு சிறப்புப் பெற்ற தலங்கள் பல இருந்தாலும் சைவர்கள் எல்லாத் தலங்களிலும் முதலில் வைத்து எண்ணும் சிறப்பை உடையது சிதம்பரம். அது கோயில்கள் யாவற்றினும் சிறப்புடையது; ஆதலால் வேறு அடை ஒன்றும் இன்றிக் கோயில் என்று வழங்கும் தனிப்பெருமை அதற்கு அமைந்தது. பட்டினத்துப் பிள்ளையார் சிதம்பரத்தைப்பற்றிப் பாடிய நூல் ஒன்றுக்கு, 'கோயில் நான்மணிமாலை' என்ற பெயர் அமைந்திருக்கிறது.*

மாணிக்கவாசகப் பெருமான், தில்லையில் நடனமாடும் கூத்தப்பிரானுடைய திருவடியே பல்லுயிருள்ளும் பயில்கின்றது என்று பாடுகிறார்.

"தில்லை மூதூர் ஆடிய திருவடி
பல்லுயிர் எல்லாம் பயின்றன னாகி"

என்பது அவர் பாட்டு. சேக்கிழார் பெருமான் அம்பலத்தாடு வானைப் பலபடியாகப் பாராட்டுவார். தேவாரம் மீண்டும்

---

* *சிதம்பரத்திற்குரிய புராணங்களில் உமாபதி சிவாசாரியார் இயற்றிய புராணத்திற்கு, கோயிற் புராணம் என்ற பெயர் இருத்தல் இங்கே நினைத்தற்குரியது.*

உலகத்தாருக்குக் கிடைத்த இடம் தில்லையே. தேவாரம் பாடுவார் எந்தத் தலத்தின் பதிகத்தைப் பாடினாலும் 'திருச்சிற்றம்பலம்' என்று சொல்லித் தொடங்குவதும், 'திருச்சிற்றம்பலம்' என்று சொல்லி முடிப்பதும் வழக்கம்.

சுந்தரமூர்த்தி நாயனார் திருவாரூரில் திருத்தொண்டத் தொகை பாடத் தொடங்கினார். பல ஊர்களில் இருந்த நாயன்மார்களைப்பற்றிப் பாடத் தொடங்கியபொழுது, இறைவன் திருவருளால் முதற்பகுதி வானொலியாக வந்தது.

''தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்''

என்ற முதல் அடியின் முதற்பகுதியே அது. தில்லையை முதலில் நினைக்கச் செய்த திருவருள் அதன் வாயிலாக அத்தலத்தின் தலைமையையும் எடுத்துக் காட்டியதென்றே கொள்ளவேண்டும்.

சிதம்பரத்திற்குரிய பழம்பெயர் பெரும்பற்றப் புலியூர் என்பது. புலியூர் என்பது அதன் இயற்பெயர். அது உள்ள பகுதி பெரும்பற்று. பல புலியூர் இருத்தலினால் இதனைச் சுட்டிக் காட்டப் பெரும்பற்றப் புலியூர் என்று சொல்லும் வழக்கம் ஏற்பட்டது. தில்லை என்னும் மரம் இத்தலத்தில் சிறப்புடையதாதலால் இதற்குத் தில்லை வனம், தில்லை என்ற பெயர்கள் அமைந்தன. மதுரைக்குக் கடம்ப வனம் என்று தலத்துக்குரிய நன்மரத்தால் பெயர் அமைந்தது போன்றது இது.

இங்கே இறைவன் ஆடும் இடம் சிற்றம்பலம். சிவலிங்கப் பெருமான் எழுந்தருளிய இடம் திருமூலட்டானம். நடராசப் பெருமானுடைய சந்நிதியே சிறப்புடையதாதலால் அதனைத் தில்லைச் சிற்றம்பலம் என்று வழங்குவர். திருக்கோயில் முழுவதுக்குமே சிற்றம்பலம் என்ற பெயர் பிறகு அமைந்தது.

பேரம்பலம் என்ற பகுதி ஒன்றும் திருக்கோயிலில் இருப்பதால் இறைவன் ஆடும் இடத்தைச் சிற்றம்பலம் என்று வழங்கினர்.

''சிற்றம் பலமும் திருப்பெரும்பே ரம்பலமும்
மற்றும் பல்பல மண்டபமும்''*

---

* *இராசராச சோழனுலா, 30.*

என்று ஒட்டக்கூத்தர் இந்த இரண்டு அம்பலங்களையும் வைத்துப் பாடுகின்றார்.

நாளடைவில் சிற்றம்பலம் சித்தம்பலமாகிப் பின்பு சிதம்பரம் ஆயிற்றென்று தோன்றுகிறது. 'சித்தாகிய அம்பரம், சிதாகாசம்' என்று பொருள் விரித்தார்கள். இறைவன் ஞானவெளியில் நடனம் புரிகின்றான் என்ற அற்புதமான உண்மையை நினைப்பூட்டும் வகையில் சிற்றம்பலம் என்ற பெயர் சிதம்பரம் என்று மாறியது. பின்னும் சிறப்பான பொருளைத் தருவதனால் சிதம்பரம் என்ற பெயரே உலக வழக்கில் இப்போது மிகுதியாக வழங்கலாயிற்று. ஆயினும் இலக்கியங்களிலும் சாசனங்களிலும் சிற்றம்பலம் என்ற பெயரே ஆட்சிபெறுகிறது.*

★

தில்லைவாழந்தணர்கள் அக்காலத்தில் மூவாயிரவர் இருந்தனர். இறைவனே அம்மூவாயிரவர்களில் முதல்வன். தில்லைவாழந்தணருக்கு நடராசப் பெருமானை வழிபடுவதை யன்றி வேறு வேலையும் கடமையும் இல்லை. அவர்களுக்கு அதுவே தொழில்; அதுவே பொழுதுபோக்கு; அதுவே அறம்; அதுவே பொருள்தரும் ஆறு; அதுவே இன்பந்தரும் செயல்; அதுவே வீட்டு நெறி. அவர்களுடைய வழிபாட்டை ஏற்று மகிழும் சிற்றம்பலத்துப் பெருமானைத் திருஞானசம்பந்தர் பாடுகிறார்.

அவர் பாடிய தேவாரத்தில் மூன்றாம் திருமுறையில் முதல் திருப்பதிகம் சிற்றம்பலத்தைப் பற்றியது. உயர்ந்தவர்கள் உறைகின்ற தில்லையில், பண்டைக் காலம் முதல் நாளுக்கு நாள் புகழ் ஏறிவருகின்ற சிற்றம்பலத்தில் எழுந்தருளியிருக்கும் ஈசனை, ஊறும் இன்தமிழும் இசையும் கலந்து விளங்க இத்திருப் பதிகத்தைப் பாடியருளினார்.†

தென் இந்தியச் சிலாசாசனங்கள், 1913-ஆம் ஆண்டு 6-வது; 1921-ஆம் ஆண்டு 285-ஆவது.

†"நாறு பூம்பொழில் நண்ணிய காழியுள் - நான்மறை வல்லஞான சம்பந்தன், ஊறும் இன்தமிழால் உயர்ந்தார் உறைதில்லை தன்னுள்; ஏறு தொல்புகழ் ஏந்து சிற்றம்பலத் - தீசனை இசையாற் சொன்ன பத்திவை, கூறுமாறு வல்லார் உயர்ந்தாரொடுங் கூடுவரே" என்பது திருக்கடைப் காப்பு.

இறைவனுக்கு நாள்தோறும் சிற்றம்பலத்தில் பூசை நிகழ்கின்றது. இப்போது சந்திரமௌளீசுவரர் என்று வழங்கும் ஸ்படிகலிங்கப் பெருமானுக்கும் ரத்தினசபாபதி என்ற திருமேனிக்கும் நாள்தோறும் அபிடேகங்கள் உண்டு. நடராசப் பெருமானுக்கு ஆண்டுக்கு ஆறுமுறை அபிடேகம் நிகழும்.

சிற்றம்பலத்தில் இறைவனுக்கு நடைபெறும் ஆராதனைக்கு என்ன குறை? அபிடேகத்தின் சிறப்பை எவ்வளவு சொன்னாலும் தகும். இறைவன் நறு நெய்யிலே ஆடுகிறான்; பாலிலே ஆடுகிறான்; தயிரிலே ஆடுகிறான். இவ்வளவு ஆட்டும் நடைபெறுவதற்கு அங்குள்ள மூவாயிரவராகிய அந்தணர்களின் அன்பே காரணம். அவர்கள் என்றும் நடராசமூர்த்தியைப் பிரியாமல் உறைகிறவர்கள். அவர்கள் பிரியாத சிற்றம்பலத்தைச் சிறந்த திருக்கோயிலாகவும் தனக்கு விருப்பமான இடமாகவும் நாடி அங்கே இறைவன் எழுந்தருளியிருக்கிறான். அபிடேகங்கள் ஆனபிறகு அந்தணர் மலரிட்டுப் பூசிக்கிறார்கள். பல வகையான மலரால் அருச்சித்து வழிபடுகிறார்கள். அந்த மலர்களுக்குள்ளே பொன்னிறம் படைத்ததும் நறுமணம் உடையதும் ஓங்காரத்தை நினைப்பூட்டுவதுமாகிய கொன்றை மலரை இறைவன் விரும்பி ஏற்றுக்கொள்கிறான். மற்றவை யாவும் அருச்சனைக்குரிய மலர்களேயானாலும் இறைவனுக்கு அடையாளப் பூவாகவும் கண்ணியாகவும் மாலையாகவும் இருப்பது கொன்றை மலர்.* அதனால் அந்தப் பூவினிடம் அவனுக்கு நயப்பு மிகுதி.

ஆடி னாய்நறு நெய்யொடு பால்தயிர்;
அந்த ணர்பிரி யாதசிற் றம்பலம்
நாடி னாய்இட மா!நறுங் கொன்றை
நயந்தவனே!

(நறுமணமுடைய பசுவின் நெய்யோடு அதன் பாலினாலும் தயிராலும் அபிடேகங் கொண்டருளினாய்; தில்லை மூவாயிரவராகிய அந்தணர்கள் என்றும் பிரியாமல் வழிபட்டுப் பூசித்து வாழ்கின்ற சிற்றம்பலத்தை உனக்குரிய இடமாக விரும்பி உறைகின்றாய்;

• *"கார்விரி கொன்றைப் பொன்னேர் புதுமலர்த், தாரன் மாலையன் மலைந்த கண்ணியன்." (அகநானூறு, கடவுள்.)*

நறுமணம் மிக்க கொன்றை மலரை விடுபூவாகவும் கண்ணியாகவும் மாலையாகவும் விரும்பினவனே!

ஆடினாய் - அபிடேகம் கொண்டாய். நாடினாய் - விரும்பினாய். இடமா - இடமாக. நயந்தவனே - விரும்பினவனே.)

★

திருச்சிற்றம்பலத்திலே வேதகீதமும் இசைப் பாடலும் இடையறாது முழங்கும். இறைவனுக்கு வேதமும் கீதமும் மிக்க விருப்பமானவை. அவன் வேதம் பாடுவாரையும் கீதம் பாடுவாரையும் உடன் வைத்துக் கொள்பவன். அவனே எப்போதும் வேதத்தைப் பாடிக்கொண்டே இருப்பவன். அதனை அருளிச் செய்தவனே அவன்றான். அது மேலும் மேலும் வளரும்படி செய்கிறவனும் அவனே. உலகில் வேறு யாரும் வேதத்தைப் பாடாமல் இருந்துவிட்டாலும் அவன் அதைப் பாடுதல் ஒழியமாட்டான். வேதம் நித்தியமானது என்று சொல்லும் சொல்லைப் பொருளுடையதாக்கும் பிரான் அவன். வேதத்தோடு வேறு பல கீதங்களையும் அவன் பாடுகின்றான்.

பாடி னாய்மறை யோடுபல் கீதமும்.

(மறை - வேதம். கீதம் - வேறு வகையான பாடல்கள். வேதமும் பாடலாதலின் அதனையும் பாடினாய் என்றார்.)

★

சிறந்த அபிடேகப் பொருள்களால் ஆடுதலை ஏற்றருளி அருச்சனையையும் உவந்தருளி அந்தணர் பிரியாத சிற்றம்பலத்தில் எழுந்தருளிய இறைவன் வேதமும் கீதமும் பாடும் இனியனாக இருக்கிறான். இவ்வளவும் அவனுடைய உயர்வைப் புலப்படுத்துகின்றன. அவனது தொடர்புடைய பொருள்கள் யாவும் சிறந்தவை என்று எண்ணுகிறோம். அவை அவனுடைய பெருமையைப் புலப்படுத்துகின்றன.

ஆனால் அவன் சிரத்திலே பல சடைகள் இருக்கின்றன. அவற்றினிடையே அவன் அணிந்துள்ள சந்திரன் மாத்திரம் மேலே சொன்ன பொருள்களோடு ஒன்றாக வைத்து எண்ணுவதற்கு உரியதாகத் தோன்றவில்லை. அது முழுமதி அன்று; குறைமதி. அழகிய நிறம் உடையதன்று; வெறும்

வெண்திங்கள். உள்ளீடு இல்லாத பொருளை வெள்ளை என்று சொல்வது வழக்கம். முழுமையும் உள்ளீடும் இல்லாத பொருளாக இருக்கிறது திங்கள். அதினிடத்திலிருந்து வரும் கதிரோ குளிரை உடையது; பனியைக் காலும் கதிர். அந்தச் சந்திரனுடைய பழங்கதையை நினைத்தாலோ உள்ளம் படபடக்கும். சந்திரன் தன் குருவின் இல்லாளை விரும்பின பாவி; இறைவனை மதிக்காமல் தக்கன் செய்த யாகத்திற்கு உணவிச்சையால் சென்ற குற்றவாளி. பழியும் பாவமும் நிரம்பியவன். பாவஞ் செய்து உடல் குறைந்து உள்ளீடின்றி இருக்கும் அவனை இறைவன் தன் தலையின்மேற் சூடியிருக்கிறான். எந்தத் திருமுடியின்மேல் சிற்றம்பலத்தைப் பிரியாமல் உறைகின்ற அந்தணர்கள் நறுநெய்யும் பாலும் தயிருங் கொண்டு அபிடேகம் செய்கிறார்களோ, எந்தத் திருமுடியின்மேல் மலர் இட்டு அருச்சனை செய்கிறார்களோ, எந்தத் திருமுடியின் மேல் இறைவன் நறுங்கொன்றையை நயந்து கண்ணியாகச் சூடியிருக்கிறானோ, அந்தத் திருமுடியில் பாவம் செய்த உள்ளமும் உருக்குலைந்த உடம்பும் வெண்மை நிறமும் பனிகாலும் கதிரும் உடையவன் இருக்கிறான்!

இதற்குக் காரணம் என்ன? இறைவனுடைய கருணை தான். சந்திரனுடைய பாவத்தை மறந்து, புண்ணியம் செய்யும் அந்தணர் ஆட்டும் அபிடேகத்தை அவனும் பெறும்படி திருமுடிமேல் வைத்தான். இன்று தில்லையில் நாள்தோறும் அபிடேகம் செய்யப்பெறும் பெருமானுக்குச் சந்திரமௌளீசுவரர் என்ற திருநாமம் வழங்குதல் நினைவு கொள்வதற்குரியது. இறைவன் திங்களைச் சூடியவன் என்பதை நினைப்பிக்கும் திருநாமம் அல்லவா அது? பொன் நிறமும் பொலிவும் பெற்ற நறுங்கொன்றையை நயந்த முடியில் திங்களை வைத்தான். சந்திரன் இறைவனுடைய திருவடியால் தேய்க்கப் பெற்றான். எப்படியோ அடியின் தொடர்பு உண்டாயினமையின் அவன் தன் பாவமும் பழியும் நீங்கப் பெற்று உயர்ந்த இடத்தில் ஏறிக்கொண்டான். அவனுடைய பழம்பழி நீங்கியது; தொல்வினை தொலைந்தது.

முதலில் மூவாயிரம் அந்தணர் அபிடேகம் செய்து அருச்சிக்கும் இறைவனைக் காணும்போது, 'இவன் அருள் நமக்குக் கிடைக்குமா?' என்ற ஏக்கம் உண்டாவது இயல்பு. மறையும் பல்கீதமும பாடுகின்றான் என்பதை அறிந்தால் நமக்கு அரியன் என்ற எண்ணம் பின்னும் வலிமை பெறுகின்றது. ஆனால் அவன் சந்திரனை ஏற்றுக்கொண்டவன், அவனுடைய தொல்வினை சுருங்க அருளியவன் என்பதை நினைக்கும்போது, அவனுடைய கருணையை எண்ணி வியக்கத் தோன்றுகிறது. 'நமக்கும் அருள் செய்வான்; பிறவிதோறும் நம்மைத் தொடர்ந்து வரும் பழவினைகள் சுருங்கும்படி* அருள்வான்' என்ற நம்பிக்கையும் உடனே உண்டாகிறது.

பல்ச டைப்பனி கால்கதிர் வெண்திங்கள்
சூடி னாய்;அரு ளாய் சுருங்கஎம்
தொல்வினையே.

(பலவாகிய சடையினிடையே பனியை வெளிப்படுத்துகின்ற கதிரையுடைய வெண்மையாகிய பிறையைச் சூடினாய்; அடியேங்களுடைய பழவினை சுருங்கி நையும்படி அருள்வாயாக.

கால் - வெளிவிடும். கதிர் - கிரணம். திங்கள் - இங்கே பிறை. சுருங்க - குறைந்து அழிய. தொல்வினை - பழவினை.)

சந்திரமௌளீசுவரனுக்கு நடைபெறும் பூசை கண்டு முதலில் அவன் பெருமையை எண்ணினார் சம்பந்தர்; அப்பால் அவன் திருநாமத்தைக் கேட்டு அவன் கருணையை நினைந்தார். மற்ற மக்களுக்கெல்லாம் பிரதிநிதியாக நின்று இறைவனிடம் விண்ணப்பித்துக் கொள்கிறார்; ஆதலால், ''சுருங்கஎம் தொல்வினையே'' என்றார். தமக்கு ஒரு வினையும் இன்றி ஞானமயமாய் நின்ற திருஞான சம்பந்தர், இறைவன் வெண் திங்கள் சூடியமையை நினைப்பூட்டி அவனது கருணையைக் குறிப்பிடுகிறார். 'எம் தொல்வினை' என்று நம்மில் தாமும் ஒருவர்போல வைத்துப் பாடித் தம் கருணையையும் குறிப்பிடுகிறார்.

---

* *''பழவினைகள் பாறும்வண்ணம், சித்தமல மறுவித்து.'' (திருவாசகம்.)*

ஆடி னாய்நறு நெய்யொடு பால்தயிர்
அந்த ணர்பிரி யாதசிற் றம்பலம்
நாடி னாய்இட மா;நறுங் கொன்றை
நயந்தவனே!
பாடி னாய்மறை யோடுபல் கீதமும்
பல்ச டைப்பனி கால்கதிர் வெண்திங்கள்
சூடி னாய்;அரு ளாய்சு ருங்கஎம்
தொல்வினையே.

(நறுங்கொன்ற நயந்தவனே! நீ ஆடினாய்; நாடினாய்; பாடினாய்; ஆயினும் திங்கள் சூடினாய்; ஆதலின் அருளாய் என்று தொடர்பு படுத்த வேண்டும். ஆடினாய், நாடினாய், பாடினாய், சூடினாய் என்பவற்றையும் விளியாகக் கொண்டு பொருள் உரைப்பதும் பொருத்தமாக இருக்கும்.)

★

அதுவோ அருள்?

திருஞான சம்பந்தப் பெருமான் திருவாவடு துறையென்னும் திருத்தலத்துக்கு வந்து சில காலம் தங்கினார். அத் தலம் சோழ நாட்டில் காவிரிக்குத் தென் கரையில் உள்ளது. உமாதேவியார் பசுவின் திருவுருவம் எடுத்து இறைவனைப் பூசிக்கப் பெருமான் எழுந்தருளி அத்தேவியின் பசுவுருவத்தை நீக்கி அணைத்துக் கொண்டு நின்றான். ஆவின் திருவுருவத்தை மாற்றிய தலமாதலின் ஆவடுதுறை என்ற திருநாமம் உண்டாயிற்று.

இந்தத் தலத்தில் ஞானசம்பந்தர் தங்கியிருந்தபோது அவருடைய தந்தையார் தம் மரபுக்கு ஏற்பச் செய்ய வேண்டிய வேள்வியைப் புரிய எண்ணினார். தம்முடைய ஊராகிய சீகாழிக்குச் சென்று பிற அந்தணர்களுடன் சேர்ந்து வேள்வி செய்யப் பொருள் வேண்டியிருந்தது. இச் செய்தியை அவர் ஆளுடைய பிள்ளையாரிடம் தெரிவித்தார். தமக்கு என்றும் குறைவிலாத நிதியாக இருப்பவன் சிவபெருமானே என்று நம்பி வாழும் திருவருட் செல்வராகிய சம்பந்தர் திருவாவடு துறை ஆலயத்திற்குட் சென்று, ''தாம் வேள்வி செய்வதற்குரிய பொருள் வேண்டும் என்று எந்தையார் கேட்டார். என் கையிலே பொருள் இல்லை. கேட்பாருக்குக் கொடுக்க இயலாமல் எம்மை வைப்பதுதான் திருவருளுக்கு அழகோ?'' என்ற கருத்தோடு ஒரு திருப்பதிகத்தைப் பாடினார்.

அப்போது இறைவன் திருவருளால் ஒரு பூதம் அங்கே வந்து ஆயிரம் பொன்னையுடைய கிழி ஒன்றை முன்னே இருந்த பீடத்தில் வைத்துச் சென்றது. அதைக் கண்டு இறைவன் அருளை எண்ணி வியந்து பாராட்டி உருகிய பிள்ளையார் அதனைத் தம் தந்தையாரிடம் கொடுத்தார். அப்பெரியார்

அக்கிழியைப் பெற்றுச் சென்று சீகாழியில் தாம் செய்ய வேண்டிய வேள்வியைச் செய்து நிறைவேற்றினார்.*

இறைவன் திருஞான சம்பந்தருக்கு ஆயிரம் பொன் அளித்த இந்த அருட்செயலைத் திருநாவுக்கரசு நாயனார்,

''மாயிரு ஞால மெல்லாம் மலரடி வணங்கும் போலும்
பாயிருங் கங்கை யாளைப் படர்சடை வைப்பர் போலும்
காயிரும் பொழில்கள் சூழ்ந்த கழுமல ஊரர்க் கம்பொன்
ஆயிரங் கொடுப்பர் போலும் ஆவடு துறைய னாரே''

என்று பாராட்டியிருக்கிறார்.

சம்பந்தர் தமக்கு வேண்டிய பொருளை வேறு யாரிடத்திலும் சென்று இரக்கும் தன்மை இல்லாதவர். அவருக்கு வேண்டிய பண்டங்கள் அவ்வப்போது இறைவன் திருவருளால் கிடைத்துக் கொண்டே இருந்தன. அதனால் தமக்கு ஒன்றும் குறைவில்லாமல் இறைவன் எழுந்தருளி யிருக்கும் தலங்களுக்குச் சென்று வழிபட்டு வந்தார். இப்போது தந்தையார் பொருள் வேண்டுமென்று கேட்டபோதுதான் தம் கையிலே பொருள் ஒன்றும் இல்லை என்பதை உணர்ந்தார் சம்பந்தர். அதுகாறும் பொருள் இல்லாத குறையை உணரும் வாய்ப்பு வரவில்லை. பண்டங்க்ள் யாவும் கிடைத்துக் கொண்டே இருந்தன. அப்பண்டங்களை அடியார்களுக் கெல்லாம் பயன்படுத்தி இன்புற்றார். தனியே பணம் என்ற ஒன்று அவசியம் இல்லாமலே இருந்தது. நாணயம் அதிகமாக வழங்காத காலம் இது. நெல் இருந்தாற் போதும்; எல்லாப் பொருள்களையும் பெறலாம்.

இப்போது தந்தையார் பொருள் வேண்டும் என்று கேட்டபோதுதான் சம்பந்தப் பெருமானுக்குப் பொன் என்ற ஒன்று இருப்பது நினைவுக்கு வந்தது. தந்தையாருக்கு வேண்டிய பொன்னை அளிக்க முடியாத நிலை தமக்கு இருப்பதை அவர் உணர்ந்தார். அவர் மனம் சிறிது தளர்ச்சி அடைந்தது. உடனே அது நீங்கியது. ''அந்த மில்பொருள் ஆவன ஆவடு துறையுள்

---

* *பெரியபுராணம், திருஞான. 421-430; ''சண்பை ஆண்டகைக்கோர், ஆயிரம் பொன்னருள் சொன்னத் தியாகர்'' (திருவாவடுதுறைக் கோவை, 324.)*

எந்தையார் அடித்தலங்கள் அன்றோ?''* என எண்ணினார்; உள்ளத்தே ஓர் எழுச்சி உண்டாயிற்று.

எத்தகைய இடர்ப்பாடு வந்தாலும், எத்தகைய குறைவு நேர்ந்தாலும், எத்தகைய துயரம் புகுந்தாலும் அவற்றை நீக்கி இன்பந் தருவது இறைவன் திருவடியே என்ற உறுதிப்பாடு உடையவர் அவர். ஆகவே இப்போது இறைவனுடைய திருக்கழலைத் தொழுதால் வாட்டம் நீங்கி எழலாம் என்று உணர்ந்தார்.

★

மனிதருக்கு வரும் துன்பங்கள் மூன்று வகை. அவற்றைத் தாபத்திரயம் என்று சொல்லுவார். அவை ஆதிதை விகம், ஆதி பௌதிகம், ஆத்தியாத்மிகம் என்பவை. மக்களாகப் பிறந்தார் இம் மூவகைத் துன்பங்களையும் அடைவர்.✧

மழை, காற்று, இடி, வெப்பம், கால மாறுபாடு, பூகம்பம் முதலியவற்றால் வரும் இடர்களை ஆதிபௌதிகம் என்று சொல்வர். பிறக்கும்போது உண்டாகும் துன்பம் நரை, திரை, மூப்பு, சாக்காடு என்பவற்றை ஆதிதைவிகத்தின்பாற் படுத்துவர். மெய்யிலும் மனத்திலும் வரும் நோய்கள், மக்களாலும் விலங்குகளாலும் பறவைகளாலும் வரும் துன்பங்கள் முதலியன ஆத்தியாத்மிகம் என்னும் வகையில் அடங்கும்.‡

இந்த மூன்று வகையான துன்பங்கள் வந்தாலும் இறைவனுடைய கழலே துணையென்று தொழுபவர் ஆளுடைய பிள்ளையார். ''மழை முதலியவற்றால் இடர் உண்டானாலும், உடம்பு தளர்ந்தாலும் நோய் வந்து தொடர்ந்தாலும் உன்னுடைய திருவடிகளையே தொழுது நான் பெற்ற துன்பத்திற்கிடத்தலொழிந்து எழுச்சி பெறுவேன்'' என்று திருப்பதிகத்தைத் தொடங்குகிறார்.

---

* *பெரிய புராணம், திருஞான. 423.*

✧ *'பிறவித் துன்பங்களாவன தன்னைப்பற்றி வருவனவும், பிற உயிர்களைப் பற்றி வருவனவும், தெய்வத்தைப்பற்றி வருவனவும் என மூவகையான வருந்துன்பங்கள்' (திருக்குறள், 4-பரிமேலழகர் உரை.)*

‡ *ஞானாமிர்தம், 19.*

இடரினும் தளரினும் எனதுறுநோய்
தொடரினும் உனகழல் தொழுதுஎழுவேன்.

(இடர் வந்த காலத்திலும் தளர்ந்தாலும் எனது மிக்க நோய் வந்து தொடர்ந்தாலும் உன்னுடைய திருவடிகளையே தொழுது எழுச்சி பெறுவேன்.

இடரினும் - துன்பத்திலும். தளரினும் - தளர்ந்தாலும். தளர் என்பதை முதல்நிலைத் தொழிற்பெயராக்கித் தளர்விலும் என்று பொருள் கொள்வதும் பொருந்தும்; இடர் என்னும் பெயருக்கு ஏற்ப இதனையும் பெயராக்கும் வழி இது. எனது நோய், உறுநோய் என்று கூட்டவேண்டும். அவரவர்களின் வினைப் பயத்தால் அவரவரை நாடி வருவனவாதலின் எனது நோய் என்றார். உன: அகரம், பன்மை உருபு; கழல் என்பது கழல்கள் என்னும் பொருளையுடையது. கழல் என்பது வீரத்தைப் புலப்படுத்த ஒற்றைக்காலில் அணியும் மணி கட்டிய ஒருவகை அணி; வீர கண்டை அல்லது வீர வெண்டயம் என்றும் சொல்வது உண்டு. அது இங்கே அதனை அணிந்த திருவடிகளுக்காயிற்று. தொழுது எழுவேன் - தொழுது எழுவேன் - தொழுது அப்படித் தொழுததன் விளைவாக என் மனத் தளர்ச்சி நீங்கி எழுவேன்; எழுதல் இங்கே மனத்தின் செயல். உன்னைத் தொழுது பாயலினின்றும் எழுவேன் என்று பொருள் உரைப்பது இங்கே சிறப்பன்று.)

இடர் என்றது காலநிலை முதலியவற்றால் தடுப்பதற்கு அரியனவாகி வரும் துன்பங்கள். இவை ஆதிபௌதிகத் தின்பாற் பட்டவை.* தளரினும் என்பதனால் சுட்டப் பெறும் தளர்ச்சி ஆதிதைவிகத்தின் பாற்படும்.† நோய்கள் ஆத்தியாத்மிகத்தின் பாற்படும்.‡

மூவகைத் துன்பம் வந்தாலும் அவற்றை நீக்குவார் வேறு இருப்பதாக எண்ணி அலையாமல் இறைவனே நமக்கு உற்ற பாதுகாப்பு என்று கடைப்பிடித்து அவனுடைய திருவடிகளைப் பற்றிக்கொள்வதே அன்பர்களின் இயல்பு.

---

* *''ஆதி பௌதிகம் சீத மாமழை, உருப்பவிர் வேனில் உட்குவரு கடுங்கால், இருள் கிழி மின்னுப் பெருவிறல் அசனி, மன்னுயிர்க் குறுகண் துன்னியா றருந்தல், ஆதி யாய வீவருந்திறத்த.'' (ஞானாமிர்தம், 19)*

† *''ஆதி தைவிகம் திரைவருந் தீமை'' (ஷ)*

‡ *''ஆத்தி யான்மிகம்...... வளியிற் பித்தின் விளியா விளையின்.'' (ஷ)*

இவ்வாறு இடர் வரினும் தளர்ச்சி வரினும் நோய் வரினும் இறைவனுடைய கழலைத் தொழும் துணிவு எல்லோருக்கும் வராது. ''எத்தைத் தின்றால் பித்தம் தீரும்?'' என்றபடி தம்முடைய ஆற்றலாலும் அறிவாலும், துணையாக இருப்பாருடைய ஆற்றலாலும் அறிவாலும் அவற்றைப் போக்கிக் கொள்ளலாம் என்ற எண்ணமே பலருக்கு உண்டாகும். இறைவனையன்றி வேறு துணையில்லாத அன்பர்கள் எது வரினும் அவனை நாடும் ஒருமைப்பாடு உடையவர்களாக இருப்பார்கள்.

சிற்றறிவும் குறுகிய ஆற்றலும் உடையவர்களாகிய மக்களுக்கு வரும் இடர்ப்பாடுகளை இறைவன் நீக்கியருள்வது பெரிதன்று. பேரறிவும் பேராற்றலும் உடைய அமரர்களுக்கு வந்த இடரைப் போக்கினவன் அவன். அது அவர்கள் தங்களுடைய ஆற்றலால் நீக்க முடியாத இடராக இருந்தது; அவர்களுடைய உயிருக்கே முடிவாக வந்தது. பாற்கடலைக் கடைந்தபோது அமுதம் வருமென்று அமரர் எதிர்பார்த்தார்கள். ஆனால் அது தோன்றுவதற்கு முன் ஆலகால விடம் தோற்றியது. அந்த நஞ்சை மாற்ற அவர்களால் இயலவில்லை. கடல்தனில் இனி வரவிருந்த அமுதத்தோடு கலக்க இருந்தது அந்த நஞ்சு. ஆனால், இறைவன் அமரர் வேண்ட அதனை எடுத்துத் தன் திருமிடற்றினில் அடக்கினான். உண்ட நஞ்சு மீண்டும் வெளிவந்தால் முன்நின்றாருக்கு அழிவு நேரும். திருவயிற்றுக்குட்போனால் அங்குள்ள உயிர்களுக்கு அழிவு உண்டாகும். அதனால் அந்த நஞ்சுக்கு வேலையே இல்லாதபடி தன்னுடைய கழுத்தில் அடக்கிக் கொண்டான் இறைவன்.

''இடரினும் தளரினும் நோய் தொடரினும் உன் கழல் தொழுவேன்; இடர் முதலியவை உன் திருவருளால் நீங்கிவிடும் என்ற உறுதி எனக்கு உண்டு. தேவர்களின் உயிருக்கே இறுதியாக வந்த பேரிடரை நீக்கினவன் நீ அல்லவா?'' என்று நினைக்கும்படி ஞானசம்பந்தர் தம்செயலையும் பண்டை வரலாற்றையும் இணைத்துப் பாடுகிறார்.

> கடல்தனில் அமுதொடு கலந்தநஞ்சை
> மிடறினில் அடக்கிய வேதியனே!

(திருப்பாற் கடலில் அமரர் அமுது கடைந்த காலத்தில் அதனோடு கலந்து இனமாகவந்த நஞ்சைத் திருக்கழுத்தில் அடக்கியருளிய வேதப் பொருளானவனே!

கலந்த என்றது ஓரிடத்தில் தோன்றியதை நினைந்தது. அமுது வரும் வரும் என்று எதிர்பார்த்தனர் அமரர்; அப்போது வந்ததாதலின் அமுதொடு கலந்த நஞ்சு என்றார். வேதியன் வேதப் பொருளானவன்; வேதம் ஓதுபவன். இறைவன் எப்போதும் வேதத்தை ஓதிக்கொண்டே இருப்பவன்.)*

★

ஞான சம்பந்தர் இப்போது தமக்குள்ள நிலையை மேலே சொல்கிறார். அதைச் சொல்லத் தொடங்கும் போதே, 'இறைவன் நம்மை ஆட்கொண்டான். அவனால் ஆட்கொள்ளப் பெற்றவர் களுக்கு எதனாலும் குறையில்லை என்று நினைத்திருந்தோமே! இப்போது அல்லவா நம் குறை தெரிகிறது? குறைவிலா நிறைவாகிய சிவபெருமானுக்கு ஆளாகப் புக்கபிறகு பிறரிடம் போய் ஒன்று தா என்று கேட்காமல் இருக்கும் நிலை வந்தது. அதுவே பெரிய நிலை என்று எண்ணியிருந்தோமே! இப்போது அதற்கு மேலும் ஒரு நிலை இருக்கிறது தெரிகிறதே! அதை நோக்கும்போது நாம் குறையுடையோம் என்றல்லவா தோன்றுகிறது? இறைவன் நம்மை ஆண்ட வண்ணம் இதுதானா?' என்று ஒரு வகையான வருத்தம் தோன்றுகிறது.

இதுவோ எமை ஆளுமாறு?

என்று இறைவனையே கேட்கிறார்.

எல்லாப் பொருளையும் தரும் வள்ளல் இறைவன். வள்ளன்மைக்கு இலக்கணம் தன் கைப் பொருளைப் பிறர் குறையறிந்து ஈவது. ஆனால் இறைவனுடைய வள்ளன்மை அதனோடு நின்றுவிடுவதன்று; தன்னை வழிபட்டவருக்கு வேண்டியவற்றைத் தருவதோடு, அவர்களையே வள்ளல்கள் ஆக்கி விடுவான். தம்பால் வந்து இரந்தவர்களுக்கு வேண்டும்

---

* *''வேதம் ஓதி வெண்ணூல் பூண்டு'' (திருஞான. முதல் திருமுறை திருப்பழனம்); ''வேதியா வேத கீதா'' (திருநா. 4-ஆம் திருமுறை, திருவாலவாய்.)*

பொருளை வரையறையின்றி ஈயும் நிலையை அவர்களுக்கு உண்டாக்கி விடுவான். ''அந்த வள்ளன்மையை என்னிடம் காட்டாமல் இதுகாறும் இருந்தாயே!'' என்று குறையுறுகிறார் சம்பந்தர்.

''எனக்கு வேண்டியனவற்றை நான் வேண்டாமலே பாலித்தருளும் பிரான் நீ. இப்போது நான் எந்தையாருக்குப் பொருள் வழங்க வேண்டும். அவருக்கு அதனை வழங்கும் ஆற்றல் எனக்கு இல்லை. உன் அடியான் இப்படித் தன்பால் ஒன்றை வேண்டினார்க்கு அதனை அளிக்க முடியாமல் நைந்து வாடுதல் நின் அருளுக்கு அழகோ? உலகில் உள்ள வள்ளல்களின் அருள்போல, என்னளவில் வேண்டிய பொருள் கிடைக்கச் செய்தது போதுமா? உன் அருள் பிறர் செய்யும் அருளினும் இனியது அல்லவா? உத்தம வள்ளல் ஒருவன் கேளாத முன்பே குறிப்பறிந்து அவனுக்கு வேண்டியவற்றைக் கொடுப்பான். உத்தமோத்தம வள்ளலாகிய நீ நான் கேளாத முன்பே குறிப்பறிந்து, என்பால் வேண்டினாருக்கு நான் உடனே ஈயும் வண்ணம் அருள் செய்யவில்லையே! இதுதானா நினது இன்னருள்? ஆவடுதுறையில் எழுந்தருளியிருக்கிற சிவபெருமானே!''

இதுவோஎமை ஆளுமாறு?
ஈவதுஒன்று எமக்கு இல்லையேல்,
அதுவோஉனது இன்னருள்
ஆவடுதுறை அரனே!

(இதுதானா நீ அடியார்களாகிய எங்களை ஆளும் வகை? எங்கள்பால் வந்து இரந்தாருக்குக் கொடுப்பதற்கு ஏற்ற பொருள் ஒன்றும் எம்மிடம் இல்லையானால், அந்த நிலையை எங்களுக்கு அளிப்பதுதானா நின்னுடைய இனிய அருள்? திருவாவடுதுறையில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானே!

இது என்றது தம் நிலையை; ஈவது ஒன்று - பிறருக்குக் கொடுக்கும் ஒரு பொருள். அது என்றது தம்மை அந்த நிலையில் நிறுத்தியதைச் சுட்டியது. அருளென்றது பிறர்பாற் செல்லாமல் வேண்டியவற்றை அடியார்களுக்குத் தருவது; இன்னருள் என்றது தம்பால் வந்தாருக்கு வேண்டியவற்றைத் தரும் நிலையை அடியார்களுக்குத் தருவது.)

''இடரினும் தளரினும் நோய் தொடரினும் உன் கழலே தொழும் எனக்கு அருளுமாற்றில் குறை வைக்கலாமா? நஞ்சை மிடற்றினில் அடக்கிய நீ உன் அருளிற் குறை காட்டலாமா?'' என்பது குறிப்பால் தோன்றப் பாடினார்.

இடரினும் தளரினும் எனதுறுநோய்
தொடரினும் உனகழல் தொழுதெழுவேன்;
கடல்தனில் அமுதொடு கலந்தநஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே!

இதுவோஎமை ஆளுமாறு? ஈவதொன்று எமக்கு இல்லையேல்,
அதுவோஉனது இன்னருள்? ஆவடு துறைஅரனே!

இந்தத் திருப்பதிகம் பாடியதைப்பற்றிச் சேக்கிழார் பெருமான்,

''சென்று தேவர்தம் பிரான்மகிழ் கோயில்முன் பெய்தி
நின்று போற்றுவார், 'நீள்நிதி வேண்டினார்க்கு ஈவது
ஒன்றும் மற்றிலேன்' உன் அடி அல்லதொன்று அறியேன்,
என்று பேரருள் வினவிய செந்தமிழ் எடுத்தார்''*

என்று பாடுகிறார். ஞானசம்பந்தர் திருவாக்கில் வரும், 'ஈவதொன்று எமக்கு இல்லையேல்' என்ற பகுதிக்கு, ''நீள்நிதி வேண்டினார்க்கு ஈவது ஒன்றும் மற்றிலேன்'' என்று பொருள் விரிக்கிறார் சேக்கிழார்.

இரப்பவருக்குத் தான் ஈதலோடன்றி, தன் அடியார்கள் தம்பால் இரப்பவருக்கு ஈயும்படியாக அவர்களை வைக்கும் இன்னருள் உடையோன் இறைவன் என்பதை அப்பரும்,

இரப்பவர்க்கு ஈய வைத்தார்''✝

என்று பாடினார்.

பிறர்பால் இரவாமல் இருத்தல் உயர்ந்த நிலை. தம்பால் வேண்டினாருக்கு இல்லையென்னாமல் ஈதல் அதனினும் உயர்ந்த நிலை. அந்த நிலை இன்மையையே சம்பந்தப் பெருமான் நினைந்து இறைவனை வினவினார்.

---

* *பெரிய. திருஞான. 424.*

✝ *4-ஆம் திருமுறை, ஐயாறு.*

பிறர் தம்மை இரக்கும்போது தாம் பிறர்பால் அத்னை அப்போது வேண்டி ஈதல் அத்துணைச் சிறப்புடையதன்று. இராமன் முடி சூடினால் கைகேயி இழிநிலை அடைவாள் என்பதை அறிவுறுத்த வந்த கூனி இந்தக் கருத்தை நினைப்பூட்டுகிறாள்.

தூண்டும் இன்னலும் வறுமையும் தொடர்தரத் துயரால்
ஈண்டு வந்துனை இரந்தவர்க்கு இருநிதி அவளை
வேண்டி ஈதியோ? வெள்குதி யோ?விம்மல் நோயால்
மாண்டு போதியோ? மறுத்தியோ? எங்ஙனம் வாழ்தி?''*

என்னும் கம்பநாடர் வாக்கு இங்கே ஓரளவுக்கு நினைக்கத் தக்கது.

இந்தத் திருப்பதிகத்தின் பத்துப்பாட்டிலும் முதல் நான்கு அடிகள் வெவ்வேறாக அமைய, அவற்றின் பின், ''இதுவோ எமை...... ஆவடுதுறை யரனே'' என வரும் இரண்டடிகளும் ஒவ்வொரு பாட்டிலும் வந்துள்ளன. நான்கு அடிகளுக்குமேல் பல்லவியைப் போல வரும்படி இந்த இரண்டடிகளை வைத்ததனால் இப்பதிகம், ''நாலடி மேல் வைப்பு'' என்ற வகையைச் சார்ந்தது.

இப்பதிகத்தின் திருக்கடைக் காப்பில்,

நலமிகு ஞானசம் பந்தன்சொன்ன
விலையுடை அருந்தமிழ் மாலைவல்லார்.

என்று வருகிறது. 'விலையுடை அருந்தமிழ்' என்பது, 'மதிப்பையுடைய பிறராற் பாடற்கரிய தமிழ்' என்று பொருள் படுவதாகக் கொள்ளலாம். அப்படியின்றி ஆயிரம் பொன் பெற்றதை நினைந்து இப்படிப் பாடியதாகக் கொண்டு, 'பொருளை விலையாகப் பெற்ற அருந்தமிழ்'✠ என்று பொருள் உரைக்கவும் இடம் உண்டு.

★

---

* கம்பராமாயணம், மந்தரை சூழ்ச்சி. 72.

✠ ''தோணிபுரத்து, இறையவனார் சொன்ன செந்தமிழ்க்காக இனிதளித்த, நிறையுல வாக்கிழிச் செம்பொற்றனம்'' (திருவாவடுதுறைக் கோவை, 153) என்பதில் சம்பந்தர் பெற்ற பொருள் பாட்டுக்குரிய பரிசென்பது குறிப்பாகத் தெரிகின்றது.

இங்கும் அங்கும்

சீகாழியில் திருத்தோணியில் எழுந்தருளியிருந்த இறைவன் இன்று திருக்கோயிலில் ஒரு கட்டு மலைமேல் பெரிய திருவுருவத்துடன் வீற்றிருக்கிறான். அருகில் உமா தேவியார் எழுத்தருளியிருப்பதால் உமாபாகன் என்ற திருநாமமும் இப்பெருமானுக்கு வழங்குகிறது. இறைவன் உமாதேவியாரோடு எழுந்தருளியிருக்கும் இந்த அழகிய திருக்கோலத்தைக் கண்டு களித்த திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், அவ்வாறு இறைவன் உலகமுய்யப் பெண்ணின் நல்லாளொடும் இருந்த பெருந் தகைமையை நினைந்து உருகினார். அவர் உள்ளம் இறைவனுடைய கருணைப் பெருக்கின் நினைவிலே ஊறி இன்புறும் பொழுதெல்லாம் அதன் விளைவாகத் திருப்பாட்டு எழும். ஆகவே இப்போதும் ஒரு திருப்பதிகம் எழுந்தது.

'பெருந்தகையாகிய எம்பெருமான் பெண்ணினல்லாளாகிய எம்பிராட்டியோடு கழுமலவள நகராகிய சீகாழியில் எழுந்தருளியிருக்கும் கருணைதான் என்னே!' என்ற வியப்பு அவர்பால் உண்டாயிற்று.

அதில் என்ன வியப்பு?

இறைவன், குணம் குறி கடந்தவன்; பிறப்பு இறப்பு இல்லாதவன். அவனுடைய நிலை இன்னதென்று வரை யறுத்துக் கூறுவார் யாரும் இலர். வேதமும் கூறவில்லை. அவ்வாறு யாவும் கடந்த பொருளாகிய அவன், அருளே கண்ணாகக் காணும் அன்பர்களுக்குத் தன்னுடைய அடையாள மாகிய திருவுருவங்களைக் காட்டினான். அவன் அருளிய அக்காட்சியினால் இன்புற்ற அருட்பெருஞ் செல்வர்கள் தாம் கண்ட திறத்தை உலகினருக்கு உணர்த்தினர். அவர் காட்டிய

நெறிப்படியே இறைவனுக்குப் பல வகையான திருவுரு வங்களும் திருநாமங்களும் அமைந்தன. பொறியடங்கத் தவம் மேற்கொண்டு இன்றவனைக் காண . இயலாதவர்களும் அவனுடைய திருவுருவங்களைக் கண்டும் திருநாமங்களைச் சொல்லியும் இன்புற வகை பிறந்தது. பக்குவ ஆன்மாக்கள் முறுகிய அன்பினாலே இறைவனுடைய அருளைப் பெற முடியும். அவ்வாறு இல்லாதவர்களும் சூழ்நிலையின் ஆற்றலினாலே இறைவனுடைய நினைவு உள்ளத்திலே ஊன்றி வளர்வதற்கு இறைவனுடைய திருவுருவங்களும் அவற்றை நிறுவி வழிபடும் கோயில்களும் பயன்படுகின்றன. மடைப் பள்ளிக்குட் புகுந்தபோதே உணவு நினைவு வந்து நாவில் நீர் சுரப்பது போலத் திருக்கோயிற்கண் புகும்போது இறைவ னுடைய நினைவு உண்டாகி உள்ளத்தில் அன்பு ஊற்றெழும்.

திருக்கோயில்களில் எழுந்தருளியிருக்கும் இறைவனுடைய திருவுருவங்கள் அவனுடைய இயல்புகளையும் அருள் திறத்தையும் வெளிப்படுத்துவன. ஆதலின் அவற்றை முதலிலே புறக்கண்ணால் பார்த்து இன்புறும் அன்பர்கள் அப்பால் அவற்றின் உள்ளுறையைச் சிந்தித்து ஈடுபட்டு அகக்கண்ணால் பரம்பொருட் காட்சி பெற்று ஆனந்தமடையும் நிலையைப் பெறுவர்.

உமாபாகன், அருளே திருமேனியாகக் கொண்ட அம்பிகையை உடனிருக்கச் செய்து எழுந்தருளியிருக்கிறான். உலகமே ஆணும் பெண்ணுமாக இயங்குவது. உலகம் ஆண்மையும் பெண்மையும் ஒன்றுபடுவதனால் வளர்கிறது; வாழ்கிறது. தனியாணும் தனிப்பெண்ணும் உலகில் இருந்தால் அவர்களோடு உலகம் அழிந்தொழியும். உலகில் மக்கள் தொடர்ந்து வாழவேண்டுமானால் ஆணும் பெண்ணும் வாழவேண்டும்; அவர்கள் இணைந்து வாழவேண்டும். உலகம் இவ்வாறு இயங்கவேண்டுமென்று இறைவன் தன் திருக்கோலத்தாலும் அறிவுறுத்துகிறான். ஆணும் பெண்ணுமாக உலகம் வாழ்ந்து வளரவேண்டும் என்பதைத் தானும் ஆணும் பெண்ணுமாக இருந்து காட்டுகிறான். ஆணும் பெண்ணுமாக வாழும் உலகத்தில் தான் ஆணும் பெண்ணுமாக இருந்து காக்கிறான். அவன் அவ்வாறு இருப்பதனால்தான் உலகம்

ஆணும் பெண்ணும் கலந்த உலகமாக இருக்கிறது. அவன் தனியே யோகியாக அமர்ந்தால் உலகம் முழுவதும் வாழ் விழந்து வீணாகி விடும்.*

இதனை மணிவாசகப் பெருமான் ஒரு பாட்டில் சொல்கின்றார்.

''தென்பால் உகந்தாடும் தில்லைச்சிற் றம்பலவன்
பெண்பால் உகந்தான் பெரும்பித்தன் காணேடி!
பெண்பால் உலகந்திலனேல் பேதாய் இருநிலத்தோர்
விண்பாலி யோகெய்தி வீடுவர்காண் சாழலோ!''

★

இறைவன் பெண்களுக்குள்ளே நல்லாளாகிய உமா தேவியுடன் சீகாழியில் இருக்கிறான். சீகாழி நீர்வளம், நிலவளம், பொருள் வளம், அன்பு வளம் மிக்க நகரம்; வளநகர். அந்த நகரில் எங்கே பார்த்தாலும் நல்ல காட்சி களையே காணலாம். கண்ணில் விழுவன எல்லாம் நல்லன வாகவே இருக்கும். இயற்கை அழகும் செயற்கை யழகும் மலிந்த வளநகரம் அது. கோயிலும் குளமும் மாடமும் மாளிகையும் காண்பதற்கு அழகிய பொருள்கள் அல்லவா? பார்க்கின்ற மக்களும் சிவபிரான் அடியார்களாதலின் சைவத் திருக்கோலம் பூண்டு விளங்குகிறார்கள்.

எங்கே பார்த்தாலும் கண்ணில் நல்லதே உறுகின்ற கழுமல வளநகரத்தில் பெருந்தகையாகிய இறைவன் பெண்ணின் நல்லாளொடும் இருந்த சிறப்பு எத்தகையது! அதை வார்த்தை களால் எடுத்துச் சொல்லமுடியுமா? மற்ற இடங்களெல்லாம் பிரளயகாலத்தில் அழிந்து ஒழியவும் இத்தலம் அழியாது மிதக்க, இறைவனும் இறைவியும் அதில்

---

* *'காரண முதல்வன் மோனக் காட்சியால் அமரரெல்லாம், சூரர மகளிர் தங்கள் துணைமுலைப் போகம் இன்றி, ஆரிடர் நிலைமை தன்னை அடைந்தனர் அளக்கர் சூழ்ந்த, பாரிடை உயிருங் காமப் பற்றுவிட்டிருந்ததன்றே,'' ''சாலிகள் வளரு மெல்லை தடம்புனல் வறுமைத் தாக, வாலிது குரல்வாங்காது வருத்தொடு மாய்வதேபோல், மேலவ னருளாற் போகம் வெறுத்தலிற் கருமல் கின்றி, ஞாலமன் னுயிர்கள் முற்றும் நாடொறுங் குறைந்த வன்றே.'' (கந்தபுராணம், மேருப்படலம், 17,28.)*

இருந்த தோற்றத்தை நினைப்பூட்டும் அதிசயத்தைச் சொல்வதா? வாக்கு மனம் கடந்த பெருமான் எல்லா மக்களும் கண்டு தரிசித்து இன்புறும் பொருட்டு அம்மையும் அப்பனுமாகி எழுந்தருளிய கருணையைச் சொல்வதா? அப்படி எழுந்தருளிய நிலையை விக்கிரக உருவத்தில் அடியார்கள் வழிபட ஏற்றுக்கொண்ட எளிமையைச் சொல்வதா? அந்தத் திருவுருவங்கள் கண்ணாற் காணும்போதும் பேரளவினை உடையனவாய் இருக்கும் பெருமையைச் சொல்வதா? அந்த உருவங்களில் அமைந்துள்ள எழிலைச் சொல்வதா? அன்பர்களுடைய உள்ளத்தே அன்பு ஊற்றெழச் செய்யும் கவர்ச்சியை சொல்வதா? எதைச் சொன்னாலும் சொல்லி முடித்ததாகாது. ஆகவே ஞானசம்பந்தர், ''இரந்தவாறு என்னே!'' என்று பொருள் படும்படி, ''பெருந்தகை இருந்ததே!'' என்று பாடுகிறார். தாம் கண்ட காட்சியும், பெற்ற அநுபவமும் இன்னவாறு இருந்தன என்று சொற்களால் சொல்லி அளவுபடாமையை எண்ணியே இப்படிச் சொன்னார். தமிழ் விரகராகிய அப் பெருமானுக்கே இயம்ப அரிதெனின் ஏனையோர் எவ்வாறு சொல்ல இயலும்?

கண்ணின்நல் லஃதுறும் கழுமல வளநகர்ப்
பெண்ணின் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே!

(கண்ணில் நல்ல காட்சியே படும் கழுமல வளநகரில் பெண்களுக்குள் நல்லாளாகிய உமாதேவியோடும் பெருந்தகைமையுடைய இறைவன் இருந்தவாறு என்னே!

நல்லது என்பது செய்யுளை நோக்கி நல்ல:து என்று விரிந்தது; விரித்தல் விகாரம். இருந்ததே; இருந்தது என்னே என்னும் பொருளினையுடையது. என் என்பது அவாய் நிலையால் வருவித்து முடித்தற்குரியது.)

★

பெருந்தகை இன்னவாறு இருந்தான் என்று சொல்ல இயலாவிட்டாலும் அவ்வாறு இருப்பதனால் உண்டாகும் பயன் இன்னதென்று தெரியும். அருள் திருமேனி தாங்கி அம்மையுடன் எழுந்தருளியிருப்பதற்குக் காரணம் அவன் தன்னை யாவரும் எளிதில் வணங்கி நற்பயன் அடைய வேண்டும் என்னும் கருணைதான். இறைவனை வணங்குவதனால் இம்மைப் பயனும் மறுமைப் பயனும் ஒருங்கே உண்டாகும். பெண்ணி

னல்லா ளொடும் அமர்ந்திருக்கும் பெருந்தகையை அம்மையும் அப்பனுமாக வணங்குவது அன்பர்கள் இயல்பு. உயிர்களுக் கெல்லாம் எக்காலத்தும் எவ்விடத்தும் தொடர்ந்து நின்று தனுகரண புவன போகங்களை வழங்கியருளும் அம்மையும் அப்பனுமாக இருப்பவர்கள்* அவர்களே. அவர்களே அம்மையப்பர் என்பதை உணர்ந்து கொண்டவர்களுக்கு உலகத்து ஆருயிர்கள் அனைத்தும் அவர்களுடைய மக்கள் என்ற உணர்வு தலைப்படும். அந்த உணர்வு முறுக ஜீவதயையும், பகையின்மையும், தன்னல மறுப்பும் தியாக புத்தியும் உண்டாகும். அதனால் உலகத்து உயிர்கள் இனிது வாழ வகை உண்டாகும். எல்லா உயிர்களிடத்தும் தயை உடையராக வாழ்வாரிடம் எல்லா உயிரும் அன்பு செய்யும். அதனால் இம்மையில் யாவரும் போற்ற வாழும் வாழ்வு உண்டாகும்.

ஆணும் பெண்ணுமாக எழுந்தருளியிருக்கும் இறைவன், மனித வாழ்வில் ஆணும் பெண்ணும் ஒன்றி வாழ்ந்து அறம் செய்யும் வகையை நினைப்பூட்டுகிறான். ஆணும் பெண்ணுமாக இல்லறம் நடத்தும் மக்கள் அப் பெருந்தகையை வணங்கினால் நல்ல வண்ணம் வாழலாம். தினந்தோறும் இடையூறின்றி இறைவன் திருவருளால் நல்வாழ்வு அமையும். இம்மை வாழ்விலே நன்மை உறுவதோடு அம்மையிலும் நல்ல கதி உண்டாகும். அதற்குச் சிறிதேனும் குறைவு இராது. ''இந்த உலகில் இன்பங்களைத் துய்த்தான்; ஆதலின் மறுமையில் கொஞ்சம் குறைவாக இன்பம் அருள்வோம்'' என்ற கணக்கு இராது. இங்கும் நல்ல வண்ணம் வாழலாம்; அங்கும் குறைவிலா இன்பம் துய்க்கலாம்.

மண்ணில்நல் லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணின் நல் லகதிக்கு யாதுமோர் குறைவிலை.

(பூவுலகில் நல்லபடி நாள்தோறும் நல்வாழ்வு வாழலாம். ஆராய்ந்து பார்த்தால் மறுமையில் நல்ல கதிக்குச் சிறிதளவும் குறைவு இல்லை.

---

* *''அம்மையப்ப ரேஉலகுக் கம்மையப்பர் என்றறிக, அம்மையப்பர் அப்பரிசே வந்தளிப்பர்.'' (திருக்களிற்றுப் படியார், 1).*

மண்-நிலவுலகம். நல்ல வண்ணம் வாழ்வது, இடையூறின்றி இன்ப வாழ்வு பெறுவது. வைகலும்-நாள்தோறும். வைகலும் வாழலாம் என்று கூட்டுக. நல்ல கதி-முத்தி. யாதும்-சிறிதும்.)

★

இறைவனை வழிபடுவோர் பெண்ணைத் துறந்து துறவு பூண்டு உலக வாழ்வில் வரும் இன்பங்களை அடையாமல்தான் வாழவேண்டும் என்ற நியதி இல்லை. இறைவன் பெண்ணி னல்லாளோடு எழுந்தருளி யிருத்தலின் நாமும் பெண்ணோடும் அறநெறியில் அப் பிரானை வழிபட்டு வாழலாம். அந்த வாழ்க்கையில் குறைவு நேராது. நல்ல வண்ணம் வாழலாம். வையத்துள் வாழ்வாங்கு வாழலாம். இம்மையின்பம் குறைவின்றிக் கிடைப்பதோடு மறுமையின்பமும் கிடைக்கும்.*

இவ்வாறு ஆளுடைய பிள்ளையார் உபதேசம் செய்கிறார்.

மண்ணில்நல் லவண்ணம் வாழலாம் வைகலும்;
எண்ணின், நல் லகதிக்கு யாதும்ஓர் குறைவுஇலை;
கண்ணில்நல் லஃதுறும் கழுமல வளநகர்ப்
பெண்ணினல் லாளொடும் பெருந்தகை இருந்ததே!

(பிரிக்காமல் சொன்னால், ''நல்லகதிக்கியாதுமோர் குறைவிலை'' என்று வரும். கி என்பதில் உள்ள இகரம் குற்றிய லிகரம். பெருந்தகை இருந்தவாறு என்னே! இவனை வழிபட்டால் மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்; நல்ல கதிக்கும் குறைவு இலை.)

★

---

* *''இம்மை யேதரும் சோறுங்கூறையும் ஏத்தலாம் இடர் கெடலுமாம், அம்மை யேசிவ லோக மாள்வதற் கியாதும் ஐயுற வில்லையே.'' (சுந்தரர் தேவாரம், திருப்புகலூர்.)*

ஞான மலர்

என்ன அதிசயம்! இவ்வளவு பெரிய யானை கையிலே ஏதோ தழைக் கொத்தை எடுத்துப் பெருக்குகிறது. பெண்யானை யென்று தெரிகிறது. கீழே கிடக்கும் கல் முதலியவற்றைப் பொறுக்கி எறிகிறது. எங்கும் நீரைத் தெளித்துச் சுத்தம் செய்கிறது. அறிவுடைய மக்கள்கூட இவ்வளவு நன்றாக நிலத்தைப் பெருக்கிச் சுத்தஞ் செய்யமாட்டார்களே!

இந்த மடப்பிடி தன் வலிய கையினால் இவ்வாறு அலகிடக் காரணம் என்ன? இதோ பெரிய களிறு வருகிறதே! காட்டிலே வாழும் யானைகளில் இவ்வளவு பெரியதை எங்கும் காண முடியாது. மனிதர்கள் ஏவாமலே மிக அமைதியாக வருகிறது. ஒரு பெரிய சிவலிங்கம் போன்ற கல்லைக் கொணர்ந்து வைக்கிறது. தன் துதிக்கையினால் நீர் கொணர்ந்து அபிஷேகம் செய்கிறது. இந்தக் களிறும் பிடியும் சிவபூசை செய்ய எங்கே கற்றுக் கொண்டன? தம் மனைவி பூசைக்கு இடம் பண்ண, அங்கே இருந்து சிவபக்தர் ஒருவர் சிவ பூசை செய்வதுபோல் அல்லவா இருக்கிறது இந்தக் காட்சி?

காட்டிலே வாழும் யானை; மதம் பிடிக்கும் யானையாகிய இது வழிபடுகிறதற்கு இந்தக் கரியின் இயல்பு காரணமா? அல்லது இந்த இடத்தின் சிறப்புக் காரணமா? இரண்டும் இருக்கலாம். இந்த இடம் சிறப்புடையது என்பதில் தடையே இல்லை. திருக்கானப்பேர் என்னும் தலம் இது. இங்குள்ள ஆலயத்தில் அறிவுடைய மக்கள் பூசை புரிகின்றனர். வெளியே கடகரி வழிபடுகிறது. எங்கும் பக்தியின் மணம் வீசுகிறது.

> மானமா மடப்பிடி வன்கையால் அலகிடக்
> கானம்ஆர் கடகரி வழிபடும் கானப்பேர்

(பெருமைமிக்க மென்மையுடைய பிடி தன் வலிய கையினால் அலகிட்டுப் பெருக்க, அவ்விடத்தில் காட்டில் வாழும் மதத்தையுடைய ஆண் யானை இறைவனை எண்ணிப் பூசித்து வழிபடும் திருக்கானப்பேர்.

மானம் - பெருமை. மா - பெரிய; மிகப் பெரிய என்றபடி. அலகிடுதல் - பெருக்குதல். கடகரி - மதத்தையுடைய களிறு. கடம் - மதம். கானப்பேர் - காளையார் கோயில் என வழங்கும் தலம்.)

★

திருஞானசம்பந்தர் பாண்டி நாட்டில் உள்ள தலங்களுக்குச் சென்று வழிபட்டபோது திருக்கானப் பேருக்கும் வந்தார். இத்தலம் இப்போது காளையார் கோயில்* என வழங்குகிறது. இங்கே வந்தபோது தலத்தைப்பற்றிய செய்திகளை விசாரித்தார். ''இந்திரனுடைய யானையாகிய ஐராவதம், ஒரு சாபத்தால் காட்டானையாகி இங்கே வந்து பூசித்துத் தன் முன்னை நிலையைப் பெற்றதென்பது தல வரலாறு'' என்ற செய்தியைக் கேள்வியுற்றார். சிறிது கற்பனைக் கண்ணைக்கொண்டு பார்த்தார். ஐராவதம் இங்கே காட்டானையாக வந்தால், அதனுடைய மனைவியாகிய பிடியும் உடன்வருவது இயற்கைதானே? தேவேந்திரனுக்கு வாகனமாகும் புண்ணியமும் அறிவும் உடையது ஐராவதம். அது காட்டானையாக வந்தாலும் அறிவுடன் இருப்பது. அதன்பால் ஆராத காதலுடைய பிடியும் உடன் வந்திருக்கிறது. இறைவனைப் பூசித்துச் சாபநீக்கம் பெறலாம் என்ற அறிவு பிடிக்கும் களிற்றுக்கும் இருக்கிறது. ஆதலால் அந்த ஆண் யானை, பூசை புரிவதற்கு வேண்டிய காரியங்களைப் பிடி செய்துகொடுக்க, அது வழிபடத் தொடங்குகிறது. இதனைத்

---

* *சுந்தரமூர்த்தி நாயனார் திருச்சுழியலுக்கு வந்திருந்தபோது அவருடைய கனவில் இறைவன் கட்டிளங்காளை போலத் தோன்றி, ''யாம் இருப்பது கானப்பேர்'' என்று அருளியமையால் இறைவனுக்குக் காளையென ஒரு திருநாமமும், இத்தலத்துக்குக் காளையார் கோயில் என்ற திருநாமமும் உண்டாயின (பெரிய புராணம், கழறிற்றறிவார். 112, 113); ''கண்டு தொழப் பெறுவ தென்றுகொலோ அடியேன் கார்வயல் சூழ்கானப் பேருறை காளையையே.'' (சுந்தரர் தேவாரம்.)*

திருஞானசம்பந்தர் தம் கற்பனையாற்கண்டு அக் காட்சியையே மேலே கண்டவாறு பாடினார்.*

★

புராண வரலாற்றை நினைந்து ஞானசம்பந்தப் பெருமான் இப்படிப் பாடினார் என்று கொள்வது ஒரு முறை. அப்படியின்றி, இத் தலத்தின் சூழ்நிலையில் விலங்குகளும் அன்பர்கள் செய்வது கண்டு தாமும் தம் விலங்கியல்பை ஓரளவு நீத்து அன்பர்களைப்போல வழிபடும் என்று கூறியதாகவும் கொள்ளலாம். விலங்கினங்களும் நல்லோர் வாழும் இடங்களில் அவர்களுக்குக் குற்றேவல் புரிதலும் நிலத்தைப் பெருக்குதல் முதலியவற்றைச் செய்தலும் உண்டென்பதைச் சங்க காலத்து நூல்களினால் உணரலாம். சங்கப் புலவர்கள் பெரும்பாலும் இயற்கையிலே நிகழும் நிகழ்ச்சிகளை உள்ளது உள்ளவாறே கூறும் இயல்புடையவர்கள். சூழ்நிலையின் சிறப்பால் விலங்குகள் மக்கள் செய்யும் செயல்களைச் செய்வது இயற்கைக்கு முரணானது அன்று.

''மஞ்ஞை ஆலும் மரம்பயில் இறும்பின்
கலைபாய்ந்து உதிர்த்த மலர்வீழ் புறவின்
மந்தி சீக்கும் மாதுஞ்சு முன்றில்
செந்தீப் பேணிய முனிவர் வெண்கோட்டுக்
களிறுதரு விறகின் வேட்கும்
ஒளிறிலங் கருவிய மலை''[2]

என்பது பெரும்பாணாற்றுப்படை.

---

* இந்தத் திருப்பதிகத்தின் முதற் பாசுரத்திலும் இச்செய்தி வருகிறது. ''பிடியெலாம் பின்செலப் பெருங்கைமாமலர்தழீஇ, விடியலே தடம்மூழ்கி விதியினால் வழிபடும், கடியுலாம் பூம்பொழிற் கானப்பேர் அண்ணல்நின், அடியலால் அடைசரண் உடையரோ அடியரே!'' ஐராவதத்துக்குப் பல பிடிகள் உண்டு.

[2] 'மயில்கள் ஆரவாரிக்கும் மரம் நெருங்கிய இளமரக் காட்டையும், குரங்குகள் பாய்ந்து உதிர்த்த மலர்கள் சிந்தின காட்டினையும் உடையதும், மந்திகள் குப்பையைப் பெருக்கும் முன்னிடத்தில் தீயைப் போற்றும் முனிவர் வெள்ளிய தந்தத்தையுடைய களிறு கொணர்ந்துதரும் விறகினால் வேள்வி புரிவதற்கிடமாகியதும், விளங்கும் அருவியை உடையதுமாகிய மலை' என்பது பொருள்.

மந்தியும் களிறும் தீவேட்கும் முனிவர்களுக்கு ஆவன புரிதலைக் கடியலூர் உருத்திரங்கண்ணனார் என்னும் புலவர் இவ்வாறு பாடுகிறார். இதற்கு உரை எழுதிய நச்சினார்க் கினியர், 'மந்தி சீத்தலும் மா துஞ்சலும் களிறு விறகு தருதலும் இருடிகளாணையால் நிகழ்ந்தனவென்று உணர்க' என்று இங்கே காரணத்தைப் புலப்படுத்தினார்.

''கான யானை தந்த விறகிற்
கடுந்தெறற் செந்நீ வேட்டு''*

என்பது மாறப்பித்தியார் என்பவர் பாடியது. இதன் உரையாசிரியர், 'கான யானை தந்த விறகென்றது இவன் தவமிகுதியான் அதுவும் ஏவல் செய்தல்'' என்று எழுதினார்.

எனவே மானமா மடப்பிடி வன்கையால் அலகிடுதலும், கானமார் கடகரி வழிபடுதலும் இயற்கைக்கு முரண்பாடான செயல் அல்ல. பண்டைப் புலவர்களும் இத்தகைய காட்சிகளைப் பாடியிருப்பதனால் இது புலனாகிறது.

★

வேறு ஒரு வகையிலும் இந்தப் பாட்டுக்குப் பொருள் கொள்ள வழி உண்டு. பெரியோர்கள் சில செய்திகளைக் குறிப்பு வகையால் கூறுவது வழக்கம். மனத்தை வண்டாக வைத்து வண்டைப் பார்த்துச் சொல்வதுபோல மனத்துக்கு அறிவுரை கூறுவார்கள். மனத்தைக் குரங்காக வைத்துப் பேசுவார்கள். மக்கள் செய்யும் செயலை விலங்குகளின்மேல் வைத்துச் சொல்வார்கள்.

காதலைப்பற்றிப் பலபடியாக விரித்துரைக்கும் சங்கப் பாடல்களில் மக்களிடையே நிகழும் காதல் நிகழ்ச்சிகளைப் பல்வேறு வகையிலே புலவர்கள் பாடியிருக்கிறார்கள். அன்றியும் விலங்கினங்களும் பறவைகளும் காதல் செய்யும் காட்சிகளையும் எடுத்துச் சொல்வார்கள். அந்தப் பாடற் பகுதிகளுக்கு உள்ளுறை ஒன்று இருக்கும். விலங்கினங் களின்மேல் ஏற்றிச் சொன்னாலும் காதலன் காதலியர் செய்கையைக் குறிக்கும் உட்கருத்து ஒன்று அதனாற்

* புறநானூறு, 251:5-6.

புலப்படும். இறைச்சியென்றும் உள்ளுறையென்றும் இந்தக் குறிப்புநெறி இரண்டு வகைப்படும்.

அந்த முறையில் பக்தித் தமிழிலும் உள்ளுறை அமையும்படி பாடும் வழக்கம் உண்டு.

இங்கே சம்பந்தப் பெருமான், மடப்பிடி அலகிடக் களிறு வழிபடுவதாக அமைத்த காட்சிக்கும் உள்ளுறை காணலாம். யானையை ஆணவத்துக்கு அறிகுறியாகச் சொல்வது வழக்கம். மதத்தினாற் சிறப்பது யானை; மதம், செருக்கு, ஆணவம் எல்லாம் ஒன்றுக்கு ஒன்று இனமானவையே. செருக்கு மிக்க மனிதன் யாருக்கும் தலைவணங்காமல் தருக்குற்றுத் திரிவான். அப்படி உள்ளவனை மதயானை என்று சொல்லலாம். பிற இடங்களில் செருக்கு மிகுதியால் தலைவணங்காமல் நடந்து, தனக்கு ஏற்பத் தருக்கி நிற்கும் மனைவியுடன் வாழும் மனிதனும் திருக்கானப் பேருக்கு வந்தால் இறைவன் திருவருளால் தன் செருக்கு ஒழிந்து வழிபடுகிறான்; அவன் செய்யும் வழிபாட்டுக்கு அவன் மனையாட்டி துணைபுரிகிறாள். முன்பு செருக்குடையவர்கள் இப்போது செருக்கழிந்து இறைவனை வழிபடும் காட்சியையே குறிப்பு வகையால் மடப்பிடியின் மேலும் கடகரியின் மேலும் வைத்துத் திருஞான சம்பந்தப் பெருமான் பாடினார் என்று கொள்ளுவதும் பொருத்தமாக இருக்கும்.

★

இவ்வாறு அமைந்துள்ள திருக்கானப்பேருக்கு அன்பர்கள் செல்கிறார்கள்; வழிபடுகிறார்கள். அவர்கள் பெறும் பயன் கண்கூடாக இருக்கிறது. குறைபாடுகள் நிறைந்தது உடம்பு; நினைத்த காரியங்களை நினைத்த படியே செய்ய அது இடம் கொடுப்பதில்லை. ஊனம் ஆம் உடம்பு இது. ஆயினும் இதை வைத்துக் கொண்டுதான் நாம் கரையேற வேண்டும். இதற்கும் பிணி வந்துவிட்டால் ஒன்றுமே செய்ய முடியாது. திருக்கானப்பேருக்கு வருகிற அடியார்கள் தம்பால் உறுகின்ற பிணிகளெல்லாம் நீங்க, மேன்மேலும் அன்பிற் சிறந்து விளங்குகிறார்கள்.

யார் போனாலும் தமக்கு உறுபிணியைப் போக்கிக் கொள்ள முடியுமா? அது நடவாது. போகிற முறையிலே

போனால்தான் பயன் உண்டாகும். கிணற்றில் நீர் இருக்கிறது. அதன் அருகில் போய் நின்று எட்டிப் பார்த்தால் நீர் நம் ৫..யில் வந்து விழுந்துவிடுமா? கிணற்றிலிருந்து நீரைக் குடத்தில..லோ செம்பினாலோ இழுக்க வேண்டும். திருக்கானப்பேருக்குச் சென்று உறுபிணி கெடவேண்டும் என்ற விருப்பம் இருந்தால், அங்கே நண்ணுவதற்குமுன் ஒன்று செய்யவேண்டும். யானை கூடத் தன் பிடியைக் கொண்டு முன்னாலே அலகிடச் செய்து அப்பால் வந்து வழிபடும் இடம் அது. ஆகவே நாமும் முன்னால் வேண்டிய கருவிகளைக் கைக்கொள்ள வேண்டும்.

இறைவனை நணுகுவார் அவனை வழிபடுவதற்கு மலரைக் கொண்டு செல்வது வழக்கம். வெறும் மலர்களைக் கொண்டு போய்ப் பூசித்தால் போதாது. இறைவனிடம் உண்மையான அன்பு வைத்துப் பூசிக்க வேண்டும். கையிலே உள்ள மலர் வெறும் அடையாள மாத்திரமாக இருப்பதுதான். மனம் பொருந்திப் பூசிக்கும் பூசைக்குத்தான் பயன் உண்டு. மனம் பொருந்த வேண்டுமானால், இறைவனே நமக்கு எல்லாம் தருபவன் என்ற ஞானம் வேண்டும்.

மனம் என்பது ஒரு மலர்க்கொடி. அதில் மணமற்ற மலரும் பூக்கும்; மணமுள்ள மலரும் மலரும். பக்தி, ஞானம், வைராக்கியம், கருணை என்பவை போன்ற மலர்களும் அ... மனத்தில் மலரும் மலர். நல்ல மலர்கள் மலர்கின்ற மனத்தோடு சென்றால்தான் இறைவன் அருள் கிடைக்கும். திருக்கானப்... ர் இறைவன் இந்த உடம்பைத் தரும் பிறவி நோயை..ய போக்குபவன் என்ற ஞானம் வேண்டும். பிறவிப் பெரு நோயையே நீக்கும் இறைவன் **ஊனமாம் உடம்பினில் உறுபிணி** கெடும்படி செய்வான் என்ற அறிவு வேண்டும். இந்த ஞானமாகிய பெரிய மலர் மனத்திலே பூத்தால் அந்த மலரோடு செல்லுவாருக்கு நிச்சயமாக நற்பயன் உண்டாகும்.

ஊனமாம் உடம்பினில் உறுபிணி கெடஎண்ணின்
ஞானமாம் மலர்கொடு நணுகுதல் நன்மையே.

(குறைகள் நிரம்பிய உடம்பினில் அடைகின்ற நோய்கள் கெடும்படி நினைத்தால், அவ்வாறு நினைப்பவர்கள் ஞானமாகிய மலரைக் கொண்டு (கானப்பேரை) அடைதல் நன்மையாகும்.

ஊனம் - குறை; ஊன் என்பது அம்முச் சாரியை பெற்றது என்று கொண்டு, 'ஊன் குவையாகிய உடம்பு' என்றும் பொருள் கொள்ளலாம். உறுபிணி - அடையும் நோய்; மிக்க நோய் என்றும் சொல்லலாம். ஞானம் ஆம் மலர்; ஞானமாகிய மாமலர் என்றும் கொள்ளலாம். மனத்திலே தோன்றுவனவற்றுள் சிறந்ததாதலின் மாமலர் என்று சொல்வதும் பொருந்தும். நணுகுதல் - அடைதல். கானப்பேர் நணுகுதல் என்று கூட்டவேண்டும். கானப்பேர் நணுகுதல் என்று சொன்னாலும் அங்கு எழுந்தருளியுள்ள இறைவன்பாற் சென்று வழிபடுவதையே நினைந்தார். மலர் கொண்டு செல்லுதல் வழிபாட்டிற்காகத்தானே?}

களிறு மலர் கொண்டு சென்று பூசிக்கும் இடத்தில் ஆறறிவுடைய மனிதன் அந்த யானையைப் போல வெறும் மலரை மாத்திரம் கொண்டு சென்றால் போதுமா? தங்கள் தங்கள் தகுதிக்கு ஏற்ப வழிபடுவதுதான் முறை. ஆகவே அறிவுடைய மனிதன் தன் அறிவுச் சிறப்புக்கு ஏற்ப மற்ற மலர்களோடு ஞானமென்னும் மலரையும் கொண்டு செல்ல வேண்டும். உடம்பில் ஊனம் இருந்தாலும் உள்ளத்தில் ஞானம் இருக்கலாம். இறைவன் உடம்பு ஊனத்தைப் பாராமல் ஞானத்தைத்தான் பார்த்து அருள் புரிவான். அவனை வணங்கினால் இம்மையிலே கைமேற்பயன் பெறலாம்; உறுபிணி கெட நன்மை பெற்று வாழலாம்.

சம்பந்தப் பெருமான் பல இடங்களில் இறைவன்பால் அன்பு செய்வாருக்கு இம்மையிலும் மறுமையிலும் இன்பம் கிடைக்கும் என்பதை வற்புறுத்துவார். இந்தப் பாசுரத்தில் இம்மை வாழ்வில் இன்பம் பெறுதலைத் தனியே எடுத்துச் சொன்னார். உலகத்தில் நன்மையுடன் வாழ்வதற்கும் இறைவனுடைய அன்பு பயன்படும் என்னும் உண்மையை இதனால் தெரிந்து கொள்கிறோம்.

மானமா மடப்பிடி வன்கையால் அலகிடக்
கானமார் கடகரி வழிபடும் கானப்பேர்
ஊனமாம் உடம்பினில் உறுபிணி கெடஎண்ணின்
ஞானமா மலர்கொடு நணுகுதல் நன்மையே.

✽

அரற்றுங்கள்

மதுரைக்கு வடக்கே உள்ளது திருவேடகம் என்னும் திருத்தலம். வையைக் கரையில் அமைந்திருப்பது அது. திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் சமணரோடு வாது செய்தபோது, ''வாழ்க வந்தணர்'' என்று தொடங்கும் திருப்பாசுரத்தை எழுதியிட்ட ஏடு வையையில் எதிரேறிச் சென்றது. அதனைத் தொடர்ந்து பாண்டியனுக்கு மந்திரியாக இருந்த குலச்சிறையார் குதிரையின் மீது ஏறிச் சென்றார். அப்போது சம்பந்தர், ''வன்னியும் மத்தமும்'' என்று தொடங்கும் திருப்பதிகத்தைப் பாடியருள, ஆற்றிலே சென்ற ஏடு இந்தத் தலத்துக்கு அருகில் ஒதுங்கியது. அதனைக் குலச்சிறையார் எடுத்து வந்து யாவருக்கும் காட்டினார்.* ஏடு சென்று அணைந்ததாதலின் ஏடகம் ஆயிற்று. இந்தத் தலப்பதிகத்தின் திருக்கடைக்காப்பில்,

> கோடுசந் தனம் அகில் கொண்டிழி வைகை நீர்
> ஏடுசென் றணைதரும் ஏடகத் தொருவனை
> நாடுதென் புகலியுள் ஞானசம் பந்தன்
> பாடல்பத் திவைவல்லார்க்கு இல்லையாம் பாவமே

என்று ஆளுடைய பிள்ளையார் பாடுகிறார்.

இப் பதிகத்தின் ஏழாம் பாடல் இப்போது கிடைக்க வில்லை. இங்கே விளக்கத்துக்கு வருவது ஆறாம் பாடல்.

திருவேடகம் வையை யாற்றின் கரையில் இருப்பது ஆதலால் நீர்வளமும் நிலவளமும் நிரம்பியது. ஆற்றினால் அழகுபெற்ற இந்தத் திருப்பதிக்கு வேறு அழகுகளும் உண்டு. ஏடகத்தில் அழகிய பொய்கைகள் இருக்கின்றன. நீர் நிரம்பிய

---

*பெரிய புராணம், திருஞான. 848-851

பொய்கைகள் அவை. அங்கங்கே பூம்பொழில்கள் வானளாவ ஓங்கி வளர்கின்றன. மலர்களில் ஒவ்வொரு பருவத்திலும் மலர்பவை உண்டு. அப்படியே ஒவ்வொரு போதிலும் மலர்வன உண்டு. இந்தப் பொழில்களில் எல்லா வகையான மரஞ் செடி கொடிகளும் இருப்பதனால் எந்தப் பருவமானாலும் எந்த நேரமானாலும் அப்போது மலருகின்ற புது மலர்கள் பல அங்கே இருக்கின்றன. எனவே புதிய மலர்களை எப்போதும் அந்தப் பொழிலில் காணலாம்.

தென்றற் காற்று வீசும்போது பொய்கையில் வீசித் தண்மை அளாவிவரும். அப்பொய்கையில் மலர்ந்த மலர்களின் மேல் வீசிவரும். பொழிலிலே புகுந்து வரும். அங்கே மலர்ந்த புது மலர்களிலே அணைந்து வரும். இயல்பாகவே மென்மையை உடைய தென்றல், பொய்கையிலும் பொழிலிலும் பூக்களிலும் புகுந்து வருதலால் தண்மையும் மணமும் பெற்று மெல்ல வீசுகிறது. அப்படி வீசுகிற இடம் ஏடகம். வைகையின் வடகரை மருவியது அத்தலம்.

★

திருவேடகத்திலே எழுந்தருளியிருக்கிறான் இறைவன். நமக்கு ஏதேனும் துன்பம் வரும்போது அது சிறிதானால் பொறுத்துக் கொள்கிறோம்; பெரிதானால் வருந்துகிறோம். அதன் அளவு மிகுதியாக ஆக ஆக அதை வெளிப்படுத்தும் வகையும் மிகுதியாகிறது. முகம் சிணுங்குகிறோம். பிறகு உடம்பு துடிக்கிறது. அப்பால் முணுமுணுக்கிறோம். பின்பு அழுகிறோம். அதற்குமேல் அரற்றுகிறோம். அந்தத் துன்பத்தை யாரர்வது நீக்குவார் என்ற எண்ணம் உண்டானால் அவரிடம் போய் அரற்றுகிறோம். அவர் காலில் விழுந்து அரற்றுகிறோம்.

உலகில் மக்கள் தமக்கு அல்லல் உண்டாகும் காலத்தில் மற்ற மக்களை நாடிப் பரிதவித்துக் கெஞ்சி உள்ளம்நைந்து புலம்பி முறையிடும் வகைக்கும் ஓர் எல்லை இல்லை. ஏழை பணக்காரன் காலில் விழுகிறான். நோயாளி வைத்தியன் காலில் விழுகிறான். பலமற்றவன் பலசாலி காலில் விழுகிறான். பணக்காரன் மருத்துவனாக இருப்பதில்லை, பலசாலியாகவும்

இருப்பதில்லை. அதனால் பணக்காரனே மருத்துவன் காலிலும் பலசாலி காலிலும் அறிவுடையோன் காலிலும் விழும் காலம் உண்டு.

எல்லாக் குறைகளையும் போக்கும் மனிதன் யாரும் இல்லை. சில குறைகளைப் போக்கும் மனிதர்கள்கூடத் தம்முடைய ஆற்றலால் போக்குவதில்லை. இறைவன் திருவருள் இயக்குவதால்தான் அவ்வாறு செய்கிறார்கள். எல்லாப் பணக்காரரும் ஏழைகளுக்கு உதவி செய்கிறதில்லை. இறைவன் திருவருள் எங்கே இருக்கிறதோ அங்கேதான் ஈகை இருக்கிறது. மருத்துவன் தன்பால் வரும் எல்லா நோயாளிகளின் நோய்களையும் தீர்த்துவிட முடிகிறதில்லை. அவனால் தீர்க்க முடியாத வலிய பிணிகளும் உண்டு. மக்களால் துன்பம் நீங்குமென்பது உறுதியானால் எல்லாத் துன்பங்களும் அல்லவா நீங்க வேண்டும்? நம்முடைய கண்ணுக்குத் தெரியாமல், அங்கங்கே இறைவன் திருவருள் இருந்து இயங்குகிறது. மக்கள் அந்தத் திருவருளின் கருவிகளாக இருந்து உதவி புரிகிறார்கள்.

ஆதலின் துன்பங்களை நீக்கும் மூலஉபகாரியாக இருக்கிறவன் இறைவன்தான். அவனிடத்தில் நேரே போய்க் காலில் விழுந்தால் அவன் அருள்சுரந்து நல்லது செய்வான்.

சாது ஒருவன் தன்னைத் தேடி வருகிறவர்களை வரவேற்று உபசரிப்பது வழக்கம். அவர்களுக்கு ஏற்றபடி உபசாரம் செய்யப் பொருள் இல்லாமையால் அரசனிடம் போய்ப் பொருள் கேட்டு வாங்கி வரலாம் என்று போனான். அவன் போனபொழுது அரசன் ஆண்டவனைத் தொழுது கொண்டிருந்தான்; ''கடவுளே! நான் ஏழை. நீ திருவருள்பாலித்து எனக்கு வேண்டிய செல்வத்தைக் கொடு'' என்று அரசன் பிரார்த்தனை செய்து கொண்டிருந்தான். அந்தப் பிரார்த்தனை சாதுவின் காதில் விழுந்தது. 'இது என்ன ஆச்சரியமாக இருக்கிறது! நமக்குத்தான் பணம் இல்லை. இவனிடம் யாசிக்கலாமென்று வந்தால் இவனும் பிச்சைக்காரனாக அல்லவா இருக்கிறான்? இவனும் ஆண்டவனிடத்தில் யாசகம் செய்துதானே பொருள் பெற்று மற்றவர்களுக்குத் தருகிறான்? அந்தப் பொருளை இவனிடம் பெறுவதைவிட நேரே அந்த ஆண்டவன் காலில் விழுந்தே

பெறலாமே' என்று அவன் எண்ணம் ஓடியது. அரசனை ஒன்றும் கேட்காமல் போய்விட்டான்.

இராமகிருஷ்ண பரமஹம்சர் இந்தக் கதையைச் சொல்கிறார். இறைவனே எல்லாவற்றிற்கும் மூல காரணம் என்று உறுதியாக நம்பினவர்கள் அவனிடம் தம் குறைகளை முறையிட்டால் நன்மை உண்டாகும். மக்களை நம்பிக் காலில் விழுவதைவிடக் கடவுள் காலில் விழுந்து அரற்றுவது நல்லது. கடவுளை நம்பினோர் கைவிடப்படார்.

''நீங்கள் உங்கள் வெம்மையான வலிய பிணி கெட வேண்டுமானால் ஏடகத்து ஐயனிடம் சென்று அவன் காலில் விழுந்து அரற்றுங்கள். உங்கள் பிணி கெடுவது மாத்திர மன்று; மக்களால் கிடைத்தற்கரிய பெரிய ஊதியம் ஒன்றும் கிடைக்கும்; மோட்சம் எளிதிலே கிடைக்கும்'' என்று ஞானசம்பந்தப் பிள்ளையார் உபதேசம் செய்கிறார்.

பொய்கைஇன் பொழில் உறு புதுமலர்த் தென்றல்ஆர்
வைகையின் வடகரை மருவிய ஏடகத்து
ஐயனை அடிபணிந்து அரற்றுமின்; அடர்தரும்
வெய்யவன் பிணிகெட, வீடெளிது ஆகும்.

[*பொய்கையிலும் இனிய பொழிலிலும் அவ்விரண்டினிலும் உற்ற புதிய மலர்களிலும் புகுந்து வரும் தென்றல் நிரம்பியதும், வைகையாற்றின் வடகரையில் மருவியதுமாகிய திருவேடகத்தில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானைத் திருவடிக்கண் வீழ்ந்து பணிந்து உங்கள் குறைகளைச் சொல்லிக் கதறுங்கள்; அவ்வாறு செய்தால் உங்கள்பால் மேன்மேல் வந்து தாக்குகின்ற வெய்யனவாகிய வலிய நோய்கள் கெட, (இவ்வாழ்விலே இன்பம் பெறுவதோடன்றி மறுமையில்) வீடு எளிதாகக் கிடைக்கும்.*

பொய்கை - மானிடர் ஆக்காத நீர்நிலை. பொய்கையிலும் பொழிலிலும் புதுமலரினும் சார்ந்துவந்த தென்றல். ஆர்-நிரம்பிய தென்றலார் ஏடகம், மருவிய ஏடகம் என்று கூட்டுக. அடர்தரும்-மோதும். வெய்ய பிணி - வன்பிணி. இம்மையில் துன்பந்தரும் உடல் நோய்களும் மறுமையில் துன்பந்தரும் காமம்

முதலிய மனநோய்களும் தீர்வதனால் இம்மையில் அறம் பொருள் இன்பமும் மறுமையில் வீடும் எளிதிற் கிடைக்கும் என்றபடி. வீடு எளிது ஆகும் - அரிதின் முயன்று பெறும் வீடு கிடைப்பதற்கு எளிதாகிவிடும்.]

★

இறைவனுடைய திருப்பதி, ஆற்றங்கரையில் பொய்கையும் பொழிலும் சூழத் தென்றல் வீச இருப்பதால் அந்தச் சூழ்நிலையே நோயை நீக்கும் வகையில் அமைந்திருக்கிறது. அதற்குமேல் இறைவன் அருளும் கிடைக்குமாயின் வன்பிணியும் கெடும்; வீடும் எளிதாகும்.

★

இணையடி

குறிஞ்சி நிலம்; அதிலும் மலையடிவாரம். அங்கே அழகிய திருக்கோயில்; அதன்கீழ் அழகிய ஆறு எல்லாம் சேர்ந்து பார்க்கும்போது எத்தனை அழகிய காட்சியைத் தருகின்றன! மலையே அழகு. இறைவன் இயற்கையிலே படைத்த அழகெலாம் ஒருங்கே திரண்ட இடம் அது. மேகம் வந்து தங்கி மழை பொழிவதும், பிற இடங்களெல்லாம் வறண்டு போனாலும் அந்த மழையால் வளம் பெற்று விளங்குவதும் மலை அல்லவா?

காளத்தி மலை மிகப் பெரிய மலை அன்று; ஆனாலும் அழகிய மலை. அதன் அடியில்தான் திருக்காளத்திநாதர் கோயில் இருக்கிறது. மலையின்மேல் மலைக் கொழுந்தாக எழுந்தருளியிருக்கும் சிவபெருமானுக்குத் தம் கண்ணை இடந்து அப்பிய கண்ணப்பர் பெருமை பல நூல்களில் பரவியிருக்கிறது.

கோயில் பொன்முகலிக் கரையிலே விளங்குகிறது. சுவர்ணமுகி என்று வடமொழியில் அந்த ஆற்றின் பெயரை வழங்குகிறார்கள். பொன்னை முகந்துகொண்டு வருவதனால் பொன்முகலி என்று பெயர் வந்தது போலும். அந்தப் பெயர் முகலி என்றும் சுருக்கமாக வழங்கும். பொன்முகலியின் கரையினில் சிவபிரான் உமாதேவியாரோடும் எழுந்தருளி யிருக்கிறான்.

நல்ல மழை பெய்து பொன்முகலியில் வெள்ளம் வரும்போது பார்த்தால் எவ்வளவோ அழகாக இருக்கும். அந்த அழகில் கண்ணுடையவரெல்லாம் சொக்கி நிற்பார்கள். கவிக் கண்ணுடையவர்களோ அந்த வெள்ளத்தின் ஓட்டத்தோடு தம்மிடம் கவிதை யூற்றும் பெருகநிற்பார்கள். சம்பந்தப் பெருமான் கவிக்கண்ணோடு பொன்முகலியைக் கண்டார்.

மலைப் பகுதிகளிலிருந்து வரும் ஆறாதலின் மலைமேல் வளரும் மரங்களை வேர் பறித்து அடித்துக்கொண்டு வருகிறது. சந்தன மரத்தை உந்தி வருகிறது. மிகவும் அரிதாகக் காணப்படும் அகிலை அகழ்ந்துகொண்டு வருகிறது. சாதி மரத்தைப் பறித்துக்கொண்டு வருகிறது. இதன் காயைத்தான் நாம் சாதிக்காய் என்று சொல்லுகிறோம். நாம் சாதிக்காயைப் பார்க்கிறோம்; சாதி மரத்தைப் பார்த்ததில்லை. அதனால் சாதிக்காய் மரம் என்று சொன்னால் நமக்கு விளங்குகிறது. தேக்கு மரத்தையும் பொன்முகலியாறு அடித்து வருகிறது.

இயற்கையிலே இது சிறிய ஆறாக இருந்தாலும் வெள்ளம் வரும்போது சந்தனம் முதலிய மரங்களை அடித்துக் கொண்டு வருவதனால் பெரிய ஆற்றைப் போலத் தோற்றுகிறது; மா முகலி என்று சொல்லும்படி அதன் தோற்றம் அமைந் திருக்கிறது.

ஆற்றங்கரையில் பொழில்கள் வளருகின்றன. மலையி லுள்ள காட்டு மரங்களை வேர் பறித்துக்கொண்டு வரும் ஆறு அதற்குப் பரிகாரமாகத் தன் கரையில் சோலைகளை வளரும்படி செய்கிறது. இறைவனுடைய தொடர்பு இல்லாத இடங்களில் தன் மனம் போனபடி செய்துவிட்டு அவனுடைய திருக் கோயிலுக்கு அருகில் நல்ல காரியத்தைச் செய்கிறது போலும்! மனிதனுடைய மனமே இப்படித்தான் இருக்கிறது. அது தன் போக்கில் நெடுநெறியிலே போய்க்கொண்டிருக்கிறது. ஆனால் நல்லோருடைய கூட்டுறவி னால் அது நல்ல எண்ணங்களைக் கொள்கிறது.

பொன்முகலி யாற்றங்கரையில் பொழில்கள் நன்றாக வளர்கின்றன. அவற்றில் மந்தமாருதம் மெல்லென வீசுகிறது. அழகிய ஆறும் வளமுடைய பூம்பொழிலும் இனிய தென்றலும் இருக்கும் இடத்தில் நம்முடைய தந்தையாகிய இறைவன் வீற்றிருக்கிறான். தன்னைக் கண்டு வழிபட வருகிறவர்கள் இளைப்பாறி இன்புறுவதற்கு ஏற்ற வகையில் இந்த அருமையான இடத்தில் திருக்கோயில் கொண்டிருக்கிறான். உமாதேவியாகிய நம் அன்னையுடன் இங்கே அவன் எழுந்தருளி யிருக்கும்போது இந்தத் தலத்தின் பெருமை மேன்மேலும் வளர்வது ஆச்சரியம் அன்றே? வளங்கள் மல்கிய காளத்தி என்ற புகழ் இத்தலத்துக்கு உண்டாகிவிடுகிறது.

இந்த அழகிய நிலைக்களத்தில் இறைவனைக் கண்டு விட்டால் அவனுடைய திருக்கோலம் அடியார்கள் உள்ளத்தில் நன்றாகப் பதிந்துவிடும். அவனுடைய திருவுருவத்தில் அடியார்களுக்குப் பற்றுக்கோடாக இருப்பவை அவனுடைய இரண்டு திருவடிகள். ஆதலின் மற்ற உறுப்புக்களைவிடத் திருவடிகளே அடியார்களுக்குச் சிறந்தவை. இறைவனுடைய திருக்கோலத்தை உள்ளத்தே பதித்துக் கொண்ட அடியார்கள் அவன் திருவடிகளை என்றும் மறக்கமாட்டார்கள். ஓர் ஊருக்குச் சென்று அங்குள்ள பல காட்சிகளைக் கண்டு நினைவில் வைத்திருந்தாலும் தாம் நல்ல விருந்துண்ட இடத்தைப் பின்னும் அழுத்தமாக உள்ளத்தில் நினைப்பது மக்கள் இயல்பு. மற்றக் காட்சிகள் மெல்ல மெல்ல மறந்து போனாலும் தாம் இன்பம் பெற்ற இடத்தை எளிதில் மறக்க வொண்ணாது.

இறைவனுடைய திருக்கோலத்தில் என்றும் மறக்க ஒண்ணாதவை அவனுடைய திருவடிகளே; பலபல திருவுருவங் களை உடைய கடவுளுக்கு வெவ்வேறு கோலங்கள் உண்டு. முகங்கள் பல இருக்கும். திருக்கரங்கள் பல இருக்கும். ஆனால் எந்தத் திருக்கோலத்திலும் மாறாமல் இருப்பவை இரண்டு திருவடிகளே. அவற்றைப் பற்றிக்கொண்டவர்கள் ஏமாந்து போக மாட்டார்கள். இறைவன் எந்த வேடம் போட்டாலும் அந்த வேடத்தை மாத்திரம் கண்டு மயங்குபவர்களுக்கு விருப்பு வெறுப்பு உண்டாகலாம். தம் வணக்கத்துக்குரிய கடவுளே வேறு உருவத்தில் இருக்கிறான் என்ற உண்மை தெரியாமற் போகலாம். ஆனால் அடியைப் பற்றிய அன்பர்களுக்கு இந்த வேறுபாடே தோன்றாது. அடி பற்றினால் உண்மை வெளிப் பட்டுவிடும்.

இறைவனுடைய திருவுருவம் அனைத்தையும் நினைந்து வழிபடுவது எளிதன்று. அவற்றைக் கண்டு களித்தாலும் நாளடைவில் மறந்து போகும். ஆனால் அவன் திருவடிகளைப் பற்றிக்கொண்டால் அவை உள்ளத்திலே ஆழப் பதியும். அவற்றை எளிதில் மறக்க வொண்ணாது.

இந்த விரகறிந்தே அன்பர்கள் இறைவனுடைய அடி களைப் பற்றி அடியார்கள் ஆயினர். யாவருக்கும் பொதுவாகிய மறையை உணர்த்தவந்த திருவள்ளுவரும், கடவுள் வாழ்த்தில்

ஏழு பாடல்களில் இறைவன் அடியைப் பற்றுதலை வற்புறுத்திச் சொன்னார். அவன் திருக்கோலத்தைச் சொல்லாமல், ''வாலறிவன் நற்றாள்'', ''மலர்மிசை ஏகினான் மாணடி''; ''வேண்டுதல் வேண்டாமை யிலான் அடி'', ''தனக்குவமை இல்லாதான் தாள்'', ''அறவாழியந்தணன் தாள்'', 'எண்குணத் தான் தாள்'', ''இறைவன் அடி'' என்று திருவடியையே எடுத்துரைத்தார். அடிபற்றுதல் எல்லாச் சமயத்தினருக்கும் பொதுவான நெறி; பக்தர்கள் உண்மையான பயனை அடையும் நெறி.

திருக்காளத்தி மலையின் அடிவாரத்தில் நறுமலர் மணக்கும் பொழிலினிடையே முகலி யாற்றங்கரையில் உமாதேவியாரோடு எந்தையாகிய இறைவன் அழகொழுக வீற்றிருக்கும் திருக்கோலம் மிக அழகியதுதான். இவற்றைக் கண்ணாரக் காணும்போது உள்ளத்தில் மலையும் கோயிலும் பொழிலும் ஆறும் அம்மையும் அப்பனும் ஒன்றிய காட்சி படமாகப் படிகிறது. நாளடைவில் மலை மறைகிறது; பொழில் மறைகிறது; ஆறும் கோயிலும் மறைகின்றன; தேவியின் கோலமும் இறைவன் திருக்கோலமும் மறந்து போகின்றன. ஆனால் அவனுடைய இணையடிகள் மாத்திரம் மறவாமல் மனதில் நிற்கின்றன. மற்றவற்றை நினைக்கும்போது படலம் போர்த்தவை போலத் தோன்றுகின்றன. ஆனால் இறைவன் இணையடிகளோ மனத்திலே முளைத்தவைபோல மங்காமல் பொலிவுடன் இருக்கின்றன.

இந்த நிலையைச் சம்பந்தர் சொல்கிறார்.

சந்தமார் அகிலொடு சாதிதேக் கம்மரம்
உந்துமா முகலியின் கரையினில் உமையொடும்
மந்தமார் பொழில்வளர் மல்குவண் காளத்தி
எந்தையார் இணையடி என்மனத்து உள்ளவே.

[சந்தனம், கிடைத்தற்தரிய அகிலோடு சாதி மரம், தேக்குரம் ஆகியவற்றைப் பறித்துத் தள்ளிக் கொண்டு வரும் பொன் முகலியின் கரையினில் (அமைந்த திருக்கோயிலில்) உமாதேவியோடும் (அமர்ந்தருளிய) மந்த மாருதம் நிரம்பிய பொழில் வளர்வதும் வளம் மல்குவதுமாகிய காளத்தியப்பருடைய இரண்டு திருவடிகள் என் மனத்தில் என்றும் மறவாதவண்ணம் உள்ளன.

சந்தனம் - சந்தன மரம். ஆரகில் - அரு அகில்; கிடைத்தற்கரிய அகில்; நிரம்பிய அகில் என்பதும் பொருந்தும். சாதி - சாதி மரம். தேக்கம்மரம்: விரித்தல் விகாரம். உந்தும் - தள்ளும். வெள்ளம் வந்தபோது பெரிதாகத் தோற்றுதலின் 'மாமுகலி' என்றார்; மா- பெரிய. முகலி- பொன் முகலியாறு. உமையொடும் எழுந்தருளியுள்ள எந்தையார், காளத்தி எந்தையார் என்று கூட்டுக. மந்தம்-மந்த மாருதம்.* ஆர்-பொருந்திய. பொழில் வளர் காளத்தி, மல்குவண் காளத்தி என்று கூட்டவேண்டும். மல்குவண் காளத்தி- பெருகிய வளத்தையுடைய திருக்காளத்தி. எந்தையார் - எம் தந்தையார். காளத்தியப்பன் என்று இறைவனைச் சொல்லும் வழக்கு இருப்பதனால் காளத்தி எந்தையார்† என்றார். இணையடி- இரண்டு திருவடிகள். உள்ள-உள்ளன; இருக்கின்றன. ஏ: அசை நிலை.]

★

* ''மந்தம்வந் துலவுசீர் மாமழ பாடியே.'' (திருஞான. 3-ஆம் திருமுறை.)

† ''நானினிச்சென், றாளாவ தெப்படி யோதிருக் காளத்தியப்பனுக்கே'' (பட்டினத்தார் பாடல்); ''அருமந்த போனக மன்றே, நங் காளத்தி யப்பனுக்கே'' (காளத்தி இட்டகாமிய மாலை).

கல்லா நெஞ்சு

திருவள்ளுவருக்குக் கல்வியினிடத்தும் கற்றாரிடத்தும் மிக்க அன்பு உண்டு. கல்வி வேண்டுமென்று ஓர் அதிகாரத்தாற் சொன்னது போதாதென்று, கல்லாமை கூடாது என்று மற்றோர் அதிகாரத்தால் சொல்கிறார். கல்லாதவரைக் கண் இல்லாதவ ரென்றும், அவர்களுடைய கண்கள் புண்களுக்கு ஒப்பானவை என்றும், அவர்கள் அவை யேறத் தகுதியில்லாதவரென்றும், பயவாத களர்நிலம் போன்றவரென்றும், அவர்கள் அழகு மண்பொம்மையின் அழகுக்குச் சமானம் என்றும், அவர்கள்பால் செல்வமிருந்தும் பயனில்லையென்றும் அவர்களை விலங் கோடு சேர்த்து எண்ண வேண்டுமென்றும் சொல்கிறார். உண்மையாகக் கற்றதன் பயன் வாலறிவனாகிய இறைவ னுடைய தாளைத் தொழுதல் என்று தம் நூலின் தொடக் கத்திலே அறிவுறுத்துகிறார்.

கல்லாதாருடைய நெஞ்சம் நல்ல நெஞ்சம் அன்று. மனத்தை நடுநிலைமையில் வைத்து, விருப்பு வெறுப்பு இன்றிக் கற்பதுதான் கல்வி. அத்தகைய கல்வியினால் அறிவு மிகும்; உள்ளம் திருந்தும்.

பள்ளிக்கூடத்தில் கற்பதுதான் கல்வி என்று பலர் எண்ணுகின்றனர். மெய்யறிவு மிகுவதற்கு ஏதுவாகவும், நடு நிலைமையை உண்டாக்குவதுமாகிய கல்வியே கல்வியாகும்.

> "தொட்டனைத் தூறும் மணற்கேணி; மாந்தர்க்குக்
> கற்றனைத் தூறும் அறிவு"

என்று திருக்குறளும்,

> ".............நெஞ்சத்து
> நல்லம்யாம் என்னும் நடுவு நிலைமையாற்
> கல்வி அழகே அழகு"

என்று நாலடியாரும் கூறுபவற்றைக் காண்க.

அறிவுடையார் இறைவனை எண்ணி அவனுடைய திருவருளை அடைய வேண்டும் என்ற ஆர்வம் மிகப் பெறு வார்கள். தம் உள்ளத்திலுள்ள மாசைக் களைவார்கள். அப்படிச் செய்யாதார் கல்வி கற்றாரேனும் அவர் கல்வி போலிக் கல்வியாகும்.

கல்வியினால் அறிவு விளக்கம் பெற்ற நெஞ்சில் இறைவன் எழுந்தருளியிருப்பான். எல்லோருடைய உள்ளத்தி லும் அவன் இருந்தாலும், இருட்டறையிலே இருப்பவனை அவன் அருகில் நிற்பவனும் காணமுடியாதது போலக் கல்வியில்லாதாருடைய உள்ளத்தே அறியாமை இருளில் அவனைக் காண ஒண்ணாது. கல்வியின் துணைகொண்டு அறிவாகிய விளக்கை ஏற்றிவைத்த நெஞ்சத்தில் இறைவன் தன் அருள் வெளிப்படுமாறு இலங்குவான்.

> ''எல்லா உயிர்க்கும் இறைவனே ஆயினும்
> 'கல்லாதார் நெஞ்சத்துக் காணஒண்ணாதே''*

என்பார் திருமூலர்.

★

கல்லாதவர்களுடைய நெஞ்சம் மரக்கட்டை போன்றது. இறைவனுடைய அருளாகிய மின்சாரம் எவ்விடத்தும் பாய்ந்தாலும் அதனைத் தன்பால் ஏற்றுக்கொள்ளும் இயல்பு மரக்கட்டைக்கு இல்லை. இறைவன் இந்தா இந்தா என்று கொடுத்தாலும் அப்படிக் கொடுப்பதைக் காணாத கண்ணும் வாங்கிக்கொள்ள இயலாத கையும் உடையாரைப் போன்ற வர்கள், உண்மைக் கல்வியைக் கல்லாதவர்கள். ஆதலின் ஞான சம்பந்தரும் திருமூலரோடு சேர்ந்து கொண்டு,

> கல்லா நெஞ்சில் நில்லான் ஈசன்''

என்று சொல்கிறார்.

★

---

* திருமந்திரம், 312

இறைவனைப்பற்றி எண்ணும் நெஞ்சமே கல்லாதவருக்கு இல்லையென்றால் அவர்கள் எங்கே அவன் திருநாமத்தையும் திருப்புகழையும் சொல்லப்போகிறார்கள்? அவன் திருநாமத்தைச் சொல்வோர் ஆயிரமாயிரம் பேர் இருந்தாலும் அவர்களோடு பயிலும் பாக்கியம் அவர்களுக்கு இல்லை. அவர்கள் தம்மைப் போன்றவர்களோடு பயின்று அவர்களையே நல்லவர்களாகக் காணும் இயல்புடையவர்கள். அதனால் திருமூலர் மிக்க சினத்தோடு பின்வருமாறு சொல்கிறார்:

"கல்லாத மூடரைக் காணவும் ஆகாது
கல்லாத மூடர்சொற் கேட்கக் கடன் அன்று
கல்லாத மூடர்க்குக் கல்லாதார் நல்லராம்
கல்லாத மூடர் கருத்தறி யாரே."

ஞானசம்பந்தப் பெருமான் ஈசனது தொடர்புடைய பொருள்களையே நாடுபவர். உலகில் எத்தனையோ சிறந்த இடங்கள் இருந்தாலும் இறைவனுடைய ஆலயங்கள் உள்ள தலங்களையே நாடிச் சென்றார். எத்தனையோ மக்கள் வாழ்ந்தாலும் இறைவன் அடியார்களையே தமர்களாகக் கொண்டு ஒழுகினார். கல்வியினாலும் கேள்வியினாலும் அறிவு விளக்கம் பெற்று இறைவனடி பேணினவர்களைப் பெரியோராக எண்ணி மதித்தார்.

"கற்றல் கேட்டலுடை யார்பெரி யார்அவர்
கையால் தொழுதேத்தப்
பெற்றம் ஊர்ந்தபிர மாபுரம் மேவிய
பெம்மான் இவன் அன்றே"

என்று தாம் பாடிய முதல் திருப்பதிகத்திலே கற்றல் கேட்டல் உடையாரைப் பெரியார் என்று பாடினார்.

அவருக்கு ஈசன் நில்லாத, கல்லாத நெஞ்சுடையாரோடு பழகப் பிடிக்குமா? எப்போதும் இறைவனை எண்ணுவாரோடும், சேர்ந்து வாழும் பெரியார் அவர். அடியார் கூட்டத்தில் இருப்பதையே சிவலோகத்தில் வாழும் வாழ்வாகக் கருதுபவர்.

ஆகவே, கல்லாத நெஞ்சத்தை உடையவரும், இறைவன் புகழைச் சொல்லாதாரும் இருக்கும் இடத்தில் சம்பந்தருக்கு என்ன வேலை? அடியாரோடு நல்லவராக இருக்கும் அப் பெருமான் இறைவன் பேர் சொல்லாதவரோடு அல்லவராகத் தான் இருப்பார்.

அடியாருக்கு வேண்டியவர்; அல்லாதாருக்கு வேண்டாதவர்' என்று சொல்வதில் ஒரு பெருமை உண்டு. அல்லாதவரை வெறுப்பவர் அல்ல; அவரை விரும்புவரும் அல்ல. ''இறைவன் திருநாமத்தைச் சொல்லாதாரோடு நாம் இனம் அல்லோம்'' என்று திருஞான சம்பந்தர் பாடுகிறார்.

கல்லா நெஞ்சில்
நில்லான் ஈசன்;
சொல்லா தாரோடு
அல்லோம் யாமே.''

[*கல்லாத நெஞ்சில் ஈசன் நிற்கமாட்டான். (அத்தகைய நெஞ்சுடையவராகி அவனுடைய திருநாமத்தைச்)* சொல்லாதாரோடு *யாம் ஒன்றுபடும் இனம் அல்லோம். அல்லோம்- இனம் அல்லோம்.*]

'கற்ற நெஞ்சம் படைத்தவர், இறைவன் எழுந்தருளும் நெஞ்சம் படைத்தவர், இறைவன் திருநாமத்தைச் சொல்பவர் ஆகிய அடியாரோடு நாம் சேர்ந்திருப்போம். கல்லாத நெஞ்சமும் இறைவன் நில்லாத நெஞ்சமும் படைத்து அவன் திருநாமத்தைச் சொல்லாதவரோடு நாம் அவரல்லாதாராவோம்; அவரோடு ஒரு சேரவைக்கும் இனம் அல்லோம் ஆவோம்'' என்கிறார் ஆளுடைய பிள்ளையார்.

அடியார் அனைவருக்கும் இதுவே இயல்பாதலின் அவர்களையும் சேர்த்தே 'யாம்' என்று பன்மையால் சொன்னார்.

இந்தத் திருப்பாட்டையுடைய திருப்பதிகம் எந்தத் தலத்தையும் சார்த்திப் பாடாத பொதுப்பதிகம். இப்பாட்டின் அடி ஒவ்வொன்றிலும் இரண்டே சீர்கள் உள்ளன. இரண்டு சீருள்ள இடிக்குக் குறளடி என்று பெயர். இந்தப் பாட்டைப் போல வேறு பல பாடல்கள் ஞானசம்பந்தர் தேவாரத்தில் உள்ளன. மந்திரத்தைப் போலச் சுருங்கிய உருவத்தில்

அமைந்தமையால் இதனையே மந்திரம் என்று சொல்லி விடலாம். திருமந்திரம் என்ற நூல் அத்தகைய பெருமை உடைமையால்தான் அப்பெயர் பெற்றது.

நிறைமொழி மாந்தராகிய சம்பந்தர் ஆணையினாற்* கிளந்த மறைமொழி யாதலின் மந்திரம்[†] என்று கூறுதல் மிகவும் பொருந்தும். மந்திரத்துக்கு இருக்கு என்ற ஒரு பெயர் உண்டு. இத்தகைய பாடல்கள் மந்திரமாக மதித்தற்குரியன ஆதலின் திரு இருக்கு என்றும் குறளடியால் அமைந்தமையின் குறள் என்றும் பெயர்கள் வந்தன இரண்டையும் சேர்த்துத் திரு இருக்குக் குறள் என்று இத்தகைய பாடல்களை வழங்குவர்.

★

---

* ''நடுவிரு ளாடு மெந்தை நனிபள்ளி யுள்க வினைகெடுதல் ஆணைநமதே'', ''ஆனசொல் மாலையோதும் அடியார்கள் வானில் அரசாள்வர் ஆணை நமதே'', ''அல்லலோடறுவினை யறுதலாணையே'', ''அந்தவுல கெய்திஅர சாளுமது வேசரதம் ஆணை நமதே'', ''வானிடை வாழ்வர் மண்மிசைப் பிறவார் மற்றிதற் காணையும் நமதே'' என்று ஞானசம்பந்தப் பெருமான் திருப்பதிகங்களில் உள்ள திருக்கடைக்காப்புக்கள் இங்கே நினைப்பதற்குரியன.

† '' நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த, மறைமொழிதானே மந்திரம் என்ப'' (தொல்காப்பியம், செய்யுளியல்.)

ஆர நல்குபவர்

இறைவனுடைய அன்பர்களுக்கு உலகில் அவனையன்றி வேறு துணை இல்லை என்ற உறுதிப்பாடு இருக்கும். தமக்கு வேண்டிய பொருள் ஏதாயினும் மனிதர் கொடுத்துக் கிடைக்கப் போவதில்லை. எல்லாம் அவனருளால் வரவேண்டும் என்ற உண்மையும் தெரியும். ஆதலின் தங்களுக்கு எது வேண்டுமானாலும் இறைவனை அணுகி விண்ணப்பம் செய்வார்கள். ஆலவாயில் இறைவனை அருச்சித்து வந்த தருமி என்னும் ஆதிசைவர் திருமணம் செய்துகொள்ள வேண்டுமென்று விரும்பினார்; இறைவனிடம் விண்ணப்பித்துக்கொண்டார். அவன் பொற்கிழி வாங்கி அளித்தான். பாண்டிய மன்னர்கள் வேண்டியவற்றை வேண்டியபடியே அப்பெருமான் வழங்கியதைத் திருவிளையாடற் புராணம் விரிவாகப் பேசுகிறது.

மனத்திலே மாசு இல்லாமல் இறைவன்பால் முறுகிய அன்பும், யாம் வேண்டுவனவற்றையெல்லாம் இறைவன் அருள்வான் என்ற நம்பிக்கையும் உடைய தொண்டர்கள் இயல்பாகவே இறைவனை வழிபடுவதோடு, தமக்கு ஒன்று வேண்டுமானால் உணர்ச்சி விஞ்சிப் பின்னும் சிறப்பாக வழிபடுவார்கள். குழந்தை தனக்கு ஏதேனும் வேண்டுமானால் தாயினிடம் அழுது சாதித்துப் பெற்றுக்கொள்வது போன்றது இது. அன்பின் நிலையில் இதுவும் ஒன்று. பலரிடம் கெஞ்சியும் கொஞ்சியும் வழிபட்டும் பொருள் பெறுவது தொழில்; அன்பன்று. தமக்கு ஆதாரமானவன் இவனே என்று உணர்ந்து அவன் தந்தாலும் தராவிடினும் அவனையே நச்சி வேண்டுகை அன்பு.

இறைவனிடம் பக்தி உடையவர்கள் தமக்கு வேண்டியதை அவனிடம் விண்ணப்பித்துக் கொள்வார்கள். அவன் அருளால் வேண்டியது கிடைத்தால் மிக்க மகிழ்ச்சி

கொள்வார்கள். கிடைக்காவிடின் வருந்துவார்கள்; ஆனால் இறைவனிடம் உள்ள அன்பிலே தளர்ச்சி உண்டாகாது. கொடுத்தால் விரும்பி அணைதலும், கொடுக்காவிட்டால் விலகுதலும் வாணிக மனப்பான்மை. அதனை அன்பென்று சொல்லுதல் கூடாது.

நினைத்தது கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் அன்பிலே சிறிதும் தளர்வின்றி நிற்கும் அன்பர்களே மாசு இல்லாத் தொண்டர்கள். அத்தகைய தொண்டர்கள் இறைவன் அருளால் தாம் வேண்டியவற்றைப் பெறாமல் இருப்பது மிக அருமை.

திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார், அன்பர்கள் வேட்கையை அறிந்து இறைவன் நிறைவேற்றும் வண்மையைப் பாராட்டுகிறார். தன் காதலன்பால் ஒரு பொருளைப் பெற எண்ணிய மனைவி இயற்கையாகச் செய்யும் கடமைகளில் தவறாமல் இருப்பதோடு, பின்னும் தன் ஆர்வந் தோன்ற உபசரிப்பது உலகியல்பு. மனித மனத்தின் இயல்பு இது. தொண்டர்கள் எக்காலத்தும் இறைவனுடைய நினைவை மறவாதவர்கள். உலக வாழ்க்கையில் தமக்கு ஒன்று வேண்டுமென்றால், தாம் ஆசைப்பட்ட அப்பொருளைப் பெறும் இடம் இறைவனையன்றி வேறு இல்லை என்று உணர்பவர்கள். ஆகவே அவர்களுக்கு ஏதேனும் வேண்டு மென்று ஆசை உண்டானவுடன் தம் ஆசையை வெளிப்படுத்த நினைக்கிறார்கள். இறைவனுக்குப் பூசை செய்கிறார்கள். வழக்கமாகச் செய்யும் வழிபாட்டைவிடச் சிறப்பாகச் செய்கிறார்கள். அவர்கள் உள்ளத்தில், ''இது கிடைக்காவிட்டால் இவனை மறப்போம்'' என்ற மாசு இல்லை. இது வேண்டுமென்ற ஆசை எழுந்தவுடன் அதனோடு தொடர்புடைய செயலைப் போல அவர்கள் இறைவனை வழிபடும் வழிபாடும் நிகழ்கிறது. மலர்கொண்டு வணங்குகிறார்கள். அவர்களுடைய பூசையை ஏற்றுக் கொண்டு மகிழ்கிறான் இறைவன். ''இவர்கள் வேறு புகலிடமின்றி நம்மை வழிபடுகிறார்கள். இவர்களுக்கு வேண்டியவற்றை அளிப்பதற்குத்தானே நாம் இருக்கிறோம்? என்று இறைவன் அவர்களுடைய ஆசையெல்லாம் நிரம்பும்படி அருள் செய்கிறான்.

"பரந்துபல் ஆய்மலர் இட்டுமுட்டாதடி யேஇறைஞ்சி
இரந்தவெல் லாம்எமக் கேபெற லாம்என்னும்
அன்பர்உள்ளம்
கரந்துநில் லாக்கள்வனே"

என்று மாணிக்க வாசகர் சொல்கிறார்.

அத் தொண்டர்கள் மாசில்லாதவர்கள் என்பதை உணர்ந்தவன் இறைவன். குழந்தை கொஞ்சிக் கொஞ்சிக் கேட்டால் கொடிய தந்தையும் மனங்குழைந்து அதற்கு வேண்டியதை வாங்கி அளிப்பான். எல்லாருக்கும் நல்ல தந்தையாகிய இறைவன் தன் தொண்டர்களுக்கு வேண்டியவற்றை அருள்வது வியப்பு அன்றே?

"வேண்டத் தக்க தருள்வோய்நீ
வேண்ட முழுதும் தருவோய்நீ"

என்பது திருவாசகம்.

மாசில் தொண்டர் மலர்கொண்டு வணங்கிட
ஆசை ஆர அருள்நல்கிய செல்வத்தர்.

(குற்றம் இல்லாத தொண்டர்கள் அருச்சனைக்குரிய மலர்களைத் தேர்ந்து கைக்கொண்டு அருச்சித்து வழிபட, அவர்களுடைய ஆசை நிரம்பும்படியாக அருளை வழங்கும் செல்வத்தை உடையவர்.

மாசு-நலம் பெற்றால் விரும்புவதும், பெறாவிடின் வெறுத்து நீக்குவதுமாகிய இயல்பு. ஆர-நிரம்ப. நல்கிய-கொடுத்த.)

தொண்டர்கள் ஆசையை அவர்கள் சொல்ல வேண்டுமென்பது இல்லை. அவர்கள் சொல்லாமலே. குறிப்பால் அறிந்துகொள்ளும் தன்மையுடையவன் இறைவன். இத்தகைய உபகாரியை எங்கும் காணமுடியாது. தன்பால் உள்ள செல்வத்தைக் குறிப்பறிந்து ஈபவனே உத்தமமான வள்ளல். இறைவன் அத்தகையவன். உலகில் உள்ள செல்வர்களுடைய செல்வம் ஒரு வரையறைக்கு உட்பட்டது. இரப்பவனது குறிப்பறிந்து தரும் வண்மை ஒருவனுக்கு இருக்கலாம். ஆனால் இரப்பவனது ஆசை முழுவதும் நிரப்புவதற்குரிய ஆற்றல் உலகத்துச் செல்வர் யாருக்கும் இல்லை. ஆசை அளவற்றது. அதை நிரப்ப வேண்டுமானால் அளவற்ற செல்வம் உடைய

வனால்தான் முடியும். இறைவன் குறைவிலாச் செல்வன். அவன் ஒருவனால்தான் ஆசை ஆர நல்க முடியும். தொண்டர்களின் ஆசை ஆரும்படி நல்கிய செல்வத்தன் இறைவன் என்பது எவ்வளவு உண்மையானது!

★

தொண்டர்களுக்கு வேண்டியவற்றைத் தரும் வள்ளலாகிய இறைவன் எல்லோரிடத்தும் அப்படி இருப்பதில்லை. இன்னாருக்கு இன்னபடி படியளக்க வேண்டும் என்பதை உணர்ந்தவன் அவன். அந்த நியதிதான் அறம். அதனையே அவன் வாகனமாகக் கொண்டிருக்கிறான்.* தன்னை வழிபடுவாரைத் தாங்கும் அறம் இறைவனுக்குரியது. நல்லோரைத் தாங்குவதும் அல்லாதவரை ஒறுத்தலும் அறத்தின் பகுதிகள். நல்லோரிடத்து நல்லதாக நிகழும் அறமே அல்லாதவரிடம் கொடியதாகத் தோற்றும்.

> "என்பி லதனை வெயில்போலக் காயுமே
> அன்பி லதனை அறம்"

என்னும் குறள் இதனையே சொல்கிறது.

அறத்தின் உருவமாகிய விடை சில சமயங்களில் சினமுடையதாகத் தோற்றும். கடுமையான கோபம் உடையதாக இருக்கும்; காய் சினத்தை உடைய விடை என்று சொல்லும் படியாக, அன்பில்லார் உணர்வார்கள். இறைவன் நல்லோருக்கு நல்கும் தன்மையினனாக இருப்பதோடு அல்லோர்பால் காய்சினம் காட்டும் விடையை உடையவனாகவும் விளங்குகிறான்.

காய்சி னத்த விடையார்.

★

---

* "அறனுரு வாகிய ஆனே றேறுதல்." (*திருவொற்றியூர் ஒருபா ஒருப:து,6*).

திருக்கருகாவூரில் எழுந்தருளியிருக்கும் முல்லைவன நாதரைத் தரிசித்தபோது சம்பந்தப் பெருமானுக்கு இந்த எண்ணங்கள் தோன்றின. இறைவன் இயல்பும் அவன் ஏறும் விடையின் இயல்பும், அவனுடைய தொண்டர்கள் எல்லா நலங்கள் பெறுதலையும் அல்லாதார் துன்புறுதலையும் நினைப்பூட்டின.

இறைவன் பலபல திமருமேனியை உடையவன். அவன் செஞ்சோதிப் பிழம்பாக நிற்பவன். எரியும் நெருப்புப் போன்ற வண்ணமுடையவனாகவும் நிற்பான். **எரியும் எரிவண்ணம் ஈசனது வண்ணம்** என்பதில் ஓர் உண்மை அடங்கியிருக்கிறது. அவன் சிவந்த திருமேனி படைத்தவன்; நீறு பூசியிருப்பவன், நீறு பூத்த நெருப்புப் போல. எரி தன்னைத் தக்கவண்ணம் பயன்படுத்தும் அறிஞர்களுக்கு உணவு சமைக்கவும், வெந்நீர் வைக்கவும், வேண்டாத அழுக்குப் பொருளைக் கொளுத்தவும், குளிரைப் போக்கிக்கொள்ளவும், இருட்டைப் போக்கவும் துணையாகிறது. அதனால் எரிபட்டு அழிவாரும் உண்டு. அன்பர்கள் இறைவனுடைய அருளாற் பயன் அடைகிறார்கள். அல்லாதார் அவனுடைய அருள் பெறாமல் துன்பம் அடைகிறார்கள்.

கருகா வூர்எம்
ஈசர் வண்ணம்எரி யும்எரி வண்ணமே.

(திருக்கருகாவூரில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானுடைய மேனியின் நிறம் எரிகின்ற தீயைப் போன்ற வண்ணம் ஆகும். வண்ணம்-நிறம்; தன்மை. எரி-நெருப்பு.)

திருக்கருகாவூர் என்பது சோழநாட்டில் உள்ள தலம். பாபநாசம் என்ற ரெயில் வண்டி நிலையத்துக்குத் தெற்கே நான்கு மைல் தூரத்தில் உள்ளது. இப்போது திருக்களாவூர் என்று இதன் பெயர் வழங்குகிறது. வெட்டாறு என்ற ஆற்றின் தென்கரையில் இருக்கிறது. இந்தத் தலத்துக்கு முல்லைவனம் என்ற பெயரும் உண்டு.

கடிகொள் முல்லைகம ழுங்கரு காவூர்

என்றும்,

கைதன் முல்லைகம ழுங்கரு காவூர்

என்றும்,

கந்த மௌவல்கம ழுங்கரு காவூர்

என்றும் இத்தலத் திருப்பதிகப் பாடல்களில் ஞானசம்பந்தர் குறிப்பிடுகிறார்.

இத் திருத்தலத்திற்கு ஞானசம்பந்தர் திருப்பதிகம் ஒன்றும், திருநாவுக்கரசர் திருப்பதிகம் ஒன்றும் உள்ளன.

மாசில் தொண்டர்மலர் கொண்டு வணங்கிட
ஆசை ஆரஅருள் நல்கிய செல்வத்தர்;
காய்சி னத்தவிடை யார்;கரு காவூர்எம்
ஈசர் வண்ணம்எரி யும்எரி வண்ணமே.

(செல்வத்தர், விடையார், ஈசர் ஆகிய இறைவருடைய வண்ணம் எரிவண்ணம் என்று கூட்ட வேண்டும். எரியும் மெரிவண்ணமே என்று சொல்லவேண்டும்! இது செய்யுள் ஓசை நோக்கி வந்த விரித்தல் விகாரம்.)

✵

திருவைந்தெழுத்து

ஒரு பொருளின்பால் விருப்பம் இருக்குமானால் அந்தப் பொருளினை நன்கு மதிக்கும் இயல்பு மனிதனுக்கு உண்டாகும். ஒருவரிடம் அன்பு இருக்குமாயின் அவருடைய குணங்கள் யாவும் விளக்கமாகத் தெரியும்; குற்றங்கள் யாவும் மங்கிவிடும். நுகர்வதற்குரிய பொருள் ஒன்றை நெடுங்காலம் பெறாமல் முயன்று வாட்டமுற்று இறுதியிற் பெற்று நுகர்ந்தால் அதனால் வரும் இன்பம் பன்மடங்கு அதிகமாகும். பசி உடையவனுக்கு நல்ல உணவில் மிக்க சுவை தோன்றும். பசியில்லாதவனுக்கு அத்துணைச் சுவை தோன்றாது. வயிற்று வலிக்காரனுக்குச் சில சமயங்களில் உணவைக் கண்டால் வெறுப்புக்கூடத் தோன்றிவிடும். அந்த வெறுப்புக்கு உணவின் குறை காரணம் அன்று; அவனுடைய வயிற்று வலியே காரணம்.

இறைவனுடைய புகழும் திருநாமமும் இனிக்கின்றன என்று அருட்பெருஞ் செல்வர்கள் சொல்கிறார்கள். அந்தப் புகழையும் திருநாமத்தையும் நாம் கேட்கும்போது அத்தனை இனிப்பதில்லை. காதலி ஒருத்தி நாலு பேரோடு பேசிக் கொண்டிருக்கும்போது அவளுடைய காதலனைப்பற்றி யாரேனும் புகழ்ந்தால் அவளுக்கு எத்தனை இனிமையாக இருக்கிறது! அவனுடைய பெயர் பத்திரிகையில் வந்தால் அவள் எவ்வளவு முறை .பார்த்துப் பார்த்து மகிழ்ச்சி அடைகிறாள்! மற்றவர்கள் கண்களில் அந்தப் பெயர் பட்டாலும் அவர்களுக்கு அதுபோன்ற மகிழ்ச்சி உண்டாவதில்லை. அதற்குக் காரணம் என்ன? அந்தப் பெண்ணுக்கு அப் பெயருடையவனிடம் இருக்கும் காதல்தான்.

இந்தக் காதல் இருந்தால் அதனாற் பற்றப் பெற்ற வரிடத்தில் ஒருவகை உள்ள நெகிழ்ச்சி உண்டாகும். அவரோடு தொடர்புடைய எல்லாப் பொருளிடத்தும் விருப்பம் அமையும். அந்தப் பொருள்களை நன்றாகப் பயன்படுத்திக் கொள்வர்.

இறைவனுடைய திருவுருவங்களையும் அவற்றை வைத்து வழிபடும் கோயில்களையும் தரிசிக்கும்போது பக்தி உணர்ச்சி மிக்கு அதனால் இன்புறுவார்கள் அன்பர்கள். ஏனையோர் களுக்கு அந்த அநுபவம் இராது. நடராஜத் திருக்கோலத்தைக் கண்ட சுந்தரமூர்த்தி நாயனார் அடைந்த பேரின்ப அநுபவத்தைச் சேக்கிழார் பின்வருமாறு சொல்கிறார்:

''ஐந்துபே ரறிவும் கண்களே கொள்ள
அளப்பருங் கரணங்கள் நான்கும்
சிந்தையே யாகக் குணம்ஒரு மூன்றும்
திருந்துசாத் துவிகமே ஆக
இந்துவாழ் சடையான் ஆடும்ஆ னந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபே ரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்.''*

இந்த அநுபவம் சுந்தரமூர்த்தி நாயனாருடைய திருவுள்ளப் பக்குவத்தின் விளைவாக உண்டாயிற்று. இறைவனிடம் அவருக்கு இருந்த காதல் இந்த இன்பத்தை உண்டாக்கியது. பருவம் வராத பெண்ணுக்கு ஆடவன் இருந்தும் பயன் இல்லை. பருவம் வந்த பெண் ஆடவனால் இன்பத்தை அடைவாள். பெண்ணுக்குப் பருவம் இருப்பினும் ஆடவனின்றி இன்பம் இல்லை. அவ்வாறே இறைவனுடைய திருவுருவம் முதலியன பக்தியுணர்ச்சி உடையாருக்கு இன்பத்தை உண்டாக்குகின்றன; மற்றவர்களுக்கு உண்டாக்குவதில்லை. பக்தி உணர்ச்சியுடையவர்கள் பிற பொருள்களிலே இன்பம் காணாமல் இறைவனுடைய தொடர்பு பெற்ற பொருள்களிலே இன்பம் காணுகிறார்கள்.

மனம் உருவத்தையும் பெயரையும் உடைய பொருள் களைப் பற்றிக் கொள்வது. இறைவனுடைய உருவத்தையும் திருநாமத்தையும் அன்பர்களுடைய உள்ளம் பற்றிக்கொள்ளும். எப்போதும் அவனுடைய திருநாமத்தைச் சொல்வதில் இன்பம் காணும். அதற்கு இறைவன்பால் உள்ள காதலே காரணம். காதல் உண்டானால்தான் இறைவனை நினைக்கும்போது மனம்

---

* *பெரிய புராணம், தடுத்தாட்கொண்ட புராணம், 106.*

உருகும். அப்படி உருகும் தன்மை மிகுதியாகும்போது கண்ணீர் மல்கும். உள்ளத்தில் காதல் இருந்தால் பல பல எண்ணங் களினிடையிலும் காதல் செய்யும் பொருளின் எண்ணம் நிகழும்போது மற்றவற்றை விட்டுவிட்டு அதனையே எண்ணி உருகும் செயல் உண்டாகும். உள்ளத்தில் நிகழும் அந்த நெகிழ்ச்சி மிகும்போது, அது உடம்பில் மெய்ப்பாடாக வெளிப்படும். அன்பினால் அகத்தே உண்டான நெகிழ்ச்சியைப் புறத்தே கண்ணிலேயிருந்து தோன்றும் நீரினால் உணரலாம்.

"அன்புக்கும் உண்டோ அடைக்குந்தாழ்? ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும்"

என்று வள்ளுவர் கூறினார்.

இறைவனுடைய திருநாமத்தை ஓதுகின்ற அன்பர் களுடைய நெஞ்சத்தில் அவன்பால் ஆராத காதல் இருப்பதால் அவர்கள் உள்ளம் கசிகிறது; கண்ணில் நீர் மல்குகிறது; பிறகு வாயினால் அத்திருநாமத்தை ஓதுகிறார்கள். திருநாமத்தை வாயினால் சொல்வதன்றி உள்ளத்தே தோன்றும் உணர்ச்சியோடு சொல்கிறார்கள். உள்ளத்தே காதல் என்ற நீர் நிரம்பிக் கடல்போல இருக்கிறது; அமைதியான அந்தக் கடலிலே திருநாமத்தின் நினைவாகிய அலை எழுகிறது. அந்த அலை அங்கிருந்து மெல்ல மெல்லக் கண்ணுக்கு வந்து நீர் மல்கச் செய்கிறது. பிறகு நாவுக்கு வந்து நினைப்பளவில் இருந்ததை உரையளவாக்கி ஓதச் செய்கிறது.

அப்படிக் காதலோடும் கசிவோடும் கண்ணீரோடும் ஓதுவதனால் அன்பர்களுக்கு நல்ல பயன் கிட்டுகிறது. நல்ல நெறியிலே அந்தத் திருநாமம் அவர்களைச் செலுத்துகிறது.

காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக்கு உய்ப்பது.

(அன்பு மிக்கவராகி நெஞ்சு நெகிழ்ந்து கண்ணீர் பெருகி நாவினால் ஓதுகின்றவர்களை நல்ல நெறியாகிய முத்திக்குச் செலுத்துவது - நமச்சிவாய என்னும் திருநாமம் என்று சொல்ல வருகிறார்.

காதல் - அன்பு. கசிந்து - நெகிழ்ந்து. மல்கி - பெருகி. நன்னெறி - நல்ல வழி; என்றது இங்கே முக்தியை. உய்ப்பது - செலுத்துவது.)

★

இறைவனுடைய திருநாமங்கள் யாவும் ஓதுவாருக்கு நல்ல பயன் தருவனவே. ஆயினும் அவற்றுள்ளே நாமமாகவும் மந்திரமாகவும் ஓதப் பெறுவது ஒன்று உண்டு. அதுவே **நமசிவாய** என்ற திருவைந்தெழுத்து. அதனை ஓதினால் முத்தி பெறலாம். மந்திரம் என்ற வட சொல்லுக்குத் தன்னை நினைப்பாரைப் பாசத்தினின்றும் நீக்குவது என்று பொருள் கூறுவர். மந்திரங்கள் பலவானாலும் பஞ்சாட்சர மந்திரம் அவற்றிலெல்லாம் சிறந்தது. வேதங்கள் நான்கு. அவற்றில் அதர்வணமென்றது ஏனைய மூன்று மறைகளிலும் உள்ள மந்திரங்களைத் தொகுத்துச் சொல்வது. மூலமாக உள்ளவை மூன்று வேதங்களே. அதனால் வேதத்துக்கு த்ரயீ என்று ஒரு பெயர் உண்டு.*

இந்த மூன்று வேதங்களிலும் நடுவாக இருப்பது யஜுர் வேதம்; அவ் வேதத்தின் ஏழு காண்டங்களுள் நடுவுள்ளதாகிய காண்டம் ஏழு ஸம்ஹிதையை உடையது. அந்த ஏழிலும் நடுவாகிய நான்காம் ஸம்ஹிதையின் நடுவில் ஸ்ரீருத்திரம் விளங்குகின்றது. அதன் நடுவில் **நமசிவாய** என்ற பஞ்சாட்சரம் சொல்லப் பெறுகிறது. இதனால் வேதத்தின் இருதயத்தில் நிற்பது திருவைந்தெழுத்து என்று சொல்லலாம்.

இந்தப் பஞ்சாட்சரம் ஐந்து வகைப்படும். ஸ்தூல பஞ்சாட்சரம், சூக்ஷ்ம பஞ்சாட்சரம், காரண பஞ்சாட்சரம், மகாகாரண பஞ்சாட்சரம், மகாமனு என்பவை அவை. **நமசிவாய** என்பது ஸ்தூல பஞ்சாட்சரம். **சிவாய நம** என்பது சூக்ஷ்ம பஞ்சாட்சரம். **சிவாய சிவ** என்பது காரண பஞ்சாட்சரம். **சிவ** என்பது மகாகாரண பஞ்சாட்சரம். **சி** என்பது மகாமனு.

நமசிவாய என்ற மந்திரத்துக்கு, 'சிவனுக்கு நமஸ்காரம்' என்று சொற்பொருள் கூறுவர். ஆயினும் அதன் பொருளையும்

---

* *''த்ரிவேதபோத காரணன்'' (தக்கயாகப்பரணி, 380) என்பதையும், அதற்கு, 'திரிவேத போத காரணனாவான் பிரமா; திரிவேதமென்றது: மூன்றே வேதம்; நாலாவது மந்திர சாகையான அதர்வ வேதம்; ''திரைவேதா'' என்பது ஹலாயுதம்' என்று அதன் உரையாசிரியர் எழுதிய விளக்கத்தையும் காண்க.*

தத்துவத்தையும் மிக நுட்பமாகவும் விரிவாகவும் ஆகமங்களும், திருமூலர் திருமந்திரமும், சிந்தாந்த சாத்திரங்களும் கூறுகின்றன.

நமசிவாய என்றதை மந்திரமாகக் கொள்வதோடன்றி இறைவன் திருநாமமாகவே கொண்டு வழங்குதல் தமிழ் மரபு.

''மந்திரம் நமச்சி வாய வாகநீ றணியப் பெற்றால்''*

என்ற அதனை மந்திரமாகச் சொன்னார் திருநாவுக்கரசர். 'சிவனுக்கு வணக்கம்' என்ற பொருளை நினைந்து.

''நமச்சி வாய என் றுன்னடி பணியாப் பேய னாகிலும்''†

என்று மணிவாசகர் பாடினார்.

இனி இம் மந்திரத்தையே இறைவனுடைய திருநாமமாகக் கொண்டு வழங்குவதைத் தேவாரத்திலும் பிற இடங்களிலும் காணலாம்.

''காதலாகி'' என்று தொடங்கும் நமச்சிவாயத் திருப்பதிகத்தில் உள்ள பாடல்கள் அனைத்திலும் நமச்சிவாய என்பதை இறைவன் நாமமாக - ஒரு மொழியாலும் தொடர்மொழியாலும் கூறும் நாமங்களைப் போன்ற நாமமாக - ஞானசம்பந்தர் திருவாய் மலர்ந்தருளுகிறார்.

நாதன் நாமம் நமச்சி வாயவே.
நம்பன் நாமம் நமச்சி வாயவே.
நச்சன் நாமம் நமச்சி வாயவே.
நெற்றி, நயனன் நாமம் நமச்சி வாயவே.
நல்லார் நாமம் நமச்சி வாயவே.
நந்தி நாமம் நமச்சி வாயவே.
வரதன் நாமம் நமச்சிவாயவே.
நலங்கொள் நாமம் நமச்சி வாயவே.
ஓதும் நாமம் நமச்சி வாயவே.
நஞ்சுண் கண்டன் நமச்சி வாயவே.
நந்தி நாமம் நமச்சி வாய.

இன்னும்,

---

* பொது, தனித்திரு நேரிசை, 4. 7. † திருவாசகம், செத்திலாப்பத்து

"நக்கர்தம் நாமம் நமச்சிவா யவ்வென் பார்நல்லரே"*

என்று ஞானசம்பந்தரும்,

"துஞ்சும் போழ்தும்நின் நாமத் திருவெழுத்
தஞ்சும் தோன்ற அருளுமை யாறரே"✢
"ஞானச் சோதிய ராதியர் நாமந்தான்
ஆன அஞ்செழுத் தோத"⁑
"நாமஎழுத் தஞ்சாய நம்பர் போலும்"□
"எந்தையார் திருநாமம் நமச்சி வாய
என்றெழுவார்க் கிருவிசும்பில் இருக்கலாமே"✧
"திருநாமம் அஞ்செழுத்தும் செப்பா ராகில்"II

என்று திருநாவுக்கரசரும்,

"ஆரா அமுதின் திருநாமம் அஞ்செழுத்தும்"♉

என்று நக்கீர தேவரும் திருநாமமென்றும் சொல்லுதலைக் காணலாம். இதனைப் பெயராக வைத்து விளியாக்கி,

"போற்றியோ நமச்சி வாய புயங்கனே மயங்கு கின்றேன்"°

என்று மணிவாசகர் பாடுகிறார். 'சிவனுக்கு நமஸ்காரம் என்று சொல்லமைதியாற் பொருள்பெறும் சொற்றொடராக வைத்து, மந்திரமாகக் கொள்ளுதல் எல்லோருக்கும் பொதுவான முறை. 'நமசிவாய' என்பதை இறைவனுடைய திருநாமமாக வைத்து அதனைப் பெயர்ச்சொல்லாக வழங்குவது தமிழ் மரபு. இந்த மரபுபற்றியே மக்களுக்கு 'நமச்சிவாயன்' என்ற பெயரை இடும் வழக்குத் தமிழ் நாட்டில் அமைந்தது. திருவாவடுதுறையா தீனத்தின் ஆதி குருமூர்த்தியின் திருநாமமாகிய ஸ்ரீ நமசிவாய தேசிகர் என்பது இந்த வழக்கத்தை நன்கு தெளிவுபடுத்தும்.

இறைவனுடைய திருநாமங்களைக் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதும்போது அன்பர்களுக்கு இன்பம் உண்டாகும்; நற்பயனும் உண்டாகும். அந்தத் திருநாமங்களில்

---

* *திருவீழிமிழலை.* ✢*திருக்குறுந்தொகை, திருவையாறு.* ⁑*திருக்குறுந் தொகை, திருநாகேச்சரம்.* □*திருத்தாண்டகம், திருவிழிமிழலை.* ✧*பொதுத் திருத்தாண்டகம்.* II*தனித் திருத்தாண்டகம்.* ♉ *கைலைபாதி காளத்திபாதி அந்தாதி, 100.* °*திருச்சதகம், 62.*

ஒன்றாகவும் மந்திரமாகவும் அமைந்திருப்பது நமசிவாய என்னும் திருவைந்தெழுத்து. அது வேதத்தின் நடுவில் உள்ளது. வேதமென்னும் மாளிகைக்கு நடுவிடமாகவும் வேத புருஷனுக்கு இருதயமாகவும் விளங்கும் ஸ்ரீ ருத்ரத்தின் நடுவே ஒளிர்வது இந்தத் திருவைந் தெழுத்து. ஆதலின் வேதத்தின் உயிர்நிலையாகிய இதனை வேதங்களின் முடிந்த முடிவாகிய பொருள் என்று சொல்வதில் தவறு இல்லை. இதனை உணர்ந்தே சம்பந்தப்பிரான்,

வேதம் நான்கினும் மெய்ப்பொருள் ஆவது

என்று சொல்கிறார். அது மந்திரமாக நினைப்பதற்குரியது. மந்திரத்தை மூவகையில் உச்சரிப்பர். மானஸம், மந்தம், வாசிகம் என்பன அவை. மனத்துக்கண் தியானிக்கும் முறை மானஸம்; மெல்லப் பிறர் காதில் கேளாதபடி நாவைப் புரட்டி உச்சரித்தல் மந்தம்;[1] வாசிகம் என்பது வெளிப்படையாகச் சொல்லுதல். மந்திரங்களை மானஸமாகச் சொல்வது சிறப்பு. ஆயினும் இங்கே இந்த ஸ்தூல பஞ்சாட்சரம் மந்திரமாக அமைந்ததோடன்றித் திருநாம வாய்பாட்டிலும் சொல்லப் பெறுதலின், துதிக்க அமைந்த மற்றத் திருநாமங்களைப் போலவே ஓதினாலும் நன்னெறியைத் தரும் சிறப்புடையது. வேதத்தின் மெய்ப்பொருளாகிய மந்திரமாக விளங்கும் அதுவே அடியார்கள் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதுவதற்குரிய திருநாமமாகவும் இருக்கிறது.

நாதன் நாமம் நமச்சி வாயவே.

★

தேவாரம் பாடிய மூவரும் நமச்சிவாய என்ற திருவைந் தெழுத்தை வைத்து ஒவ்வொரு பதிகம் பாடியுள்ளனர். சம்பந்தர் முன்பே 'பஞ்சாக்கரத் திருப்பதிகம்' என்ற ஒன்றை அருளி யிருக்கிறார்.

"துஞ்சலும் துஞ்சல் இலாத போழ்தினும்
நெஞ்சகம் நைந்து நினைமின் நாள்தொறும்

---

1 "ஆறெழுத் தடக்கிய அருமறைக் கேள்வி, நாவியல் மருங்கின் நவிலப் பாடி" என்று திருமுருகாற்றுப்படையில் வருவது இம் முறையே (186-7).

வஞ்சகம் அற்றடி வாழ்த்த வந்த கூற்று
அஞ்ச உதைத்தன அஞ்செ ழுத்துமே''

என்பது அப் பதிகத்தின் முதல் திருப்பாட்டு.

நமச்சிவாயத் திருப்பதிகத்தின் முதல் திருப்பாட்டே இங்கே எடுத்துரைத்த பாசுரம்.

காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினும் மெய்ப்பொருள் ஆவது
நாதன் நாமம் நமச்சி வாயவே.

இப்பதிகம் சம்பந்தர் இறுதியாகப் பாடியது. அவர் திருப்பெருமண நல்லூரில் திருமணம் செய்துகொண்ட போது, மேலும் உலகத்தில் வாழ விருப்பமின்றி,

''நாதனே நல்லூர் மேவும் பெருமண நம்ப உன்
பாதமெய்ந் நீழல் சேரும் பருவம் ஈது''*

என்று பாட, இறைவன் ஒரு சோதிப் பிழம்பைக் காட்டினார். அதன்கண் தோன்றிய வாயிலூடே ஞானசம்பந்தரும், அவருடைய ஆணையின்படியே அந்தத் திருமணத்துக்கு வந்த அனைவரும் புகலாயினர். அப்போது இந்த நமச்சிவாயத் திருப்பதிகத்தை ஆளுடைய பிள்ளையார் பாடினர்

''ஞானமெய்ந் நெறிதான் யார்க்கும்
நமச்சிவா யச்சொ லாம்என்று
ஆனசீர் நமச்சி வாயத்
திருப்பதி கத்தை அங்கண்
வானமும் நிலமும் கேட்க
அருள்செய்திம் மணத்தில் வந்தோர்
ஈனமாம் பிறவி தீர
யாவரும் புகுக என்ன.''
''வருமுறைப் பிறவி வெள்ளம்
வரம்புகா ணாத முந்தி

* பெரிய புராணம், திருஞான. 1245.

உருவெனுந் துயரக் கூட்டில்
உணர்வின்றி மயங்கு வார்கள்
திருமணத் துடன்சே வித்து
முன்செலுஞ் சிறப்பினாலே
மருவிய பிறவி நீங்க
மன்னுசோ தியினுட் புக்கார்''1

என்பது பெரிய புராணம்.

அன்பர்கள் இந்த உடலை விடும் சமயத்தில் திருவைந்தெழுத்தைச் சொல்லி இன்புறுவதை விரும்புவர்.

''நாமம் பரவி நமச்சி வாயவென்னு மஞ்செழுத்தும்
சாம்அன்று உரைக்கத் தருதிகண்டாய்''2
''துஞ்சும் போழ்தும் நின் நாமத் திருவெழுத்
தஞ்சும் தோன்ற அருளும்ஐ யாறரே''3

என்ற அப்பர் வாக்கைக் காண்க. திருஞானசம்பந்தப் பெருமான் உலக வாழ்வை விட்டுச் செல்லும்போது நமச்சிவாயத் திருப்பதிகம் ஓதியது, யாவரும் செய்ய வேண்டியதைத் தம்முடைய செயலால் உணர்த்தியதாயிற்று.

★

---

1 பெரிய புராணம், திருஞான. 1248, 1249. 2 திருநாவுக் கரசர் தேவாரம், திருவிருத்தம், திருநாகைக்காரோணம், 3. 3 திருக்குறுந்தொகை, திருவையாறு.

சோதிக்க வேண்டாம்

விலங்கினங்களைக் காட்டிலும் மனிதன் சிறந்தவன் என்று கூறுவதற்குக் காரணம் மனிதன், ''தக்க இன்ன தகாதன இன்ன என்று, ஒக்க உன்னும்''* பகுத்தறிவை உடையவனாக இருப்பதுதான். அறிவின் சிறப்பினால் மனிதன் விலங்கினங் களையும் அடக்கியாளுகிறான். ஐம்பெரும் பூதங்களையும் வசப்படுத்திப் பல இயந்திரங்களை இயக்குகிறான். உடம்பினாற் செய்யும் வேலைகளைக் காட்டிலும் அறிவினால் அமையும் வேலைகள் மிகச் சிறந்த பயனை அளிக்கின்றன.

தான் உலக வாழ்க்கையில் பெறும் அநுபவத்தால் அவன் அறிவு பெறுகிறான். முன்னோர்கள் தம்முடைய அநுபவத்தை நூலாக எழுதி வைத்திருத்தலின் அந்நூல்களைப் படித்தும் அறிவு பெறுகிறான். பிறர் தம் அநுபவத்தாலும் கல்வியினாலும் உணர்ந்தவற்றைக் கூறக் கேட்டும் அறிவு பெறுகிறான். கல்வி, கேள்வி, அநுபவம் என்னும் மூன்றினாலும் மனிதனுடைய அறிவு வளம் பெறுகிறது. அந்த அறிவைக் கொண்டு அவன் பல அரிய பெரிய காரியங்களைச் சாதித்துக்கொள்கிறான்.

பலருக்கு விளங்காமல் மயக்கமாக இருக்கும் உண்மை களை அறிவாளி தன் அறிவினால் தெளிகிறான்; பிறருக்கும் தெளிவுறச் சொல்கிறான். மின்சாரத்தைக் கண்டுபிடித்தது' வானொலிக் கருவியைக் கண்டுபிடித்தது, தாமே இயங்கும் ஊர்திகளைக் கண்டுபிடித்தது முதலிய விஞ்ஞான வெற்றிகள் யாவும் மனிதனுடைய அறிவாற்றலின் அற்புத விளைவுக்கு உரிய உதாரணங்கள்.

நுண்ணிய அறிவினால் சோதிக்கச் சோதிக்கப் பல உண்மைகள் அறிவாளிகளுக்கு விளங்குகின்றன. மனிதனைச்

---

* *கம்பராமாயணம், வாலிவதைப் படலம், 112.*

சோதித்து அவனுடைய இயல்புகளையும் ஆற்றலையும், விலங்குகளைச் சோதித்து அவற்றின் இயல்புகளையும், மக்கள் சென்று உலாவுவதற்கரிய இடங்களுக்குச் சென்று சோதித்து அங்குள்ள தட்ப வெப்ப நிலையளையும், பஞ்ச பூதங்களைச் சோதித்து அவற்றின் தன்மைகளையும் அறிவாளர்கள் உணர்கிறார்கள். விஞ்ஞான சோதனைகளில் ஈடுபட்டவர் அவ்வப்போது கண்டுபிடித்து அறியும் உண்மைகள் அதிசயிக்கத் தக்கனவாக இருக்கின்றன. விஞ்ஞானிகளுடைய ஆற்றலைப் பார்த்தால் அவர்களுடைய சோதனையால் தெளிவுபடாதனவே இல்லை யென்று தோன்றுகிறது. கடல் ஏன் நீலமாக இருக்கிறது? விஞ்ஞானிகள் ஆராய்ந்து காரணம் கூறுகிறார்கள். காமாலைக் கண்ணனுக்குப் பார்ப்பன வெல்லாம் ஏன் மஞ்சளாகத் தோன்று கின்றன? விஞ்ஞானிகள் மிக எளிதில் விடை சொல்லி விடுவார்கள். இனித இருதயம் எப்படி இயங்குகிறது? பள்ளிக் கூடத்துப் பிள்ளைகூட விடை சொல்லும்படி விஞ்ஞானிகள் புத்தகம் எழுதியிருக்கிறார்கள்.

ஆனால் இந்தப் பிரபஞ்சங்களுக்கெல்லாம் மூல காரணனாக இருக்கும் இறைவன் எப்படி இருப்பான்? அவனைக் கண்டுபிடித்து அவனுடைய அருளைப் பெறுவது எவ்வாறு? - இந்தக் கேள்விகளுக்கு விஞ்ஞானிகள் விடை சொல்வதில்லை; சொல்லவும் இயலாது. சிறந்த விஞ்ஞானி தன் அறிவாற்றலால் பலவற்றைக் கண்டுபிடித்த பிறகும், இன்னும் தன் அறிவுக்கு எட்டாத பல உண்மைகள் உண்டு என்பதை ஒப்புக்கொள்கிறான். இறைவன் இருக்கிறான் என்பதை அநுமானத்தால் சொல்லத் தெரியுமன்றி அவனுடைய இயல்புகளையோ, செயல்களையே காரணங்களுடன் எடுத்துச் சொல்ல முடிவதில்லை. உதாரணங்களாலும் எடுத்துக்காட்ட முடியாது.

இறைவன் அறிவுக்கு அப்பாற்பட்டவன்; ஆதலினால் அறிவின் சோதனைக்கு உட்படாதவன். அவன் இருக்கிறான் என்பதற்கு மாத்திரம் ஏதுக்களும் எடுத்துக் காட்டுக்களும் சொல்லலாம்.

பிரபஞ்சம் தோன்றியும் வளர்ந்தும் அழிந்தும் தொழிற்படுவதால் அந்தத் தொழிலைச் செய்யும் இறைவன்

ஒருவன் இருக்கிறான் என்று ஏதுவைக் காட்டிச் சொல்லலாம். குடம் இருத்தலால் அதனைச் செய்த குயவன் ஒருவன் இருத்தல் வேண்டும்; அதுபோலப் பிரபஞ்சம் தோன்றுதலால் அதற்கு மூல காரணனாகிய இறைவன் இருத்தல் வேண்டும் என்று உதாரணம் காட்டலாம். இதற்கு மேல், ஏன் இறைவன் பிரபஞ்சத்தைப் படைக்க வேண்டும் என்று கேட்டால் அதற்கு எளிதில் காரணம் கூற இயலாது. உயிர்கள் தனு கரண புவன போகங்களைப் பெற்றுத் தம் வினைகளுக் கீடான இன்ப துன்ப அநுபவங்களைப் பெறும்பொருட்டுப் பிரபஞ்சத்தைச் சிருட்டிக்கிறான் என்று கூறினால், அதற்கு மேலும், ''அந்த வினைகள் எவ்வாறு வந்தன? இறைவன் எதற்காக வினைக்கீடாக இன்பதுன்பங்களைக் கொடுக்கவேண்டும்?'' என்று கேள்விகளை எழுப்பிக்கொண்டே போனால் விடை காண இயலாது. இப்படி ஏதுக்களாலும் எடுத்துக் காட்டினாலும் ஓரளவு இறைவன் உண்மையை உணர்ந்து கொள்ள வேண்டும். அந்த அளவுக்கு அறிவு பயன்படும். அக்கரையைச் சாரும் வரையில் தோணி பயன்பட்டு அப்பால் பயன்படாதது போல, அறிவும் அதன் திறமாகிய சோதனையும் அதற்குக் கருவிகளாகிய ஏதுவும் எடுத்துக் காட்டும் ஓரளவுதான் பயன்படும். அந்த அளவுக்கு மேற்போனால் பயன்படுவ தில்லை. அப்படிப் போகவேண்டியது அவசியம் அன்று.

இறைவனிடம் அன்பு கொள்ள வேண்டும் என்பதற்கு ஏதுவும் எடுத்துக்காட்டும் பயன்படும். அதற்கு மேலும் அறிவை நம்பி வாழ்கிறவன் கரையில் இறங்கிய பிறகும் தோணியை நிலத்திலே செலுத்த முயலுபவனைப் போன்ற வனே ஆவான். எனவே, இறைவன்பால் அன்பு செய்வார் அளவுக்கு மேல் சோதனை செய்ய வேண்டுவதில்லை. மிக்குச் சோதித்தலால் பயன் இல்லை.

இதைத் திருஞானசம்பந்தர் சொல்கிறார்.

> ஏதுக்க ளாலும் எடுத்த மொழியாலும் மிக்குச்
> சோதிக்க வேண்டா.

(ஏதுக்களினாலும் அவற்றுக்கேற்ப எடுத்துக்காட்டும் திருஷ்டாந்தங்களாலும் அளவுக்கு மிஞ்சிச் சோதனை செய்ய வேண்டாம்.

ஏது: இதனால் இது ஆயிற்றென்று சொல்லுதல். குடம் இருத்தலால் குயவன் இருப்பான் என்பதில் குடம் இருத்தல் ஏது. எடுத்துக்காட்டு, திருஷ்டாந்தம் இரண்டும் ஒரே பொருளுடையன. மிக்கு - அளவுக்கு மிஞ்சி.)

★

சோதிக்க வேண்டாம் என்றால் இறைவன் இருக்கிறான் என்ற எண்ணம் மனத்தில் உண்டாக வேண்டாமா?

அந்த எண்ணம் உண்டாவதற்கு மிகமிக நுட்பமாக ஆராய்ச்சி செய்ய வேண்டியதில்லையே! நாம் தினந்தோறும் காணும் பொருள்களைக் கொண்டே இறைவன் உண்மையை உணர்ந்து கொள்ளலாமே! கண் இருந்தும் இருளிலே அது காண மாட்டாது; கதிரவனோ, சந்திரனே, அக்கினியோ இருந்தால் காணும் ஆற்றலைப்பெறும். அந்தக் கதிரவனிடத்தும் திங்களிடத்தும் தீயினிடத்தும் சுடர் விடுகின்றவன் யார்? முச்சுடர்களும் ஒளி பெறுவதற்கு மூலகாரணமான சோதி இறைவன். விளக்கு எரியும் போது அதை ஏற்றி வைத்தவர் ஒருவர் உண்டு என்று ஏதுவினால் உணர்கிறோம். அப்படியே முச்சுடர்களையும் காணும்போது அவற்றைச் சுடரச் செய்யும் சோதி ஒருவன் இருக்கிறான் என்று உணரலாம். மூன்று சுடர்கள் ஒளி விடுதலாகிய ஏதுவைக் கொண்டு சோதி ஒருவன் இருப்பதை உணரலாம். புற இருளை இந்தச் சுடர்கள் போக்குவதைக் கண்டு அதுபோல அக இருளைப் போக்கும் சோதி ஒருவன் இருக்கிறான் என்று திருஷ்டாந்தம் கொண்டு இறைவனுடைய பெருமையை உணரலாம். 'இறைவன் இருக்கிறான். மூன்று சுடர்களுக்கும் ஒளி உதவுகின்றவன் அவன்; புற இருளை இச்சுடர்களாலே போக்குவதுபோல அக இருளை ஞான மென்னும் சுடரால் போக்குவான். இவ்வாறு புறத்தும் அகத்தும் சோதியாகிய இறைவன் சுடர் விட்டுக் கொண்டிருக்கிறான்' என்று ஏதுவையும் எடுத்துக்காட்டையும் கொண்டு தெரிந்துகொள்ளலாம். அந்த அளவு போதுமே!

சுடர் விட்டுளன் எங்கள் சோதி.

(புறத்தும் அகத்தும் எங்கள் சோதியாகிய இறைவன் சுடர்விட்டுக்கொண்டிருக்கிறான்.)

இந்த இரண்டு அடிகளுக்கும் பெரிய புராணத்தில் சேக்கிழார் பொருள் கூறுகிறார்; ''சங்கரன் தனக்கு ஒப்பு வேறு இல்லாதவன். அதனால் இன்னான், இத்தகையவன், அவனைப் போன்றவன் இவன் என்று சொல்ல ஒண்ணாது. ஏது, எடுத்துக்காட்டு ஆகிய அவற்றால் அவனை அளக்க முடியாது'' என்பது முதல் அடிக்கு அவர் கூறும் பொருள்.

> ''மன்னும் ஏதுக்க ளாலெனும் வாய்மைதான்
> தன்ன தொப்புவே றின்மையிற் சங்கரன்
> இன்ன தன்மையை ஏது எடுத்துக்காட்டு
> அன்ன வற்றால் அளப்பிலன் என்றதாம்''*

அடுத்த அடிக்கு, ''அக்கினிக்குரிய புறத்தொளியாகவும் அன்பிலே ஊன்றும்போது அன்பர்களுக்கு அகவிருளைப் போக்க உள்ளே எழுஞ் சோதியாயும் நின்றான் இறைவன். இதனை ஒட்டி உணர்வாருக்கு இது அறிவதற்கரிய பொருளாகும்'' என்று உரை கூறுவர், சேக்கிழார்.

> ''தோன்று காட்சி சுடர்விட் டுளன்என்பது
> ஆன்ற அங்கிப் புறத்தொளி யாய்அன்பில்
> ஊன்ற உள்எழுஞ் சோதியாய் நின்றனன்
> ஏன்று காண்பார்க் கிதுபொருள் என்றதாம்.''†

★

இறைவனுடைய இயல்பு முழுவதையும் உணர்ந்து கொள்ள வேண்டும் என்பது நம் நோக்கம் அன்று. நம்மால் முற்றும் உணர்ந்துகொள்ள முடிகிறதென்றே வைத்துக்கொள்

* பெரிய புராணம், திருஞான. 834, 'நிலைபெற்ற ஏதுக்களால் என்னும் திருவாக்கு, தனக்குரிய ஒப்பாக வேறு பொருள் இன்மையினால் சங்கரன் தன் தன்மையை, ஏது எடுத்துக்காட்டு என்ற அவற்றால் அளப்பதற்கரியவன் என்று சொன்னபடியாம்' என்பது இதன் உரை.

† பெரிய புராணம், திருஞான. 835. 'தோன்றுகின்ற காட்சியாக, சுடர் விட்டுளன் என்று தொடங்கிய அடி, அமைந்த அக்கினியின் புறத்து ஒளியாய் அன்பிலே ஊன்றி நிற்க உள்ளே எழும் அகச் சோதியாய் இறைவன் நின்றான்; விரும்பின் காண்பாருக்கு இது உணரும் பொருள் என்று சொன்னபடியாகும்' என்பது இதன் உரை.

வோம். அதனால் நமக்கு என்ன பயன்? இங்கே, ராமகிருஷ்ண பரமஹம்ஸர் கூறிய கதை ஒன்று நினைவுக்கு வருகிறது.

ஒரு பழத் தோட்டத்திற்குள் இரண்டு பேர்நுழைந்தார்கள். ஒருவன் அங்குள்ள மரங்களை எல்லாம் கண்டு, எவ்வளவு உயரம் வளர்ந்திருக்கின்றன, எத்தனை பழங்கள் பழுத்திருக் கின்றன என்று ஆராய்ச்சி செய்யத் தலைப்பட்டான். மற்றவனோ நேரே தோட்டக்காரனிடம் சென்று அவனோடு நயமாகப் பேசி அவன் தந்த பழங்களை வாங்கி உண்டான். இந்த இரண்டு பேர்களிலும் பழத்தைப் பெற்று உண்டவனே சிறந்தவன். அப்படியே இறைவனைப் பற்றிய சாத்திரங்களைப் படித்து ஆராய்ச்சி செய்து பொழுது போக்குபவர்களைவிட அவனிடம் பக்தி செய்து அவன் அருளைப் பெறுபவனே சிறந்தவன்.

பழத் தோட்டம் இது என்ற அளவுக்கு ஆராய்ச்சி இருந்தால் போதும். அதற்குமேல் ஆராய வேண்டிய அவசியம் நமக்கு இல்லை. பழத்தை நுகர முயல்வதுதான் நாம் செய்வதற்குரியது.

இறைவனுடைய அருளைப் பெறுவதனால் நமக்கு என்ன பயன்? நாம் என்றும் கவலை உடையவர்களாக இருக்கிறோம். வாழ்நாளில் எத்தனையோ வகையான துக்கங்கள் நேர்கின்றன. பசி, பிணி, பகை ஆகிய துன்பங்கள் உண்டாகின்றன. இவற்றிற் கெல்லாம் மேலாகப் பிறப்பு இறப்பு ஆகிய இவை இருக்கின்றன. வாழ்நாளில் கவலை இல்லாமல் ஒருவர் இருப்பது அருமை. அப்படி இருப்பதாக இருந்தாலும் பிறப்பு, இறப்பு என்னும் பெரிய துக்கங்களினின்றும் நீங்கி இருக்க முடியாது. நமக்கு வரும் துன்பங்கள் எல்லாவற்றுக்கும் பெரியவை இவ்விரண்டும். பிறப்பு இறப்பு இரண்டும் இல்லாவிட்டால் வேறு துக்கங்களே இல்லை. ஆதலின் ஒவ்வொரு துன்பமாக நீக்கிக் கொண்டிருப்பதைவிடப் பிறப்பு இறப்பை நீக்குவதற்கு முயன்றால் எல்லாத் துன்பங்களையும் போக்க முயன்றதாகும். வளர்ந்த மரத்தின் ஆணி வேரைத் தறித்தால் மரம் முற்றும் வாடிவிடுவதைப் போலப் பிறப்பு இறப்புத் துன்பங்களின் மூலம் போனால் எல்லாம் போய்

விடும். அந்த மூலந்தான் பாசம் என்பது. அதை நீக்குவதே நம்முடைய நோக்கமாக இருக்கவேண்டும்

பசியைப் போக்க வேண்டுமானால் உணவை உண்ண வேண்டும். நம்முடைய மாதுக்கத்தைப் போக்குவது இறைவனது அருள். பழத்தைத் தரும் தோட்டக்காரனை நண்பனாக்கிக்கொண்டு பழத்தை நுகர்ந்தவனைப் போல, இறைவன்பால் அன்பு பூண்டு அவன் அருளைப் பெற்றுப் பாசத்தைப் போக்கி மாதுக்கம் நீங்க வேண்டும். அதை விட்டுவிட்டு அறிவை நம்பி ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் சோதிக்கப் புகுந்தால், அந்தச் சோதனைக்கு முடிவு இராது; நமக்கும் துக்கம் நீங்காது.

ஆகவே மாதுக்கம் நீங்க விரும்பினவர்கள் இறைவன்பால் அன்பு செய்ய வேண்டும். அன்பு என்பது உள்ளத்தின் கண்ணே உண்டாகும் ஒட்டுறவுணர்ச்சி. மனத்தால் இறைவனைப் பற்றி நிற்றலே அன்பாகும். அப்படிப் பற்றினால் நன்றாக வாழலாம்.

''இறைவனைச் சோதித்து அறிய ஒண்ணாது; அவன் உண்மையை அறிந்தால் போதும்; அப்படி அறிவது அவனை மனம் பற்றி அன்பு செய்து பெரிய துக்கத்தைப் போக்கிக் கொள்வதன் பொருட்டு. துக்கம் நீங்கினால் இம்மையிலும் மறுமையிலும் நன்கு வாழலாம்'' என்று தமிழ் விரகர் பாடுகிறார்.

ஏதுக்க ளாலும் எடுத்த மொழியாலும் மிக்குச்
சோதிக்க வேண்டா; சுடர்விட்டுளன் எங்கள் சோதி;
மாதுக்கம் நீங்க லுறுவீர், மனம்பற்றி வாழ்மின்..

(3-ஆம் அடி உரை; மனத்தினால் இறைவனைப் பற்றி அன்பு செய்து வாழுங்கள்; அதனால் பெரிய துயரங்கள் நீங்கும் நிலையை அடைவீர்கள்.

மா - பெரிய. நீங்கலுறுவீர் - நீங்குதலைப் பெறுவீர்கள்; நீங்குதலை விரும்புகிறவர்களே என்றும் சொல்லலாம். மனம் பற்றி - மனத்தால் பற்றி. வாழ்மின் - வாழுங்கள்.)

மூன்றாம் அடிக்குச் சேக்கிழார், ''ஆதிச் சுடர்ச் சோதியினை அன்பினாலே மனத்துக்குள்ளே அழைத்து அவனுடைய

அருளாலே போதமடைந்து அதனாற் பெற்ற அக நோக்காகிய ஞானத்தைப் பெற்று அந்த நோக்கம் சிறிதளவும் நீங்காமல் பொருந்தி வாழ்ந்து நம்மைப் பிறப்பு இறப்புக்குள் வேறு படுத்தித் துன்புறுத்தும் பாசத்தால் வரும் பிறப்புக்குரிய அஞ்ஞான நெறியினின்றும் நீங்குங்கள்'' என்று பொருள் வகுத்திருக்கிறார்.

''மாதுக்கம் நீங்க லுறுவீர்மனம் பற்றும்என்பது
ஆதிச்சுடர்ச் சோதியை அன்பின் அகத்துள்ளாக்கிப்
போதித்த நோக்குற் றொழியாமற் பொருந்திவாழ்ந்து
பேதித்த பந்தப் பிறப்பின்நெறி பேர்மினென்றாம்.''*

இறைவனிடம் அன்பில்லாதவர்களும், நல்ல நெறியில் வாழ வேண்டும் என்ற எண்ணமில்லாதவர்களும் இத்தகைய உபதேசத்தைக் கேட்டுப் பயனடையப் போவதில்லை. அவர்கள் தம்க்கு மா துக்கம் உண்டெென்பதையே மறந்தவர்கள். ஆதலின், நன்னெறி பற்றி வாழும் ஆசையுடையவர்களுக்கே இந்த உரை பயன் பெறும். அத்தகைய சாதுக்கள் உலகில் பலர் இருக்கிறார்கள். நல்ல நெறியை அடைய வேண்டும் என்ற விருப்பம் உடையவர்கள், போலி ஞானிகளையும் உலகாயதர் களையும் அணுகி வீண் ஆராய்ச்சியில் புகுவதும் உண்டு. அந்த ஆராய்ச்சியால் தமக்கு ஏதேனும் வழி உண்டாகும் என்ற நம்பிக்கையால் அவ்வாறு செய்வார்கள். அவர்களுக்கு உண்மையை உணர்த்தி, ''வீண் ஆராய்ச்சியிலே புகவேண்டாம் சாட்சிக்காரன் காலில் விழுவதைவிடச் சண்டைக்காரன் காலில் விழுவதே சாலச் சிறந்தது. ஆராய்ச்சிக் குழுவிலே சேராமல் இறைவனையே சாருங்கள். யார் யாரையோ சார வேண்டாம். இங்கே வாருங்கள்; வந்து சாருங்கள்; இறைவனையே சாருங்கள். சாதுக்களாக உலகத்திலே மிகுதியாக இருக்கும் மக்களே! வாருங்கள்'' என்று அழைக்கிறார் அருட்பாலமுதுண்ட தெருட் பாவலர்.

---

* பெரிய. திருஞா. 836. இதன் பொருள்: ''மாதுக்கம் நீங்கலுறுவீர் மனம் பற்றும் என்ற வாக்கு, ஆதிச் சுடர்ச் சோதியை அன்பினால் உள்ளத்துள் அழைத்து அவனாற் போதிக்கப்பெற்ற உண்முக நோக்கைப் பெற்று, அது ஒழியாத வண்ணம் பொருந்தி வாழ்ந்து, வேறுபட்ட பாசத்தால் உண்டாகும் பிறப்பு வழியினின்று நீங்குங்கள் என்று சொன்னதாகும்.''

சாதுக்கள் மிக்கீர்! இறையே வந்து சார்மின்களே.

(சாதுக்களாக மிக்கிருக்கின்றவர்களே! பிறரைச் சாராமல் இறைவனையே வந்து அடையுங்கள்.

சாதுக்கள் - நன்னெறி செல்ல விரும்பும் அன்பர்கள். மிக்கீர் - மிகுதியாக உள்ளவர்களே. இறையே - இறைவனையே; ஏகாரம் வேறு இடங்களைச் சாராமல் இவனையே சாருங்கள் என்ற பொருளில் வந்தது: பிரிநிலை. சார்மின்கள் - அடையுங்கள். சார்மின் என்றாலே போதும்; கள் விகுதி மேல் விகுதி. ஏ: அசை நிலை.)

இந்த அடிக்குச் சேக்கிழார் பெருமான், ''வேண்டுகின்ற வேட்கைக்குரிய பொருள்கள் எல்லாவற்றையும் இறைவனுடைய பாதத்தில் பூண்ட அன்பினாலே பெற்றுப் போற்றுகினறவர்களே, வந்து அடையுங்கள்'' என்று உரையருளினார்.

''ஈண்டு சாதுக்கள் என்றெடுத் தோதிற்று;
வேண்டும் வேட்கைய எல்லாம் விமலர்தாள்
பூண்ட அன்பினிற் போற்றுவீர், சார்மின்கள்என்று
ஆண்ட சண்பை அரசர் அருளினார்.''*

நல்ல நெறியிலே செல்லவேண்டும் என்ற உள்ளம் படைத்த சாதுக்களைப் பார்த்துச் சொல்லுகிறார் சம்பந்தர்; ''நீங்கள் ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் வேண்டிய அளவுக்கு மேலே சோதிக்கவேண்டாம். இறைவன் மூலப் பெருஞ் சோதியாகி அகத்தும் புறத்தும் விளங்கி இருள் போக்குகின்றான். இதைத் தெரிந்துகொண்டு உள்ளத்தால் அவனைப் பற்றி அன்பு செய்தால் பெருந்துயரங்களினின்றும் நீங்கலாம். ஆகவே; எம் இறைவனையே வந்து அடையுங்கள்'' என்று வழிகாட்டுகிறார்.

ஏதுக்க ளாலும் எடுத்தமொழி யாலு மிக்குச்
சோதிக்க வேண்டா; சுடர்விட்டுளன் எங்கள் சோதி;
மாதுக்கம் நீங்கல் உறுவீர்; மனம்பற்றி வாழ்மின்;
சாதுக்கள் மிக்கீர்! இறையேவந்து சார்மின்களே.

---

* *பெரிய. திருஞான. 837, ஓதிற்று - ஓதியது. வேட்கைய - வேட்கைக்குரியவை. அன்பினிற் போற்றுவீர் - அன்பினாலே பெற்றுப் போற்றுபவர்களே.*

இது திருப்பாசுரம் என்ற திருப்பதிகத்தில் 5ஆம் திருப் பாட்டு. சம்பந்தப் பெருமான் சமணரோடு வாது செய்தபோது இந்தப் பதிகத்தைப் பாடி ஏட்டில் எழுதி, அவ்வேட்டை வையையிலே இட, அது ஆற்றோடு போகாமல் அதனை எதிர்த்துச் சென்றது. சம்பந்தர் புனல் வாதத்தில் வென்றார். அந்த வெற்றி நல்கிய பாசுரங்களாதலின் 'திருப்பாசுரம்' என்ற பெயரை இத்திருப்பதிகம் பெற்றது.*

★

* *பெரிய. திருஞான. 818-847.*

ஏழையடியார் சொல்

சிறந்த பாட்டுக்காரர் அவர். கணீரென்ற தொண்டை. சாரீர சம்பத்து மிகவும் நன்றாக வாய்த்திருக்கிறது. பாட்டுப் பாடினால் சாகித்தியத்தின் உருவம் நன்றாகப் புலப்படும்படி பாடுவார். சங்கீத ஞானத்தில் அவருக்கு இணை அவரே. அற்புதமான கவிகளை அவர் தம்முடைய சாரீரத்திலே இழைத்துப் பண்ணோடு ஓதும் போது கூடியிருக்கும் மக்கள் அத்தனை பேரும் சொக்கிப் போவார்கள். இறைவனைப்பற்றிய அழகிய பாடல்களைப் பொருள் விளங்கும்படியாகப் பலாச் சுளையை ஒடித்துத் தேனில் தோய்த்துக் கொடுப்பதுபோலப் பாடுவார்.

அவர் ஒரு கோயிலில் பாடப் போயிருந்தார். கோயில் சிறிய குன்றின்மேல் இருந்தது; முப்பது நாற்பது படிகள் ஏறினால் கீழிருந்து கோயிலுக்குப் போய்விடலாம். கீழே மண்டபம் இருந்தது. அங்கேதான் பாட்டுக் கச்சேரி நடைபெற்றது. ஆயிரக்கணக்கில் மக்கள் கூடியிருந்தனர். இறைவன் பெருமையையும் அவனை வணங்கவேண்டிய அவசியத்தையும் அறிவுறுத்தும் பாடல்களைப் பாவத்தோடு பாடினார். கேட்டவர்கள் உருகிப்போனார்கள்.

கச்சேரி முடிந்தது. ''சுவாமி தரிசனம் செய்யப் போகலாம் வாருங்கள்'' என்று அன்பர்கள் அழைத்தார்கள். ''மற்றொரு சமயம் வருகிறேன். இப்போது மிகவும் அவசரமாகப் போகவேண்டியிருக்கிறது'' என்று சொல்லி அவர் புறப்பட்டு விட்டார்.

அவருடைய பாட்டைக் கேட்டவர்களெல்லாம் அந்தப் பாட்டிலே ஈடுபட்டு அதனால் இறைவன் கோயிலுக்குச் சென்று தரிசனம் செய்த பிறகே வீடு சென்றார்கள். அவர்களை யெல்லாம் உருக்கிய பாட்டைப் பாடிய அவரோ கோயிலுக்குப் போகவில்லை. பாட்டை அவர் புகழும் பொருளும் ஈட்டும் கருவியாகவே வைத்திருந்தார்.

ஒரு பக்தர் இறைவனிடம் முறுகிய பக்தியுடையவர். அவர் அந்தக் கச்சேரிக்கு வந்திருந்தார். பாட்டிலே தம்மை மறந்து லயித்துப் போனார். ஆனால் பாட்டு முடிந்த பிறகு அந்தப் பாட்டுக்காரர் இறைவனைத் தரிசிக்கவில்லையே என்ற எண்ணம் அவர் நெஞ்சில் உறுத்திக் கொண்டே இருந்தது.

★

அந்தப் பக்தர் வேறு ஒரு கோயிலுக்குப் போயிருந்தார். அங்கே யாரோ ஒருவர் இறைவன் சந்நிதானத்தில் பாடிக் கொண்டிருந்தார். பாடினாரென்று சொல்லக் கூடாது; பாடுவதாக நினைத்து அவர் கத்திக்கொண்டிருந்தார். ராகம் இழுப்பதைப் போல ஏதோ நடுநடுவே இழுத்தார். சங்கீதந்தான் இப்படி யென்றால் அவர் தொண்டையோ அதைவிடப் பிரமாதம். அடிக்கடி தொண்டையில் கரகரப்பு ஏற்படும். கோழை வந்து கட்டும். லொக்கு லொக்கென்று இருமுவார். ஆனாலும் பாடுவதை விடமாட்டார். சங்கீதம், சாரீரம் என்னும் இரண்டும் இப்படி; அவர் பாடின பாட்டு - ? அது பாட்டே அல்ல. ஏதோ சம்போ சங்கரா, அப்பனே, நடராஜா என்று நாமங்களை அடுக்கிச் சொன்னாரேயொழிய அது கவியுமல்ல; கீர்த்தனையுமல்ல. அந்த மனிதரோ தம்முடைய பாட்டை யாராவது கேட்டால் பரிகசிப்பார்களே என்ற நாணமே இல்லாமல் கண்ணை மூடியபடியே பாடிக் கொண்டிருந்தார்.

தரிசனத்துக்கு வந்திருந்த பக்தர் இந்தப் பாட்டையும் கேட்டார். முன்பு சங்கீத வித்துவான் பாடியதை இப்போது நினைந்து பார்த்தார். அந்தப் பாட்டு எங்கே? இந்த உளறல் எங்கே? ஆனாலும் அவர் பக்தராகையால், கோழைமிடற்றோடு வெறும் சொற்களை இசையைப்போலப் பாடுகிற அந்த மனிதரிடம் கொஞ்சம் மதிப்பு உண்டாயிற்று. நாணத்தைவிட்டு இறைவன்முன் நின்று பாடுகிறாரே என்ற எண்ணமே அதற்குக் காரணம். முன்னவரிடம் பாட்டு இருந்தது; ஆனால் பக்தி இருந்ததாகத் தெரியவில்லை. பின்னவரிடம் பாட்டு இல்லை; ஆனால் பக்தி இருக்கிறதென்றே தெரிந்தது. இந்த இருவரையும் ஒருங்கே ஒப்பிட்டார். யார் பெரியவர்?

அன்று இரவு அவர் ஒரு கனவு கண்டார். இறைவ னுடைய சந்நிதானத்தில் பாட்டு நடைபெறப் போகிறது. "இன்று நம்முடைய முன்னே நடைபெறும் பாட்டுக்கு நாமே

வரப்போகிறோம். நீயும் வந்து பார்'' என்று பக்தருக்குக் கட்டளை கிடைத்தது. ஆதலின் அவர் போயிருக்கிறார். பாட்டு ஆரம்பமாகிவிட்டது. முன்னே சொன்ன சங்கீத வித்துவான் பாடுகிறார். சாரீரம் கணகண வென்றிருக்கிறது; பாட்டுத் தெளிவாக இருக்கிறது; இசையோ உள்ளத்தை அள்ளுகிறது. கூட்டம் கடல் போலப் பரந்திருக்கிறது. இப்போது பக்தருக்குப் பாட்டிலே மனம் ஓடவில்லை. அந்தக் கூட்டத்தில் இறைவன் வருவதாகச் சொல்லியிருக்கிறானே என்று ஆர்வத்தோடு அவனைத் தேடினார். எங்கும் காணவில்லை. மக்களே எங்கும் நிறைந் திருந்தனர்.

திடீரென்று பாட்டு நின்றது. சங்கீத வித்துவானால் பாட முடியவில்லை. அவர் தொண்டை பேசவில்லை. கூட்டம் கலைந்துவிட்டது. அவரும் போய்விட்டார். கோயிலில் யாரும் இல்லை. இறைவன் நேரில் வருவதாக அருளினாரே, வரவில்லையே என்று பக்தர் மன வருத்தத்தோடு ஒரு மூலையில் சோர்வோடு உட்கார்ந்திருந்தார்.

அப்போது ஒருவர் அங்கே வந்தார். அவர் பாடத் தொடங்கினார். பக்தர் நிமிர்ந்து பார்த்தார். கோழை மிடற்றோடு முன்பு பாடினாரே அந்தப் பேர்வழி. அவர் பாடினார். அன்று பாடின மாதிரித்தான் பாடினார். 'ஐயோ! காக்கைக் குரலே!' என்று தோன்றியது பக்தருக்கு. வந்தவர் பாடிக்கொண்டிருந்தார்; கண்ணை மூடிக்கொண்டு வெறும் நாமங்களையே பாட்டைப்போல இழுத்துக்கொண்டிருந்தார். அதைக் கேட்கக் கேட்கப் பக்தருக்கு ஏதோ ஒருவித இன்பம் உண்டாயிற்று. அந்த நாமங்களை இருதயத்திலிருந்து அவர் கூறினார்; அதனால்தான் பக்தருக்கு அது சுவையாக இருந்தது. அதற்குள் ஓர் அதிசயம் நிகழ்ந்தது. ஏழைக்கு முன்னே சிறிது தூரத்தில் சிவபெருமான் ஒரு பீடத்தின்மேல் எழுந்தருளியிருந்தான்! பக்தருக்குத் திடுக்கிட்டது. இறைவன் தலையை ஆட்டி ஆட்டி மகிழ்ந்துகொண்டிருந்தான். கண்ணை மூடிக்கொண்டு பாடிய ஏழை, இறைவன் அங்கே அமர்ந் திருப்பதை உணரவில்லை. அவர் கண்ணை மூடியபடியே கோழை மிடற்றோடு கவியோ கீர்த்தனமோ இல்லாத வெறுஞ் சொற்களைத் தம் மனம் போனபடி இசை போலப் பாடிக்கொண்டிருந்தார். இறைவன் ஒரு காலைக்கு ஒரு கால் மகிழ்ச்சி மீதூர்ந்து ஆடினான்.

அமர்ந்தபடியே 'அசைந்தாடியவன் எழுந்திருந்தே ஆனந்த நடனம் ஆடத் தொடங்கி விட்டான்.

திடீரென்று கனவு கலைந்தது. ''அட்டா! இன்னும் சிறிது நேரம் கனவு காணாமற் போனேனே! இறைவன் திருநடனத்தைத் தரிசித்துக்கொண்டே இருந்திருக்கலாமே!'' என்று வருந்தினார் பக்தர்.

இப்போது அவருக்கு, ஈசன் யாருடைய பாட்டில் மகிழ்ச்சி அடைகிறான் என்பது தெளிவாகிவிட்டது. உள்ளத்தில் பக்தியோடு பாடுகிறவர்கள் கோழையால் இருமும் மிடறுடையவர்களாக இருக்கட்டும்; அதனாற் குறையில்லை. 'அவர்கள் பாடுவது கவியென்று கொள்வதற்குரியதன்று; கவியின் கோட்பாடு அதில் இல்லை' என்று சொல்லும்படி இருக்கட்டும்; அதனாலும் குற்றமில்லை. அது பாட்டாக இல்லாமல் சொற்களைப் பேசுகிறமாதிரி இருக்கிறது; அப்படி இருப்பினும் தாழ்வு இல்லை. அவர்கள் ஏழை; அதைப்பற்றிக் கொஞ்சங்கூடத் தடையே இல்லை. அவர்கள் அடியார்கள்; ஆதலின் ஈசன் அவர்களுடைய சொல்லிலே மகிழ்கிறான்.

★

இது கற்பனைக் கதை. ஆனாலும் ஞானசம்பந்தப் பெருமான் அருளிய தேவாரத்தின் கருத்தை வைத்துக் கட்டிய கற்பனை. அந்தத் தேவாரப் பாட்டைப் பார்க்கலாம்.

> கோழைமிட றாக, கவி கோளும்இல ஆக, இசை
> கூடும்வகையால்
> ஏழைஅடி யாரவர்கள் யாவைசொன சொல்மகிழும்
> ஈசன் இடமாம்.

(கோழையையுடைய தொண்டையர்க இருக்கட்டும், பாடுகிற பாட்டுக்கள் கவியின் உருவத்தைக் கொள்ளுதல் இல்லாதனவாக இருக்கட்டும்; (குற்றம் இல்லை); தம்பால் இயன்ற வகையினாலே இசையோடு ஏழைகளாகிய அடியார்கள் சொன்ன சொற்கள் எவையோ அந்தச் சொற்களைக் கேட்டுத் திருவுள்ளம் மகிழுகின்ற இறைவன் எழுந்தருளியிருக்கும் இடமாகும் - வைகாவூர் என்று சொல்ல வருகிறார்.

மிடறு - தொண்டை. ஆக - ஆகட்டும்; வியங்கோள். ஆக என்பதைச் செயவென்ற வாய்பாட்டுப் பெயரெச்சமாகக் கொண்டால் மிடறாகக் கவி என்று வல்லினம் மிகவேண்டும். சந்தம் நோக்கி வந்த செய்யுள் விகாரம் என்று சமாதானம் சொல்லலாம். ஆயினும் ஆக

என்று வரும் இரண்டையும் ஆகட்டும் என்ற பொருளுடைய வியங்கோளாகக் கொள்ளுதல் சிறப்பு. கவிகோள் - கவியின் உருவத்தைக் கொள்ளுதல். சாரீரம், சங்கீதம், சாகித்தியம் என்னும் மூன்றும் இல்லை என்றபடி. இசை தமக்குக் கூடுகிற வகையினால், சொன்ன சொல் யாவை, அவற்றை மகிழும் பாட்டாக நினைத்து அவர் பாடினும் அவை வெறும் சொற்கள் என்று குறிப்பிக்க, 'சொன சொல்' என்றார்.)

★

இனி அந்த இடம் இன்னதென்று சொல்லப் புகுகிறார் ஞானசம்பந்தப் பிள்ளையார். இயற்கையின் எழிலிலே இறைவனைக் கண்டு அந்த எழிலையும் வாயாரப் பாடும் தமிழ் விரகராதலின் இங்கே வைகாவூர்த் தலத்தின் வளப்பத்தைச் சொற்சித்திரமாகத் தீட்டுகிறார். திருவைகாவூர் என்ற தலம் சோழநாட்டில் கும்பகோணத்துக்கு அருகில் இருப்பது. வைகா, வைகாவில், வைகாவூர் என்று அதன் பெயர் வழங்கும். சம்பந்தர் வைகாவில் என்று குறிக்கிறார். மயிலாப்பூருக்கு மயிலாப்பு, மயிலாப்பில், மயிலாப்பூர் என்று மூன்று வகையில் பெயர் வழங்கும். அதுபோன்றது இது.

வைகாவூர் மருத நிலத்தில் அமைந்திருப்பது. வயல்கள் மிகுதியாக உள்ள தலம் அது. வயலை அடுத்து ஒரு தோட்டம்; அங்கே வாழையும் கமுகும் தென்னையும் நன்றாக வளர்ந்திருக்கின்றன.

முதிர்ந்த தென்ன மரத்தில் நன்றாக முற்றிப் பழுத்த தேங்காய் காற்று வீசும்போது கீழே விழுகிறது. அந்த மரத்தைவிட இள மரம் ஒன்று அதைவிட உயரம் குறைவாக அருகே நிற்கிறது; மேலிருந்து விழுந்த முதிய தேங்காய் இந்தச் சிறிய தென்ன மரத்தின்மேல் விழுந்து தாக்க, அதிலிருக்கின்ற இளநீர் குலையிலிருந்து பிய்ந்து விழுகிறது. முற்றின தேங்காயும் இளநீரும் கீழே விழும்போது தென்னமரத்தைவிடச் சிறிது குட்டையாக இருக்கும் கமுக மரத்தில் விழுகின்றன. அதனால் கமுகங் குலைகள் சிதறுகின்றன. மறுபடி அந்த இளநீரும் முற்றிய தேங்காயும் கமுகுக்கும் குட்டையாக வளர்ந்துள்ள வாழையின் மேல் விழுகின்றன. அந்த வாழை தாறு போட்டுப் பழுத்து நிற்கிறது. வாழைப்பழக் குலையின்மேல் இளநீரும் தேங்காயும் விழுந்து வாழைப்

பழத்தை உதிரச் செய்கின்றன. அவை கீழே உள்ள வயல்களில் விழுகின்றன. உயரத்திலிருந்து விழுந்தமையாலும் தேங்காயால் அடிபட்டமையினாலும் வாழைப்பழம் பழமாக இராமல் பஞ்சாமிர்தமாகிவிடுகிறது. வயலில் இப்படிப் பலகாலம் பழங்கள் சிதறிச் சிதைந்து ஊறிச் சேறு போல ஆகிவிடுகின்றன.

இப்படி ஓர் இயற்கைக் காட்சியைத் திருவைகாவூரிலே வைத்து வருணிக்கிறார் சம்பந்தர்.

தாழைஇள நீர்முதிய காய்கமுகின் வீழநிரை
 தாறுசிதறி
வாழையுதிர் வீழ்கனிகள் ஊறிவயல் சேறுசெயும்
 வைகாவிலே.

(தென்னையின் இளநீரும் முதிய காயும் கமுக மரத்தில் விழ, அதில் வரிசையாக உள்ள குலைகள் சிதற, அப்பால் அவை விழுந்த வாழை மரத்திலிருந்து உதிர்ந்து வீழ்ந்த கனிகள் ஊறி வயலிலே சேற்றைச் செய்யும் வைகாவில் என்ற தலம். மகிழும் ஈசன் இடம் வைகாவில் என்று கூட்ட வேண்டும்.

தாழை - தென்னை. முதிய காய் விழ, அது மோதியதால் கீழிருக்கும் தென்னையிலிருந்து இளநீரும் வீழ்ந்தது. நிரை— வரிசையாக உள்ள. தாறு- குலை; இங்கே கமுகங்குலை. சிதறி என்பதற்குச் சிதற என்று பொருள் கொள்க; எச்சத் திரிபு. உதிர் வீழ் கனிகள் - உதிர்ந்து வீழ்ந்த கனிகள்; வரிந்து புனைந்த பந்து என்ற பொருளில் வரிப்புனை பந்து என்று வந்தது போன்ற பிரயோகம் இது. சேறு செயும் - சேற்றை உண்டாக்கும். வைகாவில் - திரு வைகாவூர். ஏ: அசை நிலை.)

இங்கே சொன்ன வருணனையோடு ஒருபுடை ஒப்புமை உடையது, பின்வரும் சிந்தாமணிப் பாட்டில் வரும் வருணனை.

"காய்மாண்ட தெங்கின் பழம்வீழக் கமுகின் நெற்றிப்
பூமாண்ட தீந்தேன் தொடைகீறி வருக்கை போழ்ந்து
தேமாங் கனிசி தறிவாழைப் பழங்கள் சிந்தும்
ஏமாங் கதமென் றிசையால் திசைபோய துண்டே."*

★

* *சீவக சிந்தாமணி, நாமகள் இலம்பகம், 2.*

நிலவளமும் நீர்வளமும் உள்ள திருவைகாவூரில் எழுந்தருளியிருக்கும் செல்வன் இறைவன். அவன் இருக்கும் இடம் செல்வம் நிறைந்தது. ஆயினும், ஏழைகளாக இருந்தாலும் அடியார்களாயின் அவர்கள் பாட்டு நன்றாக இல்லாவிட்டாலும் அவன் ஏற்றுக்கொள்வான்.

தென்னமரத்தின் இளநீரும் முதிய காயும் கமுகங் குலையும் வாழைக் கனிகளும் வளப்ப முடையனவானாலும் கீழே விழுந்து சிதைந்து சேறாவதுபோல் நல்ல இசையும் சாரீரமும் உடையவராக இருந்தாலும் இறைவனுக்குப் பயன்படாவிட்டால் வீணானதற்கொப்பே என்ற குறிப்பும் இந்த வருணனையாற் பெறப்படும்.

கோழைமிட றாக, கவி கோளும்இல வாகஇசை
கூடும் வகையால்
ஏழைஅடி யார் அவர்கள் யாவைசொன சொல்மகிழும்
ஈசன் இடமாம்
தாழைஇள நீர்முதிய காய்கமுகின் வீழநிறை
தாறு சிதறி
வாழைஉதிர் வீழ்கனிகள் ஊறிவயல் சேறுசெயும்
வைகா விலே.

*



கி.வா.ஜ. அவர்களுக்கு சிறு வயதிலேயே தமிழ் இலக்கியங்கள் மீது பற்று ஏற்பட்டது. டாக்டர் உ.வே. சுவாமிநாதையர் அவர்களுடைய தலை மாணாக்கராக இருந்து தமிழ் பயின்று, அவர்களது அருந்தமிழ் பணிக்கும் துணை நின்று, 'கலைமகள்' மாதப் பத்திரிகையின் ஆசிரியராக ஐம்பதாண்டுகளுக்கு மேல் - பணி யாற்றியுள்ளார்.

தமிழ் ஆராய்ச்சி, இலக்கியம், பக்தி இலக்கியங்கள், கவிதைகள், நாடோடிப் பாடல் கள், பழமொழிகள் என இவரே எழுதியும், தொகுத்தும் அளித்துள்ள நூல்கள் இருநூற்றுக் கும் மேற்பட்டனவாகும்.

குறிப்பாக, -இலக்கணத்துக்கு விளக்கம் தருவதில் வல்லவர். சிலேடையாய்ப் பேசுவதில் இவருக்கு நிகர் இவரே.

எந்த இலக்கிய நூலிலே சந்தேகம் ஏற்படினும் உடனடியாக விளக்கம் கி.வா.ஜ. அவர்களிடமிருந்து கிடைக்கும் என்பதைத் தமிழ் அறிஞர்கள் பலரும் அறிவர்.

இவர், பல காலமாக உள்ள ஐயங்களைப் போக்குகின்ற வகையில், 'கலைமகள்' மாத இதழில் பதிவளித்து வந்தார். இவை என்றென்றும் நமக்குப் பயன் விளைக்கக் கூடும்.